# பாடசாலை உளவியல்

## ஓர் ஊடுகதிர் அறிக்கை



அ.வா. முஹ்சீன்

SCHOOL PSYCHOLOGY

AN X-RAY REPORT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை உளவியல்

அ.வா. முஹ்சீன்
Dip.in.Psychology & Dip.in.Sociology

Pena Publication
KINNIYA

வெளியீடு:

பேனா பப்ளிகேஷன்
கிண்ணியா
Mob: +94 779300397
E-mail: firosmi.pena@gmail.com

பேனா நேர் கோட்டில் பேசும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

01. சோனக தேசம் (சமூக. அரசியல் ஆய்வு நூல்)

02. இலங்கை முஸ்லீம்களின் பூர்வீகம் (வரலாற்று ஆய்வு நூல்)

03. இங்ஙினயும் ஒரு மஹ்சர் (சிறுகதைத் தொகுப்பு)

04. ஜனநாயகம் (அரசியல் ஆய்வு நூல்)

பேனா பதிப்பக வெளியீடு 25

**பாடசாலை உளவியல்: ஓர் ஊடுகதிர் அறிக்கை**

❖ ஆசிரியர்: **அ.வா. முஹ்சீன்** ❖ முதற் பதிப்பு: 2016 ❖ பதிப்புரிமை: ஆசிரியருக்கு ❖ வெளியீடு: பேனா பப்ளிகேஷன், கிண்ணியா, தொ.இல: 077 9300397, மின்னஞ்சல்: firosmi.pena@gmail.com, ❖பக்க வடிவமைப்பு: எம்.ஏ.எம். அஸ்மி (கிண்ணியா - 04, 075 7022680), (பேனா பப்ளிகேஷன்) ❖அட்டை வடிவமைப்பு: மு. தானிஷ் அஃப்ரிதி ❖அச்சுப் பதிப்பு: ஏ.ஜே. பிரின்ட், தெஹிவளை, ❖ பக்கங்கள்: 168 ❖ விலை: 250/= ❖ ச.த.நூல்.இல: 978-955-0932-16-0

**SCHOOL PSYCHOLOGY: AN X - RAY REPORT**

❖ Author: A.W. Muhseen ❖ First Edition: 2016 ❖ Publication: Pena Publication, Kinniya, Cell Phone: 077 9300397, E-Mail: firosmi.pena@gmail.com, ❖ Layout Designed: M.A.M. Asmy ( Kinniya - 04, (075 7022680) ❖ Cover Designed: M. Thanish Afridhi ❖ Printed By: AJ Print, Dehiwela ❖ Page: 168, Price: 250/=, ❖ ISBN: 978-955-0932-16-0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப வகுப்புகளில்,
எனது திறமைகளை அடையாளம் கண்டு,
என்னை உற்சாகப்படுத்தி,
என் ஆற்றல்கள் வெளிப்படக்காரணமாகவிருந்த
ஆசிரியர் மர்ஹூம் **அப்துல் கமீது. ஜெயினுலாப்தீன்** அவர்களை
நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

இந்நூலை
இந்நாட்டின் ஆசிரியர்களுக்கு
சமர்ப்பிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நிமிடம்!

## எல்லாப் புகழும் இறைவனுக்கே!

நமது பாடசாலைகளின் சூழல் ஆரோக்கியமானதாக இல்லை என்ற உணர்வு பொதுவாக அனைவரிடமும் நிலவு கின்றது. இத்தகைய உணர்வின் ஒரு வெளிப்பாடுதான் இந்நூ ல். 2012 ஆம் ஆண்டில் இந்நூலுக்கான எண்ணக்கரு எனக்குள் உருவாகியது. எனினும் நீண்ட தேடலும், ஒரு வித தயக்கமும் இந்நூல் தாமதமாகியதற்கான காரணங்களாக இருக்கின்றன. இத்தகைய ஒரு நூலை எழுதுவதற்கு, புலமைத்துவ ரீதியிலான தகைமையை நான் கொண்டிருக்கவில்லை என்பது எனது தயக்கத்திற்கான காரணமாக இன்னமும் அமைந்திருக்கின்றது. எனினும் இதன் ஆரம்பப் பிரதிகளை வாசித்தவர்கள் எனக்கு வழங்கிய ஆலோசனைகளும், நம்பிக்கையும் இந்நூ லை வெளியிடும் துணிவை எனக்கு வழங்கின. 1972 ஆம் ஆண்டில், இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பாரிய கல்விச் சீர்திருத்தத்திற்குட்பட்ட முதல்மாணவர்களில்நானும்ஒருவனாக இருந்ததும், பின்னர் 1983 ஆம் ஆண்டில் இருந்து ஆசிரியனாக கடமையாற்றி வருவதும், இந்நூலை எழுதுவதற்கான ஒரு அனுபவம் சார்ந்த தகுதியை எனக்கு வழங்கியிருப்பதாக நான் கருதுகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளரான திருமதி. பரமேஸ்வரி இளங்கோ (திருமதி இளங்கோ) அவர்களுக்கு நான் மிகுந்த நன்றிக் கடன்பட்டிருக்கிறேன். இந்நூலின் பிரதியை, வரிக்குவரி மிகக் கவனமாக வாசித்து, தனது கருத்துக்களைக் குறித்து வைத்து, என்னுடன் நீண்ட நேரம் கலந்துரையாடிய அவரின் பொறுப்புணர்வு கண்டு நான் வியந்து போனேன். அவர் எனக்கு வழங்கிய பெறுமதியான ஆலோசனைகளும், கருத்துக்களும் இந்நூலின் செழுமைக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றன. இந்நூலை வெளியிடுமாறு அவர் அளித்த நம்பிக்கையும் உற்சாகமும் எனக்கு பெரும் உந்துசக்திகளாக விளங்கின.

நண்பர் ஏ.என்.எம். றிழாவுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். இதன் பிரதியை வாசித்து, எனக்கு ஆலோசனை வழங்கி, உற்சாகப் படுத்தியதோடு, அவர் திருமதி. இளங்கோ அவர்களை எனக்கு அறிமுகப் படுத்தியும் வைத்தார்.

எனது சகோதரியின் கணவரும், ஆசிரியருமான ஜனாப். A.W. ஜிஹாத் வழங்கிய ஒத்துழைப்பு, இந்நூல் தடையின்றி வெளிவருவதற்கு முதன்மைக் காரணமாக அமைந்திருக் கின்றது. அவரது பங்களிப்பு இல்லாதிருப்பின் நான் மிகுந்த சிரமத்திற் குட்பட்டிருப்பேன். இந்நூலின் அட்டையை, எனது மகன் தானிகூஷ் அஃப்ரிதி வடிவமைத்துள்ளார். இந்நூலின் உள்ளடக்கத்தை படிமைப்படுத்துவதாகவும், இந்நூலை அழகூட்டுவதாகவும் இது அமைந்திருக்கின்றது.

இந்நூலை சிறப்பாக வடிவமைத்திருக்கின்ற ஜே.பிரோஸ்கான் (பேனா பதிப்பகத்தாருக்கும் மற்றும் எம்.ஏ.எம். அஸ்மிக்கும், அச்சடித்துள்ள ஏ. ஜே. அச்சகத்தாருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்
அ.வா. முஹ்சீன்

836, பாலையூற்று
திருகோணமலை

TP: 0778089827 / 0752342062
E-mail: sonaham60@gmail.com

மாசி 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
| --- | --- |
| அறிமுகம் | 07 |
| பாடசாலை உளவியல் பற்றிய வரைவிலக்கணம் | 10 |
| பாடசாலை உளவியலின் மட்டங்கள் | 14 |
| 1. பாடசாலை மட்டம் | 14 |
| 2. நிர்வாக மட்டம் | 15 |
| 3. கொள்கை மற்றும் அமுலாக்கல் மட்டம் | 15 |
| மாணவர்களின் உளவியலில் ஏற்படுகின்ற பாதிப்புகள் | 16 |
| 1. மாணவர்களின் வளர்ச்சிப் பருவங்கள் | 16 |
| 2. சுயகற்றல் | 18 |
| 3. ஊடகங்கள் | 22 |
| 4. கட்டாய பாடங்கள் | 25 |
| 5. வெளியூர்களில் கல்வி கற்றல் | 44 |
| 6. பாடசாலை நேர முறைமை | 47 |
| 7. பரீட்சை முறைமை | 59 |
| 8. தண்டனைகள் | 74 |
| 9. கிழக்கு மாகாண சூழ்நிலை | 78 |
| ஆசிரியர்களின் உளவியலில் ஏற்படுகின்ற பாதிப்புகள் | 85 |
| 1. ஆசிரிய நியமனம் | 85 |
| 2. கல்விக் கொள்கைகள் | 89 |
| 3. ஊதிய விவகாரம் | 96 |
| 4. கற்பித்தல் நேரம் | 100 |
| 5. மதிப்பீடுகளும், கணிப்பீடுகளும் | 101 |
| 6. பிற நிறுவனங்கள் | 110 |
| 7. ஆசிரியர்களின் வாண்மை நிலையும், ஆளுமையும் | 111 |
| 8. நிர்வாக மட்டம் | 116 |
| அதிபர்களின் உளவியலில் ஏற்படுகின்ற பாதிப்புகள் | 158 |
| முடிவுரை | 165 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. அறிமுகம்

**இன்று** நமது நாட்டிலுள்ள பாடசாலைகள் தொடர்பாக பின்வரும் இரண்டு விடயங்கள் மிகுந்த அக்கறைக்குட்படுத்தப் பட்டு வருகின்றன. ஒன்று, மாணவர்களின் அடைவு மட்டம் எதிர்பார்த்த அளவில் அமைவதில்லை என்ற விடயம். குறிப்பாக க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் மாணவர்களின் அடைவு மட்டம் போதியதாக இல்லை என்பது பெரும் கரிசனைக்குரியதாக மாறியுள்ளது. இரண்டு, மாணவர்கள் மத்தியில் வெளிப்படுகின்ற ஒழுக்கநெறி சார்ந்த பிறழ்வுகள், வெகுஜன உணர்வுகளில் அதிர்ச்சியையும், கவலைகளையும் ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளன.

இந்நிலைமைகளை மாற்றியமைப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்க வேண்டும் என்ற முனைப்பிலும், மாணவர்கள் மத்தியில் சிறந்த ஒழுக்கப் பண்புகளை கட்டியெழுப்ப வேண்டும் என்ற அவசியத்திலும், கல்வித்துறை சார்ந்தோரும், கொள்கை வகுப்பாளர்களும் கடுமையாக முயன்று வருகின்றார்கள்.

இத்தகைய பின்னணியில், **பாடசாலைச் சூழல்** என்ற விடயம், இன்று முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றது. அரசாங்க மட்டத்திலும், வெகுஜன ரீதியாகவும், புலமைசார் மட்டத்திலும், பாடசாலை சூழல் தொடர்பாக ஆழமான கருத்தாடல்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. பாடசாலை சூழல் எனும்போது, ஒரு பாடசாலையின் பௌதிக, மனிதவள பின்னணிகளோடு, அப்பாடசாலையின் கற்றல் தொடர்பான செயற்பாடுகளும் கருத்தில் கொள்ளப்படுகின்றன. தனிமனிதனினதும், ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினதும், ஒரு சமூகத்தினதும், ஈற்றில் ஒரு நாட்டினதும் நல்விளைவிற்குரிய வித்தின் வளர்நிலமாக அமைகின்ற பாடசாலைச் சூழலானது, சிறப்பானதாகவும் வளம்பொருந்தியதாகவும் அமைய வேண்டியது அவசியமானது. இத்தகைய அக்கறையில்தான் பாடசாலைச் சூழல் தொடர்பான கொள்கைகள் முன்வைக்கப்பட்டு, அவற்றின் அடிப்படையிலான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

பாடசாலைச் சூழலானது தொடர்ச்சியாக மாற்றத்திற்குள்ளாகி வருகின்றது. இத்தகைய மாற்றத்திற்கு, பல்வேறு காரணிகள் பங்களிப்புச் செய்கின்றன. குறிப்பாக, பாடசாலைக்கு வெளியே உருவாகின்ற நிலைமைகளும், மாற்றங்களும், பாடசாலைச் சூழலின் மீது கடுமையான தாக்கங்களை நிகழ்த்துவனவாக அமைந்திருக்கின்றன. பாடசாலைச் சூழலில் தொடர்ச்சியாக நிகழ்த்தப்படுகின்ற இத்தகைய தாக்கங்களின் விளைவாக, ஒரு பாடசாலைச் சூழலில் உள்ளடங்குகின்ற மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் அதிபர்கள் மத்தியில் **உளவியல் சார்ந்த மாற்றங்கள்** உருவாகிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு நிகழ்கின்ற உளவியல் மாற்றங்கள் சரியான முறையில் அமையும்போதுதான், கல்வி சாஉந்தும், ஒழுக்கநெறி சார்ந்தும் நாம் எதிர்பார்க்கின்ற சாதகமான விளைவுகளை, நாம் அடைந்து கொள்ள முடியும். அவ்வாறில்லாதபோது, நாம் எதிர்பாராத விதத்தில் முற்றிலும் வேறானதும், பாரதூரமானதுமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

துரதிஷ்டவசமாக நமது நாட்டில், ஒரு பாடசாலைச் சூழலில் உருப்பெறுகின்ற இந்த உளவியல் சார்ந்த மாற்றங்கள் பற்றிய அக்கறையானது, மிகக் குறைவானதாக இருக்கின்றது. இந்த விடயம் மிகப் பெரும்பாலானோரால் முறையாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. மாணவர்களின் அடைவு மட்டம், மற்றும் அவர்களின் ஒழுக்கநெறிகளில் காணப்படுகின்ற வீழ்ச்சி நிலை, அல்லது நாம் நேரடியாக அவதானிக்கின்ற பாடசாலை சார்ந்த முறைகேடுகள் என்பவை வெறுமனே தனிநபர்களின் தன்னிச்சையானதும் தவறானதுமான செயற்பாடுகளினால் விளைந்த நிகழ்வுகள் அல்ல. மாறாக, இவற்றின் பின்னே வலுவான உளவியல் காரணிகள் தொழிற்படுகின்றன. எனவே, இத்தகைய **உளவியல் காரணி** என்ற விடயம் சரியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான், இந்நிகழ்வுகள் இடம்பெறுவதற்கான அடிப்படைகளை அடையாளம் காண்பதும், அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை தெரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதும் சாத்தியமாகும். இத்தகைய உளவியல் காரணியை புரிந்து கொள்ளத் தவறும்போது, நாளாந்தம் அதிகரித்துக் கொண்டிருக்கின்ற இவ்வாறான விரும்பத்தகாத நிகழ்வுகள் இடம்பெறுவதை தவிர்க்க முடியாமல் போவதோடு, இது இறுதியில் ஒரு எதிர்மறையான தலைமுறை உருவாக்கத்திற்கும் இட்டுச் சென்று விடும்.

இந்த விடயத்தில் மேற்கத்தைய அனுபவங்கள் சிறந்த உதாரணங் களாக அமைந்திருக்கின்றன. **உலகிலுள்ள கைதிகளில் கால் பங்கினர் அமெரிக்கர்களாக இருப்பதற்கு, அந்நாட்டின் ஒட்டுமொத்த கல்விச் சூழல் எத்தகைய பாத்திரம் வகிக்கின்றது** என்ற ஆய்வுகளும், உரையாடல்களும் அங்கு முன்னெடுக்கப்படுவது, நமக்கு முன்மாதிரியாக அமையக் கூடியது. அத்தகைய ஒரு சிக்கலானதும், குழப்பகரமானதுமான நிலையை நாம் சந்திப்பதற்கு முன்னர், அது குறித்த அக்கறையைக் கொள்வது அவசியமாகின்றது. இவ்விடயத்தில், கிழக்கத்தைய நாடுகளின் உதாரணங்கள் ஒப்பீட்டளவில் சிறப்பானவைகளாக இருக்கின்றன. சீனா, தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகள் இன்று கல்வியில் முன்னணி நிலையை அடைந்திருப்பதற்கும், தமது கல்விச் சூழலை அவை வடிவமைத்திருக்கின்ற முறைமைக்கும் இடையேயான தொடர்பை புரிந்து கொள்வது நமக்கு அவசியமாகின்றது.

இந்த சிறிய நூல், பாடசாலை உளவியல் என்ற கருத்தாக்கம் குறித்து பேசுகின்றது. எனினும், இது **பாடசாலை உளவியல்** பற்றிய பாட நூல் அல்ல. பதிலாக, நமது நாட்டில், பாடசாலை உளவியலைக் கட்டமைக்கின்ற காரணிகள் குறித்த பரிசீலனையை இந்நூல் முன்னெடுக்கிறது. **நமது பன்முக பண்பாட்டு நிலைமைக்கும், அனுபவங்களுக்கும் ஏற்றவிதத்திலான பாடசாலைச் சூழலை உருவாக்குவதினூடாக, ஆற்றல் நிறைந்த பாடசாலை உளவியலை கட்டமைக்க முடியும்** என்ற எடுகோளை இந்நூல் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. இதன் மூலமாக கல்வியிலும், ஒழுக்க நெறியிலும் சீரான தன்மைகளைப் பேணக் கூடிய மாணவர் சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை இந்நூல் கொண்டிருக்கின்றது. இந்நூலானது இந்த விடயங்கள் குறித்த உரையாடலை துவக்கி வைக்குமாயின், அது ஒரு பெரிய பெறுதியாக இருக்கும். பெரிதும் கிழக்கு மாகாண அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள், நாட்டின் பிற மாகாணங்களுக்கும் பொருத்தமுடையதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02. பாடசாலை உளவியல்

## வரைவிலக்கணம்

**பாடசாலை** உளவியல் பற்றிய மேற்கத்தைய அறிவியலாளர்களின் வரைவிலக்கணம் பின்வருமாறு அமைந்திருக்கின்றது.

**School psychology** is a field that applies principles of **clinical psychology**, **educational psychology** and **developmental psychology** to the diagnosis and treatment of children's and adolescents' behavioral and learning problems, to teachers, politicians and other responsible persons in the institutionalized education systems with pedagogic, didactic or systemic-organizational problems, sometimes also integrating parents of school children to find common solutions.

**பாடசாலை உளவியல் என்பது,** மருத்துவ உளவியல் (Clinical Psychology), கல்வி உளவியல் (Educational Psychology), மற்றும் வளர்நிலை உளவியல் (Developmental Psychology) ஆகிய உளவியல் துறைகளின் கொள்கைகளைப் பிரயோகித்து, **சிறுவர்கள், மற்றும் கட்டிளமைப் பருவத்தினரின் நடத்தைகள் மற்றும் கற்றல் சார்ந்த பிரச்சினைகளை அடையாளம் காணவும், அவற்றிற்குப் பரிகாரம் காணவும் உதவுகின்ற ஒரு துறையாகும்.** இத்துறையானது, ஆசிரியர்கள், அரசியல்வாதிகள் மற்றும் நிறுவனப்படுத்தப்பட்டுள்ள கல்வித்துறையில் பணிபுரிகின்ற ஏனைய பொறுப்புமிக்க நபர்கள். கல்விரீதியானதும், ஒழுக்கரீதியானதும் அல்லது நிறுவனரீதியானதுமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவுகின்றது. அத்துடன் ஒரு பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களின் பெற்றோர்களை ஒன்றிணைத்து, பொதுவான தீர்வுகளைக் காண்பதற்கும் பாடசாலை உளவியல் உதவுகின்றது.)

இந்த வரைவிலக்கணத்தின்படி, பாடசாலை உளவியலில் பின்வரும் அம்சங்கள் அக்கறைக்குள்ளாகின்றன:-

1. மாணவர்களின் நடத்தைகள் மற்றும் கற்றல் சார்ந்த பிரச்சினைகளை அடையாளம் காண்பதும் அவற்றிற்கான பரிகாரங்களும்.
2. இவற்றை முறையாக மேற்கொள்வதற்கு, மருத்துவ உளவியல் (Clinical Psychology), கல்வி உளவியல் (Educational Psychology), மற்றும் வளர்நிலை உளவியல் (Developmental Psychology) ஆகிய மூன்று உளவியல் துறைகளின் கொள்கைகளையும் பிரயோகித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பாடசாலைகளில் உருவாகின்ற கல்வி ரீதியானதும், ஒழுக்க ரீதியானதும். மற்றும் நிறுவன ரீதியானதுமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பாக ஆசிரியர்கள், அரசியல்வாதிகள், கல்வி துறைசார்ந்த பிற நிர்வாகிகள் போன்றோரின் அக்கறையை ஈர்த்தல்.

4. பாடசாலைகளில் எழுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மாணவர் களின் பெற்றோர்களையும் உள்ளடக்கியதான பொறிமுறைமையை ஏற்படுத்துதல்.

மேற்கத்தைய அறிவியலாளர்களின் இந்த வரைவிலக்கணமானது, பாடசாலை உளவியலை முற்றிலும் மாணவர்களின் நடத்தைகளுடனும், அவர்கள் கற்றலில் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுடனும் மையப் படுத்துகின்றது. மேற்கத்தைய மற்றும் அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளைப் பொறுத்தவரையில், அங்கு பாடசாலைச் சூழலானது ஒப்பீட்டளவில், அதிக சுயாதீனத் தன்மை கொண்டதாகவும், நிர்வாக, கொள்கை வகுப்பு மற்றும் அமுலாக்கல் மட்டங்களைச் சேர்ந்தோரின் தலையீடுகளும், செல்வாக்குகளும் குறைந்தளவில் செயற்படுகின்ற இடமாகவும் உள்ளது. திடமான கல்விக் கொள்கைகள், பாடசாலைகளுக்கான ஆளணி, மற்றும் பௌதிக வளப் பங்கீடுகளில் சமநிலை, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டு வருகின்ற நவீன சாதனங்களின் பயன்பாடு, போன்ற நிலைமைகளின் விளைவாக அந்நாடுகளில் உள்ள பாடசாலைகள் ஒரு சீர் நிலையைப் பேணக் கூடியவைகளாக இருக்கின்றன. இவ்வாறு பாடசாலைகள் வள அடிப்படையிலும் செயற்பாட்டு ரீதியாகவும் சமநிலை கொண்டவைகளாக இருப்பதால், மாணவர்களின் அடைவு மட்டமும், அவர்களின் ஆளுமை விருத்தியும் அனைத்து பாடசாலைகளிலும் ஒரு சீர்த் தன்மை கொண்டவைகளாக இருக்க வேண்டும் என்ற எடுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த எடுகோளுக்கு உட்படாத அல்லது மாறான விளைவுகளை மாணவர்கள் வெளிப்படுத்துகின்ற போது, அதற்கான காரணிகளைக் கண்டு, அவற்றிற்கான பரிகாரங்களை முன்வைப்பதில் வெவ்வேறு பிரிவினர்களின் பங்குபற்றல் உள்வாங்கப் படுகின்றது. இவ்வகையில் அந்நாடுகளைப் பொறுத்தவரையில், பாடசாலை உளவியல் என்பது முற்றிலும் மாணவர்களை மையப் படுத்தியதாக வரையறுக்கப்பட்டுள்ளது. அந்நாடுகளில், பாடசாலைச் சூழலுக்குள் அடங்குகின்ற ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் உளவியலானது பாடசாலை உளவியல் என்ற வரையறைக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கப்படுவதில்லை. அங்குள்ள ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் முகம்கொடுக்கின்ற உளவியல் சார்ந்த பிரச்சினைகள் பெரிதும், **தொழில்சார் உளவியல்** (Professional Psychology) என்ற வகைக்குள் உள்ளடக்கப்பட்டு, அவற்றிற்கான தீர்வுகள் கண்டுகொள்ளப்படுகின்றன.

ஆனால், இலங்கை போன்ற நாடுகளில், நிலைமை முற்றிலும் வேறானதாக அமைந்திருக்கின்றது. இங்கு கல்விச் சூழலானது சுயாதீனமானதாக இல்லாமல், பெரிதும் அரசியல் நிலைமைகளினால் கட்டுப்படுத்தப்படுவதாக இருக்கின்றது. இதனால் அரசியல் தளத்தில் நிலவுகின்ற மாற்றங்களும், போக்குகளும் கல்விச் சூழலைப் பாதிப்பனவாக உள்ளன. இந்நாடுகளில் அரசியல் அதிகாரம் என்பது தனிநிலைப்படுத்தப்பட்டதாகவும், உயர் தன்மை கொண்டதாகவும் அமைந்திருப்பதால், அதிகாரமானது கீழ்நோக்கி பாய்கின்ற படிநிலை மட்டங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. இத்தகைய அதிகாரப் பாய்ச்சலானது, அதன் அரசியல் எல்லைகளையும் தாண்டியதாய், சமூகத்தின் அனைத்து துறைகளுக்குள்ளும் ஊடுருவிப் பரவுகின்றது. ஒரு நிறுவனத்தின் செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்காக, அந்நிறுவனத்தின் முகாமைத்துவக் கட்டமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள நிர்வாகம் சார்ந்த படிநிலை அமைப்பினுள்ளும் இத்தகைய அதிகாரம் ஊடுருவுகின்றது. இதனால் ஒவ்வொரு நிறுவனத்திலும் காணப்படுகின்ற படிநிலை அமைப்பு என்பது, செயல்திறன் சார்ந்த வகைப்படுத்தல் என்ற பண்பைக் கடந்து, அதிகாரத் தன்மை கொண்டதாய் மாற்றமடைகின்றது. இறுதியில் ஒட்டுமொத்த சமூகக் கட்டமைப்புமே அதிகாரத்தன்மை கொண்டதாய் இறுகி விடுகின்றது. இதன் விளைவு பாதகமானதாக மட்டுமின்றி, பாரதூரமானதாகவும் அமைகின்றது.

இத்தகைய கீழ்நோக்கிய அதிகாரப் பாய்ச்சலானது, தெளிவான புரிதலுடன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, தரப்பட்ட பணிகளை முடித்து விடவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை ஒவ்வொரு மட்டத்திலும் ஏற்படுத்துகின்றது. இவ்வகை நிர்ப்பந்தம் ஒருபுறம், பணிகளை முடித்தல் என்ற இயந்திரத்தன்மையான உளவியல் நிலையை ஏற்படுத்துவதோடு, மறுபுறம், ஒவ்வொரு மட்டத்திலும் அதிகாரம் வலுப்பெறுவதற்குக் காரணமாகின்றது. இறுதியில், முகாமைத்துவம் என்பது, ஒரு சூழலில் கிடைக்கக் கூடிய வளங்களை வினைத்திறனுடனும், விளைபயனுடனும் பயன்படுத்தி, உச்ச பயனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவதற்கான முறைமை என்ற நிலையைக் கடந்து, **அதிகாரத்தை அதன் உச்ச அளவில் பயன்படுத்தி ஒரு பணியை முடித்தல்** என்ற நிலையை அடைகின்றது. இத்தகைய பொதுப்போக்கிற்கு கல்விசார் நிறுவனங்களும் உட்படுகின்றன.

ஒரு பாடசாலைச் சூழலில் இத்தகைய அதிகாரத் தன்மை கொண்ட நிஉவாக முறைமை செயற்படும்போது, அது அப்பாடசாலையின் மாணவர்களின் மீது மட்டுமின்றி, அங்கு கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள், மற்றும் அதிபர்களின் உளநிலையிலும் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. நமது நாட்டில், பாடசாலைச் சூழலுக்குள் அடங்குகின்ற ஆசிரியர்களும், அதிபர்களும் வெவ்வேறு நிலைகளில் இத்தகைய அதிகாரப் பிரயோகத்தை எதிர் கொள்பவர்களாக இருக்கின்றார்கள். மேலும், நமது நாட்டில் கல்விக் கொள்கைகள், வளப்பங்கீடு, கற்பித்தல் சாதனங்கள் போன்றவை ஸ்திரமற்றவை களாகவும் சமநிலைத்தன்மையற்றவைகளாகவும், பற்றாக்குறை மிகுந்தவைகளாகவும் இருந்து வருவதால், இவை மாணவர்களை மட்டுமின்றி, ஆசிரியர்களையும், அதிபர்களையும் கடுமையாகப் பாதிக்கின்றவைகளாக அமைந்திருக்கின்றன. இத்தகைய பின்னணியில், நமது நாட்டில்உள்ள ஆசிரியர்களும், அதிபர்களும், ஊழியர்கள்என்றவகையில் முகம்கொடுக்கின்ற பிரச்சினைகளோடு, பாடசாலைச் சூழல் சார்ந்த பிரச்சினைகளையும் எதிர்கொள்பவர்களாக இருக்கின்றார்கள். இவை வளர்ச்சியடைந்துள்ள நாடுகளின் பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளில் இருந்து பெரிதும் வேறுபட்டவையாக அமைந்திருக்கின்றன. இவ்வகையில் இவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள், தொழில்சார் உளவியல் என்ற வரையறையைக் கடந்தவைகளாக இருக்கின்றன. எனவே, இவர்களின் பிரச்சினைகளையும் உள்ளடக்கியதாக, பாடசாலை உளவியல் என்ற துறையை விரிவு படுத்துவது நமக்கு அவசியமாகின்றது.

பாடசாலை உளவியல் என்ற கருத்தாக்கம், மாணவர்களின் ஆளுமை விருத்தி, அவர்களின் கற்றல் செயற்பாடுகள், அவர்கள் எதிர்கொள்கின்ற உளவியல் சார்ந்த விடயங்கள், அவர்களின் நடத்தைக் கோலங்கள் போன்ற பன்முக விடயங்களை உள்ளடக்கியதாக விரிவுபடுகின்றது. எனினும், இந்நூல் ஒரு பாடசாலை சூழலில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் எதிர்கொள்கின்ற உளநெருக்கடிகள் குறித்தே பிரதானமாக அக்கறை கொள்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03. பாடசாலை உளவியலின் மட்டங்கள்

பாடசாலை உளவியலானது, தனித்துவமானவையும், அதேவேளை ஒன்றுடன் ஒன்று இடையீடுகளை ஏற்படுத்தக் கூடியவையுமான பன்முகக் காரணிகளின் விளைவாக கட்டமைக்கப்படுகின்றது. பாடசாலை சூழலை பிரதானமாக மூன்று மட்டங்களாக வகைப்படுத்துவதன் மூலம், இந்தக் காரணிகளை தெளிவாக அடையாளம் காண்பதோடு, பாடசாலை உளவியலில் இவற்றின் வகிபாகங்களையும், இவற்றின் முக்கியத்துவங்களையும் சிறப்பான முறையில் புரிந்து கொள்ள ஏதுவாகவும் இருக்கும்.




## 1. பாடசாலை மட்டம்

இம்மட்டமானது, பாடசாலையின் அகச் சூழலாக அமைகின்றது. இம்மட்டத்தில், ஒரு பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர் ஆகியோர் அடங்குகின்றனர். அடிப்படையில் இம்மட்டம்தான், பாடசாலை உளவியலின் மையப் பகுதியாக அமைகின்றது. இப்பகுதியில் உள்ளடங்குகின்ற மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர் என்ற பிரிவினர்கள்தான் பாடசாலை உளவியலின் சாரமாக அமைகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. நிர்வாக மட்டம்

இம்மட்டத்தில், ஒரு பாடசாலையுடன் நிர்வாக ரீதியாக தொடர்புகளைப் பேணுகின்ற கோட்ட, வலய, மற்றும் மாகாண கல்வித் திணைக்களங்கள், மாகாண மற்றும் மத்திய கல்வி அமைச்சுக்கள் என்பன உள்ளடங்குகின்றன. இவற்றோடு, ஒரு பாடசாலையின் செயற்பாடுகளில் புறத்தே இருந்து பங்குபற்றுகின்ற பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம், நலன் விரும்பும் அமைப்புக்கள், உள்ளூர் தொழில்நிறுவனங்கள் போன்றன உள்ளடங்குகின்றன. இம்மட்டத்திலுள்ளவர்கள் ஒரு பாடசாலையுடன் நேரடியாகவும், அடிக்கடியும் தொடர்புகளை ஏற்படுத்தக் கூடியவர்களாக இருப்பதால், இவர்களின் செயற்பாடுகள், பாடசாலை உளவியலில் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்துவனவாக அமைந்திருக்கின்றன.

## 3. கொள்கை வகுத்தல் மற்றும் அமுலாக்கல் மட்டம்

இம்மட்டத்தில், அரசாங்கம் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் என்ற இரு பிரிவினர்கள் உள்ளடங்குகின்றார்கள். இவர்களை விட, அரசுசாரா நிறுவனங்கள், உதவி வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்கள் போன்றவையும் இம்மட்டத்தில் அடங்குகின்றன. இவர்கள் நேரடியாக ஒரு பாடசாலையுடன் தொடர்புகளை ஏற்படுத்தாத போதிலும், இவர்களின் முன்னெடுப்புகள் பாடசாலைகளின் ஒட்டுமொத்த செயற்பாடுகளையும் மாற்றியமைக்கக் கூடியவையாக இருப்பதால், இம்மட்டத்தைச் சேர்ந்தோர் பாடசாலை உளவியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவோராய் உள்ளனர்.

இத்தகைய பின்புலத்தில், பாடசாலை உளவியலில் நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கங்களை நிகழ்த்துகின்ற மேற்குறிப்பிட்டுள்ள காரணிகள் குறித்து பரிசீலிப்பது அவசியமாகின்றது. இத்தகைய பரிசீலனைக்காக, பாடசாலை உளவியலின் கூறுகளாக அமைகின்ற மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் ஆகியோர் எதிர்கொள்கின்ற உளவியல் அழுத்தங்களை தனித்தனியாக கவனத்தில் கொள்வது பொருத்தமானதாக அமையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. மாணவர்களின் உளவியலில் ஏற்படுகின்ற தாக்கங்கள்

**பாடசாலை** உளவியல் பற்றிய உசாவலில் அக்கறைக்குள்ளாக் கப்பட வேண்டிய முதன்மையான பிரிவினராக, மாணவர்கள் விளங்குகின்றார்கள். ஒரு பாடசாலையின் அடிப்படை அங்கமாக அமைகின்ற மாணவர்களை மையமாக வைத்தே அனைத்து விடயங்களும் தீர்மானிக்கப்பட்டு, பின் அவை முன்னெடுக்கப்படுகின்றன. ஒரு குடும்பத்தினதும், சமூகத்தினதும், நாட்டினதும் எதிர்காலத்தைத் தீர்மானிக்கவிருக்கின்ற முக்கிய பிரிவினர் என்றவகையில், மாணவர்கள் பிரதான இடத்தைப் பெறுகின்றார்கள். எனவே நடைமுறையிலுள்ள நமது நாட்டின் கல்வி முறையும், கல்விச் செயற்பாடுகளும், கல்விசாரா பிற அம்சங்களும் எவ்வாறு மாணவர்களின் உளவியலில் தாக்கங்களை நிகழ்த்துகின்றன என்ற பரிசீலனை மிகுந்த முக்கியத் துவத்திற்குரியதாகின்றது. இவற்றை பின்வரும் தலைப்புகளின் பரிசீலிப்பது பொருத்தமானதாக இருக்கும்.

1. மாணவர்களின் வளர்ச்சிப் பருவங்கள்
2. சுயகற்றல்
3. ஊடகங்கள்
4. கட்டாய பாடங்கள்
5. வெளியிடங்களில் கல்வி கற்றல்
6. பரீட்சை முறைமை
7. பாடசாலை நேர முறைமை
8. தண்டனைகள்
9. கிழக்கு மாகாணத்தின் குறிப்பாக சூழ்நிலைகள்

## 1. மாணவர்களின் வளர்ச்சிப் பருவங்கள்

முதலாம் வகுப்பில் இருந்து பதின்மூன்றாம் வகுப்பு வரையிலான காலப் பகுதியில், மாணவர்கள் வெவ்வேறான வளர்ச்சிக் கட்டங்களைக் கடந்து செல்கின்றார்கள். இந்த உண்மை நமது பாடசாலைச் சூழலில் முறையாகப் புரிந்து கொள்ளப்படுவதில்லை. குறிப்பாக, உளவியல் துறையில், பெரும் அக்கறைக்குள்ளாகின்ற, ஒப்பீட்டளவில் நீண்டதும், சிக்கலுக்குரியதுமான கட்டிளமைப்பருவமானது, இந்த மாணவப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவத்திலேயே இடம்பெறுகின்றது. இவ்வகையில் மாணவப் பருவம் என்பது, உளவியல் ரீதியாக, பெரும் தாக்கங்களும், மாற்றங்களும், கிளர்ச்சிநிலைகளும் நிகழ்கின்ற காலப் பகுதியாக இருக்கின்றது.

மாணவர்களின் உளவியலில் ஏற்படுகின்ற மாற்றங்களும், தாக்கங் களும், கிளர்ச்சி நிலைகளும் நேர்நிலையானதாகவும், அவர்களில் ஆரோக்கியமான வளர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் அமைவது முக்கியமானது. கிட்டத்தட்ட ஒரு நாளில் மூன்றில் ஒரு பகுதியை, மாணவர்கள் தமது பாடசாலைகளிலேயே கழிக்கின்றார்கள். இந்நேரத்தில் அங்கு மிகப் பெரும்பாலான பகுதி, கற்றல் நடவடிக்கைகளில் செலவிடப்பட வேண்டியிருப்பினும், கற்றல் நடவடிக்கைகளுக்கூடாகவும், கற்றல்சாரா நடவடிக்கைகளுக்கூடாகவும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கூடாகவும் மாணவர்களின் உளவியல் பெரும் அசைவுகளுக்கு உள்ளாகின்றது.

மாணவர்கள் தமது 05 வயதில் இருந்து 19 வயது வரையிலான நீண்ட காலத்தை பாடசாலைகளில் கழிக்கிறார்கள். ஒரு பிள்ளையின் உடல், உள, மற்றும் அறிவு ரீதியான வளர்ச்சிகள் இடம்பெறுகினற் காலப் பகுதியாக இது விளங்குகின்றது. இந்த மூன்று வளர்ச்சிகளும் ஒன்றில் ஒன்று சார்ந்ததாகவும், ஒன்றை ஒன்று பாதிப்பனவாகவும் அமைந்திருக் கின்றன. நாம் அக்கறை கொண்டுள்ள பரிசீலிப்பானது, உளவியல் ரீதியானதாக இருப்பதால், பாடசாலை சார்ந்த செயற்பாடுகளோடு, பிற காரணிகளும் எவ்வாறு மாணவர்களின் உளவியலில் தாக்கங்களை நிகழ்த்துகின்றன என்ற விடயங்கள் முக்கியமாகின்றன.

ஒரு பிள்ளையின் உளவியலை வடிவமைப்பதில், அப்பிள்ளையின் மரபணுவியல் காரணிகளோடு (Genetic Factors), குடும்பம் (Family), நண்பர் குழாம் (Peer Groups), சூழல் (Environment), என்பனவும் பங்களிப்புச் செய்கின்றன. சூழல் என்பது, வீட்டுச் சூழல், பாடசாலைச் சூழல், பொழுதுபோக்கு நிகழ்வுகள் என பல அம்சங்களை உள்ளடக்கிய பல்கூட்டு காரணியாக இருக்கின்றது. இத்தகைய பன்முகக் காரணிகளின் கூட்டு வினைகளின் விளைவாகவே ஒரு பிள்ளையின் உளவியல் கட்டமைக்கப்படுகின்றது. இந்த உண்மையை சரியாகப் புரிந்து கொள்ளும்போதுதான், மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பாடசாலைகளோடு ஏனைய காரணிகளும் கொண்டிருக்கின்ற வகிபாகத்தை முறையாக மதிப்பீடு செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சுயகற்றல்

கற்றல் என்பது, ஒருவர் தான் அறியாதவற்றை அறிந்து கொள்வதற்கும், அறிந்தவற்றை மேலும் விருத்தி செய்வதற்குமான செயன்முறை என்று சுருக்கமாகக் குறிப்பிட முடியும். ஒரு செயன்முறை என்றவகையில், கற்றலானது தொடர்ச்சியாக இடம்பெறுகின்றது. பாடசாலைகளைப் பொறுத்தவரை, அவற்றின் முதன்மையான இலக்கே, மாணவர்களின் கற்றலுக்கு உதவுவதுதான். ஆசிரியர்களில் தொடங்கி, பாடசாலைகளில் உள்ள அனைத்து வளங்களும், மாணவர்களின் கற்றலை ஊக்குவிக்கும் நோக்கிலேயே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. வெவ்வேறு பாடங்களைக் கற்பதோடு, நற்பண்புகள், திறமைகள், மற்றும் ஆற்றல்கள் போன்ற வற்றையும், கற்று, வளப்படுத்த வேண்டும் என மாணவர்கள் எதிர்பார்க் கப்படுகின்றார்கள்.

பாடசாலை கற்றல் செயற்பாட்டில் ஆசிரியர்களின் வகிபாகம் பிரதானமானதாக இருக்கின்றது. விளக்கமளித்தல் (Explaining), முகாமைத்துவம் (Management), வழிகாட்டுதல் (Guiding), கண்காணித்தல் (Monitoring), அடையாளம் காணுதல் (Identifying), உற்சாகப்படுத்தல் (Encouraging), ஆலோசனை வழங்குதல் (Counselling), உதவி செய்தல் (Assisiting) என வெவ்வேறு வழிமுறைகளில் மாணவர்களின் கற்றல் செயன்முறையை ஊக்குவிக்க வேண்டிய பொறுப்பை ஆசிரியர்கள் கொண்டிருக்கின்றார்கள். எனினும், ஆரம்ப வகுப்புகளில் இருந்து உயர்தர வகுப்புகளை நோக்கிச் செல்கையில், மாணவர்களின் கற்றலில், ஆசிரியர்களுக்குள்ள வகிபாகம் மாற்றமடைகின்றது. ஆரம்ப வகுப்பு மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் பங்கு மிகப் பெருமளவில் தேவைப்படுகின்ற நிலையில், உயர்தர வகுப்புகளில், ஆசிரியர்களின் பங்கு வரையறைக்குட்படுவதாக மாறுகின்றது. இடைநிலை மற்றும் உயர்தரங்களில், மாணவர்களின் சுயகற்றல் என்பது, பிரதானமான அம்சமாக முன்னெழுகின்றது.

சுயகற்றல் என்பது, தன்னுணர்வுடன், பிரக்ஞைபூர்வமாக நிகழுகின்ற செயன்முறையாக இருக்கின்றது. ஒருவர், தனது வாழ்வில் எண்ணற்ற விடயங்களை கடுமையான முயற்சியின்றி கற்றுக் கொள்கின்றார். பல சந்தர்ப்பங்களில், தான் அறியாமலேயே பல விடயங்களை அவர் கற்றுக் கொள்கின்றார். பயிற்சி, பின்பற்றுகை, போலச் செய்தல் போன்ற முறைகளினூடாக, பெரும்பாலும் முறைசாரா (informal) விதத்திலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் (non-formal) விதத்திலும் இத்தகைய கற்றல் செயன்முறை நிகழ்கின்றது. ஆனால் பாடசாலை கற்றல் என்பது, பெரிதும் முறைசார்ந்த (formal) விதத்தில் அமைகின்றது. குறிப்பாக, இடைநிலை மற்றும் உயர்தர வகுப்புகளில் தன்னுணர்வுடன் கூடிய பிரக்ஞைபூர்வமான கற்றல் செயன்முறை அவசியமாகின்றது. இக்கற்றலிலும், ஆசிரியர்களின் வகிபாகம் அவசியமாகின்றபோதிலும், மாணவர்களின் அக்கறையும் முயற்சியும், இதில் அதிகமாக எதிர்பார்க்கப்படுகின்றன. குறிப்பிட்ட பாடத்தை தாம் கற்று, விளங்க வேண்டும் என எந்தளவுக்கு மாணவர்கள் உணர்வுபூர்வமாக முயற்சி செய்கின்றார்களோ, அந்தளவுக்கு அவர்கள் அப்பாடத்தில் சிறந்த தேரச்சியைப் பெற்றுக் கொள்வது சாத்தியமாகின்றது. பாடசாலைக்கு வெளியே கற்பதற்கான மூலங்களும், வழிகளும், சாத்தியங்களும் அதிகளவில் உருவாகியுள்ள நிலையில், மாணவர்களின் சுயகற்றல் என்பது, மேலும், மேலும் அவசியமான அம்சமாக மாறியிருக்கின்றது.

இவ்வகையில் பிள்ளைகள், பாடசாலைகளிலும், அவற்றிற்கு வெளியேயும், வழிகாட்டலுடனும், சுயமாகவும் கற்கக் கூடிய ஆற்றலைக் கொண்டவர்களாகக் கருதப்பட்டு, அதற்கேற்ப, கல்விக் கொள்கை களும், கற்பித்தல் முறைகளும், மதிப்பீட்டு முறைகளும் வடிவமைக் கப்படுகின்றன. **எந்தளவுக்கு நவீன கற்றல் சாதனங்கள் அதிகரித்து, விரிவடைந்து வருகின்றனவோ, அந்தளவுக்கு மாணவர்களின் சுயமான கற்றல் விரிவடைகின்றது அந்தளவுக்கு ஆசிரியர்களின் வகிபாகம் மட்டுப்படுகின்றது.** இன்றைய கல்வி முறை, மாணவர்கள் பன்முக அறிவைப் பெறுவதிலும் பார்க்க, ஒரு குறித்த துறையில், ஆழ்ந்த அறிவைப் பெறுவதை பிரதான இலக்காகக் கொண்டிருக்கின்றது. பாடவிதானமானது, வயதுக்கும், வகுப்பிற்கும் ஏற்ப வடிவமைக்கப்பட்டு, பல்வேறு விடயங்கள் கற்பிக்கப்படுகின்றன. எனினும், உயர் வகுப்புகளில், பாடங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு, அப்பாடங்களில் ஒப்பீட்டளவில் மாணவர்கள் ஆழ்ந்த அறிவைப் பெறும்வகையில் பாடவிதானம் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது, கலை, வர்த்தகம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் என வரையறுக்கப்பட்டுள்ள எதாவது ஒரு பிரிவில் மட்டுமே மாணவர்கள் தமது கற்றலை மேற்கொள்ளக் கூடிய சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. பாடசாலைக் கல்வி முடிந்த பின்னர், பல்கலைக்கழகங்களிலும், பிற உயர்கல்வி நிலையங்களிலுமான கற்றல் என்பதும்கூட, ஒரு துறையில் மிக ஆழ்ந்த அறிவைச் சுவீகரிப்பதாகவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது. அதாவது, முன்னார் பன்முக அறிவை பெறும் வாய்ப்பைப் பெற்றிருந்த மாணவர்கள், இன்று குறித்த துறைசார்ந்த அறிவை மட்டுமே பெறக் கூடியவர்களாக உள்ளனர்.

இவ்வாறு இன்றைய கல்வி முறைமை மாணவர்களின் சுயகற்றலை முதன்மைப்படுத்துவதாக அமைந்திருக்கின்ற நிலையில், நமது மாணவர்கள், இத்தகைய சுயகற்றலில் எத்தகைய ஆர்வத்துடனும், சிறப்பாகவும் ஈடுபடுகின்றார்கள் என்ற விடயம் அக்கறைக்குட்பட வேண்டியதாக இருக்கின்றது.

வகுப்பறைகளில், பயிற்சிகள், குழுச் செயற்பாடு (Group Activity), முன்வைப்பு (Presentation) நடிப்பு. போன்ற முறைகளில் மாணவர்களுக்கு சுயகற்றலுக்கான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இவற்றில், மீத்திறன் கூடிய மாணவர்களும், எதிர்பார்க்கப்படுகின்ற அறிவுமட்டத்தை அடைந்துள்ள மாணவர்களும் ஆர்வத்துடனும் சிறப்பாகவும், விரைவாகவும் தமது ஆற்றல்களை வெளிப்படுத்துகின்றனர். சராசரியான அறிவு மட்டத்தையுடைய மாணவர்களும், மெதுவாகக் கற்கும் மாணவர்களும் (Slow Learners), மீத்திறன் குறைந்த மாணவர்களும், இவற்றில் பின்தங்கி விடுவதே பொதுவான அவதானமாக இருக்கின்றது. நாற்பது நிமிடங்கள் என்ற நேர வரம்பிற்குள் சராசரி முப்பது மாணவர்களைக் கொண்ட ஒரு வகுப்பில், எதிர்பார்க்கப்படுகின்ற அடைவு மட்டத்தை அனைத்து மாணவர்களும் அடைவது என்பது பொதுவாக நிகழாத ஒரு விடயமாகவே இருக்கின்றது. பெரும்பாலும், இத்தகைய பின்தங்கிய மாணவர்கள், முன்னைய மாணவர்கள் செய்து முடித்தவற்றை பிரதிபண்ணுபவர்களாகவே செயற்படுகின்றனர். குழுச் செயற்பாடுகளின்போது, இந்த உண்மையை சிறப்பாக அவதானிக்க முடியும். தமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாட்டை செய்து முடிப்பதில், ஒரு குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ள மீத்திறன் கூடிய மாணவர்களிலேயே ஏனைய மாணவர்கள் தங்கியிருக்கின்றார்கள்.

மாணவர்களின் சுயகற்றலை ஊக்கப்படுத்துகின்ற இன்னொரு வகைச் செயற்பாடுகளாக அவர்களுக்கு வழங்கப்படுகின்ற வெவ்வேறு வீட்டுவேலைகள் (Homework) அமைந்திருக்கின்றன. பயிற்சிகள் (Activities) ஒப்படைகள் (Assignment), முன்வைப்புகள் (Presentation) போன்றவை, இவ்வாறு வழங்கப்படுகின்ற வீட்டுவேலைகளாக அமைந்திருக்கின்றன. இவை, அடிப்படையில் மாணவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயகற்றல் மற்றும் தேடல்களை அதிகம் எதிர்பார்ப்பதாகவும், ஊக்குவிப்பதாகவும் அமைந்திருக்கின்றன. எனினும், நடைமுறையில், மாணவர்களின் மத்தியில் இது குறித்த புரிதல் இன்னும் முழுமையாக ஏற்படாமல் இருக்கின்றது. க.பொ.த உயர்தர வகுப்பில் கற்கின்ற மாணவர்களிடையே சுயதேடலும், சுயகற்றலும் ஓரளவுக்கு நிகழ்கின்றபோதிலும், இடைநிலை மற்றும் கீழ்வகுப்பு மாணவர்கள் பெரிதும் இதுகுறித்த புரிதல் அற்றவர்களாகவே இருக்கின்றார்கள். இங்கு மாணவர்கள் மத்தியில் சுயகற்றலும், சுயதேடலும் நிகழ்வதைக் காட்டிலும், அவர்களின் பெற்றோர்களிடையேதான் இவை அதிகமாக இடம்பெறுகின்றன. ஒப்படை, முனைவைப்பு போன்றவற்றில் மாணவர் களின் பெற்றோர்கள் எந்தளவுக்கு அக்கறையும், ஈடுபாடும் கொண்டி யங்குகின்றார்களோ, அந்தளவுக்கு அந்த மாணவர்கள் அவற்றைச் சிறப்பாக செய்து, வகுப்பில் அவற்றை வெளிப்படுத்துபவர்களாக இருக்கின்றார்கள். இதனூடாக அந்த மாணவர்களின் அடைவு மட்டமும் அதிகரிக்கின்றது. இதற்கு மாறாக, பெற்றோர் இல்லாத, பெற்றோரின் பங்களிப்பு இல்லாத அல்லது பெற்றோரின் பங்களிப்பு குறைவாக உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள், பெரும்பாலும் அடைவு மட்டம் குறைந்தவர்களாக இருப்பதற்கு, அவர்களின் இத்தகைய குடும்பப் பின்புலம் முக்கிய காரணியாக அமைந்திருக்கின்றது. ஒரு பாடசாலையில், பெற்றோர் பங்களிப்பு பலவீனமாக உள்ள மாணவர் களின் எண்ணிக்கை எந்தளவுக்கு அதிகமாக இருக்கின்றதோ, அந்தளவுக்கு அப்பாடசாலையின் ஒட்டுமொத்த அடைவு மட்டம் வீழ்ச்சியடைகின்றது.

சுயகற்றலினூடாக, (குறிப்பாக, மாணவர்களிடம் ஒப்படைக்கப்படு கின்ற வேலையினூடாக) மாணவர்களிடம் காணப்படுகின்ற வெவ்வேறு திறமைகள் அடையாளம் காணப்பட வேண்டும் என்பது ஒரு பிரதானமான எதிர்பார்ப்பாக இருக்கின்றது. எனினும், மாணவர்களின் திறமைகளை அடையாளம் காண்பதற்குப் பதிலாக, அவர்களிடம் கொடுக்கப்பட்ட வேலையை முடித்துள்ளார்களா என்பதைக் கவனிப்பதிலேயே ஆசிரியர்கள் அக்கறை செலுத்துகின்றார்கள். அவ்வாறு செய்து வராத மாணவர்களுக்கு தண்டனை வழங்குதல் என்பது ஒரு பொதுவான நிகழ்வாக இருக்கின்றது. இதனால் தமக்கு வழங்கப்படக் கூடிய தண்டனைகள் மற்றும் அவமானப்படுத்தல்களில் இருந்து தாம் தப்பி விட வேண்டும் என்ற எண்ணத்தில், வீட்டிலுள்ளவர்களின் உதவியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமாகவோ, தனியார் வகுப்புகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் உதவியுடனோ அல்லது பிற மாணவர்கள் செய்ததை பிரதி பண்ணியோ தமக்கு வழங்கப்பட்ட வேலையை முடித்து விட வேண்டும் என்ற உளவியல் உந்தலுக்கு பல மாணவர்கள் ஆளாகின்றார்கள். சரியாகக் கூறினால், பெரும்பாலான மாணவர்கள் வீட்டுவேலையை சுமையாகக் கருதி, அதனால் தமக்கு ஏற்படக் கூடிய தண்டனைகள் பற்றிய உளவியல் அச்சத்திற்குள்ளானவர்களாக இருக்கின்றார்கள். இதனால் இத்தகைய மாணவர்கள், பாடசாலைக்குச் செல்வதில் ஆர்வமற்றவர்களாகவும், பாடசாலைகளை வெறுப்பவர்களாகவும், பாடசாலைக்குச் செல்வதை அடிக்கடி தவிர்ப்பவர்களாகவும் மாறுகின்றார்கள். இறுதியில், எந்த நோக்கத்திற்காக மாணவர்களுக்கு வீட்டுவேலைகள் கொடுக்கப்படுகின்றனவோ, அதற்கு முற்றிலும் மாறான விளைவுகள் அவர்களுக்கு ஏற்படுகின்ற நிலை உருவாகின்றது.

## 3. ஊடகங்கள்

இன்றைய சூழலில், மாணவர்களின் உளவியலின் தாக்கங்களை ஏற்படுத்துகின்ற முக்கிய காரணிகளாக ஊடகங்கள் அமைந்திருக்கின்றன. பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, சினிமா, தொலைக்காட்சி, தொலைபேசி, இணையம், சமூக வலைத்தளங்கள் என தொடர்ச்சியாக, வகைகளிலும் எண்ணிக்கையிலும் அதிகரித்துச் செல்கின்ற ஊடகங்கள், மாணவர்களின் உளவியலில் பாரிய தாக்கங்களை நிகழ்த்துவனவாக அமைந்திருக்கின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களின் இவற்றினால் மாணவர்கள், நேர்நிலையான தூண்டல்களை அடைவதற்குப் பதிலாக, எதிர்நிலையான தூண்டல்களைப் பெறுபவர்களாக இருக்கின்றார்கள். குறிப்பாக இவை மாணவர்கள் மத்தியில், கட்டுப்பாடுகளை மீறுவதற்கான உளநிலைத் தூண்டல்களை ஏற்படுத்துவனவாக அமைந்திருக்கின்றன. இன்று உருவாக்கப்படுகின்ற சினிமா, மற்றும் தொலைக்காட்சி நாடகங்களில், உயர்வுக்கும், கண்ணியத்திற்குமுரிய பாத்திரங்கள் அகற்றப்பட்டு, சாதாரண மனிதர்கள், குறிப்பாக பின் - கட்டிளமைப் பருவத்திற்குரியவர்கள் நாயகத்தன்மை கொண்டவர்களாக மாற்றப் படுகின்றார்கள். வில்லன்கள் மட்டுமன்றி நாயகர்களும் கூட, சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களாகவும், தவறான நடத்தைகளைக் கொண்டவர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றார்கள். தீயவர்களாக அமைகின்ற வில்லன்களும் கூட, வியப்பை ஏற்படுத்துபவர்களாகவும், பின்பற்றப்படுபவர்களாகவும் வார்க்கப்படுகின்றார்கள். மனித மனங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடங்கியுள்ள எதிர்நிலைக் கூறுகளின் பிம்பங்களாக அமைகின்ற வகையில், இப்பாத்திரங்கள் மிகநுட்பமான முறையில் கட்டமைக்கப் படுகின்றன. சகலவிதமாக சமூகக் கட்டுப்பாடுகளையும் அறுத்தெறி பவர்களாக காட்சிப்படுத்தப்படுகின்ற இத்தகைய பாத்திரங்களினால் பாதிப்புக்குள்ளாகின்ற முக்கிய பிரிவினர்களாக மாணவர்கள் இருக்கின்றார்கள்.

இன்று, ஊடகங்களை எவரும் சுயமாகக் கையாள்வதற்கான சாத்தியப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த சாத்தியப்பாடு மாணவர்களின் உளவியலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. ஒரு புறம், பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, சினிமா போன்றவை, அவற்றைப் பயன்படுத்துபவர்களின் மீது (Targetted section), வலுவான தாக்கங்களை நிகழ்த்துவனவாக அமைந்திருக்கின்றன. மறுபுறம், நூற்றுக்கணக்கான அலைவரிசைகளைக் கொண்ட தொலைக்காட்சியும், நவீனப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற கைப்பேசி மற்றும் இணைய விரிவாக்கமும், குறிப்பாக இளம்பருவத்தினரை மிக வன்மையாகப் பாதித்துக் கொண்டிருக்கின்றன. இவை, ஒருவர் தாம் விரும்பிய நேரத்தில், விரும்பிய நிகழ்ச்சிகளை பார்க்கக் கூடியதாக இருப்பது மட்டுமின்றி, மற்றவர்களுடன் தொடர்பாடல்களை நிகழ்த்தக் கூடிய சாத்தியப்பாடுகளையும் கொண்டிருக்கின்றன. இதன் விளைவாக எல்லைகள் களையப்பட்டு, ஒருவர் தான் விரும்பிய எவருடனும் தொடர்புகளை ஏற்படுத்த முடிகின்றது. தமது பிரதேசங்களைத் தாண்டி பயணிப்பதே சாத்தியமற்றதாக இருந்த அன்றைய சூழலையும், தனது வீட்டில் இருந்தவாறே முழு உலகையும் தொடர்புகொள்ளக் கூடிய இன்றைய சூழலையும் கவனத்தில் கொள்ளும் போது, நவீன தொடர்பூடகங்களினால் ஏற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற தாக்கங் களின் வலிய பரிமாணத்தை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.

இத்தகைய நவீன தொடர்பூடகங்களின் தாக்கங்களுக்குட்பட்டுள்ள முக்கிய பிரிவினராக, கட்டிளமைப் பருவத்திலுள்ள மாணவர்கள் விளங்குகின்றார்கள். பாடசாலைகள் மற்றும் பிற நிறுவனங்களினூடாக இந்த நவீன சாதனங்களைப் பற்றிய அறிவைப் பெற்றவர்களாகவும், அவற்றை இலகுவாகக் கையாளக் கூடியவர்களாகவும் மாறியிருக்கின்ற இம்மாணவப் பருவத்தினரில் பெரும்பான்மையோர், இந்த சாதனங்களை தமது கற்றல் செயற்பாடுகளுக்கு ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துவதற்குப் பதிலாக, இவற்றின் பொழுதுபோக்கு அம்சங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதீத அக்கறை கொண்டவர்களாக இருக்கின்றார்கள். நேர விரயம், சிந்தனைத் திருப்பம், தவறான தொடர்புகள், அவற்றின் பாதக விளைவுகள் என கட்டிளமைப் பருவ மாணவர்களைப் பல முனைகளிலும் பாதிப்பதாக நவீன தொடர்பூடகங்கள் அமைந்திருக்கின்றன. முன்னர் 'மஞ்சள் பத்திரிகைகள்' 'நீலப்புகைப்படங்கள்' என்றளவில் ஆபாச எழுத்துக்கள் மற்றும் படங்கள் என்பவை புழக்கத்தில் இருந்தபோது, அவற்றை அடைந்து கொள்வதும், அவற்றின் மீதான மாணவர்களின் ஈடுபாடும் பெரிதும் மட்டுப்பட்டிருந்தன. ஆனால் இன்று எந்தவித தடையுமற்று, மாணவர்கள் தாம் விரும்பிய நேரத்தில், விரும்பிய இடத்தில் இருந்து இவற்றை அடைந்து கொள்வதற்கான சாத்தியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றின் விளைவுகள். மாணவர்களின் உளவியலில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. கட்டுப்பாடின்மை, ஒழுக்கச் சிதைவு குறித்த பிரக்ஞையின்மை, பொழுதுபோக்கு நிகழ்வுகளில் அதீத ஆர்வம். காதல், மற்றும் பாலியல் செயற்பாடுகள் நோக்கிய ஈர்ப்பு என பன்முகப் பண்புகளின் உருவகமாக இன்றைய மாணவர்கள் மாறிக் கொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய மாற்றங்கள் அதிகம் வெளிப்படுகின்ற இடங்களாக பாடசாலைகள் அமைந்திருக்கின்றன. ஒத்த வயதுடையவர்கள் ஒன்று குவிவதற்கான மையங்களாக பாடசாலைகள் அமைவதால், புதிய பண்புகளின் விளைநிலமாக பாடசாலைகள் மாறுகின்றன. **இத்தகைய பண்புகளைப் பெற்றவர்களாக எத்தனை மாணவர்கள் ஒரு பாடசாலையில் இருக்கின்றார்கள் என்ற எண்ணிக்கையிலும் பார்க்க, இத்தகையோர் ஒரு பாடசாலையில் இருக்கின்றார்கள் என்பதே பிரதான அக்கறைக்குரியதாக இருக்கின்றது.** இத்தகைய மாணவர்களினால், முதலில் வகுப்பறைச் சூழலும், பின்னர் பாடசாலைச் சூழலும் படிப்படியே பாதிப்புக்குள்ளாகின்றன. தவறான பண்புகளைக் கொண்ட இத்தகைய மாணவர்கள், ஒரு புற்றுநோய் கலத்தைப் போன்று தொழிற்படுகின்றார்கள். அவர்கள் தம்மை மட்டுமின்றி, தமக்கருகே உள்ள சகமாணவர்களையும் படிப்படியே தமது தவறான நடத்தை களுக்கு ஆளாக்குகின்றார்கள். புதிதாக பின்பற்றப்படுகின்ற ஒரு செயற்பாட்டை தான் பின்பற்றாதிருந்தால், தனது நண்பர் வட்டத்தில் இருந்து தாம் விலக்கப்படக் கூடிய அச்சத்தையும், சகமாணவர்களின் கேலிக்குள்ளாகக் கூடிய அவமான நிலையையும் கருத்தில் கொண்டு, இத்தகைய தவறான நடத்தைகளை பின்பற்றுபவர்களாக பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் மாறுகின்றார்கள். மாணவர்களை அவர்களின் கற்றல் செயற்பாடுகளில் இருந்து விலக்கி விடும் வகையில் அமைகின்ற இத்தகைய பண்புகளினால், முதலில் வகுப்பறைக் கற்பித்தலும் பின்னர் ஒட்டுமொத்தமாக பாடசாலையின் அடைவு மட்டமும் பாதிப்புக்குள்ளாகின்றன.

## 4. கட்டாய பாடங்கள்

மாணவர்களின் அடைவு மட்டத்தை தீர்மானிக்கின்ற பிரதான சுட்டியாக க.பொ.த (சா.த) பரீட்சை அமைந்திருக்கின்றது. இப்பரீட்சையானது மாணவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக அமைந்திருக்கின்றது. ஏனெனில் **இப்பரீட்சையில் தோல்வியடைகின்ற மாணவர்களின் முறைசார் கல்வி வாழ்வு மட்டுமின்றி, பாடசாலைகளுக்கூடாக அவர்களின் ஆற்றல்கள் வெளிப்படுவதற்கான சாத்தியங்களும் முடிவுக்குக் கொண்டு வரப்படுகின்றன.** இப்பரீட்சையில் குறைந்தது ஆறுபாடங்களில் சித்தியடைய வேண்டும் என்பதும், இவற்றில் தாய்மொழியில் திறமைச் சித்தியும், கணித பாடத்தில் சாதாரண சித்தியும் பெறுவது அவசியம் என்பதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. இப்பரீட்சையில் தோல்வியடைபவர்களில் பெரும்பாலானோர் தாய்மொழி மற்றும் கணிதப் பாடங்களில் சித்தியடையத் தவறுபவர்களாக இருக்கின்றார்கள்.

**(பார்க்க: அட்டவணைகள்)**

## தமிழ்மொழியும், இலக்கியமும்

### பரீட்சை மதிப்பீடு: 2012

**தேசிய ரீதியிலான பெறுபேறுகள்:**

| தோற்றியோர் | பாடசாலை பரீட்சார்த்திகள் | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் |
|---|---|---|
| 79823 | 65378 | 14455 |
| சாதாரண சித்தி (S) | 26.8 வீதம் | 37.48 வீதம் |
| சித்தியடையாதோர் (W) | 22.32 வீதம் | 37.16 வீதம் |
| மொத்தம்: (S+W) | 49.12 | 74.64 |

**ஆதாரம்:-** ஆய்வு அபிவிருத்திக் கிளை தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்குமான சேவை இலங்கை பரீட்சைத் திணைக்களம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடத்தில் திறமைச் சித்தி (C) பெறாத மாணவர்கள், க.பொ.த (உ.த) கல்வியைத் தொடர்வதற்கான தகைமை அற்றவர்களாகக் கருதப்படுகின்றார்கள். இவ்வகையில், மேலுள்ள அட்டவணையில் இருந்து, 2012 க.பொ.த (சா.த) பரீட்சையில், தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தில், தேசிய ரீதியில் தோற்றிய அண்ணளவாக **ஐம்பது வீதமான** பாடசாலை பரீட்சார்த்திகள் இப் பாடத்தில் திறமைச் சித்தியை பெறாதவர்களாக இருந்திருக்கின்றார்கள் என்பதை அறிய முடிகின்றது. தனிப்பட்ட பரீட்சார்த்திகளில் அண்ணளவாக **முக்கால் பங்கினர் (75 வீதம்)** திறமைச் சித்தியை பெறவில்லை. இவ்வகையில், இவர்கள் க.பொ.த உயர்தர கல்வியைத் தொடரக் கூடிய சந்தர்ப்பத்தை இழந்தவர்களாக ஆகியுள்ளார்கள்.

இம்மதிப்பீட்டை மாவட்ட, மற்றும் வலய மட்டங்களில் மேற்கொள்ளும் போது. திறமைச் சித்தியைப் பெறத் தவறிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்த அளவில் இருப்பதை அறிய முடிகின்றது.

**மாவட்ட மட்ட பெறுபேறுகள்:**

| மாவட்டம் | சாதாரண சித்தி (S) | சித்தியடையாதோர் (W) | மொத்தம்: (S+W) |
|---|---|---|---|
| நுவரெலியா | 31.28 | 22.13 | 53.41 |
| மாத்தறை | 29.73 | 38.08 | 67.81 |
| காலி | 23.44 | 39.06 | 62.50 |
| அநுரதபுரம் | 27.78 | 24.73 | 52.51 |
| பதுளை | 30.08 | 29.14 | 59.22 |
| மொனராகலை | 24.08 | 48.69 | 72.77 |
| இரத்தினபுரி | 28.90 | 34.55 | 63.45 |
| கம்பஹா | 25.76 | 24.69 | 50.45 |
| களுத்துறை | 22.90 | 32.77 | 55.67 |
| கண்டி | 24.29 | 25.46 | 49.75 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| மாத்தளை | 24.78 | 25.92 | 50.70 |
| அம்பாந்தோட்டை | 21.01 | 44.93 | 65.94 |
| கிளிநொச்சி | 23.09 | 28.86 | 51.95 |
| முல்லைத்தீவு | 22.69 | 28.17 | 50.87 |
| குருநாகல் | 27.11 | 33.51 | 60.62 |

**ஆதாரம்:** ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்.

மேற்படி புள்ளி விபரமானது, நாட்டில் உள்ள இருபத்தைந்து (25) கல்வி மாவட்டங்களில், **பதினைந்து** (15) மாவட்டங்களைச் சேர்ந்த 50 சதவீதத்திற்கும் அதிகமான மாணவர்கள், தமிழ்மொழி பாடத்தில் திறமைச் சித்தி (C) பெறத் தவறியதன் காரணமாக, 2013ஆம் ஆண்டில் க.பொ.த (உ.த) கல்வியைத் தொடர முடியாத நிலைக்கு ஆளாகியுள்ளாகள் என்பதை தெரியப்படுத்துகின்றது. இந்த மதிப்பீட்டை வலய மட்டத்தில் பரிசீலிக்கும்போது, நாட்டிலுள்ள தொண்ணூற்றி ஏழு (97) கல்வி வலயங்களில் **அறுபத்தியாறு (66)** கல்வி வலயங்களில், ஐம்பது வீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் தமிழ்மொழி பாடத்தில் திறமைச் சித்தியை பெறத் தவறியிருப்பதை அறிய முடியும். கீழே உள்ள அட்டவணையானது சில கல்வி வலயங்களில் மாணவர்கள் திறமைச் சித்தி பெறத் தவறியது பற்றிய விபரங்களைத் தருகின்றது.

### வலய மட்ட பெறுபேறுகள்:

| வலயம் | சாதாரண சித்தி (S) | சித்தியடை யாதோர் (W) | மொத்தம்: (S+W) |
|---|---|---|---|
| ஹோமாகம | 23.60 | 48.31 | 71.91 |
| தெல்தெனிய | 38.62 | 39.37 | 77.99 |
| நாவுல | 40.00 | 44.00 | 84.00 |
| நுவரெலியா | 33.48 | 18.85 | 52.33 |
| ஹட்டன் | 29.62 | 21.50 | 51.12 |
| தீவகம் | 27.68 | 29.58 | 57.26 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கிளிநொச்சி | 23.09 | 28.86 | 51.95 |
| வவுனியா - வடக்கு | 32.46 | 21.58 | 54.04 |
| துணுக்காய் | 25.76 | 30.63 | 56.39 |
| கல்குடா | 31.27 | 19.60 | 50.87 |
| பட்டிருப்பு | 24.24 | 31.67 | 55.91 |
| மட்டக்களப்பு - மேற்கு | 30.76 | 24.07 | 54.83 |
| சம்மாந்துறை | 26.93 | 26.59 | 53.52 |
| மூதூர் | 27.17 | 28.48 | 55.65 |
| கிண்ணியா | 31.26 | 21.40 | 52.66 |
| திருகோணமலை - வடக்கு | 25.00 | 39.02 | 64.02 |
| இரத்தினபுரி | 26.96 | 39.71 | 66.68 |
| குருநாகல் | 28.31 | 35.39 | 63.70 |
| கொத்மலை | 29.41 | 32.45 | 61.86 |
| ஹங்குரன்கொத்த | 37.39 | 36.52 | 73.92 |
| காலி | 23.41 | 36.10 | 59.51 |
| அம்பலாங்கொட | 30.77 | 46.15 | 76.93 |
| உடுகம | 21.43 | 71.43 | 92.86 |
| மாத்தறை | 29.21 | 31.19 | 60.40 |
| மொறவக்க | 40.51 | 44.30 | 84.81 |
| தங்காலை | 11.11 | 88.89 | 100.00 |
| அம்பாந்தோட்டை | 21.95 | 41.46 | 63.41 |
| மாகோ | 28.97 | 65.52 | 94.49 |
| பதுளை | 28.67 | 31.22 | 59.89 |
| பசறை | 33.08 | 32.32 | 65.40 |
| மொனராகலை | 22.22 | 61.62 | 83.84 |
| வெல்லவாய | 00.00 | 83.33 | 83.33 |
| நிவித்திகெல | 38.81 | 34.33 | 73.14 |

**ஆதாரம்:-** ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பரிசீலனையை, பாடசாலை மட்டத்தில் மேற்கொள்வோமாயின், தமிழ்மொழி பாடத்தில் திறமைச் சித்தியைப் பெறத் தவறிய மாணவர்களை நூறு வீதமாகக் கொண்ட பாடசாலைகளும் இருப்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். இப்புள்ளி விபரங்களின் மூலமாக, தேசிய ரீதியில், 2012ஆம் ஆண்டில் தமிழ்மொழி மூலமாகக் கற்ற ஐம்பது வீதமான மாணவர்கள், க.பொ.த. (உ.த) கல்வியைத் தொடர முடியாத நிலைக்காளாகியுள்ளதோடு, மாவட்ட, மற்றும் வலய மட்டங்களில் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் இக்கல்வியைத் தொடர முடியாதவர்களாக இருப்பதையும் அறிய முடிகின்றது. (சிங்கள மொழி மூலமாகக் கற்ற மாணவர்களும், சிங்களமொழி பாடத்தில் ஏறத்தாழ இதே அளவில் சித்தியடையத் தவறியிருந்திருப்பார்கள் என்பதை ஊகிக்க முடியும்)

இன்றைய இளம் சந்ததியினர் மத்தியில், வாசிப்பின் மீதான ஆர்வமும், வாசிக்கும் பழக்கமும் பெருமளவில் குறைந்து விட்டன என்ற கருத்து பொதுவாக நிலவுகின்றது. ஒரு அர்த்தத்தில் இது சரியானதாக கொள்ளப்படலாம். எனினும், இது குறித்து நாம் இன்னும் துல்லியமான பரிசீலிப்பை மேற்கொள்ள வேண்டும். வாசிப்பதில் ஆர்வம் குறைந்து விட்டது என்பதற்குப் பதிலாக, **வாசிப்பின் தன்மை மாறியிருக்கின்றது** என்று சொல்வது பொருத்தமானதாக இருக்கும். இப்போதும் இளம் தலைமுறையினர் வாசிக்கின்றார்கள். அவர்களின் வாசிப்பு என்பது பெரிதும், தமது பாடநூல்கள், பாடக்குறிப்புகள், பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்படுகின்ற, எளிமையான மொழி நடையில் எழுதப்பட்டுள்ள சிறிய ஆக்கங்கள், சமூக வலைத் தளங்களில் முன்வைக்கப்படுகின்ற கருத்துக்கள் போன்றவை சார்ந்ததாக மாற்றமடைந்திருக்கின்றது. இலத்திரனியல் ஊடகங்களின் பெருக்கமும், விரிவாக்கமும் புதிய தலைமுறையினர் மத்தியில், வாசிப்பு மீதான இத்தகைய மாற்றம் நிகழ்வதற்கு பிரதான காரணங்களாக அமைந்திருக்கின்றன. அதேநேரத்தில் இவர்கள் மத்தியில் **எழுதுதல் என்பதிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.** சாதாரணமாக, நண்பர்களுக்கு அல்லது உறவினர்களுக்குக் கடிதம் எழுதுவது கூட இப்போது அரிதாகி விட்டது. கைப்பேசியில் குறுந்தகவல் (SMS) அனுப்புதல், இணையத்தின் ஊடாக ஈ மெயில் அனுப்புதல், சமூக வலைத்தளங்களில் கருத்துக்களைப் பதிவு செய்தல் என்ற அளவிலேயே எழுத்து ரீதியான தொடர்பாடல்கள் இப்போது அமைந்திருக்கின்றன. இந்நிலையில்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழி பாட வினாக்களுக்கான நீண்ட விடைகளை எழுதுவதில் பல மாணவர்கள் சிரமத்தை எதிர்கொள்கின்றார்கள். கடிதங்கள், கட்டுரைகள், போன்றவற்றில் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் குறைந்த புள்ளிகளை பெறுகின்றார்கள் என்ற உண்மையின் மூலம், இதை அறிந்து கொள்ள முடியும்.

ஒரு மொழியில் உள்ளடங்கியுள்ள இலக்கணம், இலக்கிய ஆக்கங்கள், அம்மொழியின் பன்முகப் பயன்பாடு போன்றவற்றை மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்பது ஒரு அவசியமான விடயமாகவே இருக்கின்றது. எனினும், தமிழ்மொழி பாடவிதானத்தைப் பொறுத்தவரையில், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள பெரும்பாலான விடயங்கள், குறிப்பாக இலக்கியம் சார்ந்த விடயதானங்கள் **இந்து மதத்திற்குரியவைகளாக** அமைந்திருக்கின்றன. இதனால் தமிழ்மொழி பாடத்தை கற்பதும், அதில் சித்தியடைவதும் ஒப்பீட்டளவில் இந்து மாணவர்களுக்கு இலகுவானதாக இருக்கின்றது. ஆயினும், இந்து மாணவர்களுடன், இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ மாணவர்களும் தமிழ் மொழியைக் கற்கின்றார்கள். இவ்விரண்டு மதங்களையும் சேர்ந்த மாணவர்கள் தமிழ்மொழி பாடத்தை கற்பதில் சிரமத்தை எதிர்கொள்வதோடு, அதில் ஆர்வம் குறைந்தவர்களாகவும் இருக்கின் றார்கள். மேலுள்ள புள்ளி விபரமானது, இஸ்லாமிய மாணவர்களும், கிறிஸ்தவ தமிழ் மாணவர்களும் அதிகமாகக் கற்கின்ற கல்வி வலயங்களில், ஐம்பது வீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் தமிழ் மொழி பாடத்தில் திறமைச் சித்தியைப் பெறத் தவறியிருக்கின்றார்கள் என்பதை சுட்டிக் காட்டுவதாக அமைந்திருக்கின்றது. அண்மைக் காலங்களில், **க.பொ.த. உயர்தர வகுப்புகளில் கற்கின்ற இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ தமிழ் மாணவர்களிடையே, தமிழை ஒரு பாடமாக எடுக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது** என்ற உண்மையின் மூலமாக, இம்மாணவர்களுக்கு தமிழ் பாடத்தின் மீதான ஆர்வம் குறைந்துள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

அதேவேளை, க.பொ.த (சா.த) பரீட்சையில், தமிழ்மொழியும், இலக்கியமும் பாடத்தில் இந்து மாணவர்களில் கணிசமானோரும் திறமைச் சித்தி பெறத் தவறியிருக்கின்றார்கள் என்ற உண்மையை மேலுள்ள புள்ளி விபரங்கள் சுட்டி நிற்கின்றன. தீவகம், கிளிநொச்சி, வவுனியா வடக்கு, துணுக்காய், கல்குடா, பட்டிருப்பு, மட்டக்களப்பு மேற்கு போன்ற, **இந்து மாணவர்கள் பெரும்பான்மையாக உள்ள கல்வி வலயங்களிலும்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் இப்பாடத்தில் திறமையைச் சித்தியைப் பெறவில்லை. இது தமிழ்மொழி பாடத்தில், மத ரீதியாக இந்து மாணவர்களுக்கு அமைந்திருக்கின்ற வாய்ப்பான நிலையையும் கடந்து, அப்பாடத்திற்குரிய பாடவிதானமும், வினாக்களும் அவர்களுக்குக் கடினமாக அமைந்திருக்கின்றன என்ற உண்மையை சுட்டிக் காட்டுகின்றது.

தமிழ் இலக்கணம், மற்றும் தமிழ்மொழியின் பன்முகப் பிரயோகம் என்பவற்றோடு, இலக்கியப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக, தமிழ் மொழியும், இலக்கியமும் பாடம் வரையப்பட்டுள்ளது. இவ்வாறு இப்பாடம், பரந்ததாகவும், பல்வகை விடயதானங்களை கொண்டதாகவும் அமைந்திருப்பது, மாணவர்கள் இப்பாடத்தைக் கற்பதில் பாதிப்பை ஏற்படுத்துகின்றதா என்ற பரிசீலிப்பு அவசியமாகின்றது. தாய்மொழியில் குறிப்பிட்ட அறிவையும், ஆற்றலையும் கொண்டிராத மாணவர்கள், பிற பாடங்களை கற்பதும், அவற்றில் சித்தியடைவதும் சாத்தியமற்றது என்ற எடுகோளின் அடிப்படையில், தாய்மொழிக்கான பாடத்திட்டங்கள் வரையப்படுகின்றன. இவ்வகையில் மாணவர்களின் மொழிவளத்தையும், எழுத்தாற்றலையும் அதிகரிப்பதற்கு, இலக்கியப்பகுதிகள் உதவிசெய்யக் கூடும். எனினும், தாய்மொழியைத் தவிர்ந்த பிற முக்கிய பாடங்களான கணிதம், விஞ்ஞானம், சமயம், வரலாறு போன்ற பாடங்களிலும், ஏனைய தொகுதிப் பாடங்களிலும் இலக்கியப் பகுதிகள் உபயோகமாக அமைய மாட்டாது. இத்தகைய பாடங்களில் சிறந்த அறிவைக் கொண்டிருக்கின்ற மாணவர்கள், தாய்மொழியில் திறமைச் சித்தி பெறாத காரணத்தால் உயர் கல்வியைத் தொடர முடியாத நிலைமைக்கு ஆளாகின்ற நிலை மாற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். இத்தகைய பாடங்களை வாசித்தறிவதற்கும், இவற்றுக்கான வினாக்களுக்கு விடையளிப்பதற்கும் உதவும் வகையில் தாய்மொழி பாடத்தின் பாடவிதானத்தை வடிவமைப்பது குறித்து சிந்திப்பது அவசியமாகின்றது. மாறிவிட்ட உலகில், மொழிக்குரிய வகிபாகத்தை முறையாக மதிப்பிட வேண்டிய நிலை உருவாகியிருக்கின்றது என்ற உண்மையைப் புரிந்து கொள்ளும்போது, மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தாதவையாகவும், அவர்களினால் இலகுவில் புரிந்து கொள்ளப்பட முடியாதவையாகவும், நடைமுறை வாழ்க்கைக்கு பெருமளவில் உதவியாக அமையாதவையாகவும் உள்ளவற்றை நீக்கி, (குறிப்பாக இலக்கியம் சார்ந்த பகுதிகளற்றதாக) தமிழ்மொழி பாடவிதானத்தை வரைவது குறித்து முன்னோக்கிச் செல்ல முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பின்னணியில், க.பொ.த. (சா.த) பரீட்சைக்கான **தமிழ் மொழியும், இலக்கியமும்** என்ற பாடத்தின் பாடவிதானத்தை பொருத்த மான முறையில் மாற்றியமைப்பது குறித்தும், அதற்கான வினாக்களின் தன்மைகளை மாற்றியமைப்பது குறித்தும் சிந்திக்க வேண்டியது உடனடி அவசியமாக இருக்கின்றது. அத்தோடு, க.பொ.த. உயர்தரத்தில் கல்வியைத் தொடர்வதற்கு, **தாய்மொழியில் திறமைச் சித்தி பெறுவது அவசியம் என்ற கட்டாய நிலையை அகற்றுவது குறித்தும்** சிந்திப்பது அவசியமாகின்றது. வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோரின் உயர்கல்வி வாய்ப்பில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கின்ற இந்த விடயத்தை, அத்தகைய மாணவர்களின் நலன் சார்ந்து அக்கறை கொள்வது, சம்பந்தப்பட்டோரின் கடமையாக இருக்கின்றது.

இனி, கணித பாடத்திற்கான பரீட்சை மதிப்பீட்டை மேற்கொள்கின்ற போது, கிட்டத்தட்ட தமிழ்மொழி பாடத்தை ஒத்த முடிவை, இங்கும் காண முடிகின்றது.

## கணிதம்
## பரீட்சை மதிப்பீடு: 2012

### தேசிய ரீதியிலான பெறுபேறுகள்

| தோற்றியோர் | பாடசாலை பரீட்சார்த்திகள் | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் |
|---|---|---|
| 364317 | 324416 | 39901 |
| சித்தியடையாதோர் (W) | 46.00 வீதம் | 49.27 வீதம் |

**ஆதாரம்:** ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்.

கணித பாடத்தில் குறைந்தது சாதாரண சித்தியையாவது (S) பெறாத மாணவர்கள், க.பொ.த (உ.த) கல்வியைத் தொடர்வதற்கான தகைமை அற்றவர்களாகக் கருதப்படுகின்றார்கள். இவ்வகையில், மேலுள்ள அட்டவணையில் இருந்து, 2012 க.பொ.த (சா.த) பரீட்சையில் தேசிய ரீதியில், பாடசாலை பரீட்சார்த்திகளாகவும், தனிப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சார்த்திகளாகவும் தோற்றிய அண்ணளவாக **ஐம்பது வீதமான** மாணவர்கள் இப்பாடத்தில் சாதாரண சித்தியைக் கூட பெறாதவர்களாக இருந்திருக்கின்றார்கள் என்பதை அறிய முடிகின்றது. இவ்வகையில், இவர்கள் க.பொ.த உயர்தர கல்வியைத் தொடரக் கூடிய சந்தர்ப்பத்தை இழந்தவர்களாக ஆகியுள்ளார்கள்.

இம்மதிப்பீட்டை மாவட்ட, மற்றும் வலய மட்டங்களில் மேற் கொள்ளும் போது, கணித பாடத்தில் சித்தி பெறத் தவறிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்த அளவில் இருப்பதை அறிய முடிகின்றது.

## மாவட்ட மட்ட பெறுபேறுகள்

நாட்டிலுள்ள 25 கல்வி மாவட்டங்களில் கீழ்வரும் 9 மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களில் 50 வீதத்திற்கும் அதிகமானோர், 2012ஆம் ஆண்டு க.பொ.த (சா.த) பரீட்சையில், கணித பாடத்தில் சித்தியடைய வில்லை.

| மாவட்டம் | சித்தியடையாதோர் (W) |
|---|---|
| மாத்தளை | 51.35 |
| நுவரெலியா | 54.09 |
| கிளிநொச்சி | 58.46 |
| முல்லைத்தீவு | 57.87 |
| திருகோணமலை | 51.39 |
| அனுரதபுரம் | 52.16 |
| பொலன்னறுவை | 52.42 |
| மொனராகல | 57.15 |
| கண்டி | 46.59 |

**ஆதாரம்:** ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்.

இந்த மதிப்பீட்டை வலய மட்டத்தில் பரிசீலிக்கும் போது, நாட்டிலுள்ள தொண்ணூற்றி ஏழு (97) கல்வி வலயங்களில் **நாற்பத்து இரண்டு (42)** கல்வி வலயங்களில், ஐம்பது வீதத்திற்கும் அதிகமான மாணவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித பாடத்தில் சித்தி பெறத் தவறியிருப்பதை அறிய முடியும். கீழே உள்ள அட்டவணையானது சில கல்வி வலயங்களில் மாணவர்கள் சித்தி பெறத் தவறியது பற்றிய விபரங்களைத் தருகின்றது.

**வலய மட்ட பெறுபேறுகள்**

| வலயம் | சித்தியடையாதோர் (W) |
|---|---|
| தெவிநுவர | 55.34 |
| தெல்தெனிய | 61.99 |
| நாவுல | 56.24 |
| நுவரெலியா | 58.61 |
| ஹட்டன் | 51.46 |
| தீவகம் | 54.77 |
| கிளிநொச்சி | 58.46 |
| வவுனியா - வடக்கு | 61.05 |
| துணுக்காய் | 63.56 |
| கல்குடா | 56.97 |
| பட்டிருப்பு | 48.02 |
| மட்டக்களப்பு - மேற்கு | 47.28 |
| சம்மாந்துறை | 47.78 |
| மூதூர் | 58.15 |
| கிண்ணியா | 44.08 |
| திருகோணமலை-வடக்கு | 68.13 |
| கந்தளாய் | 57.71 |
| வலப்பன | 56.29 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| புத்தளம் | 52.28 |
| ஹுங்குரன்கொத்த | 51.34 |
| கெப்பித்திகொல்லாவ | 60.56 |
| பலாங்கொட | 51.21 |
| உடுகம | 55.59 |
| நிவித்திகல | 54.84 |
| மஹியங்கனை | 57.58 |
| எம்பிலிபிடிய | 54.27 |
| கலென்பின்துனுவெவ | 55.90 |
| மாகோ | 49.85 |
| கெக்கிராவ | 53.27 |
| பசறை | 55.21 |
| மொனராகலை | 58.68 |
| வெல்லவாய | 56.78 |
| மஹஓயா | 61.13 |

**ஆதாரம்:** ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்.

மேற்படி அட்டவணையை பரிசீலிக்கும்போது, **தமிழ்மொழி பாடத்தில் ஐம்பது வீதத்திற்கும் குறைவாக திறமைச் சித்தி பெற்றிருந்த மாணவர்களைக் கொண்டிருந்த பல கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்கள், கணித பாடத்திலும் சித்தி பெறத் தவறியிருக்கின்றார்கள்** என்பதை அறிய முடிகின்றது. இவ்வகையில், இக்கல்வி வலயங்களைச் சேர்ந்த பெரும்பான்மையான மாணவர்கள் 2013ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தர கல்வியைத் தொடர முடியாதவர்களாக இருந்திருக் கின்றார்கள் என்ற உண்மை பெறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வலய மட்ட பெறுபேறுகள்

| வலயம் | தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தில் திறமைச் சித்தி பெறாதோர் | கணித பாடத்தில் சித்தியடையாதோர் (W) |
|---|---|---|
| தெல்தெனிய | 77.99 | 61.99 |
| நாவுல | 84.00 | 56.24 |
| நுவரெலியா | 52.33 | 58.61 |
| ஹட்டன் | 51.12 | 51.46 |
| தீவகம் | 57.26 | 54.77 |
| கிளிநொச்சி | 51.95 | 58.46 |
| வவுனியா - வடக்கு | 54.04 | 61.05 |
| துணுக்காய் | 56.39 | 63.56 |
| கல்குடா | 50.87 | 56.97 |
| பட்டிருப்பு | 55.91 | 48.02 |
| மட்டக்களப்பு - மேற்கு | 54.83 | 47.28 |
| சம்மாந்துறை | 53.52 | 47.78 |
| மூதூர் | 55.65 | 58.15 |
| கிண்ணியா | 52.66 | 44.08 |
| திருகோணமலை - வடக்கு | 64.02 | 68.13 |
| ஹங்குரன்கொத்த | 73.92 | 51.34 |
| நிவித்திகல | 73.14 | 54.84 |
| பசறை | 65.40 | 55.21 |
| மொனராகலை | 83.84 | 58.68 |
| வெல்லவாய | 83.33 | 56.78 |

ஆதாரம்: ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்ற கணித பாடம், எவ்வளவு தூரம் மாணவர்களினால் தொட்டுணரத்தக்கதாகவும் (Concrete), நடைமுறை வாழ்க்கையில் பயன்மிக்கதாகவும் அமைந்திருக்கின்றது என்ற வினா எமக்கு முக்கியமாகின்றது. கணித பாடத்தின் பல பகுதிகள் பெரிதும் சூக்குமத்தன்மை (Abstract) கொண்டவையாகவும், தர்க்கரீதியாக சிந்தித்து முடிவெடுக்க வேண்டியவைகளாகவும் இருக்கின்றன. கட்டிளமைப் பருவத்தினரிடையே இத்தகைய சிந்தனை முறை உருப்பெறுகின்றது என்ற அறிவியல் ரீதியான முடிவை அடிப்படையாகக் கொண்டு, கணித பாட விதானத்தில் அத்தகைய பகுதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனினும், கணிசமான மாணவர்கள், கட்டிளமைப் பருவ காலத்தில் இத்தகைய சிந்தனை முறையைப் பெற்றுக் கொள்ளாதவர்களாக இருக்கின்றார்கள். அதேவேளை இந்த மாணவர்கள் வேறு பாடங்களிலும், வேறுவகையான சிந்தனை முறைகளிலும் சிறந்த நிலையில் காணப்பட முடியும். எனினும், நடைமுறையிலுள்ள நமது பரீட்சை முறையில், கணித பாடத்தில் சித்தியடையத் தவறுபவர்களின் எதிர்கால கல்வி என்பது கிட்டத்தட்ட முடிவுக்கு வந்து விடுகின்றது. கணித அறிவில் அவர்களிடம் காணப்படுகின்ற பலவீனமான நிலையின் காரணமாக, அவர்கள் க.பொ.த (சா.த) பரீட்சையில் தோல்வியடைவது மட்டுமின்றி, அதன் பின்னர் அவர்கள் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாதவர்களாகவும் ஆகின்றார்கள். இவ்வாறு ஒவ்வொரு வருடமும் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து வெளியேறுகின்றார்கள்.

நடைமுறை வாழ்வைப் பொறுத்தவரை, பாடசாலைகளில் கற்பிக் கப்படுகின்ற கணித பாட அறிவைப் பிரயோகிக்க வேண்டிய அவசியம் இப்போது படிப்படியே அகன்று வருகின்றது. உதாரணமாக, விற்பனை நிலையங்களில் வேலை செய்கின்ற ஒருவருக்கு பெருக்குவதற்கோ, கூட்டுவதற்கோ அல்லது கழிப்பதற்கோ இப்போது கணித அறிவு தேவைப்படுவதில்லை. இந்நிலையங்களில் இரண்டு பொருட்களின் விலைகளைக் கூட, கணித்தல்பொறி ('கல்குலேடர்') களைக் கொண்டோ, அல்லது கணினியைக் கொண்டோ கூட்டுகின்ற நிலைமை உருவாகி விட்டது. இன்று ஒருவருக்கு நவீன தொழில்நுட்ப சாதனங்களை இயக்கத் தெரிந்தாலே போதும். எந்தக் கணித அறிவும் அவருக்குத் தேவையில்லை என்ற நிலை உருவாகி விட்டது. க.பொ.த (சா.த) பரீட்சையில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களில் தோல்வியடைந்த அதே மாணவன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இரண்டு வருட காலத்திற்குள், இயந்திரம் திருத்துவதில் பெயர் பெற்றவனாகவோ அல்லது கணினி உட்பட இலத்திரனியல் உபகரணங் களை திருத்தித் தருபவனாகவோ மாறுவதைக் காண்கிறோம். இத்தகைய மாணவர்களின் ஆற்றலானது, உண்மையில் பாடசாலை கல்வி முறைக் கூடாக அன்றி, அதற்கு வெளியே சிறப்பாக வெளிப்படுவதை இந்த அனுபவங்கள் தெளிவாக உணர்த்துகின்றன.

விளையாட்டு நிகழ்ச்சிகளில் தமது ஆற்றல்களை வெளிப்படுத்துகின்ற மாணவர்கள், அந்நிகழ்ச்சிகளில் உள்ளடங்கியுள்ள கணித விதிகளைப் புரிந்து கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்று கூற முடியாது. சிறப்பாக ஓவியம் வரைகின்றவர்கள், அளவு, பரிமாணங்கள் குறித்த பூரணமான கணித அறிவைக் கொண்டிருக்கின்றார்கள் என்று கருத முடியாது. இதேபோன்று பாடக்கூடிய, ஆடக்கூடிய திறமை பெற்ற மாணவர்கள், உடல் அங்கங்கள் மற்றும் உடலியல் தொழிற்பாடுகள் குறித்த விஞ்ஞான அறிவைப் பெற்றவர்கள் என்று கூற முடியாது. 'கரம்' விளையாடுவதில் திறமை பெற்ற மாணவர்கள், தெறிப்பு விதிகள் பற்றிய அறிவின்றி, அனுபவத்தின் மூலமாகவே தமது ஆற்றல்களை உச்ச அளவுக்கு வளர்த்துக் கொள்ள முடியும். எறிதலின் போது ஒரு பொருள் அடைய வேண்டிய உச்ச புள்ளி குறித்த எந்த அறிவுமின்றி, குண்டெறிதல், பரிதி வட்டம் வீசுதல், ஈட்டி எறிதல் போன்ற விளையாட்டுக்களில் திறமை பெற்றவர்களாக பல மாணவர்கள் மிளிர்கின்றார்கள். இவர்களில் பெரும்பாலானோர், கணித, விஞ்ஞான பாடங்களில் பலவீனமான நிலையில் இருந்து கொண்டே, இத்தகைய திறமைகளைக் கொண்ட வர்களாக விளங்குகின்றார்கள். ஒரு கட்டடம் கட்ட ஆரம்பிக்கும் போது, மேசன்மார் முதலில் "நேரெடுத்தல்" என்ற செயற்பாட்டை மேற்கொள்வார்கள். இது அடிப்படையில், பைதகரசினுடைய செங்கோண முக்கோணத்திற்கான தேற்றத்தின் நேரடிப் பிரயோகமே. ஆயினும் மேசன்மார்கள் அனைவரும் இந்த தேற்றம் பற்றிய எந்த அறிவுமின்றியே, இன்றுவரை தமது தொழிலை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றார்கள்.

இவ்வகையில், நடைமுறையிலுள்ள கணித பாடத்திற்கான பாட விதானமானது, நாளாந்த வாழ்வில் பயன்மிக்கதாகவும், மாணவர்கள் ஆர்வத்துடன் கற்கக் கூடியவகையிலும் அமைந்திருக்கின்றதா என்ற பரிசீலனை அவசியமாகின்றது. பெரிதும் க.பொ.த உயர்தர கணிதப் பிரிவில் கற்கக் கூடிய மாணவர்களுக்கு பயன்பெறும் வகையிலான பல பகுதிகள் க.பொ.த சாதாரணதர கணித பாட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒருபோதுமே, கணிதப் பிரிவில் உயர்தர கற்கை நெறியை மேற்கொள்ளும் எண்ணத்தைக் கொண்டிராத மாணவர்களுக்கு, இப்பகுதிகளைக் கற்பதால் எந்த பயனும் ஏற்படப் போவதில்லை. அத்தகைய எண்ணத்தைக் கொண்டிராத மாணவர்களுக்கும், சூக்குமமான மற்றும் தர்க்க ரீதியான சிந்தனைகளில் பலவீனமாக உள்ள மாணவர்களுக்கும், கணித பாடத்தின் இந்த பகுதிகள் விளங்க முடியாதவையாகவும், ஆர்வமற்றவையாகவும், சுமையாகவும் மாறுகின்றன. **இவர்கள் பிற பாடங்களிலும், இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் சிறப்பான அடைவு மட்டத்தையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்துகின்றபோதிலும், கணித பாடத்தில் அடைகின்ற தோல்வியின் மூலமாக, அவர்களின் அனைத்துத் திறமைகளும் முடிவுக்குக் கொண்டு வரப்படுகின்ற துரதிஷ்ட நிலை உருவாகின்றது.**

சரியாகப் பரிசீலிக்கும்போது, கணித பாடத்தில் மாணவர்கள் கொண்டிருக்கின்ற பலவீனமாக நிலை அந்த பாடத்துடன் மட்டும் எல்லைப்படுவதில்லை. மாறாக, அது மாணவர்களின் அனைத்துப் பாடங்களையும் பாதிப்பதாக அமைகின்றது. பொதுவாக, கணித பாடமானது, முதலாம், அல்லது இரண்டாம் பாடமாக வகுப்புகளில் கற்பிக்கப்படுகின்றது. மாணவர்கள் உற்சாகமான மனநிலையில் இருக்கின்ற காலைப் பொழுதில், கணித பாடத்தைக் கற்பிக்கும்போது, அவர்களினால் அப்பாடத்தை இலகுவாக் கிரகிக்க முடியும் என்ற எடுகோளின் அடிப்படையில், இவ்வாறு பாடசாலைகளில் ஆரம்ப நேரங்களில் கணிதம் கற்பிக்கப்படுகின்றது. எனினும், கணிதத்தில் பலவீனமான நிலையில் உள்ள மாணவர்கள், பாடசாலைத் தொடக்கத்திலேயே தமக்குப் புரியாத பாடத்தை படிக்க வேண்டிய நிலையில் இருப்பதால், அப்பாடத்தைத் தொடர்ந்து வருகின்ற பிற பாடங்களையும் விருப்பத்துடன் கற்க முடியாத நிலை அவர்களுக்கு ஏற்படுகின்றது. கணித பாடத்தில் பலவீனமாக இருக்கின்ற மாணவர்களுக்கு ஏற்படுகின்ற இயலாமையும், அவமானப்படுத்தல்களும், தண்டனைகளும், தோல்வி குறித்த அச்சமும் அவர்களின் உளநிலையை கடுமையாகப் பாதிப்படையச் செய்கின்றன. ஈற்றில், அவர்கள் தாம் சிறப்பாக செயற்படக் கூடிய பிற பாடங்கள், மற்றும் இணைப்பாடவிதான நிகழ்வுகளிலும் கூட, தமது ஆற்றல்களை முழுமையாக வெளிப்படுத்த முடியாத நிலைக்கு ஆளாகின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித பாடத்தில் மாணவஉகள் வெளிப்படுத்துகின்ற பலவீனமான நிலை என்பது நிரந்தரமானதல்ல. அறிவு வளர்ச்சியானது (Cognitive Development) வரையறைப்படுத்தப்பட முடியாதது என்ற வகையில், வாழ்வின் கட்டிளமைப் பருவத்தில் கணிதத்தில் பலவீனமாக இருப்பவர்கள், பிற்பகுதியில் கணிதத்தில் சிறப்பான நிலையை அடைய முடியும். கலைப் பிரிவில் பல்கலைக்கழக படிப்பை முடித்த பலர், பின்னர் கணித பாடத்தில் மேற்படிப்பைத் தொடர்ந்திருக்கின்ற உதாரணங்கள் ஏராளமாக இருக்கின்றன. இந்நிலையில், க.பொ.த சாதாரணதர பரீட்சையில் கணிதத்தில் சித்தியடையாதவர்கள் தொடர்ந்து கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் அற்றுப் போகும்போது, அவர்கள் பின்னாட் களில் வெளிப்படுத்தக் கூடிய திறமைகளும், சாதனைகளும் அற்றுப் போய் விடுகின்றன.

எனவே, இத்தகைய பின்புலத்தில், நடைமுறையிலுள்ள கணிதம் தொடர்பான கட்டாயத்தன்மை குறித்தும், கணித பாடவிதானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்தும், கணித பாடத்திற்கென பொருத்தமான புதிய விடயதானங்களை உள்ளடக்குவது பற்றியும் விரிவான கலந்துரையாடல் இடம்பெற வேண்டியது அவசியமாகின்றது. கணித பாடத்தில் அடைகின்ற தோல்வியினால் மட்டுமே மேற்கொண்டு படிக்க முடியாமல், கல்விக்கான வாய்ப்புகள் மூடப்படுகின்ற பல ஆயிரக்கணக்கான மாணவர்களின் எதிர்காலம் குறித்த அக்கறையுடன் இத்தகைய உரையாடல் முக்கியத்துவம் பெற வேண்டும்.

க.பொ.த சாதாரணதர பரீட்சையில், தோல்வியடைகின்ற மாணவர்களின் எண்ணிக்கையானது, கடந்த பல வருடங்களில், மிகக் கூடுதலாக இருந்து வந்திருக்கின்றது என்பதை பின்வரும் அட்டவணையில் இருந்து அறிந்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வருடம் | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|---|---|
| க.பொ.த(சா.த) பரீட்சை எழுதியோர் (பாடசாலை பரீட்சார்த்திகள் மட்டும்) | 323, 267 | 353, 372 | 346, 796 | 349, 464 | 347, 315 |
| க.பொ.த(உ.த) வகுப்புகளுக்கு தகுதி பெற்றவர் வீதம் | 32.78 | 37.43 | 37.7 | 36.98 | 41.47 |
| க.பொ.த(சா.த) பரீட்சை எழுதியோர் (பாடசாலை பரீட்சார்த்திகள் உள்ளடங்கலாக) | 501, 505 | 509, 499 | 532, 448 | 471, 309 | 456, 829 |
| க.பொ.த(உ.த) வகுப்புகளுக்கு தகுதி பெற்றவர் வீதம் | 23.8 | 26 | 27.11 | 29.34 | 40.15 |

Source: Department of Examinations and University Grants Commission

இந்த அட்டவணையானது, 1997 தொடக்கம், 2001 வரை க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் அண்ணளவாக, 75 தொடக்கம், 60 வீதமான மாணவர்கள் தோல்விடைந்திருக்கின்றார்கள் என்ற உண்மை தெளிவாகின்றது.

2002ஆம் ஆண்டில் கணித பாடத்தில் தோல்வியடைந்தவர்களின் - அதாவது க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் தோல்வியடைந்தவர்களின் எண்ணிக்கை 57.26 வீதமாகக் காணப்பட்டது.

| வருடம் | தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடையாதோரின் எண்ணிக்கை (W) | சித்தியடையாதோ வீதம் |
|---|---|---|---|
| 2002 | 325883 | 195616 | 57.26 |

**ஆதாரம்:** ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தோல்வியடைகின்ற மாணவர்களின் எண்ணிக்கை கடந்த சில வருடங்களில் தேசிய அளவில் அண்ணளவாக ஐம்பது வீதமாகக் குறைவடைந்திருக்கின்றது. 2010, 2011, மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் தமிழ்மொழியும் இலக்கியமும், மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் தோல்வியடைந்தவர்கள் பற்றிய பின்வரும் அட்டவணையில் இருந்து இதை அறிந்து கொள்ளலாம்.

| வருடம் | திறமைச் சித்தி பெறாதோர் (C) தமிழ்மொழியும் இலக்கியமும் | | சித்தியடையாதோர் (W) கணிதம் | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | வீதம் | எண்ணிக்கை | வீதம் |
| 2010 | 29457 | 51.30 | 107080 | 39.62 |
| 2011 | 29429 | 48.93 | 120277 | 44.67 |
| 2012 | 27626 | 44.51 | 119597 | 44.65 |

**ஆதாரம்:** ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்.

இருந்தபோதிலும், கணிசமான மாவட்ட மற்றும் வலய மட்டங்களில் கிட்டத்தட்ட அதே எண்ணிக்கையிலான மாணவர்கள் (அதாவது 75 தொடக்கம், 60 வீதமான மாணவர்கள்) க.பொ.த சாதாரணதர பரீட்சையில் சித்தியடையத் தவறியிருக்கின்றார்கள். இவ்வளவு பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள், க.பொ.த. சாதாரணதர பரீட்சையுடன் பாடசாலைகளில் இருந்து வெளியேறுவதானது, அனைவரினதும் அக்கறைக்குரிய விடயமாக மாற வேண்டும். அதேவேளை கீழ்வரும் அட்டவணையானது, மேற்படி ஆண்டு களில், க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை அண்ணளவாக 50 வீதமாக அமைந்திருந்தது என்பதை வெளிப்படுத்துகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வருடம் | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|---|---|
| க.பொ.த உயர்தர பரீட்சை எழுதியோர் (பாடசாலை பரீட்சார்த்திகள் மட்டும்) | 111,105 | 114,628 | 142,294 | 157,364 | 171,544 |
| பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதி பெற்றவர் எண்ணிக்கை | 60,267 | 59,796 | 63,673 | 80,411 | 86,656 |
| பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதி பெற்றவர் வீதம் | 54.24 | 52.17 | 44.75 | 51.1 | 50.52 |
| க.பொ.த உயர்தர பரீட்சை எழுதியோர் (பாடசாலை பரீட்சார்த்திகள் உள்ளடங்கலாக) | 142,336 | 147,851 | 169,679 | 183,439 | 198,509 |
| பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதி பெற்றவர் எண்ணிக்கை | 73,574 | 73,347 | 73,542 | 91,589 | 98,329 |
| பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதி பெற்றவர் வீதம் | 51.69 | 49.61 | 43.35 | 49.93 | 49.53 |

Source: Department of Examinations and University Grants Commission

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது, பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதி பெறுபவர்களின் எண்ணிக்கை மேலும். அதிகரித்திருக்கின்றது.

| வருடம் | 2012 |
|---|---|
| க.பொ.த உயர்தர பரீட்சை எழுதியோர் (பாடசாலை பரீட்சார்த்திகள் அடங்கலாக) | 230, 000 (அண்ணளவாக) |
| பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதி பெற்றவர் எண்ணிக்கை | 145, 000 (அண்ணளவாக) |
| பல்கலைக்கழக நுழைவுக்குத் தகுதி பெற்றவர் வீதம் | 63.00 (அண்ணளவாக) |

மேலுள்ள விபரங்களின் மூலமாக, க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் வெளிப்படுகின்ற மாணவர்களின் பெறுபேறுகளிலும் பார்க்க, க.பொ.த. உயர்தர பரீட்சையில் மாணவர்களின் பெறுபேறுகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்நிலைக்கு, க.பொ.த. சாதாரணதர பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், சித்தியடைந்து (வடிகட்டப்பட்ட) மாணவர்கள்தான் க.பொ.த. உயர்தரத்தில் கற்கின்றார்கள் என்பதை ஒரு காரணமாக முன்வைக்க முடியும். அத்தோடு, **மாணவர்கள், உயர் வகுப்புகளை அடைகின்ற போது, அவர்களின் அறிவு மட்டமும், சிந்தனை ஆற்றலும் அதிகரிக்கின்றன** என்பதும் இன்னொரு பிரதான காரணமாக அமைகின்றது. (இதே மாணவர்கள், பல்கலைக்கழகத்தில் நுழைந்த பின்னர், கிட்டத்தட்ட நூறு வீதமானவர்களும் சித்தியடைகின்றார்கள்.) இவ்வகையில், கணிதம், மற்றும் தாய்மொழி ஆகிய பாடங்களில் போதியளவில் சித்தி பெறத் தவறிய மாணவர்கள், க.பொ.த. உயர்தர வகுப்புகளில் கற்கக் கூடிய வாய்ப்புகளைப் பெற்றிருப்பார்களாயின், அவர்களில் கணிசமானோரால், க.பொ.த. உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருக்க முடியும் என்று ஊகிக்க முடியும். இது அம்மாணவர்களுக்கு மட்டுமன்றி, முழு நாட்டிற்குமே பயன்மிக்கதாக அமைந்திருக்கும். ஆயினும் இத்தகைய வாய்ப்புகள் அவர்களுக்கு வழங்கப்படாததன் மூலமாக, இவ்வளவு பெரும் எண்ணிக்கையிலான **மாணவர்களின் கற்பதற்கான உரிமை மறுக்கப்படுகின்றதா** என்ற விசாரிப்பை நாம் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. வெளியூர்களில் கல்வி கற்றல்

மாணவர்களின் உளவியலில் தாக்கங்களைச் செலுத்துகின்ற மற்றுமொரு காரணியாக, வெளியூர்களில் சென்று கல்வி கற்பது அமைந்திருக்கின்றது. இப்போது, மாணவர்கள் தமது சொந்த ஊர்களில் இருந்து வெளியேறி, வெளியிடங்களில் கல்வி கற்கின்ற நிலை அதிகமாக உருவாகியுளளது. குறிப்பாக, க.பொ.த. உயர்தர கல்வியைக் கற்பதற்கான வாய்ப்புகள் அற்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும், தமது பிள்ளைகள் சிறந்த பாடசாலைகளில் கற்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டுள்ளவர்களும் தொலைதூரப் பாடசாலைகளுக்கு தமது பிள்ளைகளை கல்வி கற்கும்படி அனுப்புகின்றார்கள். வெளிநாடுகளில் தொழில்புரிகின்ற ஆண்களும், பெண்களும், தமது பிள்ளைகள் சிறந்த எதிர்காலத்தைப் பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பில், அவர்களை இத்தகைய தொலைதூரப் பாடசாலைகளில் சேர்த்து, அங்கேயே தங்குவதற்கான ஒழுங்குகளையும் செய்கின்றார்கள். பெரும்பாலான பாடசாலைகளில் விடுதி வசதிகள் இல்லாத காரணத்தால், இவ்வாறு செல்கின்ற மாணவர்கள் தனியார் வீடுகளிலும். தனியார் விடுதிகளிலும் தங்கியிருந்து படிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகின்றார்கள். இந்த நிலைமைகள் மாணவர்களின் நடத்தைகளில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. தம்மைக் கண்காணிப்பதற்கு யாருமேயற்ற ஒரு சூழலில், தமதுகல்விகுறித்து எத்தகையபுரிதலும் அற்றவர்களாக தமது தாய்மார்களும், பாட்டிகளும் இருக்கின்ற நிலையில், மாணவர்கள் முழுச் சுதந்திரம் பெற்றவர்களாக மாறிவிடுகின்றார்கள். கற்பதற்காக செல்கின்ற இடங்கள் நகரப்பகுதிகளாகவும், ஒரு நகரத்திற்குரிய அத்தனை பண்புகளை உள்ளடக்கியவைகளாகவும் இருக்கின்ற நிலையில், கிராமப் பகுதிகளில் இருந்து அங்கு கல்வி கற்கச் செல்கின்ற மாணவ, மாணவிகள் உளவியல் ரீதியாக பெரும் சிக்கல்களை அனுபவிப்பவர்களாக உள்ளார்கள்.

பொதுவாக, நகர்ப்பகுதிகளில் வேலையற்றவர்களாக, அல்லது பகுதிநேர வேலைகளைச் செய்பவர்களாக இருப்பவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் காணப்படுகின்றது. அத்துடன் இங்கு சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் காணப்படுகின்றார்கள். பெண்களைக் குறிவைத்து அலைகின்ற இத்தகைய பிரிவினரால், கிராமப் பகுதிகளில் இருந்து கல்வி கற்பதற்காக வருகின்ற மாணவிகளில் சிலர் பாதிப்பிற்குள்ளாகின்றனர். இத்தகைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினர் அணிகின்ற வித்தியாசமான ஆடைகளாலும், இவர்களிடம் காணப்படுகின்ற அதீத பணப்புழக்கத்தினாலும் இம்மாணவிகளில் சிலர் கவரப்படுகின்றார்கள். கைப்பேசிகள், ஆடைகள், ஹோட்டல் உணவுகள் என்பவற்றிற்காக செலவு செய்வதன் மூலமாக, இம்மாணவிகளை தமது வலைக்குள் வீழ்த்துவது இவர்களுக்கு சாத்தியமாகின்றது. இது ஒரு நிலையில், இம்மாணவிகள் மீதான பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் இட்டுச் செல்கின்றது.

நகர்ப்புறங்களில் கல்வி கற்கச் செல்கின்ற மாணவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கு உட்படுவது மிகக் குறைவாக உள்ளபோதிலும், கண்காணிப்பற்ற நிலையும், நகர்ப்புற வாழ்க்கை அனுபவங்களும் இவர்களில் ஒரு பகுதியினரை சீர்குலைவுக்குள்ளாக்குகின்றன. இம்மாணவர்கள், பணத்தை சுயாதீனமாக செலவழிப்பவர்களாக இருக்கின்றார்கள். எல்லாவிதமான தவறான நடத்தைகளுக்கும் பணம் ஒரு அடிப்படைக் காரணியாக அமைந்திருப்பதால், இத்தகைய சுயாதீனப் பணப்புழக்கம் மாணவர்களின் நடத்தைகளைப் பாதிப்பாக அமைந்துள்ளது.

இவ்வாறு பாடசாலைக்கு வெளியே பிறழ்வுக்குட்பட்ட நடத்தைப் பண்புகளை படிப்படியே பெற்றவர்களாக, பாடசாலைக்கு வருகின்ற மாணவர்கள், பாடசாலை உளவியலில் பெரும் தாக்கங்களை நிகழ்த்துபவர்களாக மாறுகின்றார்கள். இவர்கள் கொண்டிருக்கின்ற தவறான பண்புகள், ஆபத்தை ஏற்படுத்துகின்ற புற்றுநோய்க் கட்டியைப் போன்று, மெதுவாகவும், அதேநேரத்தில் உறுதியாகவும், பிற மாணவர்கள் மத்தியில் ஊடுருவிப் பரவுகின்றன. இத்தகைய பண்புகளைக் கொண்ட மாணவர்களையும் உள்ளடக்கிய வகுப்பறைச் சூழலில்தான் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலையில் இருக்கின்றார்கள். இன்றைய ஆசிரியர்களுக்கு இது கடுமையானதும் நெருக்கடிகள் நிறைந்ததுமான அனுபவமாக இருக்கின்றது.

நவீன சமூகங்களில், தனிமனித சுதந்திரம், உரிமைகள் என்பவை முக்கியத்துவம் பெற்றுள்ள கருத்தியல்களாக உள்ளன. இவை மாணவர்களுக்கும் உரியவையாக விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இவ்வகையில் மாணவர்களின் தனிப்பட்ட நடத்தைகள் மற்றும் பண்புகள் குறித்து எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய கடப்பாடு ஆசிரியர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகி இருக்கின்றது. சிறுவர் உரிமைகள் என்ற கருத்தாக்கத்தினூடாக, பெற்றோர்களும்கூட தமது பிள்ளைகளைக் கண்டிக்க முடியாத நிலை இன்று ஏற்பட்டிருக்கின்றது. இவ்வாறு பிள்ளைகள் தொடர்பாக பெற்றோர்களின் வகிபாகங்களே இப்போது பின்தள்ளப்பட்டுள்ள நிலையில், மாணவர்கள் விடயத்தில் ஆசிரியர்களின் வகிபாகம் என்பது மேலும் குறுக்கமாக வரையறுப்புக்குள்ளாகியுள்ளது. பாடசாலைக்கு வெளியே மாணவர்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றார்கள் என்ற விடயம், தனிமனித சுதந்திரம் மற்றும் உரிமை என்பவற்றுக்குள் வகைப்படுத்தப்படுகின்ற போக்கு அதிகரித்து வருகின்றது. இன்னும் சரியாகக் கூறினால், நடைமுறையில் **மாணவர்களின் மீதான ஆசிரியர்களின் கட்டுப்பாடு என்பது கிட்டத்தட்ட முழுமையாக அற்றுப்போகின்ற நிலைமை உருவாகி வருகின்றது.** மேற்கத்தைய கல்விமுறைமையின் அச்சொட்டான பின்பற்றுகை என்பது, பாடத்திட்டங்களை வகுத்தல் என்பதோடு மட்டும் எல்லைப்பட்டு விட முடியாது. அதன் 'வெற்றிகரமான' நடைமுறைப்படுத்தலுக்கு மேற்கத்தைய கலாசார முறைமையும் அவசியமாகின்றது. பாடசாலைக் காலத்திலேயே பாலியல் நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டவையாகி விட்ட மேற்கின் கலாசார போக்கில் இருந்து எமது பாடசாலைகளையும், மாணவர்களையும் தடுத்து விட முடியுமா என்பது முழுநாட்டினதும் அக்கறைக்குரிய விடயமாக மாறி வருகின்றது. இந்த உண்மை தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். மாணவர்களின் நடத்தைகளில் ஏற்பட்டு வருகின்ற தீவிர மாற்றங்களின் விளைவாக, அவர்களின் கற்றல் செயற்பாடுகள் முற்றாக சீரழிந்து விட்டன என்று யாரும் கூற முடியாது. தம்மளவில் வெவ்வேறு பிறழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மாணவர்களில் ஒரு பகுதியினர், தமது கற்றலை வெற்றிகரமாக மேற்கொண்டு, உயர்நிலை அடைவதையும் அவதானிக்க முடிகின்றது. எனினும் இது ஒரு ஆரோக்கியமானதும், பின்பற்றக் கூடியதுமான உதாரணம் அல்ல. ஒட்டுமொத்த பாடசாலை சூழலில், இத்தகைய பிறழ்வு நடத்தைகள் ஏற்படுத்தக் கூடிய பாதிப்புகளின் தீவிரம் குறித்த அக்கறை நமக்கு அவசியமாகின்றது.

## 6. பாடசாலை நேர முறைமை

மாணவர்களின உளவியலைப் பாதிக்கின்ற இன்னுமொரு முக்கிய காரணியாக, எமது நாட்டின் **பாடசாலை நேரம்** அமைந்திருக்கின்றது. உலகில் ஒருநேரப் பாடசாலை முறைமை இடம்பெறுகின்ற சில நாடுகளில் எமது நாடும் ஒன்றாக இருக்கின்றது. குறிப்பாக, காலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.30 மணிக்கு பாடசாலை ஆரம்பிக்கப்படுகின்ற மிகச் சில நாடுகளில் இலங்கையும் ஒன்று. இந்த நேர முறைமை மாணவர்களினதும், அதேபோன்று ஆசிரியர்களினதும் உளவியலில் பெரும் அழுத்தங்களை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கின்றது.

ஆசிரியர்களைப் பொறுத்தவரை இந்த நேர முறைமை அவர்களை இரு வழிகளில் பாதிக்கின்றது. ஒன்று, அவர்கள் பாடசாலைக்கு புறப்படுவதற்கு முன்னர், (பொதுவாக 7.00 மணிக்கு முன்னர்) தமது குடும்பத்திற்கான அன்றைய நாளின் ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும். இரண்டு, அவர்கள் உரிய நேரத்தில் பாடசாலைக்குச் செல்ல வேண்டும். ஆண் ஆசிரியர்களைப் பொறுத்தவரை, சமையல் என்பது மனைவியினதோ, அல்லது வீட்டிலுள்ள வேறு பெண் உறுப்பினர்களினதோ செயற்பாடாக இருப்பதால், குடும்பத்திற்கான அன்றைய ஒழுங்குகளை மேற்கொள்வது அவ்வளவு சிரமமான விவகாரமாக இருப்பதில்லை. ஆனால் பெண் ஆசிரியர்களைப் பொறுத்தவரை, அவர்கள் நாளாந்தம் கடினமான நெருக்கடிக்கும், வேலைப்பளுவிற்கும் உள்ளாகின்றார்கள். அவர்கள் அதிகாலை நேரத்தில் இரண்டு நேர உணவுகளைத் தயாரிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். காலை நேர உணவை முதலில் தயாரித்து, தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகின்ற அதேநேரத்தில், மதிய உணவையும் சமைத்து வைத்து விட்டுச் செல்ல வேண்டிய நிலையில் அவர்கள் இருக்கின்றார்கள். அருகிலுள்ள பாடசாலையாயின் ஏழுமணிக்கு முன்னர் இவ்விரண்டு உணவுகளையும் தயாரித்து முடித்த பின்னர், தாங்கள் பாடசாலைக்கு செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். தூர இடத்துப் பாடசாலைகளுக்கு வாகனங்களில் செல்ல வேண்டியவர்களோ, ஆறு மணிக்கு முன்னர் சமையலை முடித்து, புறப்பட வேண்டியவர்களாக உள்ளனர். இது ஒரு தற்காலிக நிகழ்வாக அன்றி, ஏறக்குறைய தமது ஓய்வுக் காலம் வரை இடம்பெறவுள்ள தவிர்க்க முடியாத செயற்பாடாக இருப்பதால், ஆசிரியைகள் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பெரும் நெருக்கடிகளை அனுபவிப்பவர்களாக உள்ளனர்.

மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் இந்த நேர முறைமையால் பல வழிகளில் அவஸ்த்தைகளுக்குள்ளாகின்றார்கள். இலங்கையின் தரையமைப்பும், அபிவிருத்தி நடவடிக்கைகளும் வேறுபட்ட தன்மைகளைக் கொண்டிருப்பதால், போக்குவரத்து என்பது இலங்கை எங்கும் ஒரே சீரானதாக அமைந்திருக்கவில்லை. நகரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளில் போக்குவரத்து நெருக்கடிகள், கிராமப்புறங்களில் முறையான போக்குவரத்து வசதியின்மை, மலைநாட்டுப் பகுதிகளில் பல மைல்கள் தூரம் நடந்து செல்ல வேண்டி நிலை என போக்குவரத்து சார்ந்த வெவ்வேறு விதமான நெருக்கடிகளை முகம் கொடுப்பவர்களாக மாணவர்கள் இருக்கின்றார்கள். காலையில் ஏழு முப்பது மணிக்கு முன்னர் பாடசாலைக்குச் சென்று விடவேண்டும் என்ற அவசிய நிலையானது, இவர்களின் காலை நேர செயற்பாடுகளில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. கணிசமான மாணவர்கள் காலை உணவு சாப்பிடாமலேயே பாடசாலைக்கு வருகின்றார்கள். இது அவர்களை பலவீனர்களாக ஆக்குகின்றது. காலை ஆராதனையின்போது, மாண வர்களில் ஒரு சிலராவது மயங்கி விழுவது என்பது அனேகமாக சகல பாடசாலைகளிலும் இடம்பெறுகின்ற நிகழ்வாக இருக்கின்றது. அதேவேளை, காலையில் மாணவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும் என்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. ஆனால், காலை ஆகாரமின்றி பாடசாலைக்கு வருகின்ற மாணவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபடும்போது, அவர்கள் சோர்வடைந்து விடுகின்றார்கள். இந்த சோர்வு சிலரை மயக்க நிலைக்கும், இன்னும் சிலரை அன்று முழுவதும் தளர்வான நிலையில் இருப்பதற்கும் இட்டுச் செல்கின்றது. தாம் மயங்கி விழுந்து விட்டோம் என்ற வெட்க உணர்வு அவர்களை உள்ளிருந்து வாட்டுகின்ற அவமானத்திற்குரிய விடயமாக இருக்கின்றது. இவை அனைத்தும் அந்த மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

காலை உணவு ஒருவருக்குரிய அவசியமான உணவாக அமைந்திருக்கின்றது. ஆனால், இலங்கையிலுள்ள மாணவர்களில் மிகக் கணிசமானோர், காலை உணவை சாப்பிட முடியாத நிலைக்கு பாடசாலை நேர முறைமை அவர்களை கட்டுப்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்த விடயத்தில் மாணவர்களை நிர்ப்பந்திப்பதினாலோ அல்லது அவர்களின் குடும்பத்தினரை அறிவூட்டுவதினாலோ பாரிய விளைவுகள் எதனையும் ஏற்படுத்த முடியாது. இதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்கள் இருக்கின்றன. **அதிகாலை நேரம் என்பது சாப்பிடத் தூண்டுகின்ற நேரமல்ல.** அரைகுறை விழிப்புடன் எழுந்து, பாடசாலை செல்ல வேண்டிய அவசர நிலையில் உள்ள மாணவர்கள் உணவின் மீது ஆர்வம் கொள்ளும் மனநிலையைக் கொண்டிருக்க முடியாது. அதேநேரம் கணிசமான மாணவர்கள், அதிகாலை நேரத்தில், தனியார் வகுப்புகளுக்குச் செல்பவர்களாக இருக்கின்றார்கள். ஐந்து மணிக்கு தனியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புகளுக்கு செல்ல வேண்டியுள்ள மாணவர்கள், அதைத் தொடர்ந்து தமது பாடசாலைகளுக்குச் செல்வதால், காலை உணவை ருசித்தும், வயிறாரவும் சாப்பிடுவார்கள் என்பது அர்த்தமற்ற எதிர்பார்ப்பாகவே இருக்கின்றது. அனேகமான பாடசாலைகளில், இடைவேளையானது காலை 10 மணிக்கும் 10.30 மணிக்கும் இடையிலேயே விடப்படுகின்றது. இந்த இடைவேளை நேரத்தில்தான் பெரும்பாலான மாணவர்கள் தமது காலை உணவை சாப்பிடுபவர்களாக உள்ளனர். இவ்வகையில், இரவு 08 மணிக்கும் 09 மணிக்கும் இடையில் இரவுணவைச் சாப்பிட்ட மாணவர்கள், **கிட்டத்தட்ட 14 மணித்தியாலங்களின் பின்னர்தான்** அடுத்த உணவைச் சாப்பிடுபவர்களாக இருக்கின்றார்கள். இது நமது அனைவரினதும் கரிசனைகுட்பட வேண்டிய ஒரு விடயம். உரிய நேரத்தில் காலை உணவு சாப்பிடாத இளந்தலைமுறையினர் நம்மத்தியில் உருவாகி வருகின்றார்கள் என்ற உண்மையையும், அதனால், இத்தகையோரிடையே எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய உடலியல் மற்றும் உளவியல் சார்ந்த பிரச்சினைகளையும் நாம் அக்கறையுடன் பரிசீலனைக்குட்படுத்த வேண்டும்.

நமது நாட்டின் பாடசாலை நேரமுறைமை, மாணவர்கள் காலை உணவு சாப்பிடுவதில் மட்டும் சிக்கல்களைத் தோற்றுவிக்கவில்லை. கூடவே, **காலைக்கடன்களை கழிக்கின்ற விடயத்திலும் சிக்கலை ஏற்படுத்தியிருக்கின்றது.** குளித்தல், பலதுலக்குதல் என்பவை முறையாக மேற்கொள்ளப்பட முடியாதிருப்பதோடு, அவை அவசரத் துடன் முடிக்கப்பட வேண்டியவையாகவும் இருக்கின்றன. மாண வர்கள் மத்தியில், பல் சம்பந்தப்பட்ட நோய்கள் அதிகமாக அவதானிக் கப்படுவதற்கு, அவர்கள் இனிப்புணவுகளை அதிகமாக சாப்பிடுகின் றார்கள் என்பது மட்டுமன்றி, அவர்கள் முறையாக தமது பற்களை சுத்தம் செய்யாதிருக்கின்றார்கள் என்பதும் பிரதான காரணமாக அமைந்திருக்கின்றது. பாடசாலைக்கு நேரத்துடன் செல்ல வேண்டும் என்ற அவசர நிலை, மலம் கழித்தல் விடயத்திலும் மாணவர்களைப் பாதிக்கின்றது. தமது வீடுகளில் மலகூடம் அற்றவர்கள், இலகுவில் தண்ணீர் பெற முடியாத சூழலில் வசிப்பவர்கள், மலம் கழிப்பதற்காக தொலைதூரம் செல்ல வேண்டியவர்கள் என பன்முகப்பட்ட நெருக்கடிகளை முகம் கொடுப்பவர்களாக நமது மாணவர்கள் இருக்கின்றார்கள். இந்நிலையில் அதிகாலை நேரத்தில், மலம் கழித்தல் என்பது, மாணவர்களுக்கு ஒரு சிக்கலானதும், உளப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்பை ஏற்படுத்துகின்ற விடயமாகவும் இருக்கின்றது. எனவே கணிசமான மாணவர்கள், இந்த அவசியமான காலைக் கடனை நிறைவேற்றாதவர்களாகவே பாடசாலைக்குச் செல்கின்றார்கள். இந்நிலை தனிப்பட்ட ரீதியில் அவர்களையும், பொதுநிலையில் பாடசாலையையும் பாதிப்பதாக உள்ளது. பெரும்பாலான ஆரம்ப வகுப்பு ஆசிரியர்கள், தமது மாணவர்கள் வகுப்பறைக்குள்ளேயே மலம் கழிக்கின்ற அனுபவத்தைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். வளர்ந்த மாணவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் தமது மலம் கழிக்கும் தேவையை அடக்கியவர்களாக வகுப்பில் இருக்கின்ற நிலை உருவாகின்றது. இது சமயங்களில் தவிர்க்க முடியாத வகையில் வாயு வெளியேற்றமாக அமைந்து, சக மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சங்கடத்தை ஏற்படுத்துகின்றது. மலம் கழிக்கும் தேவையை அடக்கிக் கொள்வதானது, அந்த மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. உற்சாகமாக படிக்க முடியாதிருப்பதோடு, பாடங்களில் கவனம் செலுத்த முடியாதவர்களாகவும் அவர்கள் ஆகின்றார்கள்.

நேரமுறைமையானது, வளர்ந்த மாணவிகளை இன்னுமொரு வகையில் கடுமையாகப் பாதிக்கின்றது. மாதவிலக்கு என்பது வளர்ந்த மாணவிகள் மாதாந்தம் எதிர்கொள்கின்ற ஒரு சுய - அனுபவமாக உள்ளது. அதனால் ஏற்படுகின்ற உடல் உபாதைகளோடு, தமது சுத்தத்தை முறையாகப் பேண வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இருக்கின்றது. ஆனால், அதிகாலையிலேயே தனியார் வகுப்புகளுக்கும் தொடர்ந்து பாடசாலைக்கும் செல்ல வேண்டும் என்ற அவசர நிலையினால், தமது உடல் உபாதைகளையும், சுத்தப்படுத்தலையும் உரிய முறையில் பேணமுடியாதவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள். இதனால் வகுப்பறைகளில் தமது உபாதைகளையும், அசுத்த நிலையையும் கட்டுப்படுத்தியவாறு இவர்கள் அவஸ்த்தைப்படுகின்ற நிலைக்கு ஆளாகின்றார்கள். இடைவேளை என்பது காலை 10 மணிக்கும் 10.30 மணிக்கும் இடையிலேயே விடப்படுவதால், அவ்வளவு நேரமும் தம்மை கட்டுப்படுத்தியவாறு வகுப்புகளில் இருக்க வேண்டிய நிலை இவர்களுக்கு ஏற்படுகின்றது. இத்தகைய இக்கட்டானநிலை, இவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. மேலும், பல பாடசாலைகளில், மலசல கூடங்கள் முறையாகப் பராமரிக்கப்படாத நிலையில் இருப்பதும், இத்தகைய வளர்ந்த மாணவிகள் தமது தேவைகளை நிறைவேற்றுவதில் பாதிப்புகளையும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ ளஅழுத்தங்களையும் ஏற்படுத்துவதாக உள்ளது.

இந்த இடத்தில் சில ஆசிரியர்களின் செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிட வேண்டியுள்ளது. இடைவேளை நேரத்திற்கு முன்னுள்ள பாடத்தைக் கற்பிக்கின்ற சில ஆசிரியர்கள், இடைவேளைக்கு மணி அடித்த பின்னரும் கூட, தமது பாடங்களை முடிக்காமல் தொடர்ந்து பாடம் நடத்துபவர் களாக இருக்கின்றார்கள். இத்தகையை ஆசிரியர்கள் உரிய நேரத்திற்கு வகுப்புகளுக்குச் சமூகமளிக்காதவர்களாக இருக்கலாம், அல்லது அவர்கள் தமது காலை உணவை ஏற்கனவே சாப்பிட்டு விட்டு வந்திருக்கலாம். அல்லது பாடம் முடிந்த பின்னர் அவர்கள் சாப்பிடலாம். இடைவேளை என்பது, பாடசாலை தொடங்கப்பட்டு, கிட்டத்தட்ட மூன்று மணித்தியாலங்களின் பின்னர் விடப்படுகின்ற ஒரு செயன்முறை என்பதும், இந்த இடைப்பட்ட நேரத்தில் மாணவர்கள் வெவ்வேறான அவஸ்த்தைகளுடனும், எதிர்பார்ப்புகளுடனும் இருக்கின்றார்கள் என்ற புரிதலும் ஆசிரியர்களுக்கு தேவைப்படுகின்றது. வெளியே பிற மாண வர்கள் சாப்பிட்டுக் கொண்டும், கூச்சலிட்டுக் கொண்டும் இருக்கையில், தாம் கற்பித்துக் கொண்டிருக்கின்ற மாணவர்கள் பாடத்தில் அக்கறை செலுத்துவார்கள் என்பது தவறான எதிர்பார்ப்பாகவே இருக்கும். இத்தகைய கற்பித்தல், மாணவர்களுக்கு எந்தவித பயனையும் அளிக்க மாட்டாது. பசியோடும், இயற்கை உபாதைகளோடும் இருக்கின்ற மாணவர்கள், ஆவலுடன் கற்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? மொத்தத்தில் பாடசாலை நேரமுறைமை என்பது, மாணர்வகளையும், ஆசிரியர்களையும் உடல், உளரீதியாக பாதிப்பதாக அமைந்துள்ளது. அவர்களின் கற்றல் செயற்பாடுகளும், கற்பித்தல் நடவடிக்கைகளும் உச்ச பயனை அளிக்கும் வகையில் அமைய முடியாதநிலையை இந்த நேரமுறைமை ஏற்படுத்தியிருக்கின்றது.

இவற்றோடு, **இந்நேரமுறைமையானது மாணவர்கள் துஷ்பிரயோகங் களுக்கு உள்ளாக்கப்படுவதற்கும் ஒரு காரணமாக அமைந்திருக்கின்றது** என்ற உண்மை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். நமது நாட்டிலுள்ள பெரும்பாலான பாடசாலைகள், பிற்பகல் 1.30 மணியுடன் மூடப்படுகின்றன. அதன் பின்னர் மாணவர்கள் தமது வீடுகளுக்குச் செல்கின்றார்கள். இன்று, பெரும்பாலான வீடுகள் கூட்டுக் குடும்ப நிலையில் இருந்து விலகி, தனிக்குடும்பங்களாக அல்லது கருக்குடும்பங்களாக மாறியிருக்கின்றன. ஆண்கள் மட்டுமன்றி, பெண்களும் வேலைக்குச் செல்வது அதிகரித்து விட்டது. எனவே மாணவர்கள் பாடசாலைகளை விட்டு வீடு செல்லும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, பெரும்பாலான வீடுகள் தனிமையாக இருக்கின்றன. அல்லது வயோதிப தாத்தா அல்லது பாட்டியை கொண்டவையாக இருக்கின்றன. இந்தத் தனிமைநிலை அல்லது முறையான கண்காணிப்பற்ற நிலை, மாணவர்களின் நடத்தைகளைப் பாதிப்பதாக அமைகின்றது. மாணவர்களில் ஒரு பகுதியினர் தமது வீடுகளுக்குப் பிந்தி வருகின்றார்கள். போக்குவரத்து நெருக்கடிகளினால் மட்டுமின்றி, தமது சுயவிருப்பினாலும் அவர்களின் இந்தத் தாமதம் நிகழ்கின்றது. பாடசாலை நண்பர், நண்பிகளுடன் நேரத்தைக் கழித்தல் என்பதோடு, குறிப்பாக கட்டிளமைப் பருவத்திலுள்ள மாணவிகளைப் பொறுத்தவரை, அவர்கள் பிற வளர்ந்த ஆண்களுடன் தொடர்புகளை பேணுவதற்கும் இந்தத் தாமதத்தைப் பயன்படுத்துகின்றார்கள். அதேநேரத்தில், வீடுகளுக்கு உரிய நேரத்தில் வருபவர்கள் கூட, தொலைக்காட்சி, இணையம் என்பவற்றில் பொருத்தமற்ற நிகழ்ச்சிகளைப் பார்ப்பவர்களாக மாறுகின்றார்கள். இத்தகைய நிலைமையானது, மாணவர்கள் தமது எதிர் பால் நண்பர்களுடனோ, அல்லது வயதில் கூடிய நபர்களுடனோ பாலியல் சார்ந்த தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியத்தை உருவாக்குகின்றது. அதேநேரத்தில், வன்முறை அல்லது பலாத்காரம் சார்ந்த பாலியல் துகூஷ்பிரயோகம் நிகழ்வதற்கும் மாணவர்களின் தனிமைநிலையும் ஒரு காரணியாக அமைந்திருக்கின்றது.

நமது நாட்டின் பாடசாலை நேரமுறைமையானது, தனியார் கல்வி நிலையங்களின் அபரிமிதமான வளர்ச்சிக்குக் காரணமாகியுள்ளது. உலகில் எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு நமது நாட்டில், பாடசாலைகளுக்கு புறம்பான கல்வி நிறுவனங்களாக இந்த தனியார் கல்வி நிலையங்கள் உருவாகியுள்ளன. பிறநாடுகள் பெரும்பாலானவற்றில், தனியார் கல்வி நிறுவனங்கள் என்பவை, அரசாங்க பாடசாலைகளுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும் சமாந்தரமாகவும், இணையாகவும் கல்வியை வழங்குபவைகளாக இருக்கின்றன. அரசாங்க பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்பதற்கான வாய்ப்பு கிடைக்காதவர்கள், அல்லது அவற்றின் கல்விமுறைமை போதாது என்று கருதுபவர்கள், அல்லது அவற்றில் இல்லாத கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் போன்றோருக்கு, கட்டணங்கள் மூலம் கல்வியை வழங்குபவைகளாக இவை இயங்குகின்றன. ஆனால் நமது நாட்டிலோ, இந்த **தனியார் கல்வி நிலையங்கள் என்பவை, அதே பாடசாலைக் கல்வியை கட்டணம் பெற்று திரும்பவும் கற்பிக்கின்ற செயற்பாட்டை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மட்டுமே கொண்டவையாக விளங்குகின்றன.** இது ஒருபுறம், பாடசாலையில் இடம்பெறுகின்ற கற்பித்தல் (மற்றும் கற்றல்) செயற்பாடுகளின் போதாமையின் வெளிப்பாடாக அமைந்திருக்கின்றது. மறுபுறம், இத்தகைய **தனியார் நிறுவனங்களின் இருப்பும், வளர்ச்சியும் நமது பாடசாலை நேரமுறைமையின் வெளிப்பாடாகவும் அமைந்திருக்கின்றது.** பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை முடிந்து வருகின்ற மாணவர்கள், தமது மதிய உணவைச் சாப்பிட்டு முடித்த பின்னரான நேரத்தைப் பயன்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாக தனியார் கல்வி நிலையங்கள் அமைந்துள்ளன. பி.ப. 3.00 மணிக்கு தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கின்ற மாணவர்கள், மாலை 6.00 மணிவரை அங்கு தமது இரண்டாம் கட்ட கற்றலை மேற்கொள்கின்றார்கள். பெற்றோர்களைப் பொறுத்தவரை, அவர்கள் தமது பிள்ளைகளின் கற்றல் மேம்படுவதற்கான செயன்முறை என்பதோடு, தாம் வேலையில் இருந்து வீடு திரும்புவதற்கான காலப் பகுதியில், தமது பிள்ளைகள் தங்கியிருக்கின்ற பாதுகாப்பான இடங்களாகவும் இத்தனியார் கல்வி நிலையங்களைக் கருதுகின்றார்கள்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில், தனியார' கல்வி நிலையங்களின் அபரிமதிமான, தொடர்ந்த வளர்ச்சி என்பது பாடசாலைக் கல்வி முறையில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற வீழ்ச்சியின் குறிகாட்டியாக அமைந்திருக்கின்றது. நாம் பின்னால் பரிசீலிக்கவிருப்பது போன்று, பாடசாலையில் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலையின் ஒரு வெளிப்பாடாக தனியார் கல்வி நிலையங்களின் தொடர் உருவாக்கம் விளங்குகின்றது. இந்நிலையங்கள், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு ஒரு மாற்றாக விளங்குகின்றபோதிலும், மறுபுறத்தில், மாணவர்களின் நடத்தைகளில் தாக்கங்களை நிகழ்த்துபவையாகவும் அமைந்திருக்கின்றன. **பெரும்பாலான மாணவர்களுக்கு, 'டியூசனுக்கு' செல்வது என்பது, இன்று ஒரு பொழுதுபோக்காக மாறி விட்டது.** முன்னர் பாடசாலை முடிந்தவுடன், விளையாட்டு மைதானத்திற்கோ அல்லது விளையாடக் கூடிய வேறு இடங்களுக்கோ மாணவர்கள் ஆர்வத்துடன் சென்றநிலை இன்று அகன்று விட்டது. இப்போது மாணவர்கள் இந்தத் தனியார் வகுப்புகளுக்கே மிகுந்த ஆர்வத்துடன் செல்கின்றார்கள். கற்பதின் மீது மாணவர்களுக்குள்ள ஆர்வம் மட்டும் இதற்குக் காரணம் அல்ல, கூடவே, இந்தத் தனியார் கல்வி நிலையங்கள், மாணவர்களின் உளவியல் தேவைகளை நிறைவேற்றுபவையாகவும் அமைந்திருக்கின்றன. நண்பர்களை சந்தித்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு விடயங்களை பரிமாறுதல், என்பவற்றோடு, எதிர் பால் தொடர்புகளுக்கான ஊடகங்களாகவும் இந்நிலையங்கள் அமைந்திருக் கின்றன. இந்நிலையங்களில் மட்டுமின்றி, இவற்றிற்குச் செல்கின்ற வழிகளிலும் தமது எதிர் பால் நண்பர்களை சந்திக்கின்ற வாய்ப்புகளை மாணவர்கள் உருவாக்குகின்றார்கள். தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தும், மாணவர்களின் வீடுகளில் இருந்து கணிசமான தொலைவிலேயே அமைந்திருக்கின்றன. சில மாணவர்களைத் தவிர, பெரும்பாலான மாணவர்கள் நடந்தும், பஸ் மற்றும் துவிச்சக்கர வண்டிகளிலுமே இந்நிலையங்களுக்கு செல்கின்றார்கள். இவ்வாறு தமது வீடுகளில் இருந்து, இந்நிலையங்களுக்கும், பின்னர் வகுப்புகள் முடிவடைந்ததும், இந்நிலையங்களில் இருந்து தமது வீடுகளுக்கும் மாணவர்கள் செல்கின்ற இந்த நேர இடைவெளியானது, பல மாணவர்களுக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. குறிப்பாக பருவவயது மாணவிகளைப் பொறுத் தவரையில், வீதிகளில் சுற்றித் திரிகின்ற இளைஞர்களின் பார்வையில் தொடர்ச்சியாக அகப்படுபவர்களாக இருக்கின்றார்கள் கட்டிளம் பருவத்திலுள்ள இத்தகைய மாணவிகளை இலக்காகக் கொண்டே அலைகின்ற இந்த இளைஞர்களினால் மாணவிகள் பாலியல் ரீதியாக தொல்லைக்குள்ளாகின்றார்கள். எனினும், இத்தகைய தொல்லைகள் தொடர்ச்சியாக நிகழ்கையில், அதுவே ஒருநிலையில், எதிர் பால் சார்ந்த ஈர்ப்பாக மாறிவிடுகின்றது. தம்மை விட வயதில் கூடியவர்களாகவும், நாகரீகமான தோற்றப்பாங்குள்ளவர்களாகவும் உள்ள இந்த இளைஞர்களினால் கட்டிளமைப் பருவத்திலுள்ள மாணவிகள் ஈர்க்கப்படுவது வியப்பிற்குரிய விடயமல்ல. இத்தகைய ஈர்ப்பின் விளைவானது, மாணவிகள் அனைவரையும் தவறான நடத்தை களுக்குள்ளாக்குகின்றது எனக் கருதத் தேவையில்லை ஆயினும், இத்தகைய ஈர்ப்பு, மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுவதற்கும், தவறான பாதைகளை தேர்ந்து கொள்வதற் குமான பிரதான காரணியாக அமைந்திருக்கின்றது.

தொடர்ச்சியான 'டியூசன்' காரணமாக, இளம் பருவத்தினர் விளையாடு வதற்கான வாய்ப்புகளை இழப்பதோடு, அவர்கள் விளையாடுவதில் ஆர்வமற்ற உளவியலைப் பெறுகின்றார்கள் என்பதும் அக்கறையுடன் பரிசீலிக்கப்பட வேண்டிய விடயமாக உள்ளது. இன்று கணிசமான மாணவர்களுக்கு, இந்த தனியார் வகுப்புகள்தான் பொழுதுபோக்குவ தற்கான இடங்களாகவும் மாறியுள்ளன. பாடசாலையில் கற்ற அதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்களைத்தான் தனியார் வகுப்புகளிலும் கற்க வேண்டியுள்ளதால், மாணவர்களில் கணிசமானோர், கற்கும் ஆர்வத்துடன் தனியார் வகுப்புகளுக்குச் செல்வதில்லை, பதிலாக இத்தகையோருக்கு தனியார் வகுப்புகள் என்பவை, பொழுதுபோக்குவதற்கான இடங்களாக அமைகின்றன.

இத்தகைய ஒட்டுமொத்த நிலைமைகளையும் கருத்தில் கொண்டு, நமது பாடசாலை நேரமுறைமையில் மாற்றம் செய்வது குறித்து நாம் அக்கறை கொள்ள வேண்டும். பல தளங்களில் இது பற்றி நாம் பரிசீலிக்க முடியும்:

**1. வினைத்திறனுடன் கூடிய கற்பித்தலுக்கான சூழ்நிலையை உருவாக்கல்**

நமது நாட்டில் இப்போது நடைமுறையிலுள்ள வழக்கப்படி, ஒரு பாடத்திற்குரிய கற்பித்தல் நேரமாக நாற்பது நிமிடங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆனால் பல நாடுகளில் இந்த நேர அளவு மாற்றப்பட்டுள்ளது. **வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் ஒரு பாடத்திற்குரிய நேரம் ஒரு மணித்தியாலமாக மாற்றப்பட்டுள்ளது.** இந்த ஒரு மணித்தியாலத்தில், ஐம்பது நிமிடங்கள் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காகவும், எஞ்சிய பத்து நிமிடங்கள், மாணவர்கள் தமது சந்தேகங்கள் அல்லது தனிப்பட்ட விடயங்கள் குறித்து ஆசிரியர்களுடன் உரையாடுவதற்காகவும், ஆசிரியர்கள் ஒரு வகுப்பில் இருந்து அடுத்த வகுப்பிற்குச் செல்வதற்கான கால இடைவெளியாகவும் வழங்கப்படுகின்றன. உண்மையில், தாம் முறையாகக் கற்பித்தலை மேற்கொள்வதற்கு நாற்பது நிமிடங்கள் போதாமல் இருக்கின்றன என்பதை ஆசிரியர்கள் உணர்வார்கள். ஒரு வகுப்பில் பாடம் முடிந்து, அடுத்த வகுப்பிற்குச் சென்று பாடம் தொடங்குவதற்கிடையில், கிட்டத்தட்ட பத்து நிமிடங்கள் செலவாகி விடுகின்றன. எனவே ஒரு ஆசிரியருக்கு கற்பித்தல் செயற்பாடுகளுக்கு என **முப்பது நிமிடங்கள்தான் எஞ்சியிருக்கின்றன.** பாடசாலைகளில் வினைத்திறனற்ற முறையில் கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு எழுவதற்கு இந்த நேரக்குறைவும் ஒரு காரணியாக இருக்கின்றது.

(பின்வரும் ஒப்பீடு, இந்த உண்மையை இன்னும் துல்லியமாக விளக்கும். தனியார் கல்வி நிலையங்களில் ஒரு பாடம் ஒரு மணித்தியாலத்திற்குக் கற்பிக்கப்படுகின்றது. ஒவ்வொரு பாடமும் வாரத்தில் மூன்று மணித்தியாலங்கள் கற்பிக்கப்படுகின்றன. இந்த மூன்று மணித்தியால பாடநேரத்தில், **வேறு பணிகள் ஏதுமின்றி,** கற்பித்தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே சிறப்பான முறையில் மேற்கொண்டு, பாடவிதானத்தை முறையாக முடிப்பதற்கு இந்நிலையங்களில் கற்பிக்கின்றவர்களினால் முடிகின்றது. பாடசாலைகளில் பொதுவாக ஒரு பிரதான பாடம் வாரத்தில் ஐந்து பாடவேளைகளில் கற்பிக்கப்படுகின்றது. ஒரு பாட வேளை நாற்பது நிமிடங்கள் என்றவகையில் மொத்த நேரம் இருநூறு நிமிடங்களாக அமைகின்றன. இது மூன்று மணித்தியாலங்களும், இருபது நிமிடங்களாகவும் இருக்கின்றது. இருந்தும், பாடசாலைகளில் ஆசிரியர்களினால் பாடவிதானத்தை முறையாக பூர்த்தி செய்ய முடியாமலும், கற்பிக்க முடியாமலும் இருக்கின்றன. இதற்குரிய காரணங்களில் ஒன்றாக, ஒதுக்கப்பட்டுள்ள ஐந்து பாடவேளைகளிலும், ஒவ்வொரு பாடவேளையிலும் ஒரு ஆசிரியரால் நாற்பது நிமிடங்களுக்குப் பதிலாக, உண்மையில் முப்பது நிமிடங்கள்தான் கற்பிக்க முடிகின்றது என்ற எதார்த்தநிலை அமைநதிருக்கின்றது. அதாவது ஒரு ஆசிரியரால் தனது பாடத்தை வாரத்தில் நூற்றி ஐம்பது (150) நிமிடங்கள்தான் கற்பிக்க முடிகின்றது. இது **மூன்று மணித்தியாலத்திலும் பார்க்க முப்பது நிமிடங்கள் குறைவானது.**)

மாணவர்களின் வெவ்வேறு பருவநிலைக்கேற்ப, அவர்கள் ஒரு பாடத்தை ஆர்வத்துடன் கற்பதற்கான நேர அளவும், கிரகித்தல் ஆற்றலும் மாறுபடுகின்றன என்ற முடிவை அடிப்படையாகக் கொண்டுதான், பாடசாலைகளில் பாடநேரங்கள் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக ஆரம்ப வகுப்பு மாணவர்கள் ஒரு பாடத்தை 30 நிமிடங்கள்தான் ஆர்வமாகக் கற்பார்கள் என்றும், இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கு இது 40 நிமிடங்கள் என்றும், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு 80 நிமிடங்கள் என்றும் கருதப்படுகின்றன. எனினும், இந்த கால அளவு, நவீன கற்றல் முறைக்கு பொருத்தமானதாக இருக்கின்றதா என்று பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளது. பொதுவாக மாணவர்கள் தமது இடங்களில் அமர்ந்திருக்க, ஆசிரியர்கள் பெருமளவு நேரம் கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்கின்ற முறைக்கு இந்த நேர அளவு பொருந்தி வரலாம். ஒருவர் தொடர்ச்சியாக கற்பிப்பதை கிரகிக்கின்ற மூளை விரைவில் களைப்படைந்து விடுவது இயல்பானது. ஆனால், மாணவர்கள் அனைவரினதும் உற்சாகமான பங்கேற்பையும், அவர்களின் செயற்பாட்டையும், கணினிகள் போன்ற நவீன உபகரணங்களின் பயன்பாட்டையும் முதன்மைப்படுத்துவதாக அமைந்துள்ள நவீன கற்றல்-கற்பித்தல் முறைக்கு இந்த நேர அளவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுமானதாக இல்லை என்பதை எளிதாக உணர்ந்து கொள்ள முடியும். ஒவ்வொரு பாடவேளையின்போதும், மாணவர்கள் தமது பங்கேற்பை வெளிப்படுத்துவதற்கு தேவைப்படுகின்ற காகிதாதிகள், மற்றும் ஏனைய உபகரணங்களை தயார்படுத்தி, தமது வெளிப்பாடு களை முன்வைப்பதற்கு முன்னர், பாட நேரம் முடிவடைந்து விடுவதே பொதுவான அனுபவமாக இருக்கின்றது. அத்தோடு, நமது பாடசாலை களிலுள்ள வகுப்பறைகள் நவீன கற்பித்தல் சாதனங்களினால் வளப்படுத்தப்படவில்லை. ஆய்வுகூடங்கள், கணினி அறைகள் மற்றும் பிற செயன்முறைகளுக்கென ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இடங்கள், வகுப்பறைகளில் இருந்து கணிசமான தூரங்களில் அமைந்திருக்கின்றன. மாணவர்கள் அந்த இடங்களுக்கு செல்வதற்கும், பின் அங்கிருந்து தமது வகுப்பறைகளுக்கு திரும்புவதற்கும் கணிசமான நேரம் தேவைப்படுகின்றது. இத்தகைய பின்னணியில், நமது பாடசாலைகளில் தற்போது பின்பற்றப்படுகின்ற பாடங்களுக்கான நேர அளவு முறையை மாற்றியமைப்பது குறித்த பரிசீலிப்பு அவசியமாகின்றது.

**2. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உளவியல் அழுத்தங்களைக் குறைத்தல்**

நமது பாடசாலையின் நேரமுறைமையை, காலை 8.30 மணியில் இருந்து பிற்பகல் 4.30 மணி என மாற்றியமைப்பதன் மூலமாக, மாணவர்களும், ஆசிரியர்களும் எதிர்கொள்கின்ற இத்தகைய நெருக்கடிகள் அனைத்தையும் தீர்ப்பதற்கான சாத்தியம் இருக்கின்றதா என்ற பரிசீலனை அவசியமாகின்றது. இவ்வாறு பாடசாலை நேரத்தை மாற்றியமைப்பதன் மூலமாக மாணவர்களும், ஆசிரியர்களும் தமது காலைச் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்ளவும், காலை உணவை உட்கொள்ளவும், தமது உடல் சுத்தத்தை முறையாகப் பேணவும், உற்சாகமாகவும், ஆரோக்கியமாகவும் பாடசாலைக்குச் செல்லவுமான சாத்தியம் உருவாகும்.

**3. மாணவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதை தடுத்தல்**

பிற அலுவலகங்களுக்குச் செல்கின்ற பெற்றோர்கள், தமது பிள்ளைகளை தம்முடனேயே அழைத்துச் சென்று பாடசாலையில் விடுவதும், அலுவலகம் முடிந்து தாமே தமது பிள்ளைகளை தம்முடன் வீட்டிற்கு அழைத்துச் செல்வதும் சாத்தியமாகும். இத்தகைய நேர முறைமை, மாணவர்கள் வீதிகளில் தனிமையாக நடமாடுவதையும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்களுக்காக காத்திருப்பதையும், வீடுகளில் தனித்திருப்பதையும், தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளையும் தவிர்ப்பதற்கு உதவும்.

**4. மாணவர்களின் உடல் ஆரோக்கியமும், பன்முக ஆற்றலும் பேணப்படல்**

பாடசாலைகளில், பிற்பகலில் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு விளையாட்டுகளில் பங்கேற்றல் என்பதை கட்டாயமாக்குவதன் மூலமாக, மாணவர்கள் தமது ஆரோக்கியத்தை முறையாகப் பேணக் கூடிய வாய்ப்பு உருவாகும். மேலும், செயற்திறன் வாய்ந்த பல்வேறு குழுக்களை உருவாக்கி, அவற்றில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்வதன் மூலமாக, அவர்களிடையே காணப்படுகின்ற வெவ்வேறு ஆற்றல்களை வெளிக் கொணர்வதற்கும், வளர்ப்பதற்குமான சாத்தியம் உருவாகும்.

பிரதானமாக, போக்குவரத்து நெரிசலைக் கவனத்தில் கொண்டுதான் பாடசாலை நேரமுறைமை தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது என்ற கருத்து முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இக்கருத்து எவ்வளவு தூரம் சரியானது என்ற மீள்பரிசீலனை நமக்கு இப்போது அவசியமாகின்றது. ஒரு நாட்டின் முழு மாணவர் சமூகத்தையும் உடல், உள ரீதியாகவும், நடத்தைகள் சார்ந்தும் பாதிப்பதாக அமைந்துள்ள நேரமுறைமைக்கு, போக்குவரத்து நெரிசலைக் காரணமாகக் கொள்வது சரிதானா என்ற கேள்வி இன்று முன்னெழ வேண்டியுள்ளது. பெரிய நகரங்கள் சிலவற்றில் ஏற்படக் கூடிய வாகன நெரிசலை அடிப்படையாகக் கொண்டு முழுநாட்டினதும் பாடசாலை நேரம் தீர்மானிக்கப்படுவது குறித்தும் நாம் உரையாட வேண்டியது அவசியமாகின்றது. ஒரு பொருத்தமான போக்குவரத்து ஒழுங்கை மேற்கொள்வதினூடாக, போக்குவரத்தை சீர்செய்யவும், பாடசாலை நேரத்தை மாற்றிமைக்கக் கூடியதுமான சாத்தியப்பாடுகள் பற்றி அனைவரும் சிந்திப்பது அவசியமாகியுள்ளது.

## 7 பரீட்சை முறைமை

நமது மாணவர்கள் மத்தியில் உளவியல் ரீதியான தாக்கங்களை நிகழ்த்துகின்ற இன்னுமொரு முக்கிய காரணியாக எமது நாட்டின் பரீட்சை முறைமை அமைந்திருக்கின்றது. நமது நாட்டில் பரீட்சைகள், பாடசாலை ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில், கோட்டம், வலயம், மற்றும் மாகாண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டங்களிலும் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. இவற்றில், தேசிய ரீதியில் நடத்தப்படுகின்ற பரீட்சைகள் மிகுந்த முக்கியத்துவம் பெற்றவையாகவும், மாணவர்களின் வெவ்வேறு பருவங்களில் அவர் களின் உளவியலில் பாரிய தாக்கங்களை நிகழ்த்துவனவாகவும் அமைந்திருக்கின்றன. ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த (சா.த) பரீட்சை, க.பொ.த (உ.த) பரீட்சை என மூன்று பிரதான பரீட்சைகள் தேசிய ரீதியில் நடத்தப்படுகின்றன. இவற்றில், க.பொ.த (சா.த) பரீட்சையானது, எவ்வாறு பல்லாயிரக்கணக்கான மாணர்களைப் பாதிப்பதாகவும், அவர்களின் எதிர்கால கல்வி வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவும் அமைந்திருக்கின்றது என்பதை மேலே பரிசீலித்துள்ளோம். இனி, ஏனைய இரண்டு பரீட்சைகளினால் மாணவர்கள் எத்தகைய பாதிப்புகளுக்குள்ளாகின்றார்கள் என்பது குறித்து பரிசீலிப்போம்.

**ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை**

ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை யானது, பரபரப்புத் தன்மை கொண்ட ஒரு போட்டிப் பரீட்சையாக அமைந்திருக்கின்றது. இப்பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்ற மாணவர்களுக்கு, அவர்களின் கல்விக்கு உதவக் கூடியவிதத்தில் உபகார நிதியும், பிரசித்தி பெற்ற பாடசாலைகளில் அனுமதி கிடைக்கக் கூடிய வாய்ப்புகளும் வழங்கப்படுவதால், மாணவர்களுக்கு இப்பரீட்சை பெறுமதிமிக்கதாக அமைகின்றது. எனினும் **நடைமுறையில், இப்பரீட்சையை எழுதுகின்ற ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் இப்பரீட்சைக்கு வழங்குகின்ற முக்கியத்து வத்தை காட்டிலும், அவர்களின் பெற்றோரே இப்பரீட்சையின்பால் பல மடங்கு அதிகமான முக்கியத்துவத்தை வழங்குகின்றார்கள்.** இப்பரீட்சையின் மீது பெற்றோர்களுக்கு ஏற்பட்டுள்ள அபரிமிதமான அக்கறையின் காரணமாக, இது அவர்களின் குடும்ப கௌரவத்தின் மீதும் தாக்கத்தை நிகழ்த்துகின்ற ஒன்றாக கருதப்படுகின்ற அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது. விளையாட்டுக்களில் ஆர்வமும், மகிழ்ச்சியும், குதூகலமும், அப்பாவித்தனமும் நிறைந்த பருவத்திலுள்ள ஐந்தாம் வகுப்பு மாணவர்களினால், தாம் எழுதப் போகின்ற புலமைப் பரிசில் பரீட்சையின் முக்கியத்துவத்தை ஒரு போதும் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. ஆனால், அவர்களின் பெற்றோர் வழங்குகின்ற அளவுகடந்த முக்கியத்துவமானது, இந்த இளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் உளநிலையில் பெரும் பாதிப்புகளை நிகழ்த்துகின்றது. பாடசாலை முடிந்த பின்னரான வகுப்புகள் (After School), மாலை நேர தனியார் வகுப்புகள், இரவுநேர வகுப்புகள், அதிகாலை வகுப்புகள் என கிட்டத்தட்ட ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் தமது நாளின் பெரும்பகுதியை படிப்பிலேயே கழிக்க வேண்டியவர்களாகின்றார்கள். விளையாட்டுக்களில் இருந்தும், ஏனைய மகிழ்ச்சிகரமான பொழுதுபோக்குகளில் இருந்தும் ஒரு வருடகாலம் தடுக்கப்பட்ட நிலைக்கு இவர்கள் ஆளாகின்றார்கள். (உண்மையில், பெரும்பாலான பாடசாலைகளும், தனியார் கல்வி நிலையங்களும் நான்காம் வகுப்பில் இருந்தும், சில இடங்களில் மூன்றாம் வகுப்பில் இருந்தும் இந்தப் பரீட்சைக்கான தயார்படுத்தலில் மாணவர்களை ஈடுபடுத்துகின்றார்கள்) இத்தகைய இறுக்கமான நிலை, அவர்களின் உளவியலிலும், உடல்நிலையிலும் ஏற்படுத்தக் கூடிய தாக்கங்களை நாம் புரிந்து கொள்வதில்லை. இது பல மாணவர்களில், சோர்வு, படிப்பில் நாட்டமின்மை, விளையாடுவதில் அக்கறையின்மை, போன்ற விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இப்பரீட்சையில் தெரிவு செய்யப்படுகின்ற மாணவர்களில் **பத்து வீதத்திற்கும் குறைவான மாணவர்கள்தாம்,** பின்னர் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுகின் றார்கள் என்ற உண்மையானது, இப்பரீட்சையின் பிற்கால விளைவுகளை உணர்த்துவதாக உள்ளது.

ஏழ்மை நிலையிலுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்பதே இப்புலமைப் பரிசில் பரீட்சை அறிமுகப்படுத் தப்பட்டதற்கான நோக்கமாகும். ஆனால் நடைமுறையிலோ, தெரிவு செய்யப்படுகின்ற மாணவர்களில் பெரும்பான்மையினோரின் பெற்றோர் கள் நல்ல வாழ்க்கை நிலையில் இருப்பவர்களாகவும், புலமைப் பரிசில் நிதியைப் பெற முடியாத அளவுக்கு பொருளாதார வசதிகள் நிறைந்தவர் களாகவும் இருக்கின்றார்கள். சிறு எண்ணிக்கையிலான மாணவர்கள் மட்டுமே, உபகாரநிதியைப் பெறுகின்றவர்களாக இருக்கின்றார்கள். இது உண்மையில், ஏழை மாணவர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியாக அமைகின்றது. எந்த மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தில் இப்பரீட்சை நடத்தப்பட்டு வருகின்றதோ, அந்த ஏழை மாணவர்களில் பெரும்பாலானோர், இப்பரீட்சையில் குறிப்பிட்ட புள்ளிகளைப் பெற்று, தெரிவு செய்யப்படுகின்ற நிலையை அடையத் தவறி விடுகின்றார்கள். பெற்றோர்களின் கௌரவப் பிரச்சினையாக மாறிவிட்ட இப்பரீட்சையில், வசதிபடைத்த பெற்றோர்கள், தமது பிள்ளைகள் எப்படியாவது வெட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளியைத் தாண்டி விட வேண்டும் என்பதற்காக, பல தனியார் வகுப்புகள் என்றும் பயிற்சி புத்தகங்கள் என்றும் அளவுக்கதிகமாக பணத்தை செலவழித்து, தமது பிள்ளைகளை இப்பரீட்சைக்குத் தயார்படுத்துகின்றார்கள். இதனால், எதிர்பார்க்கப்படுகின்ற வெட்டுப் புள்ளியின் அளவு மிகவும் அதிகரிப்பதால், ஏழைகளின் பிள்ளைகளினால், இத்தகைய வெட்டுப்புள்ளியை நெருங்க முடியாத நிலை ஏற்படுகின்றது. இதன் விளைவாக மிகச் சொற்ப எண்ணிக்கையிலான ஏழை மாணவர்கள் மட்டுமே, இப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு, உபகாரநிதியைப் பெறுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. வெட்டுப்புள்ளிகளை அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களில் கணிசமான பகுதியினர் **ஏழை மாணவர்களாக** இருக்கின்ற நிலையை நாம் அவதானிக்க முடியும். இவ்வகையில், கணிசமான புள்ளிகளைப் பெற்று பரீட்சையில் சித்தியடைந்திருந்தும், வெட்டுப்புள்ளியைத் தாண்டாததன் காரணமாக, தோல்வியடைந்தவர்களாக மாறுகின்ற பல்லாயிரக்கணக்கான மாணவர் கள் உளரீதியாக கடுமையாக பாதிப்புகளுக்குள்ளாகின்றார்கள். பரீட்சைப் பெறுபேறு வெளியாகியதன் பின்னர் பாடசாலைகளிலும், பிற இடங்களிலும் இடம்பெறுகின்ற பாராட்டு நிகழ்வுகள், வெட்டுப்புள்ளியைத் தாண்டாத மாணவர்களை மிகவும் பாதிப்பதாக அமைகின்றன. பல சந்தர்ப்பங்களில், தமது வகுப்பில் அனைத்துப் பாடங்களிலும் சிறப்பான அடைவை பெற்றிருக்கின்ற பல மாணவர்கள், இப்பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு குறைவான அல்லது அண்மித்த புள்ளிகளைப் பெற்று தோல்வியடைந்தவர்களாகின்றார்கள். இந்நிலையும் அவர்களின் உளநிலையைப் பாதிப்பதாக அமைந்துள்ளது.

எதார்த்தத்தில், ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொத்த மாணவர்களில் அண்ணளவாக **பத்து (10) வீதமான** மாணவர்கள் சித்தியடையக் கூடிய விதத்திலேயே வெட்டுப் புள்ளிகள் தீர்மானிக்கப்படுகின்றன. 2015ம் ஆண்டில் நடத்தப்பட்ட புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளில் இருந்து இதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

- இப்பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர்களின் எண்ணிக்கை:- **3,33,672**
- வெட்டுப் புள்ளிக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள்:- **31,853**
- 70 புள்ளிகளுக்கு அதிகமாக பெற்ற மாணவர்கள்:- **54,690**

(தகவல்: வீரகேசரி - 02.11.2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விபரங்களில் இருந்து இன்னுமொரு உண்மையையும் கண்டு கொள்ள முடிகின்றது. அதாவது, ஆகக் குறைந்த சித்திக்குத் தேவையான 70 என்ற புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையானது, மொத்த மாணவர்கள் தொகையில் அண்ணளவாக, **16 வீதமாகவே** காணப்படுகின்றது. இந்த வீதமானது, இத்துணை முக்கியத்துவமும், பரபரப்பும் நிறைந்ததாக அமைந்திருக்கின்ற இப்பரீட்சையைப் பொறுத்த வரையில் **போதுமான அடைவாக அமையவில்லை** என்பதை நாம் எளிதாக உணர்ந்து கொள்ள முடியும். மாணவர்களின் குடும்பநிலைமை, பாடசாலைகளின் வளம், பிரதேசங்களின் அபிவிருத்தி மட்டம், என்பவற்றோடு, மாணவர்களின் உளவளர்ச்சியினாலும் பெரிதும் தீர்மானிக்கப்படுவதாக அமைந்திருக்கின்ற இப்புலமைப் பரிசில் பரீட்சை யானது, இந்நாட்டிலுள்ள வெவ்வேறு சமூகங்களும், முழுநாடும் எதிர்பார்க் கின்ற பெறுபேற்றை விளைவாகத் தருவதாக அமைந்திருக்கவில்லை என்ற உண்மையை மேற்படி முடிவுகள் நமக்குத் தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளன.

எனவே, இப்புலமைப் பரிசில் பரீட்சை குறித்த உரையாடல் மேற்கொள்ளப்படுவது இப்போது அவசியமாகியுள்ளது. இப்பரீட்சையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள முடியாதிருக்கின்ற ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு இதை நடத்துவதற்குப் பதிலாக, இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, தாமே சுயமாகக் கற்கக் கூடிய நிலையிலுள்ள **பிறிதொரு வகுப்பு மாணவர்களுக்கு** இப்பரீட்சையை நடத்துவதா? புலமைப் பரிசில் நிதியைப் பெறக் கூடிய தகுதியைக் கொண்டுள்ள **மாணவர்களுக்கு மட்டும்** இப்பரீட்சையை நடத்துவதா? அல்லது, ஏழை மாணவர்களை அதிகமாக உள்வாங்கும் வகையில் **வெவ்வேறு வெட்டுப்புள்ளி முறைமையை** அறிமுகப்படுத்துவதா?... என பல விடயங்களை உள்ளடக்கும் வகையில், விரிவான முறையில் இத்தகைய உரையாடல் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பரீட்சையினால் ஏற்பட்டிருக்கின்ற தீவிரமான விளைவுகளைப் பற்றி, பல கல்வியியலாளர்கள் மிகுந்த அக்கறையுடன் தமது அவதானிப் புகளை முன்வைத்திருக்கின்றார்கள். இந்த விடயங்களையும் கவனத்தில் கொண்டதாக, இந்த உரையாடல் முன்னெடுக்கப்பட வேண்டும்.

### க.பொ.த உயர்தர பரீட்சை

நமது மாணவர்களின் உளவியலில் தாக்கங்களை ஏற்படுத்துகின்ற மற்றைய தேசிய ரீதியிலான பரீட்சையாக க.பொ.த உயர்தர பரீட்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது. நமது நாட்டைப் பொறுத்தவரையில், இப்பரீட்சையானது அதிமுக்கியத்துவமிக்கதாகவும், மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற பரீட்சையாகவும் இருக்கின்றது. இப்பரீட்சையின் பெறுபேறுகள், மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி, பிற உயர் கல்வி நிலையங்களுக்கான அனுமதி, தொழில் வாய்ப்பு போன்ற பல விடயங்களை தீர்மானிக்கின்ற அளவுகோலாக அமைவதால், இப்பரீட்சை மிகப் பெரும் முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கின்றது. பெரும்பாலான மாணவர்கள் தமது உயர்கல்விக்காகவும், தொழில் வாய்ப்புகளுக்காகவும் அரசாங்கத்திலேயே தங்கியிருப்பதால், இவற்றில் நுழைவதற்காக வழங்கப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்டுள்ள வாய்ப்புகளுக்காக பெரும் போட்டியை சந்திக்க வேண்டியவர்களாக உள்ளார்கள். பரீட்சை எழுதுகின்ற மொத்த மாணவர்களில் கிட்டத்தட்ட **ஆறு வீதமானவர்களும்** (06%), பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் கிட்டத்தட்ட **பதினாறு வீதமானவர்களுமே** (16%) பல்கலைக்கழகங்களில் நுழைவதற்கான வாய்ப்புகளைப் பெறக் கூடியதாக இருப்பதால், ஒவ்வொரு மாணவரும் பிற மாணவர்களுடன் கடுமையாகப் போட்டியிட வேண்டியவராக உள்ளார். க.பொ.த உயர்தர வகுப்பில் கற்கின்ற இரண்டு வருட காலத்திலும், அதன் பின்னர் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படுகின்ற காலத்திலும், மாணவர்கள் மிகுந்த உள அழுத்தங்களுக்கு உள்ளாகின்றார்கள். பரந்த பாடப்பரப்புகளைக் கொண்ட பிரதானமான மூன்று பாடங்களில் சித்தியடைவது மட்டுமின்றி, தனது மாவட்டத்தில் உள்ள பிற மாணவர்களிலும் பார்க்க அதிகூடிய சித்திகளைப் பெற வேண்டும் என்ற கட்டாய நிலையும் இவர்களை அழுத்தங்களுக்கு உள்ளாக்குகின்றன. மூன்று பாடங்களிலும் அதிதிறமைச் சித்திகளை (A) பெற்ற மாணவர்களுக்குக் கூட, பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத நிலை காணப்படுவதால், பெறுபேறுகளின் பின்னரும் கூட, மாணவர்கள் உள அழுத்தங்களுக்குள்ளாகின்றவர்களாக இருக்கின்றார்கள்.

பல்கலைக்கழகங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மாணவர்களை அனுமதிக்க வேண்டியுள்ளது என்ற கட்டாய நிலைமையின் காரணமாக, வினாத்தாள்களை கடினமாக்குகின்ற உபாயம் நமது பரீட்சை முறையில் பின்பற்றப்படுவதுபோல் தெரிகின்றது. ஒவ்வொரு வருடமும் பரீட்சை நடைபெறுகின்ற காலத்தில், இம்முறை 'மொடல் மாற்றப்பட்டுள்ளது', 'பேப்பர் கஷ்டம்' போன்ற வார்த்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களினால் கவலையுடன் உச்சரிக்கப்படுவதை நாம் கேட்க முடிகின்றது. கணிசமான வினாக்கள் நேரடியாக அமைவதற்குப் பதிலாக, சுற்றி வளைத்த முறையில் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு அடிக்கடி 'மொடலை' மாற்றுவதாலும், வினாக்களை கடினமாக்குவ தாலும், சுற்றி வளைத்துக் கேட்பதாலும் மாணவர்களின் அறிவு மட்டத்தையும், சிந்தனை முறையையும் வளர்க்க முடியும் என்று ஒருவர் விவாதிக்கலாம். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாணவர்கள் இவ்வாறு அறிவு ரீதியாகவும், சிந்தனை ரீதியாகவும் தம்மை வளர்த்துக் கொள்பவர்களாகவும் இருக்கலாம். ஆனால் பெரும்பாலான மாணவர்களுக்கு இது குழப்பத்தையும், சிக்கல்களையும் ஏற்படுத்து வதாக அமைந்திருக்கின்றது. அதேநேரத்தில், இத்தகைய வினாக்களின் காரணமாக பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் பரீட்சையில் தோல்வியடைகின்றார்கள் என்ற உண்மை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாக உள்ளது. பதின்மூன்று வருடங்களாக கற்று, பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்கள், அதன் இறுதிப் பெறுபேறாக மூன்று பாடங்களிலும் தோல்வியடைவது, அல்லது ஒன்று, இரண்டு பாடங்களில் தோல்வியடைவது என்பது, அவர்களின் எதிர்காலத்தை இருட்குகைக்குள் தள்ளுவதாக அமைகின்றது. ஒருவர் தான் எழுதிய மூன்று பிரதான பாடங்களில் ஒன்றிலாவது சித்தியடையத் தவறும்போது, அவர் அப்பரீட்சையில் **தோல்வியடைந்து விட்டார்** என்றே அர்த்தமாகின்றது. அதன் பின்னர், அவரால் உயர்கல்வியைக் கற்க முடியாது போவது மட்டுமல்ல, அரசாங்கத்துறை சார்ந்த தொழில் வாய்ப்புகளைப் பெறுவதும் கூட சாத்தியமற்றதாகின்றது.

இந்நிலை, பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் எதிர்கால வாழ்வைக் கேள்விக் குறியாக்கியுள்ளது. பரீட்சையில் தோல்வியடைந்த மாணவரர்கள் மெல்லக் கற்கும் மாணவர்களோ அல்லது எதிர்பார்க் கப்பட்ட அடைவு மட்டத்தைப் பெறாத மாணவர்களோ அல்ல. மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் இத்தகைய பண்புகளைக் கொண்டவர்களாக இருக்கலாம். ஆனால், பெரும்பாலான மாணவர்கள், உயர்தர வகுப்புகளில் கற்கின்ற காலங்களில் போதுமான அடைவு மட்டத்தை வெளிப்படுத்தியவர்களாக இருந்திருக்கின்றார்கள். இவர்கள் ஒரு பாடத்தில், அல்லது இரண்டு பாடங்களில் அல்லது மூன்று பாடங்களிலும் சித்தியடையத் தவறியமைக்கான பிரதான காரணிகளில் ஒன்றாக, வினாத்தாள்களின் கடின நிலையும், 'மொடல்' மாற்றப்படுவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகின்ற குழப்ப நிலையும் காரணமாக அமைகின்றன. வினாத்தாள்களின் கடின நிலையும், 'மொடல்' மாற்றப்படுவதும் முக்கியமாக மாணவர்களின் நுண்ணறிவை சோதிப்பதை அடிப்படை யாகக் கொண்டிருக்கின்றன. ஒருபாடம் தொடர்பான அறிவும், நுண்ணறிவும் வெவ்வேறான விடயங்கள். குறித்த ஒரு பாடத்தில் ஆழ்ந்த அறிவைக் கொண்டிருக்கின்ற ஒரு மாணவர், நுண்ணறிவு ஈவு அதிகம் கொண்டவராக இருப்பார் என்று எதிர்பார்க்க முடியாது. அவரிடம் அப்பாடம் தொடர்பில் நேரடியாக வினாக்களைக் கேட்கும்போது, அவரால் சிறப்பாகவும் ஆழமாகவும் அவ்வினாக்களுக்கு பதிலளிக்க முடியும். அதேவேளை நுண்ணறிவு சார்ந்த வினாக்களுக்கு அவர் விடையளிப்பதில் சிரமத்தை எதிர்கொள்ளலாம்.

வளர்ச்சி அடைந்த நாடுகளில், பரீட்சை முறைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அங்கு பரீட்சைக்கான நேரங்கள் குறைக்கப்பட்டுள்ளன. கட்டுரை வினாக்கள் குறைக்கப்பட்டுள்ளன, அல்லது முற்றாக இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. இவற்றுக்குப் பதிலாக, பல்தேர்வு வினாக்களும், கட்டமைப்பு வினாக்களும் அதிகளவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம்மாற்றங்கள், அடிப்படையில் குறித்த பாடம் தொடர்பாக மாணவர்கள் பெற்றிருக்கின்ற **அறிவை நேரடியாக பரீட்சிப்பதை** நோக்காகக் கொண்டிருக்கின்றன. சுருக்கமாகக் கூறினால், அந்நாடுகளில், பரீட்சையானது மேலும், மேலும் எளிதாக்கப்பட்டு வருகின்றது. எனினும் இத்தகைய எளிதாக்கமானது, அந்த மாணவர் களின் அறிவு மட்டத்திலோ அல்லது அந்த நாடுகளின் ஒட்டுமொத்த கல்வி வளர்ச்சியிலோ பாதகமான விளைவுகளை ஏற்படுத்தவில்லை. மாறாக, இது மாணவர்களிடையே உற்சாகத்தையும், அதிகமாகக் கற்கும் ஆர்வத்தையும் தூண்டுவதாக உள்ளது. இந்த இடத்தில் நாம் தென்கொரியாவை ஒரு சிறந்த உதாரணமாக முன்வைக்க முடியும்.

தென்கொரியாவில், நமது நாட்டின் க.பொ.த சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சைகளை ஒத்த பரீட்சைகள், ஒரே நாளில் நடத்தி முடிக்கப்படுகின்றன. காலை எட்டு முப்பது மணிக்கு ஆரம்பமாகின்ற பரீட்சைகள், பிற்பகல் நான்கு முப்பது மணியுடன் நிறைவடைகின்றன. அங்கு பெரும்பாலான பாடங்களுக்கான வினாத்தாள்கள் ஒரு மணித்தியாலத்திற்குட்பட்ட நேரத்திற்குள் முடிவடையும் வகையில் அமைக்கப்படுகின்றன. கட்டுரை வினாக்கள் முற்றாக நீக்கப்பட்டு விட்டன. இருபது வருடங்களுக்கு முன்னர், கல்வியிலும், பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமையிலும் பின்தங்கியிருந்த தென்கொரியா, இன்று கல்வியில் சீனாவுக்கு அடுத்தநிலையில் இரண்டாம் இடத்தை பெற்றிருக்கின்ற நாடாகவும், பொருளாதார ரீதியில் பல மேற்கத்தைய நாடுகளை முந்தி விட்ட நாடாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது. மிகப் பிரபலமான அமெரிக்க இலத்திரனியல் கம்பனிகளுடன் போட்டியிட்டு, முன்னிலை பெற்று வருகின்ற நாடாக இன்று தென்கொரியா மாறி வருகின்றமைக்கு, செயன்முறைத்தன்மை கொண்டதாகவும் எளிதானதாகவும், ஆழமான தாகவும், விரிவானதாகவும் மாற்றப்பட்டுள்ள அந்நாட்டு பாடவிதானங் களும், பரீட்சை முறைகளும் பிரதான காரணிகளாக அமைந்திருக்கின்றன.

இந்த இடத்தில் க.பொ.த. உயர்தர பாட விதானத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள பொது ஆங்கிலம் (General English) குறித்தும், அதற்கான பரீட்சை குறித்தும் நாம் அக்கறை கொள்ள வேண்டியுள்ளது. **க.பொ.த. (உ.த) பாடவிதானத்துள் அடங்கியுள்ள பாடங்களில், மாணவர்களுக்கு இலவச பாடநூல் வழங்கப்படுகின்ற பாடமாக பொது ஆங்கிலம் மட்டுமே அமைந்திருக்கின்றது.** வருடந்தோறும் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்பட்டு, வழங்கப்படுகின்ற இந்த பாட நூலும், பொது ஆங்கில பாடமும் எதிர்பார்த்த பலனை மாணவர்களுக்கும், நாட்டிற்கும் வழங்குகின்றதா என்ற பரிசீலனை அவசியமாகின்றது. க.பொ.த உயர்தரத்திற்குரிய ஒவ்வொரு பாடத்துறையிலும் மூன்று பிரதான பாடங்களை (Core Subjects) படித்து, அவற்றில் பெறக்கூடிய பெறுபேறுகளின் அடிப்படையிலேயே பல்கலைக்கழகம் மற்றும் பிற உயர்கல்வி வாய்ப்புகளை பெற வேண்டிய கட்டாய நிலையில் உயர்தர வகுப்பு மாணவர்கள் இருக்கின்றார்கள். நமது பரீட்சை முறையின் கடினமான நிலைமையின் காரணமாக, இம்மூன்று பாடங்களையும் படிப்பதிலேயே தமது முழு நேரத்தையும் மாணவர்கள் செலவிட்டு வருகின்றார்கள்.

இந்நிலையில், இன்றுவரை உயர்கல்விக்கான அனுமதியிலோ, அல்லது தொழில் வாய்ப்புகளைப் பெறுவதிலோ **எவ்விதத்திலும் கவனத்தில் கொள்ளப்படாததாக** அமைந்துள்ள பொது ஆங்கில பாடத்தைக் கற்பதில், கிட்டத்தட்ட முழுமாணவர்களுமே அக்கறை யற்றவர்களாக இருக்கின்றார்கள். மாணவர்களின் இத்தகைய அக்கறையற்ற நிலைக்கு, பொது ஆங்கில பாடத்தின் உள்ளடக்கமும், அதற்கான பொதுப் பரீட்சையும் இன்னொருவகையில் முக்கிய காரணிகளாக அமைந்திருக்கின்றன. நமது நாட்டைப் பொறுத்தவரையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த சாதாரணதர ஆங்கில பாடத்தில் மாணவர்கள் சித்தியடைகின்ற வீதம்,முழுநாட்டிலும்,ஐம்பதுவீதத்திற்குக்குறைவாகஇருப்பதோடு,வலய ரீதியில் இவ்வீதம் மிகக் கடுமையான வேறுபாட்டைக் கொண்டதாகவும் இருக்கின்றது. 2012 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதர பரீட்சைப் பெறுபேறுகளின்படி, ஆங்கில பாடத்தில், கிட்டத்தட்ட நாற்பத்தியாறு (46) வீதமான மாணவர்களே தேசிய ரீதியில் சித்தியடைந்திருக்கின்றார்கள். மொத்தமுள்ள இருபத்தைந்து (25) கல்வி மாவட்டங்களில், பத்தொன்பது மாவட்டங்களைச் சேர்ந்த ஐம்பது வீதத்திற்கும் கூடுதலான மாணவர்கள் ஆங்கில பாடத்தில் சித்தியடையாததோடு, பதினேழு (17) வலயங்களில், எழுபத்தைந்து (75) வீதத்திற்கும் அதிகமான மாணவர்களும், ஒரு கல்வி வலயத்தில் தொன்னூற்றியாறு (96) சதவீதமான மாணவர்களும் ஆங்கில பாடத்தில் சித்தியடையாதவர்களாக இருந்திருக்கின்றார்கள்.

(பார்க்க: அட்டவணைகள்)

# ஆங்கிலம்

## பரீட்சை மதிப்பீடு: 2012

### தேசிய ரீதியிலான பெறுபேறுகள்:

| தோற்றியோர் | பாடசாலை பரீட்சார்த்திகள் | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் |
|---|---|---|
| 405972 | 332524 | 73448 |
| சித்தியடையாதோர் (W) | 53.63 வீதம் | 40.82 வீதம் |

**ஆதாரம்:** ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்.

### மாவட்ட மட்ட பெறுபேறுகள்:

| மாவட்டம் | சித்தியடையாதோர் (W) |
|---|---|
| காலி | 49.52 |
| மாத்தறை | 52.40 |
| அம்பாந்தோட்டை | 56.75 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மாத்தளை | 57.40 |
| நுவரெலியா | 63.96 |
| யாழ்ப்பாணம் | 62.20 |
| கிளிநொச்சி | 85.92 |
| மன்னார் | 64.93 |
| வவுனியா | 68.05 |
| முல்லைத்தீவு | 88.85 |
| மட்டக்களப்பு | 61.54 |
| அம்பாறை | 58.85 |
| திருகோணமலை | 63.24 |
| புத்தளம் | 54.05 |
| அனுரதபுரம் | 62.75 |
| பொலன்னறுவை | 67.63 |
| பதுளை | 61.55 |
| மொனராகல | 72.37 |
| இரத்தினபுரி | 61.97 |
| கேகாலை | 52.69 |

**வலய மட்ட பெறுபேறுகள்:**

| வலயம் | சித்தியடையாதோர் (W) |
|---|---|
| வில்கமுவ | 82.84 |
| தெல்தெனிய | 76.00 |
| திம்புலகல | 78.10 |
| தீவகம் | 86.81 |
| கிளிநொச்சி | 85.92 |
| மடு | 78.65 |
| வவுனியா - வடக்கு | 86.77 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முல்லைத்தீவு | 86.11 |
| துணுக்காய் | 93.90 |
| கல்குடா | 82.64 |
| பட்டிருப்பு | 77.46 |
| மட்டக்களப்பு - மேற்கு | 81.55 |
| திருகோணமலை - வடக்கு | 75.16 |
| கெப்பித்திகொல்லாவ | 76.61 |
| நிவித்திகல | 75.37 |
| மஹியங்கனை | 76.81 |
| மஹாஓயா | 76.40 |
| வலப்பன | 70.17 |
| வலிகாமம் | 70.69 |
| தென்மராட்சி | 65.90 |
| சம்மாந்துறை | 70.72 |
| மூதூர் | 73.39 |
| கந்தளாய் | 71.83 |
| கலன்பிதுனுவேவ | 73.44 |
| பசறை | 73.52 |
| மொனராகல | 73.76 |
| வெல்லவாய | 73.59 |

பாடசாலை ரீதியாக மதிப்பீடு செய்கின்றபோது, க.பொ.த சாதாரணதர ஆங்கில பாடத்தில் ஒருவருமே சித்தியடையாத மாணவர்களைக் கொண்ட பல பாடசாலைகளை நாம் அடையாளம் காண முடியும். இவ்வாறு, **க.பொ.த (உ.த) வகுப்பில் கல்வி பயில்வதற்கு தொடங்குகின்ற மாணவர்களில் கிட்டத்தட்ட 60 தொடக்கம் 95 வீதமானவர்கள் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தியடையாதவர்களாக இருக்கின்றார்கள்.** இத்தகைய சூழலில், இதே மாணவர்கள் மிகக் கடினமாக அமைந்ததும், தமது உயர்கல்வி வாய்ப்பிற்கு (அல்லது தொழில் வாய்ப்புகளைப் பெறுவதில்) அவசியமற்றதுமான பொது ஆங்கில பாடத்தை ஆர்வமாக கற்பார்கள் என்று எதிர்பார்க்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. இப்பாடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடப்பரப்புகளையும், விடயதானங்களையும் விளங்கிக் கொள்வதற்கு உயர்ந்த ஆங்கில அறிவு மட்டம் அவசியமாகின்றது. ஆங்கிலத்தில் வாசிக்கவே முடியாதவர்களாக கணிசமான மாணவர்கள் இருக்கின்றார்கள் என்ற எதார்த்தத்தை புரிந்து கொள்வோமாயின், பொது ஆங்கில பாடத்தைக் கற்பதில் அவர்கள் எத்தகைய ஆர்வமின்மையை வெளிப்படுத்துவார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

இதை விட, பொது ஆங்கிலம் தொடர்பான ஆர்வமின்மைக்கான இன்னுமொரு காரணியாக, அதற்கான வினாத்தாள்கள் அமைந்திருக் கின்றன. இரண்டு பகுதிகளாகவும், ஐந்தரை மணித்தியாலங்களில் விடையளிக்கப்பட வேண்டியதாகவும் தயாரிக்கப்படுகின்ற இந்த வினாத்தாள்களில் உள்ளடங்கியுள்ள வினாக்களைப் புரிந்து கொள்வ தற்கும், அவற்றிற்கான விடைகளை எழுதுவதற்கும் ஒருவருக்கு மிக உயர்ந்த ஆங்கில அறிவு அவசியமாகின்றது. சில வருடங்களுக்கு முன்னர் பல மாணவர்கள் பொது ஆங்கிலப் பாடத்திற்குத் தோற்றாம லேயே இருந்தார்கள். எனினும், பின்னர் அப்பாடத்திற்குத் தோற்றுவது கட்டாயமாக்கப்பட்டதனால், இப்போது சகல மாணவர்களும் அப்பாடத் திற்குத் தோற்றுகின்றார்கள். இருந்தபோதிலும், இப்பாடத்திற்கான பரீட்சை நேரத்தில் பெரும்பாலான மாணவர்கள் மேசைகளில் உறங்குகின்றார்கள் என்பதும், மாணவர்கள் சித்தியடைகின்ற வீதம் மிகக் குறைவானதாக இருக்கின்றது என்ற உண்மையும் இந்தப் பாடமும், இதற்கான பரீட்சையும், இதற்கென செலவிடப்படுகின்ற கோடிக்கணக்கான ரூபாய் பணமும் எவ்வளவு தூரம் பயன்மிக்கதாக உள்ளன என்பது குறித்த பரிசீலனை அவசியம் என்பதை எமக்கு உணர்த்துகின்றன. பொது ஆங்கில பாடத்தின் பாடவிதானத்தை மாற்றியமைப்பதோடு, பல்கலைக்கழக தெரிவுக்காக அப்பாடத்தில் குறைந்த பட்ச புள்ளிகள் பெறுவதை அவசியமாக்குவதனாலும், ஆங்கில ஆசிரியர் பயிற்சிக்கென கல்விக் கல்லூரிக்கு தெரிவு செய்யப்படல், வேலை வாய்ப்பு போன்றவற்றில் அப்பாடத்திலான பெறுபேற்றை பிரதானமாக்குவதினாலும், அப்பாடத்தின் மீதான மாணவர்களின் ஆர்வத்தை தூண்ட முடியுமா என்ற பரிசீலிப்பும் அவசியமாகின்றது.

நமது நாட்டில், ஒவ்வொரு தேசிய மட்டப் பரீட்சையின் பெறுபேறுகளும் வெளியிடப்பட்டதன் பின்னர், கணிசமான மாணவர்கள் மீள்மதிப்பீட்டிற்கு விண்ணப்பிப்பது என்பது ஒரு வழமையான நிகழ்வுபோன்று அமைந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கின்றது. இவ்வாறு விண்ணப்பித்த மாணவர்களில், ஒரு தொகையானோரின் **பெறுபேறுகளில் மாற்றங்கள் ஏற்படுவதும் இடம்பெறுகின்றது.** இது, நமது நாட்டில் விடைத்தாள் மதிப்பீடானது, துல்லியமானதாக இல்லை என்பதை சுட்டுவதாக அமைந்திருக்கின்றது. போட்டித்தன்மை மிகுந்ததாகவும், மாணவர்களின் கடுமையான முயற்சியைக் கோருவதாகவும் அமைந்திருக்கின்ற இத்தகைய பரீட்சைகளில் விடைத்தாள் மதிப்பீடானது, துல்லியமற்றதாக இருப்பது கரிசனையை வேண்டுவதாக உள்ளது. இவ்வாறு துல்லியமற்ற நிலை ஏற்படுவதற்கு, எதிர்பார்க்கப்படுகின்ற விடைகளின் தன்மையும், மதிப்பீட்டாளர்களின் மாறுந்தன்மையான மதிப்பீடுகளும் காரணமாகின்றன. நமது பரீட்சைகளில் பெரும்பாலான பாடங்களின் வினாக்கள், ஒன்றுக்கு மேற்பட்ட பத்திகளால் எழுதப்பட வேண்டிய நீண்ட விடைகளை எதிர்பார்ப்பவையாக அமைகின்றன. இவ்வாறு எழுதப்படுகின்ற விடைகள், ஒருபோதும் ஒருசீரானவையாக அமைய முடியாது. மாணவர்களின் மொழியாற்றல், எழுத்தாற்றல், கற்பனை வளம் போன்ற பல காரணிகளின் தாக்கங்களின் விளைவாக ஒவ்வொரு விடையும், வெவ்வேறு அளவுகளிலும், வடிவங்களிலும் அமைந்திருப்பது தவிர்க்க முடியாதது. அத்துடன், விடைகள் எழுதப்பட்டுள்ள எழுத்துக் களின் அளவும், வடிவமும் கூட பரந்தளவிலான வேறுபாடுகளைக் கொண்டவையாக இருக்கின்றன. அழகான எழுத்துக்களிலும், நேர்த்தியாகவும் எழுதப்படுகின்ற விடைகளினால் மதிப்பீட்டாளர்கள் கவரப்படுவதும், மாறாக, அழகற்றதாகவும், ஒழுங்கு குலைந்ததாகவும் எழுதப்படுகின்ற விடைகளினால் கவரப்படாததோடு, அத்தகைய விடைகளின் மீது அக்கறையற்ற தன்மையை வெளிப்படுத்துவதும் வினாத்தாள் மதிப்பீட்டு நிலையங்களில் அவதானிக்கக் கூடிய அனுப வமாக இருக்கின்றது. அழகின்றியும், ஒழுங்குகுலைந்தும் எழுதப்படுகின்ற விடைகளை, கெட்டித்தனமின்மையின் வெளிப்பாடாகக் கொள்கின்ற மனப்பாங்கும், சில மதிப்பீட்டாளர்களிடம் காணப்படுகின்றன. மதிப்பீட்டு பணியின் ஆரம்ப நாட்களில் உற்சாகமாகவும், கவனத்தோடும் விடைகளை வாசித்து, புள்ளியிடுகின்ற நிலை, இறுதிநாட்களில், கணிசமான மதிப்பீட்டாளர்களிடம் படிப்படியே அகன்று விடுகின்ற நிலையும் அவதானிக்கப்படக் கூடியதாக உள்ளது. சில பாடங்களைப் பொறுத்தவரை, எழுதப்பட்டுள்ள விடைத்தாள்களின் எண்ணிக்கையைக் கொண்டு, அப்பரீட்சார்த்தியின் அறிவை எடைபோடுகின்ற நிலைப பாட்டைக் கொண்டவர்களாகவும் சில மதிப்பீட்டார்கள் இருக்கின் றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எல்லாமே, மதிப்பீட்டாளர்களின் அகச்சார்பு நிலையையும், அவர்களின் மதிப்பீட்டில் உள்ள மாறுந்தன்மையையும் வெளிப்படுத்து வனவாக உள்ளன.

ஈற்றில், இவற்றினால் ஏற்படுகின்ற பாரிய விளைவுகளைச் சுமப்பவர்களாக மாணவர்கள் மாறுகின்றார்கள். தாம் சிறப்பாக விடைகளை எழுதியும், உரிய பெறுபேறுகள் கிடைக்கவில்லை என்ற உளஅழுத்தத்திற்கு அவர்கள் ஆளாகின்றார்கள். பல நாடுகளில், பரீட்சைப் பெறுபேறுகள் குறியீடுகளினால் மட்டுமன்றி, மாணவர்கள் பெற்ற புள்ளிகளாலும் வெளியிடப்படுகின்றன. ஆனால் நமது நாட்டில், பாடசாலை சார்ந்த பரீட்சைப் பெறுபேறுகள் குறியீடுகளினால் மட்டுமே வெளியிடப்படுகின்றன. அதாவது, A, B, C, S, F என்ற குறியீடுகளைக் கொண்டதாகவே பெறுபேறுகள் வெளிவருகின்றன. எனினும் இக்குறி யீடுகள் கணிசமான வீச்செல்லைகளைக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, S என்பது பொதுவாக, 35 தொடக்கம் 49 வரையிலான புள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றது. ஒரு மாணவரைப் பொறுத்தவரை, அவர் தான் எடுத்துள்ள S என்பது இந்த வீச்செல்லைக்குள் எந்தப் புள்ளியைக் குறிக்கின்றது என்பதை அறியாதவராகவே இருக்கின்றார். உண்மையில் ஒவ்வொரு பாடத்திலும் தாம் எத்தனை புள்ளிகளைப் பெற்றிருக்கிறோம் என்பதை மாணவர்கள் அறிந்து கொள்ளும்போது, அது அவர்களின் உளநிலையில் சாதகமான தாக்கங்களையும், உற்சாகத்தையும் ஏற்படுத்துவதாக அமையும். இது, பல மாணவர்கள் மீள்மதிப்பீட்டிற்காக விண்ணப்பிக்க வேண்டிய அவசியத்தையும் இல்லாமலாக்கச் செய்யும். இவ்வகையில், பெறுபேறுகளில் குறியீடு களுடன், அவற்றிற்கான புள்ளிகளையும் இணைத்து வெளியிடுவது குறித்து நாம் அக்கறை கொள்ள வேண்டும்.

எனவே, நமது நாட்டில் அவதானிக்கப்படுகின்ற கவலைக்குரியதான அனுபவங்களையும், பிற நாடுகளில் அவதானிக்கப்படுகின்ற உற்சாக மூட்டுவதாக அமைந்துள்ள அனுபவங்களையும் கவனத்தில் கொண்டு, நமது பரீட்சை முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். பதின்மூன்று வருடங்கள் கற்று, பாடசாலையை விட்டு மாணவர்கள் வெளியேறுகின்றபோது, குறைந்தபட்சம் மூன்று பிரதான பாடங்களிலும் அவர்கள் சித்தியடைந்திருக்கின்றார்கள் என்ற உற்சாகமூட்டும் நிலையை அடையும் வகையில் நமது பரீட்சைகள் மாற்றப்படுவது குறித்து, தீவிரமாக சிந்திக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய கட்டத்தை நாம் அடைந்திருக்கிறோம். 'பிள்ளைநேயப் பாடசாலை' என்ற கருத்தாக்கம், ஆரம்ப வகுப்பு மாணவர்களுடனோ அல்லது மாணவர்கள் பாடசாலையில் கற்கும் காலத்துடனோ மட்டுப்படுத்தப்படக் கூடியது அல்ல. இக்கருத்தாக்கம், மாணவர்கள் தமது பாடசாலைக் காலம் முடிவடைந்து வெளியேறும் போதும் மகிழ்ச்சியுடனும், நம்பிக்கையுடனும் உலகை எதிர்கொள்ளத் தயாரா வதையும் உள்ளடக்கியது. இவ்வகையில் நமது பரீட்சை முறையும், அதன் பெறுபேறுகளும் மாணவர்கள் இறுதியாக வெளியேறும்போது, அவர்களுக்குத் துணையாக இருக்கும்வகையில் மாற்றப்படுவது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

## 8 தண்டனைகள்

சட்டரீதியாகவும், தாபன பிரமாணங்களின்படியும் மாணவர்களை தண்டித்தல் என்பது தடைசெய்யப்பட்டுள்ளது. தண்டித்தல் என்பது, பிரதானமாக பௌதிகரீதியான தண்டனை (Physical Punishment / Corporal Punishment ) மற்றும் வார்த்தைகள் மூலமான தண்டனை (Verbal Punishment) என வகைப்படுத்தப்பட்டுள்ளது. சரியாக நோக்கும்போது, இவற்றில் எந்த ஒரு முறையின் மூலமாகவும் மாணவர்களைத் தண்டிக்க முடியாது. எனினும், பாடசாலைகளில் மாணவர்களைத் தண்டித்தல் என்பது இன்னமும் பெருவழக்காக நடைமுறையில் உள்ளது. அடித்தல் என்பது ஓரளவுக்கு குறைந்திருக்கின்றபோதிலும், பிற வகையான தண்டனைகள் மிகப் பரவலாக பாடசாலைகளில் இடம்பெறுகின்றன. உதாரணமாக மாணவர்களை நிற்க வைத்தல், முழங்காலில் வைத்தல், கற்கள் மற்றும் புற்களைப் பொறுக்கச் செய்தல், கடுமையான வார்த்தைகளால் பேசுதல் போன்றன. சில சந்தர்ப்பங்களில், ஆசிரியர்கள் மாணவர்களின் பலவீனங்களை முன்னிறுத்தி, அவர்களை கிண்டல் செய்வதோடு, மாணவர்களின் குடும்பங்கள் மற்றும் பரம்பரைகளை சொல்லி, தூஷிப்பவர் களாகவும் இருக்கின்றார்கள். உண்மையில், பௌதிகரீதியிலான தண்டணைகளிலும் பார்க்க, இத்தகைய வார்த்தைகள் மூலமான தண்டனைகள் மாணவர்களின் உளநிலையிலும், அவர்களின் கற்றல் செயற்பாடுகளிலும் ஆழமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. இவற்றில் கணிசமான தண்டனைகள், மாணவர்கள் நேரடியாக காரணமாகாத நிகழ்வுகளுக்காகவும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு வராத மாணவர்கள், மற்றும் பிந்தி வருகின்ற மாணவர்களுக்கு,பாடசாலை ஆரம்பிக்கும்நேரத்திலேயே தண்டனைகள் வழங்கப்படுகின்றன. சில பாடசாலைகளில், இத்தகைய மாணவர்கள், முதலாம், இரண்டாம் பாடங்கள் முடியும் வரை, வகுப்புகளுக்குச் செல்லாமல் நிற்க வேண்டியவர்களாகவோ, அல்லது குறித்த சில வேலைகளைச் செய்ய வேண்டியவர்களாகவோ இருக்கின்றார்கள். இது இத்தகைய மாணவர்களை கடுமையாக பாதிக்கின்றது. பாடசாலை தொடங்கும் நேரத்தில் வழங்கப்படுகின்ற தண்டனைகளினால், தண்டனை பெற்ற மாணவர்கள் அன்று முழுவதும் பாடங்களில் கவனம் செலுத்த முடியாத அளவுக்கு உளப்பாதிப்பிற்கு உள்ளாகின்றார்கள். அதேநேரத்தில், முந்திய நாட்களில் பாடசாலைக்கு வராத மாணவர்கள், முதலாம், இரண்டாம் பாடங்கள் முடியும்வரை வகுப்புகளுக்கு அனுமதிக்கப்படாதிருப்பதால், அவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்க முடியாததன் காரணமாக, ஏற்கனவே கற்க முடியாதிருந்த நிலையோடு, இப்போது பாடசாலைக்கு சமூகமளித்தும் கற்க முடியாத நிலைக்கு ஆளாகின்றார்கள். பொதுவாக பாடசாலைகளில், முதலாம், இரண்டாம் பாடங்கள் கணிதம், முதலாம் மொழி போன்ற முக்கிய பாடங்களாக இருப்பதால், இவ்வாறான தண்டனைகள் மூலமாக, இந்த மாணவர்கள் அத்தகைய பாடங்களை தொடர்ச்சியாக கற்க முடியாதவர்களாக ஆகின்றார்கள். இதனால், ஏற்கனவே அப்பாடங்களில் பலவீனமான நிலையில் இருக்கக் கூடிய மாணவர்கள், மேலும் பலவீனமான நிலைக்கு ஆளாகின்றார்கள்.

மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்காமை, பிந்தி வருதல், மற்றும் வேறு காரணங்களுக்காகவும், அவர்களை வீட்டிற்கு அனுப்புகின்ற தண்டனையும் சில பாடசாலைகளில் வழங்கப்படுகின்றன. (இது நேரடியாக வீட்டிற்கு அனுப்புவதாலோ, அல்லது குறித்த நேரத்தின் பின் பாடசாலை நுழைவாயில் மூடப்படுவதாலோ இடம் பெறலாம்) இது ஒருபுறம், அம்மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள், மேலும் கடுமையாக பாதிக்கப்படுகின்ற நிலையை உருவாக்குகின்றது. மறுபுறம், இது மாணவர்கள் தவறான வழிகளில் செல்வதற்கும், துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதற்கும்கூட காரணமாகின்றது. பல சந்தர்ப்பங்களில் வீட்டிற்கு அனுப்பப்படுகின்ற மாணவர்கள், பெற்றோர் மீதான பயத்தின் காரணமாகவோ, அல்லது வேண்டுமென்றோ தமது வீடுகளுக்குச் செல்வதில்லை. பதிலாக நண்பர்களின் வீடுகளுக்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது சினிமா, பீச், ஒதுக்குப்புறமான இடங்கள் போன்றவற்றிற்கோ செல்கின்றார்கள். மாணவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் பாடசாலை முடியும்வரையிலான நேரத்தில், மதுபானம், புகைத்தல், போதை பாவனை போன்ற கேடு விளைவிக்கக் கூடிய பழக்கங்களுக்கு ஆளாகின்ற நிலை உருவாகின்றது. இவ்வாறான பழக்கத்திற்காளான மாணவர்கள், திட்டமிட்டே பாடசாலைக்கு பிந்தி வருபவர்களாக இருக்கின்றார்கள். மாணவிகளை பொறுத்தவரை, இத்தண்டனை அவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாக்கப்படுகின்ற நிலைக்கும் இட்டுச் செல்வதாக மாறிவிடக் கூடிய அபாயத்தைக் கொண்டிருக்கின்றது.

மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்காமைக்கும், பிந்தி வருவதற்கும், மாணவர்களை மீறிய பல விடயங்கள் காரணமாகின்றன. நோய், வறுமை, வீட்டிலுள்ள பிறரை பராமரிக்க வேண்டிய நிலை, சீருடைகளிலும், பாதணிகளிலும் ஏற்படக் கூடிய அழுக்குகள் மற்றும் கிழிசல்கள், போக்குவரத்தில் ஏற்படுகின்ற தாமதங்கள் போன்ற பல்வேறு காரணிகளினால் மாணவர்களின் பாடசாலை வரவின்மையும், தாமதங்களும் நிகழ்கின்றன. இக்காரணிகளைப் புரிந்து கொள்ளாமல், அவர்களைத் தண்டிப்பதானது, ஏற்கனவே இத்தகைய காரணிகளினால் பாதிக்கப்பட்டுள்ள அவர்களின் மீது, மேலும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்துவதாக அமைகின்றது. இவற்றை விட, குறிப்பிட்ட விடயங்களுக்காக பணம் செலுத்தத் தவறுகின்ற மாணவர்களும், பாடசாலைகளில் இடம்பெறுகின்ற கூட்டங்களுக்கு சமூகளிக்காத பெற்றோர்களின் பிள்ளைகளும் தண்டிக்கப்படுகின்றார்கள்.

மாணவர்கள் பணம் செலுத்தத் தவறுகின்றமைக்கு, தெளிவான பொருளாதாரக் காரணங்கள் இருக்கின்றன. கிழக்கு மாகாணமானது, வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களை அதிகம் கொண்ட மாகாணங்களில் ஒன்றாக இருக்கின்றது. பெண்தலைமைக் குடும்பங்களை அதிகம் கொண்டிருக்கின்ற மாகாணமாகவும், வேலையற்றோரை அதிகமாகக் கொண்டிருக்கின்ற மாகாணமாகவும் இது இருக்கின்றது.

| | **வேலையற்றோர் வீதம்** |
|---|---|
| இலங்கை | 4.3 |
| கிழக்கு மாகாணம் | 4.9 |
| அம்பாறை | 6.00 |
| மட்டக்களப்பு | 3.9 |
| திருகோணமலை | 4.3 |

ஆதாரம்: Sri Lanka: Labour Force Servey - Annual Report - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, குறிப்பிட்ட தேவைகளுக்காக மாணவர்களிடம் பணம் அறவிடப்படும்போது, அவற்றை உடனடியாக செலுத்த முடியாத நிலையில்கணிசமானஎண்ணிக்கையிலானமாணவர்கள்,கிழக்குமாகாண பாடசாலைகளில் இருக்கின்றார்கள் என்பது புரிந்து கொள்ளப்படக் கூடிய உண்மையாக இருக்கின்றது. இந்த உண்மையை சரியாகப் புரிந்து கொள்ளாமல், பாடசாலைகளின் தேவைகளை அளவுக்கதிகமாக வரையறுப்பதன் மூலமாகவும், முறையான திட்டமிடலின்றியும் அடிக்கடி பெற்றோர்களிடம் பணத்தை பெற்று வருமாறு மாணவர்களை நிர்ப்பந்திப்பதன் மூலமாக, அவர்கள் பெரும் உளநெருக்கடிகளுக்கு ஆளாகின்றார்கள். இவ்வாறு பணத்தை செலுத்தாத மாணவர்கள் தண்டிக்கப்படும்போது, அது அவர்களின் வறுமையை சுட்டுவதாகவும் அமைந்து, பிற மாணவர்கள் மத்தியில் அவர்கள் அவமானப்பட்டு, தலைகுனிகின்ற நிலைக்கும் ஆளாகின்றார்கள். இவ்வகையில், தண்டனைகளினால் மாணவர்கள், குறிப்பாக, கலவன் பாடசாலைகளில் கற்கின்ற மாணவர்கள் மோசமாகப் பாதிக்கப்படுகின்ற நிலை உருவாகின்றது. தமது எதிர் பால் மாணவர்களின் முன்னிலையில் தாம் தண்டிக்கப்படும்போதும், அவமானப்படுத்தப்படும்போதும், அவர்கள் தீவிரமான உளவியல் தாக்கங்களுக்கு ஆளாகின்றார்கள். இது சமயங்களில், அவர்கள் தற்கொலை போன்ற தீவிர முடிவுகளை எடுப்பதற்கும் அவர்களைத் தூண்டுவதாக அமைகின்றது.

பாடசாலைகளில் இடம்பெறுகின்ற கூட்டங்கள் மற்றும் சந்திப்புகள் போன்றவற்றிற்கு பெற்றோர்கள் சமூகமளிக்காமைக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்கள் காரணங்களாக அமைந்திருக்கின்றன. முதலாவ தாக, பொதுவாக கூட்டங்களும், சந்திப்புகளும் வேலை நாட்களிலேயே ஒழுங்கு செய்யப்படுகின்றன. பெரும்பாலான பெற்றோர்களைப் பொறுத்தவரை, அவர்கள் இத்தகைய நிகழ்வுகளுக்கு வருகை தருவது என்பது, அவர்களின் **அன்றைய உழைப்பை இழப்பதாக அமைகின்றது.** அரச ஊழியர்களைப் பொறுத்தவரை, அவர்கள் அன்று அரைநாள் விடுமுறை அல்லது குறுகியகால விடுமுறையை பெற வேண்டியவர்களாக உள்ளார்கள். இரண்டாவதாக, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இத்தகைய சந்திப்புகள், மாணவர்களின் கல்வி தொடர்பான அவசிய விடயங்களைப் பற்றிய கலந்துரையாடலாக அமையாமல், பணம் தொடர்பாகவும், வேறுவகையான பங்களிப்பு தொடர்பாகவும் அமைகின்றன. மூன்றாவதாக, அதிபர் மற்றும் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்கள் சார்ந்த பிற நிர்வாக உத்தியோகத்தர்கள் ஏற்கனவே தமக்குள் உரையாடி. முடிவு செய்த விடயங்களை சம்பிரதாயபூர்வமாக வெளிப்படுத்துவதற்காக பல சந்திப்புகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. நான்காவதாக, பல குடும்பங்கள் பெண்தலைமைக் குடும்பங்களாக இருப்பதாலும், பெண்களில் பலர் தொழிலுக்குச் செல்பவர்களாகவும் இருப்பதால், அத்தகைய குடும்பங்களில் இருந்து, இத்தகைய சந்திப்புகளுக்கு கலந்து கொள்ளக் கூடியவர்கள் இல்லாதநிலை காணப்படுகின்றது. ஐந்தாவதாக, வெளியிடங்களில் இருந்து வந்து கல்வி கற்கின்ற மாணவர்களின் பெற்றோர்கள், அடிக்கடி ஒழுங்கு செய்யப்படுகின்ற இத்தகைய சந்திப்புகளில் கலந்து கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள்.

மேற்கூறிய நிலைமைகளின் காரணமாக கணிசமான பெற்றோர்கள், இத்தகைய சந்திப்புகளில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது. இவற்றைக் கவனத்தில் கொள்ளாது, அவர்களின் பிள்ளைகளைத் தண்டிப்பதானது, எவ்விதத்திலும் பொருத்தமற்ற செயற்பாடாக அமைகின்றது. மாணவர்களைத் தண்டிப்பதன் மூலமாக, அவர்கள் தமது பெற்றோர்களை எப்படியாவது, இத்தகைய சந்திப்புகளில் கலந்து கொள்ளுமாறு நிர்ப்பந்திப்பார்கள் என்ற எடுகோள் இங்கு முன்வைக்கப்படுகின்றது. ஆனால் இதற்கு மாறாக, பொருத்தமான நேரத் தெரிவு, குறைந்த எண்ணிக்கையிலான சந்திப்புகள், பெற்றோர்களையும் கலந்துரையாடல்களில் உள்வாங்குவதற்கான முறைமை, சுவாரஷ்ய மான முறையில் விடயங்களை முன்வைத்தல். போன்ற முறைகளினூ டாக, பெற்றோர்கள் இத்தகைய சந்திப்புகளில் ஆர்வமுடன் கலந்து கொள்கின்ற சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

## 9 கிழக்கு மாகாணத்தின் சூழ்நிலைகள்

நீண்டகாலமாக நீடித்த யுத்த சூழலானது. இலங்கை மக்கள் மத்தியில், குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாண மக்களிடையே மனிதப் பெறுமானங்கள் பற்றிய மதிப்பீட்டில் **எதிர்மறைத் தாக்கங்களை** ஏற்படுத்தியுள்ளது. உயிரிழப்புகளும், உடல்சிதைவுகளும், உடமை இழப்புகளும் நாளாந்த நிகழ்வுகளாகியிருந்த சூழலில் வளர்ந்தெழுந் துள்ள புதிய தலைமுறையினர் மத்தியில் இத்தகைய இழப்புகளும், சிதைவுகளும் பெரியளவில் உளத்தாக்கங்களுக்குரியதாக அமை வதில்லை. இவை வெறுமனே நிகழ்வுகளாகவும் காட்சிகளாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்து விரைவிலேயே நினைவில் இருந்து மறைந்து விடுகின்றன. இத்தகைய உள அசைவற்ற நிலையானது, மனிதப் பெறுமானங்களுக்கு உயர்ந்த மதிப்பை வழங்காத மனநிலையைத் தோற்றுவிக்கின்றது. இந்நிலை, பிறருக்கு மரியாதை கொடுத்தல், அல்லது கண்ணியம் வழங்குதல் என்ற செயற்பாடுகளையும் பாதிக்கின்றது. இத்தகைய பண்புகளைக் கொண்ட மாணவர்கள், தமது வீடுகளில் மூத்தோருக்கு மரியாதை செலுத்தாதவர்களாகவும் மாறுகின்றார்கள். இவ்வாறு தனது வீட்டில், மூத்தோருக்கு மரியாதை செலுத்தாத மாணவர்கள், தமது பாடசாலைகளில் அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் மரியாதை செலுத்தாதவர்களாகவும் மாறுகின்றார்கள். இத்தகைய மாணவர்கள், எத்தகைய கட்டுப்பாட்டுக்கும் உட்படாத மனநிலையையும், எல்லா கட்டுப்பாடுகளையும் மீறுகின்ற, அல்லது அவற்றுக்கு எதிராக செயற்படுகின்ற மனநிலையையும் கொண்டவர்களாக ஆகின்றார்கள்.

கிழக்கு மாகாணத்தில், இப்போது பெண்தலைமைக் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம் குடும்பங்களில் ஏறத்தாழ 40,000 குடும்பங்கள்வரை பெண்தலைமைக் குடும்பங்களாக இருப்பதாக சொல்லப்படுகின்றது. நீண்டகால யுத்தமானது, ஒரு குடும்பத்தில் உள்ள கணவன், சகோதரர்கள், மகன்கள் என வெவ்வேறு உறவுகள் சார்ந்த ஆண்களை பலியெடுத்துள்ளது. மரணத்தில் இருந்து தப்பி, உடல் அங்கங்களை இழந்தவர்களாக வாழ்கின்ற ஆண்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவில் கிழக்கில் காணப்படுகின்றது. இவற்றை விட, அதிகரித்துச் செல்கின்ற பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வுகளில் ஒன்றாக, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைந்திருப்பதால், ஆண்களில் ஒரு பகுதியினர் தமது குடும்பங்களை விட்டு நீங்கி, பல ஆண்டுகள் வெளிநாடுகளில் தங்கி விடுகின்ற நிலைக்கு ஆளாகியுள்ளார்கள். இத்தகைய நிலைமைகள், பெண்களின் தோள்களில் குடும்ப பாரங்களையும், பொறுப்புக்களையும் முற்றாகச் சுமத்தியுள்ளன. அதேவேளை, ஆண்தலைமையற்ற குடும்பங்களைச் சேர்ந்த பெண்களில் கணிசமான எண்ணிக்கையானோர், தமது குடும்பப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக, வெளிநாடுகளில் தொழில்பெற்று செல்கின்ற நிலைக்கும் ஆளாகியுள்ளனர். இது அவர்களின் குடும்பங்களில் உள்ள வயது முதிர்ந்த பெண்களின் பொறுப்பில் பிள்ளைகள் வளர்கின்ற நிலையை உருவாக்கியுள்ளது.

இத்தகைய நிலைமைகள் கிழக்கின் குடும்ப உறவுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளன. பாரம்பரியமாக ஆணின் தலைமையிலும், பொறுப்பிலும், கட்டுப்பாட்டிலும் தங்கியிருந்த குடும்ப முறைமை, முற்றாக மாற்றமடைந்துள்ளது. மரபுரீதியக, **ஆணின் தலைமை என்பது, பிள்ளைகள் மீது கண்டிப்பும், நெறிப்படுத்தலும் சார்ந்த கண்காணிப்பைக் கொண்டதாக அமைந்து வந்திருக்கின்றது.** பிள்ளைகளைப் பொறுத்தவரையில், அவர்கள் தமது தந்தையின் வார்த்தைகளை மரியாதையும், அச்சமும் கலந்த மன உணர்வுகளுடன் ஏற்று, கீழ்படிகின்ற மரபைக் கொண்டிருந்தார்கள். இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர்வரை, கிழக்கின் குடும்ப உறவு இவ்வாறு கண்டிப்பையும், நெறிப்படுத்தலையும் கொண்டதாகவும், மரியாதையும் அச்சமும் நிறைந்ததாகவும் இருந்து வந்திருந்தது. ஆனால் இப்போது நிலைமை முற்றாக மாறியிருக்கின்றது. பெண்தலைமைக் குடும்பங்களில், பிள்ளைகளின் நடத்தைகள் கண்காணிக்கப்பட முடியாதவையாகவும், பெண்களினால் அவர்களின் மீது கண்டிப்பை பேண முடியாத நிலைமையும் உருவாகியுள்ளன. தாய்ப் பாசம் என்பது பிள்ளைகளை உள்ளிருந்து கட்டுப்படுத்துகின்ற உளவியல் அம்சமாக இருக்கின்றபோதிலும், அதை மீறி பிள்ளைகளை செயற்படச் செய்யக் கூடிய புறநிலை அம்சங்கள் அதிகம் உருவாகி விட்டன. தாய்மார்களும் வெளிநாடுகளுக்கு சென்றிருக்கின்ற குடும்பங்களில், பிள்ளைகள் மீதான கண்காணிப்பும், கண்டிப்பும் கிட்டத்தட்ட அறவே இல்லாத நிலை உருவாகி விட்டது.

இவ்வாறு பெண்தலைமைக் குடும்பங்களில் வளஉகின்ற பல மாணவர்களிடையே கடுமையான உடலியல் மற்றும் உளவியல் ரீதியான நடத்தைப் பிறழ்வுகள் உருவாவது அவதானிக்கப்பட்டுள்ளன. ஆண்மாணவர்கள் மேலும் அதிகளவில் கட்டுப்பாடற்றவர்களாக மாறுவதற்கும், மாணவிகள் பாலியல் ரீதியான தொந்தரவுகள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாக்கப்படுவதற்கும் இந்நிலை பெருமளவில் காரணமாகியுள்ளது. பெற்றோரின் அன்பு, ஆதரவு, துணை, கண்காணிப்பு போன்ற எதுவுமற்றவர்களாக வளர்வதோடு, உடல், மற்றும் உளரீதியான தாக்கங்களுக்குட்பட்டவர்களாகவும் இருக்கின்ற இத்தகைய மாணவர்கள், பாடசாலைச் சூழலில் வெவ்வேறு சிக்கல்களை ஏற்படுத்துபவர்களாக மாறுகின்றார்கள். கிழக்கில் உள்ள 40,000 பெண்தலைமைக் குடும்பங்களில் இருந்தும், சராசரியாக குடும்பத்திற்கு ஒரு மாணவன்/மாணவி என பாடசாலைகளில் கற்பதாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வோமாயின், இத்தகைய குடும்பங்களைச் சேந்த மாணவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 40,000 என்ற எண்ணிக்கையில் அமைந்திருக்கும். கல்வி அமைச்சினால் 2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் கல்வி கற்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 301,339 எனக் காணப்பட்டது. இவ்வகையில், பெண்தலைமைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கையானது, மொத்த மாணவர் எண்ணிக்கையில் கிட்டத்தட்ட **13 வீதமாகக் காணப்பட்டுள்ளது.** இது ஒப்பீட்டளவில், கணிசமான தொகையாக இருந்திருக்கின்றது. இந்த நிலைமை கிழக்கிலுள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் இப்போதும் நிலவுகின்றது எனக் கொள்ள முடியும். இந்தளவு எண்ணிக்கையிலான மாணவர்கள் பாடசாலைகளில் கற்கின்ற நிலையில், இத்தகைய பாடசாலைகளில் அடைவு மட்டங்களிலான வீழ்ச்சியும், மாணவர்களிடையே அவதானிக்கப்படுகின்ற பிறழ்வு நடத்தைகளும், அதிகமாக இருக்க முடியும் என நாம் எதிர்பார்க்க முடியும்.

கிழக்கு மாகாணத்திலுள்ள பல பாடசாலைகளில், மாணவர்களின் அடைவு மட்டம் சீரற்ற நிலையைக் கொண்டிருப்பதை அவதானிக்க முடியும். ஒரு வருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற பாடசாலை, அடுத்த வருடம் குறைந்த பெறுபேற்றைப் பெறுகின்றது. பெறுபேறுகளில் ஏற்படுகின்ற இத்தகைய வேறுபாட்டிற்கு, ஆசிரியர்களின் கற்பித்தலைக் காரணமாகக் கொள்வது பொருத்தமானதாக அமையாது. ஏனெனில், பெரும்பாலும் அதே ஆசிரியர்கள்தான் இம்மாணவர்களுக்கு கற்பிப்பவர்களாக இருக்கின்றார்கள். எனவே இத்தகைய அடைவு மட்ட வேறுபாட்டிற்கு வேறு காரணிகளில் அக்கறை செலுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக கிழக்கில் இடம்பெற்ற யுத்தநிலைமைகள், அதனால் ஏற்பட்ட இழப்புகள் மற்றும், இடப்பெயர்வுகள் போன்றவை, குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் உளவியலில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் அக்கறைக்குட்படுத்தப்பட வேண்டும். கிழக்கின் யுத்த சூழல் ஒரேமாதிரியானதாக அமைந்திருக்கவில்லை. தாக்குதல்களின் அளவு, அவற்றின் தீவிரம், அவற்றின் விளைவுகள் என்பவை சார்ந்து, வெவ்வேறு தன்மைகளைக் கொண்டவையாக யுத்தகால சூழல் என்பது அமைந்திருந்தது. தீவிர யுத்தநிலைமைக் காலத்தில், கல்வியைத் தொடர முடியாமலும், உளவியல் ரீதியாக பாதிப்பிற்குட்பட்டு, ஆழ்மனப் பதிவிற்குட்பட்டவர்களாகவும் இருக்கின்றவர்கள், பிற்காலத்தில் தமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றல் நடவடிக்கைகளில் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொள்கின்றார்கள். இத்தகைய பிரச்சினைகளை வெற்றிகரமாக சமாளிக்க முடியாதவர்களின் அடைவு மட்டம் பெருமளவிற்குப் பின்தங்கி விடுகின்றது. உதாரணமாக, 2004 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஒரு மோதலின் விளைவாக குறித்த பிரதேச மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, இடப்பெயர்விற்குட்பட்டிருந்தார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது இரண்டு அல்லது மூன்று வயதுக் குழந்தைகளாக இருந்தவர்களின் உளநிலையில் இந்த யுத்தமும், இடப்பெயர்வின் விளைவுகளும் ஏற்படுத்திய தாக்கங்கள், அவர்களின் ஆழ்மனப் பதிவுகளாக உறைந்திருக்கின்ற சாத்தியத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். இந்த ஆழ்மனப் பதிவுகள் அப்பிள்ளைகளின் மீது எதிர் நிலையான பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்குமாயின், அப்பிள்ளைகளின் கற்றல் திறன் பாதிப்பிற்குள்ளாகியிருக்கும். அவர்கள் 2015 ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரணதர பரீட்சை எழுதியவர்களாக, அல்லது 2016 இல் அப்பரீட்சையை எழுதப் போகின்றவர்களாக இருப்பார்கள். எனவே இவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்பார்க்கின்ற மட்டத்தை அடைந்திருக்காது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். இதேவேளை இத்தகைய யுத்த விளைவுகளை பெரியளவில் சந்தித்திருக்காத மாணவர்கள் அதிகமாக இருந்திருக்கின்ற வருடங்களில் அதே பாடசாலையின், குறித்த க.பொ.த காதாரணதர பரீட்சைகளின் பெறுபேறு சிறப்பானதாக இருந்திருக்கும். எனவே **ஒரே பாடசாலையின் அடைவு மட்டம் வெவ்வேறு வருடங்களில் வேறுபட்டு அமைவதற்கு, மாணவர்களின் உளவியலில் ஏற்பட்டிருக்கக் கூடிய இத்தகைய பாதிப்பு நிலையையும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.**

பொதுவாக கருதும்போது, மாணவர்களின் ஆற்றலானது இப்போது அதிகரித்துள்ளது. ஆற்றல் என்பது, கிடைக்கக் கூடிய வாய்ப்புகளினால் தீர்மானிக்கப்படுவதாகவும், வெளிப்படுத்தப்படுவதாகவும் அமைந்துள் ளது. இப்போது பல முனைகளில், வெவ்வேறு வகையான வாய்ப்புகள் உருவாகியிருப்பதால், அவற்றை நோக்கியதான மாணவர்களின் ஆற்றலும் அதிகரித்திருக்கின்றது. பாடவிதானங்களைக் கற்றல் என்பதோடு, இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் சார்ந்தும் மாணவர் களின் ஆற்றல் விரிவடைந்திருக்கின்றது. முன்னர் அதிதிறமைச் சித்திகள் என்பது அரிதான பெறுபேறுகளாகவும், பெரிதும் நகர்புறப் பாடசாலை மாணவர்களினால் ஈட்டப்படுவதாகவும் இருந்தன. ஆனால், இந்நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது பெருமளவுக்கு மாறிவிட்டது. அதிகரித்த அளவில் அதி திறமைச் சித்திகள் பெறப்படுவதோடு, நாட்டின் அனைத்து பகுதிகளையும் சேர்ந்த மாணவர்களினால் இவை ஈட்டப்படுவதாகவும் மாறிவிட்டன. இதே தன்மையை இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் காண முடிகின்றது. பின்தங்கிய பகுதிகள் என முன்னர் அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங் களைச் சேர்ந்த மாணவர்கள், விளையாட்டுக்கள், மொழித்தினப் போட்டிகள், ஓவியப் போட்டிகள், ஏனைய கலை, கலாசார நிகழ்வுகள் என்பவற்றில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெறுபவர்களாக மாறியுள்ளார்கள். அதேநேரத்தில், இந்த அதிகரித்த அடைவு மட்டங்களுக்கு அருகே, மிகக் குறைந்த பெறுபேறுகளைப் பெறுகின்ற மாணவர்களின் தொகையும் கணிசமாக காணப்படுகின்றது. இவற்றை மதிப்பிடும்போது, வெற்றியடைகின்ற மாணவர்களின் பின்னே, அவர்களின் குடும்பப் பின்னணியானது அவர்களின் வெற்றிக்கான முதன்மையான உந்துசக்தியாக அமைந்திருக்கின்றது என்ற உண்மையை அடையாளம் காண முடியும். இதற்கு மறுதலையாக, குறைந்த பெறுபேறுகளைப் பெறுகின்ற மாணவர்களின் குடும்பச் சூழல் ஆரோக்கியமானதாக அமைந்திருக்கவில்லை என்பதையும் உணர்ந்து கொள்ள முடியும். கிராமப்புறங்கள் அல்லது பின்தங்கிய பிரதேசங்கள் என முன்னர் அடையாளப்படுத்தப்பட்டிருந்த பிரதேசங்களில், பொருளாதார நிலையில் உயர்வடைந்தவர்களாகவும், தமது பிள்ளைகளை கல்வி கற்கச் செய்வதில் ஆர்வம் கொண்டவர்களாகவும் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் கல்வியிலும், பிற இணைப்பாடவிதான செயற் பாடுகளிலும் ஆர்வம் காட்டுபவர்களாக மாறுகின்ற நிலையில், அவர்களின் அடைவுகளும், அவர்களினூடாக அவர்கள் கற்கின்ற பாடசாலைகளின் அடைவு மட்டங்களும் அதிகரிக்கின்றன. இந்த அவதானங்களை உணர்ந்து கொள்ளும்போதுதான், நமது கல்விச் சூழலில், மாணவர்களின் அடைவு மட்டத்தை தீர்மானிப்பதில் மாணவர்களின் உளவியலும், குடும்ப நிலையும் வகிக்கின்ற முக்கியத்துவத்தை சிறப்பாக புரிந்து கொள்ள முடியும்.

தொகுத்துக் கூறும்போது, நமது பாடசாலை மாணவர்களின் உளவியலானது, முதலாம் வகுப்பில் இருந்து பதின்மூன்றாம் வகுப்புவரையிலான காலகட்டத்தில், வெவ்வேறு காரணிகளினால் பாதிப்புகளுக்குள்ளாகின்றது. குடும்பம், நண்பர் குழாம், ஊடகங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை நேரமுறைமை, பாடவிதானம், பரீட்சை முறை, போட்டித் தன்மை, தண்டனைகள் என பல காரணிகள் மாணவர்களின் உளவியலை பாதிப்பனவாக அமைந்துள்ளன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இத்தகைய பாதிப்புகள் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவனவாக அமைகின்றன. பாடசாலைக் காலத்தில் மட்டுமின்றி, பாடசாலையை விட்டு வெளியேறும் கட்டத்திலும், எதிர்காலம் குறித்த அச்சத்துடன் கூடிய உளவியல் அழுத்தங்களுக்கு ஆளானவர்களாகவே நமது மாணவர்களில் பலரின் நிலை அமைந்துள்ளது. ஒவ்வொரு பிரதான பரீட்சை முடிவுகளும் வெளியிடப்படும்போது, தற்கொலை செய்து கொள்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை நமது நாட்டில் உயர்வாக இருக்கின்றது என்ற ஒப்பீட்டை நாம் கரிசனையுடன் நோக்க வேண்டும். நாட்டின் எதிர்காலக்கை கட்டியெழுப்பப் போகின்ற மாணவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் நிச்சயமற்ற அச்சநிலைக்குள்ளாகி, உள அழுத்தங்களுக்கு ஆளாவதும், உடல் ரீதியாக ஆரோக்கியமற்றவர்களாக மாறுவதும் ஒரு ஆரோக்கியமான நிலை அல்ல. இந்நிலை மாற்றியமைக் கப்படுவது குறித்த உரையாடல்களும், செயற்பாடுகளும் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும். ஆரோக்கியமான உளவியலின் விளைவாக உருப்பெறுகின்ற ஆளுமை கொண்டவர்களாக நமது இளம் சந்ததியினரை வார்த்தெடுக்க வேண்டிய கடப்பாடு, நம்மனை வருக்கும் உரியது என்ற புரிதலுடன் இவை மேற்கொள்ளப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05. ஆசிரியர்களின் உளவியலில் ஏற்படுகின்ற தாக்கங்கள்

இனி, பாடசாலையின் இன்னுமொரு முக்கிய பிரிவினராக அமைகின்ற ஆசிரியர்களின் உளவியல் எவ்வாறு அமைந்திருக்கின்றது என்பது குறித்து விரிவாக பரிசீலிப்பது அவசியமாகின்றது. அரசாங்கம் பின்பற்றுகின்ற கல்விக் கொள்கைகள் மற்றும் வேலைவாய்ப்பு முறை என்பவையும், கொள்கை வகுப்பாளர்களினால் முன்வைக்கப்படுகின்ற கல்விக் கொள்கைகள், பாடவிதானம், பரீட்சை முறை போன்றவையும், கல்வி அலுவலகங்களில் கடமையாற்றுபவர்களுடனான உறவும் ஆசிரியர்களின் உளவியலில் தீவிர தாக்கங்களை ஏற்படுத்துவனவாக அமைந்து வந்திருக்கின்றன.

## 1. ஆசிரிய நியமனம்

நமது நாட்டின் கல்விக் கொள்கையைத் தீர்மானிப்பதில், அரசாங்கம் முதன்மைப் பாத்திரம் வகித்து வருகின்றது. மிக நீண்டகாலமாக இலவசக் கல்வி முறைமை இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாலும், கல்வி சார்ந்த விவகாரங்கள் எளிதில் அரசியல் தன்மை கொண்டவையாக மாறக் கூடியவையாக இருப்பதாலும், கல்வித்துறையில் அரசாங்கத்தின் வகிபாகம் அபரிமிதமாக இருந்து வந்திருக்கின்றது. கல்விக் கொள்கை களை வகுப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல், நிர்வாக ஒழுங்குகளுக்கான கோவைகளை முன்வைக்கும் உரிமைகளைக் கொண்டிருத்தல், பாடசாலைகளுக்குத் தேவையான பௌதிக வளங்களை வழங்குதல், ஆசிரியர்கள் மற்றும் பிற ஊழியர்களை பாடசாலைகளுக்கு நியமித்து, அவர்களுக்கு ஊதியம் வழங்குதல், மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள் மற்றும் சீருடைகள் என்பவற்றை வழங்குதல், மாணவர்களுக்கான உதவித் தொகைகள், ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் போன்றவற்றை வழங்குதல். என பரந்தளவிலான பங்களிப்புகளை, இந்நாட்டின் அரசாங்கம் கல்வித்துறையில் வழங்கி வருகின்றது.

ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள், கல்வித்துறையில் தாம் ஆற்றுகின்ற இத்தகைய பங்களிப்புகளை, நாட்டின் நலனுக்காக முன்னெடுக்கின்ற செயற்பாடுகளாகக் கொள்கின்ற அதேநேரத்தில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது அரசியல் செல்வாக்கின் குறிகாட்டியாகக் கொள்கின்ற முனைப்பையும் வெளிப்படுத்தி வந்திருக்கின்றார்கள். பாடசாலைகள் என்பவை அதிகளவில் வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கான முதன்மையான மையங்களில் ஒன்றாக இருப்பதால், தமது அரசியல் செல்வாக்கை மக்கள் மத்தியில் உயர்த்திக் கொள்வதற்கான உத்தியாக இத்தகைய வேலைவாய்ப்புகளை ஒவ்வொரு அரசாங்கமும் பயன்படுத்தி வந்திருக்கின்றது. ஆசிரிய நியமனம் என்பது, ஒரு திட்டவட்டமான வரையறையின் கீழ் நிகழ்த்தப்படுகின்ற வேலைவாய்ப்பு முறையாக இன்னமும் முறைப்படுத்தப்படவில்லை. இதனால் வெவ்வேறு வரையறைகளின் கீழ், ஆசிரியர்களை நியமித்தல் என்பது இங்கு பின்பற்றப்பட்டு வருகின்றது. தொண்டர் ஆசிரியர்கள், பயிலுனர் ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள். என வெவ்வேறு வகைபாடுகளின் கீழ் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வெவ்வேறு அடிப்படைகளில் ஆசிரியர்களை நியமிப்பதானது, ஆசிரியர்களின் அந்தஸ்த்திலும், அவர்களின் ஊதியத்திலும், அவர்களின் தகைமையிலும், வாய்ப்புகளிலும் பாதிப்புகளை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. ஒரே பாடசாலையில், ஒரே விதமான கற்பித்தல் பணியிலும், ஒரே விதமாக பிற கடமைகளை நிறைவேற்றுவதிலும் ஈடுபடுபவர்களாக இருந்தும், ஒவ்வொரு வகையான ஆசிரியர்கள் பெறுகின்ற ஊதியமும், பிற வாய்ப்புகளும் வேறுபட்டவைகளாக இருக்கின்றன. இந்நிலையானது, கணிசமான எண்ணிக்கையிலான ஆசிரியர்களின் உளநிலையைப் பாதிப்பதாகவும், அவர்களைத் தாழ்வுணர்ச்சிக்குட்படுத்துவதாகவும் அமைந்திருக்கின்றது.

இன்று கற்பித்தல் செயற்பாடுகளும், ஆவணப்படுத்தல்களும், பாடசாலை தொடர்பான பிற கடமைகளை நிறைவேற்றுவதும் மென் மேலும் சிக்கலானவையாகவும், நவீன தொழில்நுட்ப அறிவு சார்ந்தவையாகவும் மாறியிருக்கின்றன. எனினும் பெரும்பாலான ஆசிரியர்கள், கணினியையும், பிற நவீன தொழில்நுட்ப சாதனங்களையும் முறையாகக் கையாளக் கூடிய அறிவைப் பெற்றிராதவர்களாக இருக்கின்றார்கள். **இன்றுள்ள மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கையில் பெரும் பங்கினர், இத்தகைய நவீன தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர்.** இவ்வகையில் இத்தகைய அறிவையும், ஆற்றலையும் போதியளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிராத இந்த ஆசிரியர்கள், தமது கடமைகளை முறையாக நிறைவேற்றுவதில் சிக்கல்களுக்கும், கடுமையான மன அழுத்தத்திற்கும் உள்ளானவர்களாக இருக்கின்றார்கள். இத்தகைய ஆசிரியர்கள், வகுப்பறைக் கற்பித்தல்களில் மட்டுமின்றி, ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளிலும் தமது பலவீனமான நிலையின் காரணமாக, தாழ்வுணர்ச்சிக்கும், உள அழுத்தங்களுக்கும் உள்ளானவர்களாக இருக்கின்றார்கள். வரையறுக்கப்பட்ட ஒரு கால எல்லைக்குள் வழங்கப்படுகின்ற குறுகிய பயிற்சிகள் மூலம் ஒரு ஆசிரியரால் நவீன தொழில்நுட்பங்கள், நவீன கருவிகள் தொடர்பான அறிவையும் அவற்றை வினைத்திறனுடன் கையாள்வதற்கான ஆற்றலையும் பெற முடியும் என்ற எதிர்பார்ப்பு விவாதத்திற்குரியதாக இருக்கின்றது. இவர்களுக்கு வழங்கப்படுகின்ற குறுகிய கால பயிற்சிநெறிகள் எதிர்பார்த்த பலனை வழங்கியிருக்கின்றதா என்பது இப்போது கேள்விக்குரியதாக இருக்கின்றது.

**இன்னுமொரு உதாரணத்தைப் பார்ப்போம்:**

ஆங்கில ஆசிரியர்கள் நாட்டில் பற்றாக்குறையாக இருப்பதோடு, ஆங்கில பாடத்திலான மாணவர்களின் அடைவு மட்டமும் குறைவாக இருக்கின்றது. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தியடைகின்ற மாணவர்களின் எண்ணிக்கையானது தேசிய ரீதியில் ஐம்பது (50) வீதத்திற்கும் குறைவானதாக இருக்கின்றது. (பார்க்க: முன்னுள்ள அட்டவணைகள்) க.பொ.த. உயர்தர பரீட்சையைப் பொறுத்தவரை, பொது ஆங்கில (General English) பாடத்தில் மாணவர்கள் சித்தியடையும் வீதம் மிகக் குறைவானதாக இருக்கின்றது. இந்நிலையை சீர்படுத்துவதற்காக ஒவ்வொரு அரசாங்கமும் வெவ்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்திருக்கின்றபோதிலும், எதிர்பார்த்த பலனை இன்னமும் அடைய முடியாதுள்ளது. இந்நிலைக்கு ஆங்கில ஆசிரிய நியமனத்தில் பின்பற்றப்படுகின்ற முறையும் ஒரு காரணமாக அமைந்திருக்கின்றதா என்ற வினாவை எழுப்புவது அவசியமாகின்றது. தற்போது ஆசிரிய சேவையில் ஆட்சேர்ப்பிற்கான குறைந்தபட்ச கல்வித் தகைமையாக, க.பொ.த. உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் கல்விக் கல்லூரிகளில் ஆங்கில பாடத்துறைக்கான ஆட்சேர்ப்பில், க.பொ.த. உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் **சித்தியடையாதோரும்** விண்ணப்பிக்க முடியும் என்ற சலுகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலம் வரை வழங்கப்பட்டிருந்தது. மேலும், ஆங்கில பயிற்சி நெறியை மேற்கொள்வதற்கு ஒரு விண்ணப்பதாரிக்குள்ள அடிப்படை ஆங்கில தகைமையாக, **அவர் க.பொ.த. (சா.த) பரீட்சையில், ஆங்கில பாடத்தில் அதிவிசேட சித்தி (A), அல்லது விசேட சித்தியை (B) பெற்றிருத்தல் போதுமானதாகக் கொள்ளப்படுகின்றது.** நாட்டில் பற்றாக்குறையாக உள்ள ஆங்கில ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான ஒரு மாற்றொழுங்காக இவற்றைக் கொள்ளலாம் என்றும், இந்நாட்டிலுள்ள மிகப் பெரும்பாலான குடும்பங்களில் ஆங்கிலம், ஒரு வீட்டு மொழியாக அமைந்திராத நிலையில், தனது பிரஜைகளிடம் இருந்து நாட்டிற்குத் தேவையான ஆங்கில ஆசிரியர்களை நியமிக்கும்போது, இவ்வாறான நடைமுறையைப் பின்பற்றுவது தவிர்க்க முடியாதது என்றும் நாம் காரணங்களை முன்வைக்க முடியும். இவை சரியான காரணங்களாகவும் இருக்கின்றன. இருந்தபோதிலும், இவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றவர்கள், பின்னர் ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றபோது, அவர்களில் பலர் தமது பாடத்தை சிறப்பாக கற்பிக்க முடியாதிருக்கின்றநிலை அவதானிக்கப்பட்டிருக்கின்றது. வேறு பாடத்துறைகளைச் சேர்ந்த ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பொதுவாக தமது பாடத்துறையைச் சேர்ந்த பாடத்தில் அறிவைக் கொண்டிருந்தாலே, தமது பாடங்களைக் கற்பிப்பதற்குப் போதுமானதாக இருக்கின்றது. ஆனால், ஆங்கில ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், ஆங்கில மொழி அறிவு மட்டும் அவர்களுக்கு போதுமானதல்ல. அதையும் தாண்டி, வெவ்வேறு துறைகள் சார்ந்த அறிவும் அவர்களுக்கு அவசியமாகின்றது. விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சுகாதாரம், கணிதம், பொருளாதாரம்.. என பல்துறைகளைச் சார்ந்ததாக ஆங்கிலப் பாடத்திற்கான பாடப் பரப்புகள் வரையப்பட்டுள்ளன. எனவே ஒரு ஆங்கில ஆசிரியருக்கு இவை சார்ந்த அறிவு அவசியமாகின்றது. அப்போதுதான் அவரினால், ஆங்கில பாடத்தை முறையாகக் கற்பிக்க முடியும். ஒரு மூன்று வருட பயிற்சியின் மூலமாக, ஆங்கில மொழி அறிவோடு, இத்தகைய பல்வேறு பாடத்துறைகள் சார்ந்த அறிவையும் ஒருவர் பெற முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. அதேநேரத்தில், ஆழமானதும், விரிவானதுமான ஆங்கில அறிவு இல்லாதபோதிலும் கூட, மாணவர்களினால் க.பொ.த. (சா.த) பரீட்சையில், அதிவிசேட சித்தியையோ அல்லது விசேட சித்தியையோ பெற முடியும். இத்தகைய பின்னணியில், இவ்வாறு நியமிக்கப்படுகின்ற இந்த ஆங்கில ஆசிரியர்கள் தமது கற்பித்தல் நடவடிக்கைகளை முறையாகச் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத நிலையை எதிர்கொள்கின்றார்கள். இதனால் இவர்கள் மனஅழுத்தங்களுக்கு ஆளானவர்களாக மாறுகின்றார்கள்.

## 2. கல்விக் கொள்கைகள்

நமது நாட்டில் ஒவ்வொரு புதிய அரசாங்கமும் ஆட்சிக்கு வருகின்றபோது, அந்த அரசாங்கம், நாட்டின் கல்விக் கொள்கைகளிலும், கல்வி முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதை ஒரு கொள்கையாக பின்பற்றி வந்திருப்பதை நாம் அறிய முடியும். மிக அடிக்கடி கல்வி கொள்கைகளும் முறைகளும் மாற்றப்பட்டு வந்திருக்கின்ற நாடுகளில் ஒன்றாக இலங்கையும் அமைந்திருக்கின்றது. உலகில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில், கல்வித் திட்டத்தை மாற்றுவது அவசியம் என்ற கருத்து சரியானதாக இருக்கின்ற போதிலும், நாம் இன்னமும் ஒரு நிலையான கல்வித்திட்டத்தை வகுக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை. ஒரு நாட்டின் கல்வித் திட்டமானது குறைந்த பட்சம் **இருபது வருடங்களாவது செயற்படுத்தப்பட வேண்டும்** என்பதே பொதுவான எதிர்பார்ப்பாக இருந்து வந்திருக்கின்றது. இந்த இடைப்பட்ட காலத்தில், தேவையான சிறுசிறு மாற்றங்களைச் செய்யலாமே தவிர, அடிப்படைத் திட்டத்தையே அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்க முடியாது. ஆனால் எமது நாட்டின் அண்மைக் கால அனுபவத்தை பார்க்கும் போது, 1972 ஆம் ஆண்டில் இருந்து, இன்று வரையிலான கிட்டத்தட்ட நாற்பது வருட காலத்தில், பல கல்வித் திட்டங்களை அறிமுகப்படுத்துகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருப்பதை அறிய முடியும். எனினும் இன்றுவரை, ஒரு நிரந்தரமான, உறுதியான திட்டத்தை வகுத்து, நடைமுறைப்படுத்த முடியாதவர்களாக நாம் இருந்து வருகிறோம்.

இந்நிலைமை குறித்து நாம் அனைவரும் அக்கறையுடன் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம். நாட்டின் கல்விக் திட்டத்தை வகுக்கின்ற பொறுப்பு பெரும்பாலும் கொள்கை வகுப்பாளர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றது. கொள்கை வகுப்பாளர்கள் என்ற வகை பாட்டிற்குள், கல்வித் திட்டங்களை வகுப்போர், பாடநூல்களை உருவாக்குவோர், தேசிய பரீட்சைகளுக்கான வினாத்தாள்களை தயாரிப்போர் போன்ற பிரிவினர்கள் அடங்குகின்றார்கள். இவர்களில் மிகப் பெரும்பாலானோர், பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளுடன் நேரடித் தொடர்புகளற்றவர்கள். பாடசாலை முகாமைத்துவம் மற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறை முகாமைத்துவம் என்பவை இன்று எத்தகைய நிலையில் இருக்கின்றன என்பது பற்றிய நேரடி அனுபவங்கள் அற்றவர்களாகவே இவர்களில் அனேகர் இருக்கின்றனர். பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஒரு சில ஆசிரியர்களை, இவர்கள் தமது செயற்பாடுகளுக்காக இணைத்துக் கொள்கின்ற போதிலும், இத்தகைய ஆசிரியர்களின் தகுதி மற்றும் ஆற்றல் குறித்து இவர்கள் சரியான மதிப்பீட்டைக் கொண்டிருக்கின்றார்களா என்பது விவாதத்திற்குரிய விடயமாக இருக்கின்றது. இவ்வாறு தெரிவு செய்யப்படுகின்ற ஆசிரியர்களின் பங்களிப்பும், அவர்களின் கருத்துக்கள் உரிய முறையில் உள்வாங்கப்படுவதும் எவ்வளவு தூரம் காத்திரமான முறையில் இடம்பெறுகின்றன என்பதும் கேள்விக்குரிய விடயங்களாகவே இருக்கின்றன.

அரசாங்கம் முன்னெடுக்க விரும்புகின்ற கல்வி முறையை வகுப்பவர் களாகவும், அதற்கான முறைமைகள், ஆவணங்கள், கைநூல்கள், பாடநூல்கள், அறிவுறுத்தல்கள், பயிற்சிகள், மற்றும் வினாத்தாள்கள் போன்றவற்றை தயாரிப்பவர்களாகவும் இவர்கள் இருக்கின்றார்கள். நமது நாட்டிற்கென பொருத்தமானதும், உறுதியானதுமான கல்வித் திட்டம் ஒன்றை வரைந்து கொள்வதற்காக இவர்கள் கடந்த பல வருடங்களாக முயற்சித்து வருகின்றார்கள். ஒவ்வொரு தடவையும், பெரும் நம்பிக்கையுடன் இவர்களால் முன்வைக்கப்படுகின்ற திட்டங்கள் சீக்கிரமே கைவிடப்படுகின்ற நிலையை நாம் அவதானித்து வருகிறோம். கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து முன்வைக்கப்படுகின்ற திட்டங்கள், எதிர்பார்த்த பலன்களை தராமல் விரைவிலேயே கைவிடப்படுவது என்பது தொடர்ச்சியாக இடம்பெறுவதால், இந்தத் திட்டங்களில் காணப்படுகின்ற தவறான அம்சங்கள் குறித்த நேர்மையான மதிப்பீடுகள் இப்போது அவசியமாகின்றன.

இத்திட்டங்கள், எமது நாட்டிற்கென தனித்துவமானதும், நமது நாட்டின் வளங்கள் மற்றும் மரபுகளில் இருந்து உருவாக்கப்பட்டதுமான கல்வித் திட்டங்களாக அமையாமல், முன்னேறிய நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கல்வித் திட்டங்களின் பிரதிகளாகவே பெரும்பாலும் அமைகின்றன. அந்த நாடுகளின் கல்விநிலை, அவற்றின் பாடசாலைக் கட்டமைப்பு, வகுப்பறை ஒழுங்கமைப்பு, ஒரு வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை, ஆசிரிய, மாணவ விகிதாசாரம், மாணவர்களும், ஆசிரியர்களும் பயன்படுத்துகின்ற கற்றல் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், பாடநேரம், பாடங்களின் எண்ணிக்கை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை முறைகள், ஆசிரியர்களின் கற்பித்தல் நேரம், ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற தொழில்சார்ந்த மற்றும் ஊதியம்சார்ந்த வசதிகளும், சலுகைகளும், ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்காக (Capacity Building) முன்னெடுக்கப்படுகின்ற முறைமைகள், அங்கு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற சுயாதீனம். போன்ற அம்சங்களை பெருமளவில் கவனத்தில் கொள்ளாமல், அந்நாடுகளின் **கல்வித் திட்டங்களை மட்டும்** இங்கு நடைமுறைப்படுத்துகின்ற முயற்சிகளே இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன.

வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில், அனைத்துவகையான நவீன கற்றல் மற்றும் கற்பித்தல் உபகரணங்களைக் கொண்ட விசாலமான வகுப்பறைகளில், குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் உள்ளடக்கப்படுகின்றார்கள். சில சந்தர்ப்பங்களில், ஒரு பாடத்திற்கென இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். ஒருவர் பாடத்தைக் கற்பிக்கின்ற அதேநேரத்தில், மற்ற ஆசிரியர், குறித்த பாடத்தை புரிந்து கொள்வதில் சிரமப்படுகின்ற மாணவர்களுக்கு உதவி செய்பவராக இருக்கின்றார். பாடங்களைக் கற்பிப்பதற்கு தனியான ஆசிரியர்களும், கணிப்பீடுகளையும், பரீட்சைகளையும் மேற்கொள்வதற்கு தனியான ஆசிரியர்களும் என இரண்டுவகையான பணிகளை மேற்கொள்கின்ற ஆசிரியர்கள் அங்கு கடமை புரிகின்றார்கள். எனவே, தனக்கென ஒதுக்கப்பட்டுள்ள பணியை முழுமையாகவும், எந்த அழுத்தங்களும் இல்லாத நிலையில் மேற்கொள்வதற்கு அங்குள்ள ஆசிரியர்களால் முடிகின்றது. ஏறக்குறைய அனைத்து ஆவணப்படுத்தல்களும் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளதால், இற்றைப்படுத்தல், தரவேற்றம் செய்தல், மற்றும் தரவிறக்கம் செய்தல் என்பவை இலகுவான காரியங்களாக அங்கு இருக்கின்றன. மிகப்பெரும்பாலான ஆவணப்படுத்தல் வேலைகள், அலுவலக உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுவதால், ஆசிரியர்கள் அத்தகைய வேலைகளின் சுமையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆனால் நமது நாட்டின் நிலை இதற்கு முற்றிலும் மாறானதாக இருக்கின்றது. இங்கு ஏறக்குறைய அனைத்து வேலைகளையும் ஆசிரியர்களே செய்ய வேண்டிய நிலையில் உள்ளார்கள். புதிதாக அறிமுகப்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு கல்வித் திட்டமும், **கற்பித்தல் பணியை விட அதிகமான அளவில் பிற பணிகளை ஆசிரியர்களிடம் ஒப்படைக்கும் வகையிலேயே அமைந்திருக்கின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிகமாக ஒப்படைக்கப்படுகின்ற இந்த பணிகளை தாமே, தமது சொந்தக் கரங்களினால் செய்து முடிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்குள்ளானவர்களாக ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். கணிசமான பாடசாலைகளில் குறிப்பிட்ட அளவில், கணினிவசதிகள் செய்து தரப்பட்டுள்ள போதிலும், அவற்றை உரிய முறையில் கையாள் வதற்கான பயிற்சி குறைந்தவர்களாகவும், அதற்கான நேரமற்றவர் களாகவுமே பெரும்பாலான ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். இவற்றை விட, பெரும்பாலான கணினிகள் காலங்கடந்தவையாகவும், அடிக்கடி திருத்தங்களுக்கு உட்படுத்தப்படுபவையாகவும் இருக்கின்றன. இத்தகைய நிலையில், தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மேலதிக வேலைகள் அனைத்தையும் தமது கைகளினாலேயே (manually) எழுதி முடிக்க வேண்டிய நிலைமைக்கு ஆளானவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள்.

இத்தகைய நிலையானது, ஆசிரியர்களின் உளநிலையில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது. நமது பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் நாளொன்றுக்கு, **ஏழு பாடங்கள் கற்பிக்க வேண்டும்** என்று எதிர்பார்க்கப்படுகின்றார்கள். இவற்றை விட, பாடசாலை மட்டக் கணிப்பீடு, அலகுப் பரீட்சைகள், மாதாந்தப் பரீட்சைகள், தவணைப் பரீட்சைகள் என்பவற்றோடு, கல்வி அலுவலகங்கள் மற்றும், தனிப்பட்ட நிறுவனங்கள் நடாத்துகின்ற பரீட்சைகள் போன்றவற்றையும் தாமே பொறுப்பேற்று நடத்த வேண்டியவர்களாகவும், விடைத்தாள்களைத் திருத்தி, புள்ளிகளை ஆவணப்படுத்த வேண்டியவர்களாகவும் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். இத்தகைய வேலைப்பளுவோடுதான், கற்பித்தலுக்குப் புறம்பான இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் முழுமையாக ஈடுபட வேண்டும் என்றுஆசிரியர்கள்எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.பாடசாலையின்பௌதிக நிலை, சமூகத்துடனான தொடர்பாடல், வளங்களைப் பெறும் ஒழுங்குகள், கல்விசார் அடைவு மட்டம் என பல தலைப்புகளில், ஒரு பாடசாலையின் நிலையை மதிப்பிடுவதை அடிப்படையாகக் கொண்ட சுட்டிகளுக்கான கோவைகளைப் பேணுதல், அவற்றுக்கான ஆவணங்களை சேகரித்தல், பாடசாலைக்கு வழங்கப்படுகின்ற நிதிகளின் செலவீடு பற்றிய அறிக்கைகளை முறையாகப் பேணுதல், பொருட்கொள்வனவு மற்றும் அவற்றின் தரம் என்பவற்றை முறையாகக் கையாளுதல், பல்வேறு வகையான போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களைப் பயிற்றுவித்தல். என மிகப் பல செயற்பாடுகளில் நாளாந்தம் ஒவ்வொரு ஆசிரியரும் பங்குபற்ற வேண்டியுள்ளது. **இவை அனைத்துமே ஆசிரியர்களின் கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் புறம்பானவை.** இவற்றின் எண்ணிக்கையும், கடினத்தன்மையும், இறுதியில் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகளை கடுமையாகப் பாதிப்பவையாக அமைந்திருக்கின்றன.

ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டில், பாட ஆயத்தம் என்பது பிரதான இடத்தை வகிக்கின்றது. எந்தளவுக்கு ஒரு ஆசிரியர், தான் கற்பிக்கவுள்ள பாடம் குறித்து, போதிய ஆயத்தத்துடன் பாடசாலைக்குச் செல்கின்றாரோ அந்தளவுக்கு அப்பாடம் வினைத்திறனும், விளைதிறனும் கொண்டதாக அமைகின்றது. பாட ஆயத்தம் என்பது, பாடத்திட்டம் (Lesson Plan/ Activity Plan), கற்பித்தல் உபகரணங்கள் (Teaching Aids), விடயதானங்கள் (Subject Matters). என பன்முக விடயங்களைக் கொண்டதாக அமைந்திருக்கின்றது. நவீன கற்பித்தல் முறையில், விடயதானங்கள் என்பவை, வழங்கப்பட்டுள்ள பாடப்புத்தகங்களுக்கு அப்பாலும் சென்று, தகவல்களையும், சான்றுகளையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும் என்று எதிர்பக்கப்படுகின்றது. இது, இணையம், சஞ்சிகைகள், பிறநூல்கள். என பல்வேறு மூலங்களை ஆசிரியர்கள் ஆதாரமாகக் கொள்ள வேண்டும் என்பதை அவசியமாக்குகின்றது. ஆனால், நடைமுறையில் நமது ஆசிரியர்கள், பாட ஆயத்தம் செய்வதில் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்பவர்களாக இருக்கின்றன.

ஒரு ஆசிரியர், ஒரு நாளைக்கு சராசரியாக ஆறு பாடங்கள் கற்பிக்க வேண்டும் என்பது ஒரு நிபந்தனையாகவே உள்ளது. அண்மைக் காலம்வரை, ஒரு ஆசிரியர் தான் கற்பிக்கும் பாடங்களுக்கு, வாராந்த அடிப்படையில் பாடத்திட்டங்களை எழுத வேண்டும் என்ற நிலை இருந்தது. ஆனால், இப்போது அந்த நிலை மாற்றப்பட்டு, **நாளாந்த அடிப்படையில்** பாடத்திட்டம் எழுதப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது, ஆறு பாடங்களுக்கும் நாளாந்த அடிப்படையில் பாடத்திட்டங்களை எழுதும்போது, ஒரு ஆசிரியர் வாரத்தில் முப்பது பாடத்திட்டங்களை எழுத வேண்டிய நிலைக்கு இப்போது ஆளாகியுள்ளார். இந்த முப்பது பாடத்திட்டங்களையும், வாரத்தின் முதல் நாளான்று (பொதுவாக திங்கட்கிழமை) அதிபரிடம் ஒப்படைத்து, அவரது கையொப்பத்தைப் பெறுவது அவசியமாகின்றது. இந்நிலையில், ஒரு ஆசிரியர் முப்பது பாடத்திட்டங்களை முறையாக எழுத வேண்டுமாயின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்தது ஒரு பாடத்திட்டத்திற்கு முப்பது நிமிடங்கள் என, மொத்தமாக அவருக்கு பதினைந்து மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றன. இந்த பதினைந்து மணித்தியாலங்களை பாடசாலை நேரத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய எந்த சாத்தியத்தையும் கொண்டிராதவர்களாகவே ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். எனவே, இவற்றை சனி, ஞாயிறு தினங்களிலும், மற்றும் பாடசாலை தவிர்ந்த பிற நேரங்களிலும் செய்ய வேண்டிய நிலைக்கு ஆசிரியர்கள் ஆளாகின்றார்கள். பாடத்திட்டங்களை எழுதுவதற்கு மட்டுமே வாரத்திற்கு குறைந்தது பதினைந்து மணித்தியாலங்களை செலவிட வேண்டியுள்ள நிலையில், பாட ஆயத்தத்தில் உள்ளடங்குகின்ற பிற விடயங்களான, கற்பித்தல் உபகரணங்களை தயார்படுத்தல், விடயதானங்களை தொகுத்தல் போன்றவற்றிற்காக, குறைந்தது மேலும் பதினைந்து மணித்தியாலங்களை செலவிட வேண்டியவர்களாக ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அதாவது, ஒவ்வொரு ஆசிரியரும், பாட ஆயத்தத்திற்கென, வாராந்தம் மொத்தமாக முப்பது மணித்தியாலங்களை **தமது சொந்த நேரத்தில் இருந்து** செலவிட வேண்டிய இக்கட்டான நிலையில் இருக்கின்றார்கள். வாரத்தில் ஏழு நாட்களும் அவர்கள் இவற்றிற்கான வேலையில் ஈடுபடுவதாயிருந்தாலும், நாளாந்தம் அவர்களுக்கு குறைந்தது **நான்கு மணித்தியாலங்கள்** தேவைப்படுகின்றன. இது ஒரு மிகப் பெரும் சுமையாக அவர்களை அழுத்துகின்றது. உடலியல் ரீதியான சோர்வை மட்டுமன்றி, உளவியல் ரீதியாகவும் கடுமையான அழுத்தங்களை ஏற்படுத்துவதாக இது அமைந்துள்ளது. உண்மையில், நடைமுறைரீதியாக பார்க்கும்போது, எந்த ஆசிரியராலும் நாளாந்தம் இவ்வளவு நேரத்தை செலவிட முடியாத நிலையே காணப்படுவதை அவதானிக்க முடியும். எனவே, ஈற்றில் பாட ஆயத்தம் என்பது, செயற்திறன் வாய்ந்ததாக இல்லாமல், வெறும் சம்பிரதாயபூர்வமான செயற்பாடாக மாறி விடுகின்றது.

பாடசாலையிலும், வகுப்பறையிலும் ஆசிரியர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ள இத்தகைய நெருக்கடிகளைக் கவனத்தில் கொள்ளாத நிலையிலேயே, புதிய கல்வித் திட்டங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றனபோல் தெரிகின்றது. ஒவ்வொரு திட்டமும் குறுகிய கால அமுல்படுத்துகையின் பின்னர் கைவிடப்படுகின்ற அனுபவத்தைக் கொண்டவர்களாகவே நாம் இருக்கிறோம். இந்த நிலை, பாடசாலை ஆசிரியர்கள் மத்தியில் சிக்கலானதும் குழப்பகரமானதுமான நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கின்றன. அடிக்கடி அறிமுகப்படுத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்படுகின்ற புதிய கல்வித் திட்டங்கள், மற்றும் கல்விச் செயற்பாடுகளை எதிர்கொள்ள வேண்டிய சவாலான நிலைக்கு இவர்கள் ஆளாகியுள்ளார்கள். **ஒரு குறித்த கல்விச் செயன்முறைக்கு தம்மை முற்றாக தயார்படுத்து முன்னமே, அம்முறை கைவிடப்பட்டு இன்னுமொரு முறைக்கு தம்மை தயார்படுத்த வேண்டிய நிலை இவர்களுக்கு ஏற்படுகின்றது.** இவ்வாறு அடிக்கடி அறிமுகப்படுத்தப்படுகின்ற புதுப்புது முறைமைகளினால் ஆசிரியர்கள் குழப்பத்திற்குள்ளாகின்ற நிலை உருவாகின்றது. முன்னேறிய நாடுகள், தாம் பெற்றுக் கொண்ட படிப்படியான வளர்ச்சிப் போக்கின் விளைவாக முன்னெடுத்து வருகின்ற கல்வித் திட்டங்களை, ஏறக்குறைய அதே வடிவில் நமது நாட்டிலும் அமுல்படுத்துகின்ற முயற்சிகளின் ஒரு விளைவாக, இத்தகைய குழப்பநிலை உருவாகின்றதா என்ற வினா அவசியமாகின்றது. ஒரு நாட்டின் நீண்ட, செழுமையான பாரம்பரியத்தின் ஊடாக முகிழ்த்துள்ள ஒரு கல்வித் திட்டத்தை, அத்தகைய பின்புலம் இல்லாத இன்னொரு நாட்டில், அப்படியே பின்பற்ற முயற்சிப்பதன் மூலமாக பாரியளவில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்த முடியுமா என்ற வினா நமக்கு முன்னே எழுகின்றது. நவீன சாதனங்களின் பற்றாக்குறையையும், அவற்றை பயன்படுத்தக் கூடிய அறிவின் பற்றாக்குறையையும் கொண்டிருக்கின்ற ஒரு சூழலில், அத்தகைய நவீன சாதனங்களையே முற்றாகப் பயன்படுத்துகின்ற நாடுகளின் கல்வித் திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் எத்தகைய தர்க்கப் பொருத்தமும் இருக்க முடியாது.

இத்தகைய முயற்சியும், எதிர்பார்ப்பும் ஆசிரியர்களின் மீது கடுமையான சுமையையும், மன அழுத்தத்தையுமே விளைவாக்கியிருக்கின்றன. தாம் என்ன செய்ய வேண்டும் என்று, அரசாங்கமும், அதிகாரிகளும் எதிர்பார்க்கின்றார்கள் என்ற புரிதலின்றி, பெரும்பாலான ஆசிரியர்கள் இருட்குகைக்குள் தள்ளப்பட்டிருப்பது போன்ற குழப்ப நிலைக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். அரசாங்கம், தான் நடைமுறைப்படுத்த எண்ணியுள்ள கல்வித் திட்டம் பற்றிய தெளிவான விளக்கத்தை ஆசிரியர்களுக்கு வழங்குவதில்லை. இது குறித்து ஆசிரியர்களுக்கு விளக்கமளிப்பதற்காகநியமிக்கப்படுகின்றபெரும்பாலானஅதிகாரிகளும், ஆலோசகர்களும் தெளிவாக விளக்க முடியாதவர்களாகவும், பல சந்தர்ப்பங்களில் போதிய விளக்கமில்லாதவர்களாகவும், இருக்கிறார்கள். முன்வைக்கப்படுகின்ற திட்டங்கள் எவ்வளவுதான் சிறந்தவையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோதிலும், அவற்றை வகுப்பறைகளில் நடைமுறைப்படுத் துபவர்களாக ஆசிரியர்களே இருக்கின்றார்கள். இந்நிலையில் ஆசிரியர்கள் தெளிவான புரிதலின்றியும், எனவே முழுமையான ஈடுபாடின்றியும் செயற்படுகின்ற நிலை உருவாகின்றது. ஈற்றில், தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை, இயந்திரப்பாங்கான முறையில் நிறைவேற்றி முடிக்கின்றவர்களாக பெரும்பாலான ஆசிரியர்கள் மாறுகின்றார்கள். இத்தகைய நிலைமைகளின் ஒட்டுமொத்த விளைவாக, அறிமுகப்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு புதிய கல்வித் திட்டமும் விரைவிலேயே தோல்வியில் முடிவடைவது இங்கு நிகழ்கின்றது. இந்நிலையைத் தவிர்க்க வேண்டுமாயின், நமது நாட்டின் சூழலுக்கும், வளங்களுக்கும், மரபுக்கும் பொருத்தமான முறையில் அமையக் கூடிய கல்வித் திட்டங்களை உருவாக்குவது குறித்த கரிசனை நமக்கு அவசியமாகின்றது.

## 3. ஊதிய விவகாரம்

அரசாங்கங்களினால் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்ற ஊதிய முறைமை என்பது, ஆசிரியர்களை பாதிக்கின்ற இன்னுமொரு விடயமாக இருக்கின்றது. பிற அரசாங்க ஊழியர்களுடன் ஒப்பிடுகையில், ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியம் ஏறக்குறைய சமமான தாக இருக்கின்றபோதிலும், இந்த ஊதியத்தை தவிர, தமது உத்தியோ கத்தினூடாக மேலதிக வருமானத்தை ஈட்டக் கூடிய வேறு எந்த வாய்ப்புமற்றவர்களாக ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். பிற அரசாங்க ஊழியர்கள், தமது கடமை நேரம் தவிர்ந்த நேரங்களிலும், விடுமுறை தினங்களிலும் மேற்கொள்கின்ற பணிகளுக்கு **மேலதிக நேரக் கொடுப்பனவுகளையும், பிற சலுகைகளையும்** பெற முடிகின்றது. ஆனால் ஆசிரியர்களுக்கு இத்தகைய வாய்ப்புகள் எவையும் வழங்கப்படு வதில்லை. மேலும், தமது தொழிலினூடாக பதவி உயர்வுகளை அடைந்து கொள்வதற்கான வாய்ப்புகள் ஆசிரியர்களுக்கு குறைவாகவே உள்ளன. எனவே, ஆசிரியர்கள் தமக்கு கிடைக்கின்ற ஊதியத்தைக் கொண்டு பற்றாக்குறைமிக்க வாழ்க்கையை நடத்த வேண்டியவர்களாகவும், ஏறக்குறைய தமது சேவைக்காலம் முழுவதும் ஆசிரியர்களாகவே இருந்து ஓய்வு பெற வேண்டியவர்களாகவும் உள்ளார்கள். இத்தகைய நிலைமை அவர்களின் உளநிலையில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட, ஆயிரக்கணக்கான ஆசிரியர்களின் சம்பள நிலுவைகள் முறையாக வழங்கப்படாததால், அவர்கள் உளஅழுத்தங்களுக்கு உள்ளானவர்களாக இருக்கின்றார்கள். இவ்வாறான ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் சம்பள நிலுவையாக உள்ளன. இந்நிலைமை உருவாகின்றமைக்கு ஆசிரியர் களின் எண்ணிக்கை ஒரு காரணமாகச் சொல்லப்படுகின்றது. ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், அவர்களுக்குரிய சம்பள நிலுவையை உரிய காலங்களில் வழங்குவதில் சிரமங்களை எதிர்கொள்வதாக கல்வி அதிகாரிகளும், கல்வி அலுவலக ஊழியர் களும் தெரிவிக்கின்றார்கள். அரசாங்க ஊழியர்களுக்கான குறுகிய காலக் கடன்கள் உட்பட பிற வாய்ப்புகளை ஆசிரியர்கள் பெற முடியாதிருப்பதற்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகம் என்ற இதே காரணம்தான் சொல்லப்படுகின்றது. ஆயினும் இந்தக் காரணம் தவறானது. உண்மையில், நமது நாட்டில் ஆசிரியர்களுக்கும் பிற அரசாங்க ஊழியர்களுக்கும் இடையேயான எண்ணிக்கை விகிதமானது 1 : 6 என அமைந்திருக்கின்றது. 2013ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் பிரகாரம், இலங்கையில் பணிபுரிகின்ற மொத்த அரசுதுறை ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கையானது பின்வருமாறு அமைந்திருக்கின்றது.

| துறை | ஊழியஉகளின் எணணிக்கை |
|---|---|
| அரசு | 1,026, 728 |
| அரசுசார் | 256, 189 |
| மொத்தம் | 1, 282, 917 |
| ஆசிரியர் | 223, 752 |

அதாவது, நமது நாட்டில் ஆசிரியர்களை விட, பிற அரசாங்க ஊழியர்கள் ஆறு மடங்கு அதிக எண்ணிக்கையில் இருக்கின்றார்கள். இருப்பினும், ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது என கல்வி அலுவலகம் சார்ந்தவர்கள் திரும்பத் திரும்ப சொல் வதற்கான காரணம் என்ன? குறித்த ஒரு கல்வி அலுவலகத்துடன் ஒப்பிடுகையில், அக்கல்வி அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற **மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை** அதிகமாக இருப்பதே இதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக அமைந்திருக்கின்றது. ஆனால் பெரும்பாலான பாடசாலை களில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கையை விட, கல்வி அலுவலகங்களிலும், பிற அரசாங்க அலுவலகங்களிலும் கடமையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின் றது என்பதே உண்மை. திருகோணமலை வலயக் கல்வி அலுவலகம் சார்ந்த பின்வரும் அட்டவணை இந்த உண்மையை தெளிவுபடுத்தும்.

| **சுயவிபரக்கோவைக்குரிய உத்தியோகத்தர்கள்** | **எண்ணிக்கை** |
|---|---|
| கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள். | 04 |
| வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள். | 72 |
| ஆசிரியர்கள் (SLPS - அதிபர் தரத்தினர்கள்) | 96 |
| ஆசிரியர்கள் | 1682 |
| சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் | 27 |
| கல்விசாரா ஊழியர்கள் | 132 |
| வளநிலையங்களில் கடமைபுரிவோர். | 02 |
| **மொத்தம்** | **2015** |

ஆதாரம்: 'நித்திலம்' 2013 (வலயக் கல்வி அலுவலகம், திருகோணமலை)

மேலுள்ள அட்டவணையின்படி, திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தில் கிட்டத்தட்ட 100 உத்தியோகத்தர்கள் (கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள், வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள்) கடமையாற்றுகின்றார்கள் எனக் கொள்ள முடியும். இதேபோன்று 2013ஆம் ஆண்டில், கிழக்கு மாகாண கல்வி அலுவலகத்தில் 83 உத்தியோகத்தர்கள் கடமைபுரிந்திருக்கின்றார்கள். ஆனால், திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தின் நிர்வாகத்திற்குட்பட்ட 78 பாடசாலைகளில் ஒன்றிரண்டு பாடசாலைகளில் மட்டுமே 100 என்ற எண்ணிக்கையிலான ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றார்கள். ஏனைய பெரும்பாலான பாடசாலைகளில், **இருபதுக்கும் குறைவான ஆசிரியர்களே** கடமையாற்றுகின்றார்கள்.

இந்த உண்மையைக் கவனத்தில் கொள்ளாமல், ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது எனக் கூறி, ஆசிரியர்களின் சம்பள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலுவையை வருடக்கணக்கில் நீடித்துச் செல்வதன் மூலமாக, அவர்களின் பொருளாதார நிலை சிக்கலாவதோடு, தமக்குரிய அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாதவர்களாகவும் அவர்கள் ஆகின்றார்கள். பிற அரசாங்க ஊழியர்கள், அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற சுற்றுநிரூபங்களின் அடிப்படையிலான சம்பள அதிகரிப்பு, விசேட கொடுப்பனவுகள் போன்றவற்றை, அச்சுற்றுநிரூபங் களை தொலைநகலில் பெற்று, அன்றே தமக்கு வழங்குவதையும், குறுகிய காலக் கடன்களை மீண்டும் மீண்டும் பெற்றுக் கொள்வதையும் கவனத்தில் கொள்ளும்போது, ஆசிரியர்கள் எவ்வளவு தூரம் தமக்கான வாய்ப்புகளைப் பெறுவதில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்றார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஆசிரியர்களின் சம்பளநிலுவைக்கு கல்வி அலுவலகங்கள் நேரடிப் பொறுப்பல்ல என்பதும், அரசாங்கத்தின் வருடாந்த ஒதுக்கீட்டில் நிலவுகின்ற பற்றாக்குறை காரணமாகவே சம்பளநிலுவைகள் ஏற்படுகின்ற என்பதும் உண்மை. எனினும், குறைவாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாலோ அல்லது ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி, வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதாலோ, ஆசிரியர்களின் சம்பள நிலுவைகள் தேங்குகின்றனவாயின், தாம் ஒதுக்கப்படுகின்றோம் என்றும், பாரபட்சத்திற்குள்ளாக்கப்படுகிறோம் என்றும் ஆசிரியர்கள் கருதுவதற்கும், அதனால் அவர்கள் உளஅழுத்தங்களுக்கு ஆளாவதற் கும் போதுமான காரணங்கள் இருக்கின்றன என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆசிரியர்களுக்கான பதவி உயர்வு குறித்த சுற்றுநிரூபங்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறையே அனுப்பப்படுகின்றன. இந்த இடைப்பட்ட காலத்தில், தமக்கான பதவி உயர்வுகளுக்கான வாய்ப்புகளைக் கொண்டிருக்கின்ற ஆசிரியர்கள், அடுத்த சுற்றுநிரூபம் அனுப்பப்படும்வரை காத்திருக்க வேண்டிய அவல நிலைக்குள்ளாகின்றார்கள். இதன் மூலம் அவர்கள் ஊதிய ரீதியாகவும், பிறவகைகளிலும் தாம் அடைய வேண்டிய வாய்ப்புகளை இழக்கின்ற நிலை உருவாகின்றது. அத்தோடு, இவ்விடைக்காலத்தில், சேவையில் இருந்து ஓய்வு பெறுபவர்கள், தமது பதவி உயர்வையும், அதற்கான ஊதிய அதிகரிப்பையும் பெற முடியாத நிலை உருவாகின்றது. இந்நிலைமைகள் அனைத்துமே, ஆசிரியர்களின் உளநிலையில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற காரணிகளாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. கற்பித்தல் நேரம்

நமது நாட்டில், அசிரியர்களின் கற்பிக்கும் நேரத்தை அதிகரிக்கின்ற வகையிலேயே திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. ஒரு ஆசிரியர் நாளொன்றில், ஏழு பாடவேளைகள் கற்பிக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மிகுதியாக உள்ள ஒரு பாடவேளையில் அவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஏனைய பணிகளை முடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றார்கள். நடைமுறையில், கணிசமான ஆசிரியர்களுக்கு, இந்த ஒரு பாடவேளையில் கூட ஓய்வாக இருந்து தமது பிற பணிகளை செய்வதற்கான சாத்தியம் கிடைப்பதில்லை. விடுமுறை எடுத்துள்ள ஆசிரியர்களின் வகுப்புகளுக்கு சென்று பதில் கடமை புரிய வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படுகின்றது. கணிசமான பாடசாலைகளில் பிரதானமான பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால், அங்குள்ள அதே பாடத்திற்குரிய ஆசிரியர் அல்லது பிற ஆசிரியர்கள் அப்பாடங்களை கற்பிக்க வேண்டியவராகவோ, அல்லது அவ்வகுப்பிற்குச் செல்ல வேண்டியவராகவோ இருக்கின்றார். இவ்வகையில், பெரும்பாலான ஆசிரியர்கள் தினந்தோறும், ஏழு அல்லது எட்டு பாடங்களைக் கற்பிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

நமது நாட்டு நிலைமைக்கு முற்றிலும் மாறாக, வளர்ச்சியடைந்த நாடுகளோ, **கற்பித்தல் நேரத்தை குறைப்பது** என்பதை இலக்காகக் கொண்டுள்ளன. ஆசிரியர்களின் கற்பித்தல் நேரத்தைக் குறைத்து, அதற்குப் பதிலாக அவர்கள் தமது பாடங்களை முறையாகவும் ஆழமாகவும் ஆயத்தம் செய்வதற்கான நேரத்தை அதிகரிப்பதும், அதனூடாக வினைத்திறன்மிக்க கற்பித்தல் செயற்பாட்டை ஊக்குவிப்பதும் அந்நாடுகளின் நோக்கங்களாக உள்ளன. **அறிவு என்பது ஒவ்வொரு கணமும் விரிந்து, விசாலித்து வருகின்ற சூழலில், ஆசிரியர்கள் அவற்றிற்கு ஈடுகொடுத்து தம்மை வளர்த்துக் கொள்வதற்கும், தமது மாணவர்களை முறையாக வழிகாட்டுவதற்கும் அவர்களுக்கு அதிக நேரம் வழங்கப்படுவது அவசியமாகின்றது. ஒரு சமூகப் பிரிவினர் என்றவகையில், ஆசிரியர்களின் குடும்ப, சமூக பங்கேற்பு என்பது முறையாக இடம்பெற வேண்டும். ஆசிரியர்கள் பாடசாலை முடிந்து வெளியேறும்போது தமது பொறுப்புக்களையும், கடமைகளையும் பாடசாலைகளிலேயே விட்டு விட வேண்டும். அவை அவர்களின் வீடுகளுக்குள் நுழைந்து விடக் கூடாது. அவர்களின் குடும்பம் என்பது தனியாகவும், ஆரோக்கியமாகவும் பேணப்பட வேண்டும். பாடசாலை நேரத்திலேயே முறையான**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகளையும், உரிய நேரத்தையும் ஒதுக்கீடு செய்வதன் மூலமாக, தமது அறிவுத் திரட்டலையும், பாட ஆயத்தங்களையும் சிறந்த முறையில் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இத்தகைய கண்ணோட்டங்களின் அடிப்படையிலேயே வளர்ச்சியடைந்த நாடுகள், ஆசிரியர்களின் கற்பித்தல் நேரத்தை குறைத்து, மட்டுப்படுத்துகின்ற முறைமையை பின்பற்றுகின்றன. இதற்கு மாறாக, நமது நாட்டில் ஆசிரியர்களின் கற்பித்தல் நேரம் தொடர்ந்தும் அதிகரிக்கப்படுகின்ற நிலையை நோக்கிச் செல்வதானது, நமது ஆசிரியர்களின் கற்பித்தல் நடவடிக்கைகளும், அவர்களின் வாண்மை விருத்தியும் எந்தளவுக்கு ஆரோக்கியமான முறையில் இடம்பெறக் கூடிய சாத்தியத்தை ஏற்படுத்தும் என்ற விசாரிப்பு நமக்கு அவசியமாகின்றது.

## 5. மதிப்பீடுகளும் கணிப்பீடுகளும்

நமது பாடசாலைகளில் முன்னெடுக்கப்படுகின்ற மதிப்பீடு மற்றும் கணிப்பீட்டு முறைமைகள் பற்றிய மீள்பரிசீலனையும் நமக்கு அவசியமாகின்றது.

நமது பாடசாலைகளில் வெவ்வேறு அடிப்படைகளில் மதிப்பீடுகளும் (Evaluations), கணிப்பீடுகளும் (Assessments) மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு பாடத்திற்குமுரிய பாடசாலை மட்டக் கணிப்பீடு (School Based Assessment- SBA), ஒவ்வொரு அலகு முடிவடைந்த பின்னரான அலகுப் பரீட்சை (Unit Test), மாதாந்தம் நடத்தப்படுகின்ற மாதாந்தப் பரீட்சை (Monthly Test), ஒவ்வொரு தவணை முடிவிலும் நடத்தப்படுகின்ற தவணைப் பரீட்சை (Term Test) என்பவற்றோடு, அவ்வப்போது கல்வித் திணைக்களம் மற்றும் தனியார் அமைப்புகள் என்பவற்றினால் மேற்கொள்ளப்படுகின்ற பரீட்சைகள் என ஏராளமான பரீட்சைகளும், கணிப்பீடுகளும் நடத்தப்படுகின்றன. பரீட்சைகளினால் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிலும், அடைவு மட்டத்திலும் சாதகமான விளைவுகளை ஏற்படுத்த முடியும் என்ற எடுகோளை அடிப்படையாகக் கொண்டே இத்தகைய பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. ஆனால், இத்தகைய அபரிமிதமான பரீட்சைகள் ஆசிரியர்களின் செயற்பாடுகளிலும், இறுதியில் அவர்களின் உளநிலையிலும் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்ற விசாரிப்பை யாரும் மேற்கொள்வதில்லை.

பாடசாலைக் கற்பித்தலில், ஒவ்வொரு பாடத்திற்கும் குறிப்பிட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட அலகுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஒவ்வொரு தவணையிலும் முடிக்கப்பட வேண்டிய அலகுகளின் எண்ணிக்கையும வரையறுக்கப்பட்டுள்ளன. வருட ஆரம்பத்திலேயே, ஒவ்வொரு ஆசிரியரும், அந்த வருடத்திற்கான பாடத்திட்டத்தை தவணை, வாரம் மற்றும் நாள் என்ற அடிப்படையில் தயாரித்து முடித்து. அதன் அடிப்படையிலேயே தனது கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார். இந்நிலையில், தனது பாடத்திட்டத்துடன் தொடர்பற்ற வகையில், கல்வி அலுவலகங்களும், தனியார் அமைப்புக்களும் பரீட்சைகளை நடாத்துகின்றபோது, தான் ஏற்கனவே தயாரித்துள்ள பாடத்திட்டத்தில் இருந்தே அதற்கான நேரத்தை ஒதுக்க வேண்டிய நிலைக்கு ஒரு ஆசிரியர் உள்ளாகின்றார். அதேநேரத்தில், கல்வி அலுவலகங்களின் அனுமதி பெற்றநிலையில், பாடசாலைகளில் தமது உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகள் பற்றி அறிமுகப்படுத்த வருகின்ற விற்பனை முகவர்களினாலும், வங்கிகள் போன்ற அமைப்புகளினாலும், மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நோக்கத்தில், வைத்தியசாலை, சுகாதார திணைக்களம், பொலிஸ் திணைக்களம் போன்றவற்றினால் முன்னெடுக்கப்படுகின்ற நிகழ்ச்சிகளினாலும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் நேரங்களை இழக்கின்ற சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. இதனால், குறித்த தினங்களில் கற்பிக்கப்பட வேண்டிய பாட அலகுகளை, பாடசாலை நேரத்திற்குப் **பின்னரான மேலதிக நேரத்தில்** முடிக்க வேண்டிய இக்கட்டான நிலைமைக்கு அவர் ஆளாகின்றார். சில சந்தர்ப்பங்களில் பாடத்திட்டத்தை முடிக்க முடியாத நிலைமைக்கும் அவர் ஆளாகின்றார். வெறுமனே பரீட்சைகளை நடாத்துதல் என்பது மட்டுமின்றி, விடைத்தாள்களை திருத்தி, அவற்றை ஆவணப்படுத்த வேண்டிய பொறுப்பையும் அவர் மேற்கொள்ள வேண்டியவராகின்றார். தனியார் நிறுவனங்கள், பிரதானமாக தமது சொந்த நலன்களின் அடிப்படையில் முன்னெடுக்கின்ற இத்தகைய பரீட்சைகளின் காரணமாக, ஆசிரியர்கள் மேலதிக சுமைக்குள்ளாகின்றனர். இவை அனைத்துமே ஒரு ஆசிரியரின் உளவியலில் பெரும் தாக்கங்களை நிகழ்த்துவனவாக அமைந்திருக்கின்றன. பின்தங்கியுள்ள மாணவர்களுக்கும், மெல்லக் கற்கும் மாணவர்களுக்கும் பரிகாரக் கற்பித்தல்களை மேற்கொள்ள வேண்டும் என்றும், அடைவு மட்டங்களை அதிகரிப்பதற்காக விசேட செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் எதிர்பார்க்கப்படுகின்றார்கள். எனினும், எதார்த்த நிலைமைகளோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் இவற்றை முறையாகச் செய்ய முடியாத அளவுக்கு அவர்களை வேலைப்பளுவிற்குள்ளாக்குவதாக அமைந்துள்ளன.

பரீட்சைகளை நடாத்துவதோடு, விடைத்தாள்களை முறையாகத் திருத்தி, அவை பற்றிய பின்னூட்டலையும் மேற்கொள்ளும்போதுதான், இப்பரீட்சைகளின் மூலமாக சாதகமான விளைவுகளை எதிர்பார்க்க முடியும். ஆயினும் ஆசிரியர்கள் தமது பாடத்திற்கான விடைத்தாள்களை முறையாகத் திருத்துவதற்கான நேரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக அவஸ்த்தைப்படுகின்றார்கள். பாடசாலை நேரத்தில் ஏறக்குறைய முழுநேரமும், கற்பித்தலிலும், பாடசாலை சார்ந்த பிற கடமைகளிலும் ஈடுபட வேண்டிய கட்டாய நிலையில் ஆசிரியர்கள் உள்ளதால், இத்தகைய விடைத்தாள்களை திருத்துவதற்கு பாடசாலைக்கு புறம்பான **தமது சொந்த நேரங்களைச்** செலவிட வேண்டிய நிலைக்கு ஆளாகின்றார்கள். தமக்குரிய ஓய்வு நேரங்களாகவும், தமது குடும்பத்தினருடன் செலவிடுவதற்கான நேரங்களாகவும் உள்ள மாலை மற்றும் இரவு நேரங்கள், சனி, ஞாயிறு விடுமுறை தினங்கள் போன்ற வற்றை இதற்கென செலவிட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

நமது பாடசாலைகளில் மேற்கொள்ளப்படுகின்ற பரீட்சைகள், மற்றும் கணிப்பீடுகள் குறித்து நாம் சற்று ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும். ஒரு கணித ஆசிரியரை உதாரணமாகக் கொண்டு இத்தகைய பரிசீலிப்பை மேற்கொள்ள முடியும். ஒரு கணித ஆசிரியர் ஆறாம் வகுப்பில் இருந்து பதினோராம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு கணித பாடத்தை கற்பிப்பதாகக் கொள்வோம். அவர் தனது பாடத்திற்கான பாடசாலை மட்டக் கணிப்பீடாக, ஒவ்வொரு வகுப்பிற்கும் தலா ஐந்து கணிப்பீடுகள் வீதம் மொத்தமாக ஒரு தவணைக்கு **முப்பது கணிப்பீடுகளை** மேற் கொண்டு, அவற்றிற்கான புள்ளிகளை குறைந்தது மூன்று வெவ்வேறு அறிக்கைகளில் ஆவணப்படுத்த வேண்டும். இதைவிட, மாதாந்தம் ஒரு மாதப்பரீட்சை என்றவகையில் அவர் கற்பிக்கின்ற ஆறு வகுப்புகளுக் குமாக **பதினெட்டு பரீட்சைகளும்,** ஒவ்வொரு அலகும் முடிவடைந்த பின்னர் ஒவ்வொரு வகுப்பிற்கும் சராசரி ஐந்து அலகுப் பரீட்சைகள் என மொத்தமாக ஒரு தவணைக்கு **முப்பது அலகுப் பரீட்சைகளும்,** ஒவ்வொரு தவணை முடிவிலும் நடைபெறுகின்ற தவணைப் பரீட்சைக்காக **ஆறு பரீட்சைகளும்** நடாத்தி, அவற்றிற்கான புள்ளிகளை முன்னர் குறிப்பிட்டிருப்பது போன்று குறைந்தது மூன்று வெவ்வேறு அறிக்கைகளில் ஆவணப்படுத்த வேண்டும். அதாவது ஒரு கணித


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர், ஒரு தவணைக்கு மொத்தமாக, **எண்பத்தி நான்கு** பரீட்சைகள் அல்லது கணிப்பீடுகளை நடாத்தி, அவற்றிற்கான புள்ளிகளை மூன்று வெவ்வேறு அறிக்கைகளில் ஆவணப்படுத்த வேண்டியவராக உள்ளார். ஒரு தவணைக்கான பாடசாலை நாட்களோ சராசரியாக **எழுபது நாட்களாக** இருக்கின்றன. இவ்வகையில், ஒரு கணித ஆசிரியர் எழுபது நாட்களில், எண்பத்து நான்கு பரீட்சைகளை நடாத்தி, புள்ளிகளை ஆவணப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றார். அதாவது அவர் **ஒவ்வொரு நாளும் குறைந்தது ஏதாவது ஒரு வகுப்பிற்கு ஒரு பரீட்சையை அல்லது கணிப்பீட்டை நடத்த வேண்டியவராக உள்ளார்.** இதே உண்மை, பெரும்பாலான பிற ஆசிரியர்களுக்கும் பொருந்தக் கூடியதாகவே உள்ளது.

மேற்படி விபரங்களின் அடிப்படையில் பரிசீலிக்கையில், ஒரு ஆசிரியரால், தான் நடத்துகின்ற பரீட்சைகளுக்காக மாணவர்களின் விடைத்தாள்களை பாடசாலை நேரங்களில் திருத்த முடியாது என்ற உண்மையை தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது. எனவே அவர், இந்த பணிகளை, பாடசாலைக்கு புறம்பான நேரங்களில் செய்து முடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றார். இது அடிப்படையில் அவரது உரிமைகளை மீறுவதாகவும், ஊதியமற்ற வகையில் அவர் கடுமையாக சுரண்டப்படுவதாகவும் ஆகின்றது. தனக்குரிய சொந்த நேரங்களை, ஊதியமற்ற வகையில் செலவழிக்க வேண்டியிருக்கின்ற நிலையில், ஒரு ஆசிரியரால் மேற்கொள்ளப்படுகின்ற விடைத்தாள்களை திருத்துகின்ற செயற்பாடு எவ்வளவு தூரம் சரியானதாகவும், அக்கறையுடன் கூடியதாகவும் இருக்கும் என்ற கேள்வி எழும்புகின்றது. ஒரு விடைத்தாளைத் திருத்துவதற்கு குறைந்தது பதினைந்து நிமிடங்கள் தேவைப்படுகின்றன எனக் கொண்டால், முப்பது மாணவர்கள் உள்ள ஒரு வகுப்பிற்குரிய விடைத்தாள்களை திருத்துவதற்கு ஒரு ஆசிரியருக்கு நாளாந்தம் நானூற்றி ஐம்பது நிமிடங்கள் தேவைப்படுகின்றன. அதாவது, **ஏழு மணித்தியாலங்களும், முப்பது நிமிடங்களும்** தேவையாகின்றன. இது பாடசாலை நடைபெறும் நேரத்தை விடவும் அதிகமானது. ஒரு ஆசிரியர் பாடசாலை முடிவடைந்து, பிற்பகல் மூன்று மணிக்கு விடைத்தாள்களை திருத்தும் பணியில் முழுநேரமாக ஈடுபடுவாராயின், அப்பணியை அவர் நிறைவு செய்யும்போது, இரவு பத்து முப்பது மணியாகி விடும். இவ்வாறு ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு வகுப்பிற்கு பரீட்சை நடத்தி, புள்ளிகள் வழங்கி, அவற்றை ஆவணப்படுத்த வேண்டியுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நிலை ஒரு ஆசிரியரின் உளநிலையையும், உடல்நிலையையும், அவரது கற்பித்தல் பணிகளையும் எவ்வாறு பாதிக்கக் கூடியதாக இருக்கின்றது என்ற புரிதலை ஒருவர் இலகுவாகப் பெற முடியும். தனது சொந்தத் தேவைகள், தனது குடும்பத்தின் தேவைகள் என பலவற்றை அர்ப்பணித்தே அவர் இவற்றைச் செய்ய வேண்யடிவராக இருக்கின்றார். (இவற்றோடு, ஒரு ஆசிரியர் பாட ஆயத்தத்திற்காக நாளாந்தம், நான்கு மணித்தியாலங்கள் வரை செலவிட வேண்டியநிலையில் உள்ளார் என்ற எதார்த்தத்தையும் கவனத்தில் கொள்ளும்போது, ஆசிரியர்கள் எத்தகைய உளநெருக்கடிகளுக்குள் ஆளாகின்றார்கள் என்ற உண்மையைப் புரிந்து கொள்ள முடியும்.)

இதுதான் வழக்கமான, நாளாந்த நடைமுறையாக அமையும்போது, வினாக்களை உரிய மட்டங்களில் பேணுவதும், விடைத்தாள்களை திருத்துவதில் காட்டுகின்ற ஈடுபாடும் தானாகவே ஒரு ஆசிரியரிடம் இருந்து அகன்று விடுகின்றன. உண்மையில், வினாக்களும், விடைகளும் மாணவர்களின் அடைவு மட்டத்தை அளவிடுகின்ற முக்கிய அளவுகோல்களாக இருக்கின்றன. எனினும், இவை அளவு கடந்தவையாகவும், ஆசிரியர்களின் மீது தொடர்ச்சியாக சுமைகளை ஏற்படுத்துவனவாகவும் அமைந்துள்ள நிலையில், பாடசாலைகளைப் பொறுத்தவரையில் இவை வெறும் சம்பிரதாயபூர்வமானவையாகவும், இயந்திரத்தன்மையானவையாகவும் மாறி வருகின்றன.

அர்ப்பணிப்பும், தியாகசிந்தனையும் உள்ளவர்களாக செயற்பட வேண்டும் என்று ஆசிரியர்கள் எதிர்பார்க்கப்படுகின்றார்கள். பொது நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும் ஆசிரியர்களை நோக்கி இந்தக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. எனினும் இக்கோரிக்கை ஒரு சம்பிரதாயபூர்வமானதாகவே அமைந்திருக்கின்றது. அடிப்படையில், **ஆசிரியர்கள் ஏற்கனவே அளவுக்கு மீறிய அர்ப்பணிப்புடனும், தியாகத்துடனும்தான் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்** என்ற உண்மையை புரிந்து கொள்ளாத நிலையிலும், ஆசிரியர்களினால் தாங்க முடியாத அளவுக்கு அவர்களின் மீது பணிச்சுமைகள் சுமத்தப்பட்டிருக்கின்றன என்பதை கவனத்தில் கொள்ளாத நிலையிலும் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கையாகவே இது அமைந்திருக்கின்றது. இந்நிலையில் ஆசிரியர்களை நோக்கி மீண்டும், மீண்டும் இக்கோரிக்கை முன்வைக்கப்படுகின்றபோது, அது ஆசிரியர்களை குற்றவுணர்விற்குட்படுத்துவதாகவும், அவர்களின் உளநிலையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமான பாதிப்புகளை ஏற்படுத்துவதாகவும் அமைகின்றது.

பாடசாலை மட்டக் கணிப்பீடு என்பது ஆசிரியர்களுக்கு சுமையானதாக இருப்பதோடு, நடைமுறையில் மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு பயனற்ற ஒன்றாகவும் மாறியுள்ளது. ஒவ்வொரு கணிப்பீடும் பாடசாலை நேரத்தில், **நாற்பது நிமிடங்களுக்குள் அல்லது எண்பது நிமிடங்களுக்குள்** நடத்தி முடிக்கப்பட வேண்டியதாக உள்ளது. அடிப்படையில், பாடசாலை மட்டக் கணிப்பீடானது, மாணவர்களிடையே காணப்படுகின்ற **வெவ்வேறு ஆற்றல்களையும், திறமைகளையும்** பரீட்சிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது. மாணவர்களிடையே காணப்படுகின்ற எழுத்தாற்றல், பேச்சாற்றல், தேடல், குழுச் செயற்திறன், முன்வைப்பு, நடிப்புத் திறன் என பல்வேறு திறன்களை மதிப்பிடுவதை இக்கணிப்பீடு இலக்காகக் கொண்டுள்ளது. இதற்கென **ஐந்து அம்சங்களின் கீழ்** புள்ளிகள் வழங்கப்பட வேண்டும் என்பது நிபந்தனையாக்கப்பட்டுள்ளது. ஆயினும் நடைமுறையில், இந்த வரையறைகளை பின்பற்ற முடியாத நிலையில் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். முப்பது மாணவர்களைக் கொண்ட ஒரு வகுப்பில், கிட்டத்தட்ட இரண்டு நிமிடங்கள் மட்டுமே ஒரு மாணவருக்கு செலவழிக்க வேண்டியிருக்கின்ற நிலையில், அவரது திறமைகளை ஐந்து அம்சங் களின் கீழ் மதிப்பிட்டு புள்ளிகளை வழங்குவது என்பது மிகுந்த சிரமத்திற்குரிய விடயமாக இருக்கின்றது. மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இது சாத்தியமாவதில்லை. ஒப்படைகள் மற்றும் குழுச் செயற்பாடு என்பவற்றில், குடும்ப உறுப்பினர்கள், மற்றும் ஒரு குழுவிலுள்ள திறமைமிக்க மாணவர்களில் ஏனைய மாணவர்கள் தங்கியிருப்பதால், மாணவர்களின் உண்மையான ஆற்றலை இக்கணிப்பீட்டினூடாக அடையாளம் காண முடியாத நிலைமையை ஆசிரியர்கள் எதிர்கொள்கின்றார்கள். எழுத்து ரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற கணிப்பீட்டில், ஐந்து வெவ்வேறு அம்சங்களையும் மதிப்பிடும்வகையில் வினாக்களை வழங்குவதும் சாத்தியமற்ற ஒன்றாக உள்ளது. மிகக் குறுகிய நேரத்தில் நடத்தி முடிக்கப்பட வேண்டியுள்ள ஒரு கணிப்பீடு என்றவகையில், வினாக்கள் சுருக்கமானதாகவும், குறைவானதாகவும் இருக்கின்றன. இந்நிலையில் இத்தகைய ஐந்து அம்சங்களையும் உள்ளடக்கும் வகையில் வினாக்களை வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மீளாய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இயந்திரத்தன்மையான முறையில் இக்கணிப்பீடுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தி முடிக்கப்படுகின்றன. ஈற்றில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டினூ டாக, மாணவர்களின் ஆற்றல்களும், பலவீனங்களும் அடையாளம் காணப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நிறைவேறாது போகின்ற நிலை உருவாகின்றது. ஒவ்வொரு தவணையிலும் செய்ய வேண்டியுள்ள பிற மதிப்பீடுகளுடன், எண்ணிக்கையில் அளவுக்கதிமாக உள்ள பாடசாலை மட்டக் கணிப்பீடுகளையும் நடத்தி அவற்றை வெவ்வேறு கோப்புகளில் ஆவணப்படுத்த வேண்டியுள்ள சிரமத்தின் காரணமாக, இக்கணிப்பீட்டை வினைத்திறனுடன் முன்னெடுக்க முடியாத நிலைக்கு ஆசிரியர்கள் ஆளாகியுள்ளனர்.

இவற்றோடு இன்னுமொரு முக்கியமான அம்சமும் இக்கணிப்பீட்டில் உள்ளடங்கியுள்ளது. பாடசாலை காலத்தில் மாணவர்களின் அடைவு மட்டத்தையும், திறமைகளையும் பரீட்சிக்கின்ற ஒரு சுட்டியாக இக்கணிப்பீடுகள் கருதப்படுகின்றபோதிலும், நடைமுறையில் அத்தகைய தன்மையை அது கொண்டிருக்கவில்லை என்று மேலே பார்த்தோம். அதேநேரத்தில், தேசிய மட்டப் பரீட்சைகளான க.பொ.த சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சைகளின்போது, இக்கணிப்பீடுகள் முக்கியமானவை என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இத்தேசிய மட்டப் பரீட்சைகள் இடம்பெறுவதற்கு முன்னர், பாடசாலை மட்ட கணிப்பீட்டில் மாணவர்கள் பெற்றிருக்கின்ற புள்ளிகள் முறையாகப் பட்டியலிடப்பட்டு, பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. எனினும், **இக்கணிப்பிட்டின் பெறுபேறுகள், எந்தவொரு மாணவரின் இறுதிப் பெறுபேறுகளில் மாற்றம் எதையும் இதுவரை ஏற்படுத்தவில்லை.** உண்மையில், பாடசாலைக் காலத்தில் வெவ்வேறு ஆற்றல்களை கொண்டிருந்து, கணிப்பீடுகளில் சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள், தேசியப் பரீட்சைகளின்போது, வெவ்வேறு காரணங் களினால் சிறப்பான புள்ளிகளைப் பெறாதபோது, இக்கணிப்பீட்டுப் புள்ளிகள் அவர்களுக்கு உதவ வேண்டும். ஆனால் நடைமுறையில் அவ்வாறு எவ்விதத்திலும் இக்கணிப்பீட்டுப் புள்ளிகள் மாணவர்களுக்கு உதவியதில்லை. இவ்வாறு ஆசிரியர்களுக்கு உளவியல் ரீதியாகவும், உடலியல் ரீதியாகவும் பெரும் சுமையாகவும், மாணவர்களுக்கு பெரியளவில் பயனற்றதாகவும் அமைந்திருக்கின்ற பாடசாலை மட்ட கணிப்பீடு குறித்து, புதிய பார்வை அவசியமாகின்றது. அவற்றின் **எண்ணிக்கையை குறைத்தல், அதன் பயன்பாட்டை அதிகரித்தல்** என புதிய கண்ணோட்டத்தில் இது குறித்த பரிசீலனை நமக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமாகின்றது.

பரீட்சை தொடர்பாக கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் நிலவுகின்ற எண்ணப்பாங்கானது, ஆசிரியர்களின் கற்பித்தல் முறையில் குழப்ப நிலையை ஏற்படுத்துவதாக உள்ளது. தேசிய மட்டத்தில் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளான க.பொ.த (சா.த) மற்றும் க.பொ.த (உ.த) பரீட்சைகளில் கேட்கப்படுகின்ற பெரும்பாலான வினாக்கள், பாடத்திட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை நேரடியாகப் பரீட்சிப்பதற்குப் பதிலாக, அவற்றை சுற்றி வளைத்து பரீட்சிக்கின்ற முறைமையைப் பின்பற்றி அமைக்கப்படுகின்றன. இம்முறையானது, குறிப்பிட்ட ஒரு பாடத்தில் மாணவர்கள் பெற்றுள்ள அறிவு, விளக்கம், மற்றும் அடைவு மட்டம் போன்றவற்றைப் பரீட்சிப்பதோடு, அவர்களின் நுண்ணறிவு ஈவை (Intelligent Quotient- IQ) பரீட்சிப்பதையும் பிரதான இலக்காகக் கொண்டதாக அமைந்திருக்கின்றது.

இத்தகைய பரீட்சை முறை ஆசிரியர்களைக் குழப்பத்திற்குள்ளாக்கி யுள்ளது. அவர்கள் தமது பாடங்களை மட்டுமன்றி, அப்பாடங்களில் சுற்றி, வளைத்த முறையில் கேட்கப்படவுள்ள வினாக்களை எவ்வாறு புரிந்து கொள்வது, அவற்றிற்கு எவ்வாறு விடைகளை எழுதுவது போன்ற விடயங்களையும் சேர்த்து கற்பிக்க வேண்டியவர்களாக உள்ளார்கள். ஒவ்வொரு வருடமும் தேசிய மட்டப் பரீட்சைகள் எழுதுகின்ற மாணவர்கள், "இம்முறை 'மொடல்' மாற்றப்பட்டுள்ளது" என்று முறையிடுவது எமது நாட்டில் பொதுவான நிகழ்வாக அமைந்துள்ளது. இதனால், அடுத்த முறை பரீட்சையில் எவ்வாறான மாற்றங்கள் நிகழ்த்தப்படலாம் என்று ஊகித்து, கற்பிக்க வேண்டிய சிக்கலுக்குள்ளானவர்களாகவும் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். நவீன கல்வி முறையில், பரீட்சை முறைமையானது, நேரடித்தன்மையானதாகவும், சுருக்கமானதாகவும், பாடப்பரப்புகள் சார்ந்த மாணவர்களின் புரிதலையும், அடைவையும் பரீட்சிப்பதை இலக்காகக் கொண்டதாகவும் அமைந்திருக்கையில், நமது நாட்டில் இதற்கு முற்றிலும் மாறானதாக, பரீட்சைகள் மேலும் மேலும் சிக்கலானதாகவும், கடினத் தன்மை கொண்டதாகவும் மாற்றப்பட்டு வருகின்றன. ஒரு ஆசிரியர், தனது கற்பித்தல் உயர்ந்த நிலையில் இருக்கின்றது என்பதை நிரூபிப்பதற்கான முக்கிய குறிகாட்டியாக, தேசிய மட்டப் பரீட்சைகளில் அவரது பாடத்தில் மாணவர்கள் பெற்றுக் கொள்கின்ற பெறுபேறுகளே அமைந்திருக்கின்றன. இந்நிலையில், சிக்கலானதும், கடினத்தன்மை கொண்டதுமான பரீட்சை முறைகளினால்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் சித்தி பெறத் தவறுகின்றபோது, அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய நிலைக்கு ஆசிரியர்கள் உள்ளாகின்றார்கள். அவமானத்தையும், நிர்வாக ரீதியில் அச்சத்தையும் ஏற்படுத்துவதாக அமைந்துள்ள இத்தகைய பொறுப்புக் கூறலானது, ஆசிரியர்களின் உளநிலையில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இன்று கல்வியில் மிக உயர்ந்த நிலையை அடைந்துள்ள தென்கொரியாவின் அனுபவம், பல வழிகளில் நமக்கு உதவக் கூடியதாக இருக்கின்றது. அந்நாட்டில் பின்பற்றப்படுகின்ற தாய்மொழிக் கல்வி, நவீன உபகரணப் பயன்பாடு, குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்ட விசாலமான வகுப்பறைகள், செயன்முறைக் கற்றல், ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற அதியுயர் முக்கியத்துவம், சுயாதீனம் மற்றும் அதிகூடிய ஊதியம், அதிகார மற்றும் நிர்வாகத் தலையீடுகளற்ற பாடசாலைச் சூழல். என்பவற்றோடு குறுகிய கால அளவிலான பரீட்சை முறையும் அக்கறைக்குட்படுத்தப்பட வேண்டிய விடயங்களாக உள்ளன. நமது நாட்டின் க.பொ.த சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சைகளுக்கு ஒத்த பரீட்சைகள் அந்நாட்டில் ஒரே நாளில், காலை 8.30 மணிக்கு தொடங்கி மாலை 4.30 மணிக்கு முடிவடைகின்றன என்ற நம்ப முடியாத உண்மையை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். **அரை மணித்தியாலம் தொடக்கம் ஒரு மணித்தியாலம் வரையிலான கால அளவுகளை மட்டும் கொண்டதாக** அங்கு ஒவ்வொரு பாடத்திற்குமான பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. நேரடியான கேள்விகள், சுருக்கமான விடைகள் என்பவற்றை உள்ளடக்கியதான பரீட்சைகள் மூலமாக தெரிவு செய்யப்படுகின்றவர்களே, இன்று அந்நாடு தொழில்நுட்பத்திலும், பொருளாதாரத்திலும் உயர்ந்த நிலையை அடைவதற்கு காரணமாகியுள்ளார்கள் என்ற உண்மை நமது நாட்டில் அக்கறைக்குட்படுத்தப்பட வேண்டும். வளர்ச்சியடைந்துள்ள இத்தகைய நாடுகளின் கல்வி முறைமையும், பரீட்சை முறைமையும் நமது நாட்டின் கல்வி மற்றும் பரீட்சை முறைமைகளுடன் எந்தளவுக்கு வேறுபடுகின்றன என்ற கரிசனை நமக்கு அவசியமாகின்றது.

இந்த அனுபவங்கள் அனைத்துமே, கல்வி திட்டங்களை வகுப்போர், பாடநூல்கள் தயாரிப்பில் பங்குகொள்வோர் மற்றும் வினாத்தாள்கள் தயாரிப்பில் பங்குகொள்வோர் ஆகிய பிரிவினர்களின் கருத்தியல்களில் மாற்றம் அவசியம் என்பதைச் சுட்டிக் காட்டுவதாக அமைந்திருக்கின்றன. மாணவர்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றவிதத்திலும், மற்றும் முன்வைக்கப்படுகின்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துபவர்கள் என்ற வகையிலும், கல்வித் திட்டங்களை வகுப்பதில் ஆசிரியர்களின் கருத்துக்களை உரிய முறையில் உள்வாங்குவதற்கான பொறிமுறைகள் ஏற்படுத்தப்படுவது அவசியமாகின்றது. நகரப் பகுதிகளைச் சேர்ந்த சில ஆசிரியர்களினதும், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், அல்லது கல்வி அதிகாரிகளினதும் கருத்துக்களைப் பெறுவது மட்டும் போதுமானதல்ல. பதிலாக, பரந்தளவிலான உரையாடல் இடம்பெறுவதற்கும், ஆரோக்கியமான முறையில் கருத்துக்கள் முன்வைக்கப்படுவதற்குமான சூழல் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் தேசியத் தன்மை கொண்ட ஒரு உறுதியான கல்வித் திட்டம் வகுக்கப்படுவதும், அது உறுதியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதும் சாத்தியமாகும்.

## 6. பிற நிறுவனங்கள்

நமது நாட்டில் கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் கணிசமான பிறநாட்டு நிறுவனங்கள், பல உதவித் திட்டங்களை இங்கு முன்னெடுத்து வருகின்றன. பாடசாலைகளின் பௌதிக வளங்களை மேம்படுத்தல், புதிய கட்டிடங்கள் மற்றும் ஏனைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற திட்டங்களை முன்னெடுப்பதோடு, குறிப்பிட்ட சில பாடங்களில் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான கல்வி செயற்பாடுகளுக்கும் இவை உதவி புரிந்து வருகின்றன. இத்தகைய நடவடிக்கைகளுக்காக இந்நிறுவனங்கள் மில்லியன் கணக்கான ரூபாய்களை செலவிட்டு வருகின்றன. இவற்றினால், பல பாடசாலைகளும், மாணவர்களும் பயன் பெற்று வருகின்றனர்.

எனினும் இந்நடவடிக்கைகள் - குறிப்பாக மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்காக முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் - குறிப்பிட்ட பாடங்களைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு மேலதிக சுமையை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கின்றன. இத்தகைய செயற்பாடுகளை பாடசாலை நேரங்களில் முன்னெடுக்க முடியாததால், பெரும்பாலும் இவை பாடசாலைக்கு புறம்பான நேரங்களிலும், விடுமுறை தினங்களிலும் முன்னெடுக்கப்படுகின்றன. இச்செயற்பாடுகளுக்கு குறித்த பாட ஆசிரியர்கள் பங்கேற்பது அவசியமானது மட்டுமன்றி, அவர்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய செயற்திட்டங்களை நிறைவேற்ற வேண்டியவர்களாகவும் இருக்கின்றார்கள். தமக்குரிய நாளாந்த வேலைப் பளுவோடு, புதிதாக தம்மிடம் ஒப்படைக்கப்படுகின்ற இத்தகைய பொறுப்புகளினால் அவர்கள் கடுமையான பணிச்சுமைக்கும், மன உளைச்சல்களுக்கும் உள்ளாகின்றார்கள். **இச்செயற்திட்டங்களில் நிர்வாக ரீதியாகவும், கண்காணிப்பாளர்களாகவும் பங்கேற்கின்றவர்கள் பல ஆயிரக்கணக் கான ரூபாய்களை ஊதியமாகப் பெறுகின்ற அதேநேரத்தில், இத்திட்டங்களை நேரடியாக முன்னின்று நிறைவேற்றுகின்ற ஆசிரியர்களுக்கு எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதில்லை. அல்லது மிகக் குறைவான கொடுப்பனவுகளே வழங்கப்படுகின்றன.** ஊதியமற்ற உழைப்பை அல்லது குறைந்த ஊதியத்துடனான உழைப்பை வழங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ள இந்த ஆசிரியர்கள், இதன் மூலமாக கடுமையான சுரண்டலுக்குட்படுபவர்களாக உள்ளார்கள். தமது நேரம், குடும்பக் கடமைகள், குடும்பத்தினருடனான தமது உறவாடல் என அனைத்தையும் இழந்து, இலவசமாக பணி செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகின்ற இத்தகைய ஆசிரியர்களின் உளநிலையானது கடுமையான முறையில் பாதிப்பிற்குள்ளாகின்றது.

## 7. ஆசிரியர்களின் வாண்மைநிலையும், ஆளுமையும்

**இன்றைய கல்வி முறைமை எதிர்பார்க்கின்ற அறிவையும், ஆற்றல்களையும் கொண்டவர்களாக, இன்றுள்ள நமது ஆசிரியர்கள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை** என்பதை நாம் முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும். தமது பாடம் சார்ந்த அறிவு ரீதியாக, மாணவர்களை விட, ஆசிரியர்கள் உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள் என்று கூற முடியும். ஆயினும், இன்று ஆசிரியர்களின் வகிபாகம் என்பது, கற்பித்தலுடன் மட்டும் எல்லைப்படவில்லை. கூடவே, வழிகாட்டல், ஆலோசனை, கண்காணிப்பு, அடையாளம் காணுதல் என **கற்பித்தல் சாராத** செயற்பாடுகளையும் கொண்டிருப்பதால், இவற்றை முறையாக மேற்கொள்வதற்கு, இவை குறித்த அறிவும் பயிற்சியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியம். பிரதானமாக உளவியல் ரீதியான அறிவும், நவீன தொழில்நுட்ப அறிவும், ஆங்கில அறிவும் ஆசிரியர்களுக்கு அவசியமாகின்றன. எனினும் துரதிஷ்டவசமாக, இவை கல்விக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும், ஆழமாகவும், உரிய அளவிலும் கற்பிக்கப்படுவதில்லை. பல சந்தர்ப்பங்களில், இவற்றிற்குரிய வகுப்புகள் முறையாக நடத்தப்படுவதுமில்லை. இவற்றை அறிந்து கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய பொறுப்பு, கற்பவர்களிடமே ஒப்படைக்கப்படுகின்றது. அவர்கள் இவற்றை சுயமாகக் கற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் பொதுவாக இந்த எதிர்பார்ப்பு சாத்தியமாவதில்லை. கல்விக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் கற்கின்றவர்கள் தமக்குரிய பிரதான பாடங்களை கற்று, அவற்றில் சித்தியடைவது அவசியமாக இருக்கின்ற நிலையில், அந்தப் பாடங்களுக்கே அதிக முக்கியத்துவம் வழங்குகின்றார்கள். அப்பாடங்கள், ஏற்கனவே அவர்கள் பாடசாலைகளில் கற்ற பாடங்களின் தொடர்ச்சியாகவும், நீட்சியாகவும இருப்பதால், அவற்றை ஒப்பீட்டளவில் எளிதாகவும், கூடுதல் ஆர்வத்துடனும் அவர்களால் கற்க முடிகின்றது. ஆனால், உளவியல், தொழில் நுட்பங்கள் சார்ந்த விடயங்கள் என்பவை முற்றிலும் புதியதாக இருப்பதாலும், ஒப்பீட்டளவில் கடினமானவையாக இருப்பதாலும், அவற்றைக் கற்பதில் பெரியளவிலான ஆர்வத்தை அவர்கள் காட்டுவதில்லை. அதேவேளை இவை முறையாகவும், சுவாரஷ்யமாகவும் கற்பிக்கப்படாமலும், கற்பவர்களின் சுயகற்றலுக்குரியதாகவும் விடப் படும்போது, அவை பற்றிய போதிய அறிவையும், ஆற்றலையும் பெறுவதில் பெரும்பாலானோர் தவறி விடுகின்றார்கள். இதனால் இவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றபோது, மாணவர்கள் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளையும், பிரச்சினைகளையும் சரியாக அடையாளம் காண முடியாதவர்களாகவும், அவர்களை முறையாக வழிகாட்ட முடியாதவர்களாகவும் மாறுகின்றார்கள்.

இந்த நிலை, ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றுவதற்குக் காரணமாகின்றது. மாணவர்களின் குறிப்பிட்ட பருவங்களில் ஏற்படுகின்ற உடல், உள, மற்றும் அறிவு ரீதியான மாற்றங்களை ஆசிரியர்கள் சரியாகப் புரிந்து கொள்வது அவசியமாகின்றது. இது மாணவர்களுக்குள் ஏற்படக் கூடிய உளரீதியான குழப்பங்களையும், பதற்றங்களையும் அடையாளம் கண்டு, அவற்றுக்கு வழிகாட்டுவது மட்டுமன்றி, அவர்களின் அறிவு வளர்ச்சியைப் புரிந்து, அதற்கேற்ப கற்பிக்கவும், வழிகாட்டவும் அவசியமானது. இத்தகைய ஆற்றலை ஆசிரியர்கள் கொண்டிராதபோது, அவர்களினால் தமது வகுப்புகளை முறையாக முகாமை செய்ய முடியாத நிலை உருவாகின்றது. இது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே சுமுகமற்ற உறவு நிலை உருவாகக் காரணமாகின்றது. இந்நிலையில் இத்தகைய ஆசிரியர்கள், தமது பாடங்களைக் கற்பதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் ஆர்வமில்லாதவர்களாக இருப்பதோடு, அவர்கள் கட்டுப்பாடில்லாதவர்களாகவும், மரியாதையற்றவர்களாகவும், ஒழுக்க மில்லாதவர்களாகவும் இருக்கின்றார்கள் என்று கருதுகின்ற நிலை உருவாகின்றது. மாணவர்கள் குறித்து ஆசிரியர்கள் இத்தகைய மனநிலையைப் பெறுகின்றபோது அவர்கள், குறித்த மாணவர்களுடன் கடுமையாக நடந்து கொள்கின்றவர்களாக மாறுகின்றார்கள், அல்லது அவர்களில் அக்கறையற்றவர்களாக மாறுகின்றார்கள். இது மறுபுறத்தில், அத்தகைய ஆசிரியர்களின் மீது மாணவர்களின் விருப்பும், மரியாதையும் அற்றுப் போவதோடு, அந்த ஆசிரியர்களின் பாடங்கள் மாணவர்களுக்கு சலிப்பூட்டுவதாகவும், மாறுகின்றன. இதன்பின்னர், குறிப்பிட்ட ஆசிரியர்கள் - மாணவர்களிடையிலான உறவுநிலை ஆரோக்கியமற்றதாகவும், கற்பித்தல் - கற்றல் செயற்பாடுகள் தோல்விக்குரியதாகவும் மாறுகின்றன.

பாடசாலைகளில், ஆசிரியர் - மாணவர் உறவில் பாதிப்பைச் செலுத்துகின்ற இன்னும் ஒரு காரணியாக, தனியார் கல்வி நிலையங்கள் அமைந்திருக்கின்றன. இன்றைய நிலையில், தனியார் கல்வி நிலையங்களின் மீது மாணவர்களுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும் அதீதமான ஆர்வம் ஏற்பட்டிருக்கின்றது. **ஒப்பீட்டளவில், பாடசாலைகளை விட, தனியார் கல்வி நிலையங்களில் பாடத்திட்டங்கள் முறையாக முடிக்கப்படுகின்றன.** அங்கு ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமைகள் பல்தரப்பட்டதாக அமைந்திருக்கின்றன. தமது நிலையங்களுக்கு அதிக மாணவர்களை கவர வேண்டும் என்ற போட்டியின் காரணமாக தனியார் கல்வி நிலையங்கள், சுவாரஷ்யமானதும், இலகுவானதுமான கற்பித்தல் முறைமைகளை அறிமுகப்படுத்துகின்றன. இவற்றின் விளைவாக, தனியார் கல்வி நிலையங்கள் மீதான மாணவர்களின் ஆர்வம் அதிகரித்து வருகின்றது. அத்துடன், தமக்கு விரும்பிய தனியார் கல்விநிலையத்தையும், விரும்பிய ஆசிரியரிடம் கற்பதற்கான தெரிவையும் மேற்கொள்ளக் கூடிய சுயாதீன நிலைமை மாணவர்களுக்கு கிடைக்கின்றது. இத்தகைய நிலை, பாடசாலைகளில் தமக்கு கற்பிக்கின்ற ஆசிரியர்கள் குறித்து ஒரு எதிர்மறையான மதிப்பீட்டை பெறுகின்ற நிலைக்கு மாணவர்களை இட்டுச் செல்கின்றது. பல்வேறு வேலைப்பளுவின் காரணமாக, பாடசாலைகளில் ஆசிரியர்கள் கற்பித்தலில் முழுமையாக ஈடுபட முடியாதிருப்பதாலும், ஒரு ஆசிரியர் கிட்டத்தட்ட ஒரேவிதமான கற்பித்தல் முறையையே தொடர்ந்தும் பின்பற்றுவதாலும் அவர்கள் மீதான ஆர்வமும் ஈர்ப்பும் மாணவர்களுக்கு குறைகின்றன. இந்த நிலை, மாணவர்கள் மத்தியில்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக வளர்ந்த மாணவர்களிடையே தமது ஆசிரியர்களை மதித்தல் மற்றும் மரியாதை செலுத்துதல் போன்ற விடயங்களில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. தம்மை மாணவர்கள் மதிப்பதில்லை, அல்லது தமக்கு மரியாதை செலுத்துவதில்லை என்ற நிலை அல்லது இத்தகைய உணர்வு, ஆசிரியர்களின் உளநிலையில் பாதிப்பை உருவாக்குகின்றது.

தனியார் கல்வி நிலையங்கள், மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்ற செல்வாக்கானது, ஆசிரியர் - மாணவர் உறவில் இன்னொரு வகையிலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. மாணவர்களைத் தண்டித்தல் என்பது, இப்போது சட்டரீதியாக தடைசெய்யப்பட்டுள்ள ஒரு விடயமாக அமைந்திருக்கின்றது. எனவே பாடசாலைகளில், ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டித்தல் என்பது படிப்படியாகக் குறைந்து வருகின்றது. இங்கு தண்டித்தல் என்பதை, குறிப்பாக **அடித்தல்** என்ற அர்த்தத்திலேயே பயன்படுத்துகிறோம். வார்த்தைகள் மூலமாக தண்டித்தல், நிற்க வைத்தல், முழங்காலில் வைத்தல். போன்ற பௌதிகரீதியான தண்டனைகள் போன்றவை இன்னமும் பாடசாலைகளில் பெருவழக்காக இருக்கின்றபோதிலும், பல ஆசிரியர்கள் மாணவர்களை அடித்தல் என்பதை நிறுத்தி விட்டார்கள். ஆனால் இதற்கு மாறாக, தனியார் கல்வி நிலையங்களில், அடித்தல் என்பது பரவலாக இடம்பெறுகின்றது. பாடசாலைகளில் ஆசிரியர்கள், வாய்மொழியாகவோ, அல்லது பௌதிக ரீதியாகவோ மாணவர்களைத் தண்டிக்கும்போது, அதை எதிர்த்து, மாணவர்களின் பெற்றோர்கள் சட்டநடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற நிலை ஆங்காங்கே உருவாகியுள்ளது. ஆனால், தனியார் கல்வி நிலையங்களில் தமது பிள்ளைகளை அடிக்கின்ற ஆசிரியர்களுக்கு எதிராக பெற்றோர்கள் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. சிறந்த தனியார் கல்வி நிலையங்களில் அல்லது சிறந்த ஆசிரியர்களிடம் தமது பிள்ளைகள் கற்பதற்கான வாய்ப்பை இழந்து விடுவார்கள் என்ற அச்சத்தில் இத்தகைய தண்டனைகளை அவர்கள் ஏற்றுக் கொள்கின்றார்கள். இத்தகைய இரட்டைநிலை, பாடசாலை ஆசிரியர்களின் உளநிலையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. பொதுவாக, தனிப்பட்ட கோபத்தின் அடிப்படையில், எந்த ஒரு மாணவனையும், அல்லது மாணவியையும் ஆசிரியர்கள் தண்டிப்பதில்லை. அத்துடன் தண்டிக்க வேண்டும் என்ற விருப்பத்திலும் ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிப்பதில்லை. தண்டிப்பதன் மூலமாக, கற்றல் மீதான மாணவர்களின் அக்கறை அதிகரிக்கும் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணத்திலும், தண்டனையானது, மாணவர்கள் தவறாகச் செல்வதில் இருந்து அவர்களைப் பாதுகாக்கும் என்ற எதிர்பார்ப்பிலுமே ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிக்கின்றார்கள். ஆனால் இப்போது மாணவர்களை தண்டிக்க முடியாத சூழல் உருவாகியிருப்பதால், அவர்களின் கற்றல் மீதும், அவர்களை நெறிப்படுத்தவதிலும் தமது செல்வாக்கைச் செலுத்த முடியாதிருக்கின்ற நிலையை ஆசிரியர்கள் உணர்கிறார்கள். இது ஆசிரியர்களின் உளநிலையில், தாம் முக்கியத்துவமற்றவர்கள் என்ற உணர்வு ஏற்படுவதற்குக் காரணமாகின்றது.

இப்போது பாடசாலைகளில் ஆசிரியர்கள் மத்தியில் நிலவுகின்ற **பாலின ரீதியான எண்ணிக்கை வேறுபாடும்,** ஆசிரியர் - மாணவர் உறவில் பாதிப்பைச் செலுத்துகின்ற மற்றொரு காரணியாக விளங்குகின்றது. 1980களில் இருந்து பாடசாலைகளில் கடமைபுரிகின்ற பெண் ஆசிரியர்களின் எண்ணிக்கை படிப்படியே அதிகரித்து வந்திருக்கின்றது. இப்போது, இலங்கையிலுள்ள ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கையில் பெண் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாகவிட்டது. நாடு முழுவதிலும் உள்ள ஆசிரியர்களில் **ஏறத்தாழ 60 வீதமானோர் பெண் ஆசிரியர்களாக** இருக்கின்றார்கள். 2013ஆம் ஆண்டில், கிழக்கு மாகாணப் பாடசாலைகளில், பெண் ஆசிரியர்கள் 12,579 பேரும், ஆசிரியர்கள் 10,145 பேரும் பணிபுரிபவர்களாக இருந்தார்கள். (இப்போது பெண் ஆசிரியர் களின் எண்ணிக்கை மேலும் கூடியிருக்கும்.) சில பாடசாலைகளைத் தவிர, பெரும்பாலான பாடசாலைகளில் **பெண் ஆசிரியர்களே இப்போது பெரும்பான்மையாக** இருக்கின்றார்கள். இந்நிலை மாணவர்களை, - குறிப்பாக ஆண் மாணவர்களை - கட்டுப்படுத்துவதில் எதிர்மறையான நிலையைத் தோற்றுவித்திருக்கின்றது. ஏற்கனவே ஆண் ஆசிரியர்கள் பற்றிய அச்சத்தை இழந்து விட்ட மாணவர்கள், இப்போது பெரும் எண்ணிக்கையில் கடமைபுரிகின்ற பெண் ஆசிரியர்களினால் கட்டுப்பத்தப்பட முடியாத நிலைக்கு மாறிவிட்டார்கள். இதனால், பெண் ஆசிரியர்கள் ஒருவகை தாழ்வுணர்ச்சிக்கு ஆளானவர்களாக இருக்கின்றார்கள்.

இவ்வாறு வெவ்வேறு முனைகளில் உளவியல் ரீதியான பாதிப்புகளை எதிர்கொள்பவர்களாக இருக்கின்ற ஆசிரியர்கள், மரபு ரீதியான அர்த்தத்தில், பாடசாலைகளில் தமது கடமைகளை உரிய முறையிலும், சிறப்பாகவும் செய்ய முடியும் என்று எதிர்பார்ப்பது அர்த்தமற்றதாக மாறியிருக்கின்றது. ஆசிரியர்கள் என்பவர்கள், மாணவர்களுக்கு அறிவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குபவர்களாகவும், அவர்களிடையே ஒழுக்கம், கட்டுப்பாடு, பண்பாடு என்பவற்றை ஏற்படுத்துபவர்களாகவும், மாணவர்களின் இரண்டாம் பெற்றோர்களாகவும் செயற்படுபவர்கள் என்ற மரபுவழிப்பட்ட எதிர்பார்ப்பு இப்போது மாற்றமடைந்து விட்டது என்ற உண்மை புரிந்து கொள்ளப்பட வேண்டும். **ஆசிரியர்களின் வகிபாகம் என்பது, மாணவர்கள் அறிவைப் பெறுவதற்கான வழிகளைக் காட்டுதல், அவர்களின் அறிவைத் தேடும் முயற்சியில், அவர்களுக்கு உதவுதல், கண்காணித்தல் மற்றும் நெறிப்படுத்தல் என்ற எல்லைக்குட்பட்டதாக இப்போது மாறியுள்ளது.**

ஆசிரியர்களின் வகிபாகத்தில் ஏற்பட்டிருக்கின்ற இத்தகைய பண்பு ரீதியான மாற்றத்தை அனைவரும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய புரிதல்தான், ஆசிரியர்களின் உளவியல், உரியமுறையில் கட்டமைக்கப்படுவதற்கும், ஆளுமையும். தன்னம்பிக்கையும், வாண்மையும், செயற்திறனும் கொண்ட வழிகாட்டிகளாக அவர்கள் செயற்படுவதற்குமான சூழலை உருவாக்கும்.

## 8. நிர்வாக மட்டம்

பாடசாலைகளுக்குத் தேவையான வளங்களையும், உதவிகளையும் முறையாக வழங்குவதற்காகவும், அவற்றைக் கண்காணித்து, ஆலோசனை வழங்குவதற்காகவும் பல்வேறு நிர்வாகக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகங்கள், கோட்டக் கல்வி அலுவலகங்கள், வள நிலையங்கள் என இவை அமைகின்றன. இவற்றில் கல்வி அமைச்சு, மற்றும் மாகாணக் கல்வி அமைச்சு என்பவற்றைத் தவிர, ஏனையவை பாடசாலைகளுடன் நேரடியாக தொடர்புகளை ஏற்படுத்தி, அங்கு நிலவுகின்ற குறைபாடுகளையும், பற்றாக்குறைகளையும் அறிந்து, தீர்த்து வைப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன. மேலும், அதிபர்கள், ஆசிரியர்களுக்கான சேவைக்கால ஆலோசனைகள், பயிற்சிகள், கருத்தரங்குகள் என்பவற்றை ஒழுங்கு செய்து, அவர்களின் வாண்மை விருத்திக்கு உதவுகின்றன. இவற்றோடு, அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் கல்விசாரா ஊழியர்களின் ஊதியம், மற்றும் பிற கொடுப்பனவுகளை வழங்குகின்றவைகளாகவும் இவை தொழிற்படுகின்றன. சுருக்கமாகக் கூறினால், பாடசாலைகளின் நிர்வாக, நிதி, ஆளணி, பௌதிக வளங்கள் மற்றும் கற்றல் - கற்பித்தல் சார்ந்த விடயங்களை ஒழுங்கமைக்கின்ற அமைப்புக்களாக இவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்குகின்றன.

எனினும் நடைமுறையில், மேற்கூறிய செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற அதேவேளை, **பாடசாலைகளின் மீது அதிகாரத்தை பிரயோகிக்கின்ற நிறுவனங்களாகவும் இவை செயற்படுகின்றன.** எவ்வாறு நமது நாட்டில், அரசியல் என்பது மேலிருந்து கீழ் நோக்கி பாய்கின்ற அதிகாரப் படிநிலை முறைமையைக் கொண்டதாக இருக்கின்றதோ, அதேபோன்று, இத்தகைய கல்வி நிர்வாக நிறுவனங்களுக்கும், பாடசாலைகளுக்கும் இடையிலான உறவிலும், அதிகாரப் படிநிலை ஒழுங்கு காணப்படுகின்றது. இந்த அதிகாரப் படிநிலை ஒழுங்கானது, பல சந்தர்ப்பங்களில் கடுமையான முரண்பாடுகளை ஏற்படுத்துவனவாகவும் அமைந்திருக்கின்றது. இவ்வதிகாரப் படிநிலை என்பது, சிக்கலானதாகவும், பல்கூட்டுத்தன்மை கொண்டதாகவும், அமைகின்றது. இத்தகைய அதிகார உறவை நாம் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

- கல்வி நிர்வாக நிறுவனங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும் இடையேயான அதிகார உறவு
- இந்த அதிகாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையேயான அதிகார உறவு
- இந்த நிறுவனங்களில் உள்ள பிற அதிகாரிகள் மற்றும் வளவாளர்களுக்கும், அதிபர்களுக்கும் இடையேயான அதிகார உறவு
- இந்த நிறுவனங்களில் உள்ள பிற அதிகாரிகள் மற்றும் வளவாளர்களுக்கும், ஆசிரியர்களும் இடையேயான அதிகார உறவு
- இந்த நிறுவனங்களில் கடமையாற்றுகின்ற ஏனைய ஊழியர்களுக்கும் அதிபர்களுக்கும் இடையிலான அதிகார உறவு
- இந்த நிறுவனங்களில் கடமையாற்றுகின்ற ஏனைய ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையிலான அதிகார உறவு

என பல பின்னல்களைக் கொண்ட அதிகார உறவுகள் இங்கு நிலவுகின்றன. இந்த உறவுகள் ஒவ்வொன்றிலும், அதிகாரப் பிரயோகம் என்பது வேறுபடுகின்ற போதிலும், எப்போதும், இத்தகைய கல்வி நிர்வாக நிறுவனங்களைச் சேர்ந்த பிரிவினர்கள், அதிகாரப் படிநிலையின் உயர்மட்டத்திலும், பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள் கீழ் மட்டத்திலுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தப்படுகின்றார்கள்.

ஒரு பாடசாலையின் உளவியலில், இந்த அதிகார உறவுநிலைகள் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளன. இவ்வுறவுகள் இணக்கத்தன்மையானதும், சினேகபூர்வமானதுமான உறவுகளாக அமையாமல், பெரும்பாலும் முரண்பாடுகளும், பகைமைகளும் நிறைந்ததாகவே நீடிக்கின்றன. கல்வி அலுவலகங்களுக்கான அதிபர் மற்றும் ஆசிரியர்களின் வருகையானது, பெரும்பாலும் அங்குள்ளவர்களால் சுமைக்குரியதாகவும், தேவையற்ற சிக்கல்களை ஏற்படுத்தக் கூடியதாகவும் கருதப்படுகின்றது. அதேநேரத்தில் கல்வி அலுவலகங்களில் இருந்து தனிநபர்களாகவும், குழுக்களாகவும் பாடசாலைகளுக்கு மேற்கொள்ளப்படுகின்ற தரிசிப்பானது, அதிபர் மற்றும் ஆசிரியர்களினால் தம்மீது விமர்சனங்களும், குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படுவதற்கான நிகழ்வுகளாகக் கருதப்படுகின்றன. அதாவது, **ஒரு தரப்பினரின் வருகையை, மற்றத் தரப்பினர் ஆர்வமுடன் வரவேற்காத சூழலே இந்த உறவில் நிலவுகின்றது.**

இந்த நிலை துரதிஷ்டவசமானது. கல்வி நடவடிக்கைகளில் கைகோர்த்துச் செயற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற இரு முக்கிய பிரிவினர்கள், இவ்வாறு ஒருவருக்கொருவர் முரண்பாடான, பகைமைமிக்க உணர்வுகளுடன் தொடர்பு கொள்வதானது, பாடசாலைச் சூழலுக்கும், அங்கு நிலவுகின்ற உளவியலுக்கும் சாதகமானதல்ல. எனவே இது குறித்த அக்கறையும், பரிசீலிப்பும் அவசியமாகின்றன.

கல்வி அலுவலகங்கள் சார்ந்தோருக்கும், பாடசாலைகளைச் சார்ந்தோருக்குமிடையிலான இணக்கமற்ற உறவில், பாடசாலையைச் சேர்ந்தோரே எப்போதும் பாதிக்கப்படுகின்ற பிரிவினர்களாக இருக்கின்றார்கள். இது அதிகாரப் படிநிலை உறவின் இயல்பான விளைவு. ஒரு அதிகார உறவு நிகழ்கின்ற சூழலில், எப்போதும் அதிகாரத்தின் மேல் மட்டத்தில் இருப்பவர்கள், கீழ் மட்டத்தில் இருப்பவர்களை கட்டுப்படுத்தக் கூடியவர்களாகவும், அவர்களின் உரிமைகளை மதிக்காதவர்களாகவும், அவர்கள் தமது பணிகளையும், கடமைகளையும் முறையாகச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்களாகவும் இருக்கிறார்கள். மேல்நிலையில் இருப்பவர்கள், தமக்குக் கீழ் உள்ளவர்களின் உரிமைகள், நலன்கள், அவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் மற்றும் சிக்கலான நிலைமைகள் குறித்து அக்கறை கொள்ளாதவர்களாகவும், அவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாசீனம் செய்பவர்களாகவும் செயற்படுகின்றார்கள். அதிகாரப் படிநிலை சார்ந்த இத்தகைய பொதுப்பண்பை, கல்வி அலுவலகங்கள் சார்ந்தோருக்கும், பாடசாலைகளைச் சார்ந்தோருக்குமிடையிலான உறவில் தெளிவாக அவதானிக்க முடியும்.

கல்வி அலுவலகங்களைப் பொறுத்தவரை அவை பிரயோகிக்கின்ற அதிகாரத்தின் தன்மையானது, கீழிருந்து மேல்நோக்கிச் செல்கையில் அதிகரித்துச் செல்கின்றது. ஒரு வளநிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பிரயோகிக்கின்ற அதிகாரத்திலும் பார்க்க பன்மடங்கு அதிகாரத்தை, மாகாணக் கல்வி அலுவகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பிரயோகிக்கின்றார்கள். நமது நாட்டில் கல்வி அலுவலகங்களில் (பிற அலுவலகங்களிலும்கூட) பணிபுரிகின்றவர்கள், **நிர்வாக செயன் முறைக்கும் அதிகாரச் செயன்முறைக்கும் இடையிலான வேறுபாடுகளைப்** புரிந்து கொண்டு செயற்படுவதாகத் தெரியவில்லை. மாகாண, வலய, மற்றும் கோட்ட மட்டங்களிலான அலுவலகங்கள் நிறுவப்பட்டிருப்பது, நிர்வாகத்தை பரவலாக்குவதற்காகவும், அடிநிலை வரை நிர்வாக ரீதியான தொடர்புகளை பேணுவதற்காகவுமே என்ற உண்மை சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை.

ஒரு மாகாணத்திற்குள் அடங்கியுள்ள ஒவ்வொரு சமூகத்தினதும் பிரதேசத்தினதும், பாடசாலையினதும் கல்வி நிலையைச் சரியாகக் கணிப்பிட்டு, அவற்றில் நிலவுகின்ற குறைபாடுகள், பற்றாக்குறைகள் போன்றவற்றை அடையாளம் கண்டு, அவற்றை நிவர்த்தி செய்வதற்கரன செயற்பாடுகளை முன்னெடுப்பதை இலக்காகக் கொண்டே, இத்தகைய அலுவலகங்களும், நிர்வாகப் பரவலாக்கமும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அறிவுறுத்தல்களையும், வளங்களையும் பெற்று, அவற்றை தமக்குக் கீழுள்ள பிரிவினர்களுக்கு வழங்குகின்ற இடைநிலைச் செயற்பாட்டாளர்களாக இருக்கின்ற இந்த அலுவலகங் களைச் சேர்ந்தோர், கல்வி நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கு கொண்டுள்ள பாட்சாலைகளின் அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் மிக நெருக்கமான உறவுகளைப் பேணி, செயற்பட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். உண்மையான அக்கறை, அனுதாபம், பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அவற்றை தீர்த்து வைக்கும் ஆற்றல், சுமுகமான வழிகாட்டல் முறை போன்ற சினேகபூர்வமான உறவாடல்கள் மூலமாகத்தான் இப்பணிகளை முறையாக நிறைவேற்ற முடியும். இவை ஆற்றல்மிக்க முகாமையாளர்கள், அல்லது தலைவர்களிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்ற பண்புகள். இத்தகைய பண்புகளை தாமும் கொண்டிருக்க வேண்டும் என்று நிர்வாகத்துறையில் செயல்படுவோர் உணர்வதன் மூலமாகத்தான் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் நெருங்கிய உறவைப் பேணுகின்ற மனநிலையை அவர்கள் பெற முடியும். மாறாக, இந்த உணர்வை ஒருவர் பெறாதபோது, அது தவிர்க்க முடியாத வகையில் அதிகார உறவாக மாறி விடும். ஏனெனில், நிர்வாக முறைமைக்கும், அதிகார முறைமைக்கும் இடையேயான இடைவெளி மிகக் குறுகலானது. சுருக்கமாகக் கூறினால், நிர்வாக முறைமையானது, எந்தக் கணத்திலும், அதிகார முறைமையாக மாறக் கூடிய ஆபத்தைக் கொண்டுள்ளது.

ஒன்பது (9) மாகாணங்களும், இருபத்தைந்து (25) கல்வி மாவட்டங் களும், தொண்ணூற்றியேழு (97) கல்வி வலயங்களும் மற்றும் பல கோட்டங்களும் உள்ள நமது நாட்டில், ஏதாவது ஒரு மாகாணம், ஒரு மாவட்டம், அல்லது ஒரு வலயம், கல்வி ரீதியாக முதன்நிலையைப் பெறுவதும், இன்னொன்று இறுதிநிலையைப் பெறுவதும் இயல்பான நிகழ்வுகள். இந்த நிலைகள் கூட சீரானவை அல்ல. குறித்த பாட ரீதியாகப் பார்க்கையில் இந்த நிலைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு விடும். அல்லது குறித்த பாடத்தில் பெற்றுள்ள அதிஉயர் சித்தி என்ற அடிப்படையில் மதிப்பிடும்போது, நிலைகள் மீண்டும் மாற்றமடைந்து விடும். இவற்றை விட இணைப்பாடவிதான செயற்பாடுகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யும்போது, முற்றிலும் வேறான நிலைகள் பெறப்படும். ஒரு மாகாணம், ஒரு வலயம், அல்லது ஒரு பாடசாலை வெவ்வேறு வருடங்களில் வெவ்வேறு நிலைகளைப் பெறுவதும் இயல்பானது. இவ்வாறான நிலையில், குறித்த ஒரு மாகாணமோ, வலயமோ அல்லது பாடசாலையோ கடைசிநிலையில் உள்ளது என்பதற்காக அவற்றில் கடமைபுரிபவர்கள் மீது கண்டனங்களை தெரிவிப்பதும், தண்டனை வழங்குவதும், அவமானப்படுத்துவதும் எவ்வித நியாயப்பாட்டிற்கும் உட்பட்டதல்ல.

ஒரு பாடசாலையின் கல்வி நிலையானது பல்வேறு சிக்கலான காரணிகள் மூலமாகத் தீர்மானிக்கப்படுகின்றது. இன்று கல்வி என்பது, ஒரு தனிநபரின் - அதாவது ஒரு மாணவரின் - அறிவினதும், முயற்சியினதும் விளைவு என்ற எல்லையைக் கடந்து விட்டது. மாறாக, **கல்வி என்பது ஒரு குடும்ப முயற்சியாக மாறியுள்ளது.** எந்தளவுக்கு ஒரு மாணவரின் கல்வியில், அவரது குடும்பத்தினர் - குறிப்பாக பெற்றோர் - அக்கறையும் பங்களிப்பும் செய்கின்றார்களோ அந்தளவுக்கு அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் கல்வியில் உயர்நிலையை அடைவது சாத்தியமாகின்றது. நாம் இங்கு விதிவிலக்குகள் பற்றி உரையாடவில்லை. மிக வறிய குடும்பங்களைச் சேர்ந்த சில மாணவர்கள், அல்லது பெற்றோர்களை இழந்த சில மாணவர்கள், கல்வியில் உயர்நிலையை அடைவது நிச்சயம் ஒரு சாதனைதான். ஆயினும் பொதுப் போக்கு அதுவல்ல. ஒரு குடும்பம் எந்தளவுக்கு, தனது பிள்ளையின் கல்விக்காக தன்னை ஒறுக்கவும், அர்ப்பணிக்கவும், செலவீடு செய்யவும் தயாராக உள்ளது என்பதைக் கொண்டுதான் அப்பிள்ளையின் கல்வி நிலை அமைகின்றது. இத்தகைய ஒறுப்பும், அர்ப்பணிப்பும், செலவீடும் இன்று ஒரு பிள்ளையின் கல்வி உயர்விற்கு அவசியமானவையாக இருக்கின்றன.

இத்தகைய பின்னணியில் ஒரு பாடசாலை, கல்வியில் பின்தங்கியுள்ளது அல்லது முன்னேறியுள்ளது என்ற விடயத்தை பன்முகக் காரணிகளின் சேர்க்கையின் விளைவாகவே மதிப்பிட வேண்டும். ஒரு பிள்ளையின் குடும்பப் பின்னணியின் முக்கியத்துவம் பற்றிப் பேசுவதானது, அதன் உடனடி விடயமாக, ஒரு பாடசாலை அமைந்துள்ள அல்லது அப்பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களின் சமூக நிலைமை தொடர்பான அக்கறையையும் முன்னிறுத்துகின்றது. **பாடசாலைச் சமூகம்** (School Society) எனக் குறிக்கப்படுகின்ற இந்த அம்சம், ஒரு பாடசாலை கல்வியில் உயர்நிலையை அடைவதற்கு அவசியமான காரணியாக இருக்கின்றது. அடிப்படையில், குறித்த ஒரு பாடசாலையில் கற்கின்ற மாணவர்களின் குடும்பங்களின் தொகுப்பாக அமைகின்ற பாடசாலைச் சமூகம், எந்தளவுக்கு கல்வியில் அக்கறையும், ஆர்வமும் உள்ளதாக அமைகின்றதோ, அந்தளவுக்கு அப்பாடசாலையின் கல்வி வளர்ச்சி முன்னேற்றமடைகின்றது. பாரம்பரியமாக, உயர் சமூகப் பிரிவினரின் பிள்ளைகள் கல்வி கற்கின்ற பாடசாலைகள், புகழ்பெற்ற பாடசாலைகளாக விளங்கி வந்திருப்பதன் காரணத்தை இப்பின்னணியில் புரிந்து கொள்ள முடியும்.

எனினும், பாடசாலைச் சமூகம் என்பது, நிலையானதல்ல. அது மாற்றமடைந்து வருகின்ற ஒன்று. குறித்த ஒரு சமூகத்தின், அல்லது அச்சமூகத்தின் ஒரு பிரிவினரின் அக, புற நிலைமைகளில் ஏற்படுகின்ற தீவிர மாற்றங்கள், அதன் கல்வி சார்ந்த அக்கறையிலும், பங்கேற்பிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. 'தாம் இதுவரை காலமும் பின்தங்கியிருந்து விட்டோம்', 'அடக்கப்பட்டு விட்டோம்', 'கல்வியை உதாசீனப்படுத்தி விட்டோம்', 'கல்வியை இழந்து விட்டோம்' என அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரும்போது, அந்த உணர்வு அவர்களின் கல்வி மீதான ஈடுபாட்டில் பாரிய மாற்றங்களை நிகழ்த்துகின்றது. இதன் விளைவாக, மிகப் பின்தங்கிய பாடசாலைகளாக இனங்காணப்படுகின்ற பாடசாலைகள், ஒரு சில வருடங்களில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்துகின்ற பாடசாலைகளாக மாற்றமடைகின்றன. அதேவேளை, இடப்பெயர்வுகள், புலப்பெயர்வுகள், பாடத்தேர்வுகள், பாடசாலைத் தேர்வுகள் (சர்வதேச பாடசாலைகளை நோக்கிய நகர்வுகள்), போன்ற பல்வகைக் காரணிகளினால், உயர்நிலை வகித்த பாடசாலைகளின் கல்விப் பெறுபேறுகள் வீழ்ச்சியடைவதும் நிகழ்கின்றன.

நமது நாட்டில், மருத்துவத்துறையும், பொறியியல்துறையும் அதிமுதன்மை பெற்ற துறைகளாக விளங்குகின்றன. இதனால், ஒரு பாடசாலையின் கல்வித்தரக் குறிகாட்டியாக, அப்பாடசாலை விஞ்ஞானத்துறையில் வெளிப்படுத்துகின்ற அடைவு மட்டம் முதன்மை யாகக் கொள்ளப்படுகின்றது. மருத்துவ, பொறியியல் துறைகள் மீது மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற அதீத கவர்ச்சியின் விளைவாக, விஞ்ஞானத்துறையில் கற்கின்ற மாணவர் களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. மருத்துவ, பொறியியல் துறைகளில் காணப்படுகின்ற போட்டித்தன்மை, அவற்றை கற்பதில் காட்ட வேண்டிய கடினமான ஈடுபாடு, செலவுகள் போன்றவை பற்றிய தெளிவான புரிதல் இன்றி பல மாணவர்கள் இவற்றைத் தேர்வு செய்கின்றார்கள். இவர்களின் இத்தகைய தேர்வுக்கு, க.பொ.த (சா.த) பரீட்சையில் விஞ்ஞான, கணித பாடங்களில் அவர்கள் பெறக்கூடிய திறமைச் சித்திகளே ( C ) போதுமானவையாக இருக்கின்றன. இத்தகைய மாணவர்களில் கணிசமான எண்ணிக்கையானோர் க.பொ.த. (உ.த) பரீட்சையில் தோல்வியடைகின்றார்கள். இவ்வாறு, உயர்தரப் பிரிவில் விஞ்ஞானத்துறையில் கற்பவர்களின் சித்தியடையும் எண்ணிக்கை குறைவாகும்போது, அது பாடசாலையின் கல்வித் தரச் சுட்டியில் வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றன. அதேநேரத்தில், சில பாடசாலைச் சமூகங்களில், ஏற்கனவே மருத்துவர்களும், பொறியிலாளர்களும் அதிகளவில் இருப்பதால், அத்துறை சார்ந்த கவர்ச்சிகள் படிப்படியே குறைகின்றன. அத்தோடு, தனியார்துறை வாய்ப்புகள், சர்வதேச பாடசாலைகளிலும் மேற்குநாடுகளிலும் எளிதான முறையில் உயர் கல்வியைப் பயில்வதற்கான வாய்ப்புகள் மற்றும் அந்நாடுகளில் வேலைவாய்ப்புகளைப் பெறுதல் போன்ற காரணங்களின் அடிப்படையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமூகத்தைச் சேர்ந்த பலர், விஞ்ஞானத்துறைக்குப் பதிலாக வர்த்தகம், கலை (குறிப்பாக சட்டத்துறை) போன்ற துறைகளில் கல்வி கற்கின்றவர்களாக மாறுகின்றார்கள். இத்தகைய பின்புலத்தில், ஏற்கனவே கல்வித் தரச்சுட்டியில் உயர்நிலை வகித்த பாடசாலைகள், அந்நிலையை இழக்கின்ற நிலை உருவாகின்றது.

நமது நாட்டில் கணித, விஞ்ஞான துறைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்ற அதீத முக்கியத்துவமானது, மாணவர்கள் மத்தியில் கணித, விஞ்ஞான அறிவை வளர்க்க வேண்டும் என்பதிலும் பார்க்க, அதிகளவில், பொறியிலாளர்களையும், தொழில்நுட்பவியலாளர்களையும், மருத்துவர் களையும், மருத்துவத்துறை சார்ந்த பிற ஊழியர்களையும் உருவாக்க வேண்டும், (மற்றும் அவ்வாறு உருவாக வேண்டும்) என்பதை, பிரதான நோக்கமாக கொண்டிருக்கின்றது. இந்நிலையானது, பாடசாலை உளவியலில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

முதலாவதாக, உயர்தர வகுப்புகளில் கலை மற்றும் வர்த்தக பிரிவுகளில் பயிலுகின்ற மாணவர்கள் மத்தியில் தாழ்வுணர்ச்சி ஏற்படுவதற்கான சூழலை இது உருவாக்குகின்றது. கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கு என அடிக்கடி பரீட்சைகள் நடத்தப்படுவதும், அவர்களுக்கென விசேட கருத்தரங்குகள் நடத்தப்படுவதும், பொதுவான கலந்துரையாடலுக்கென இம்மாணவர்கள் பிற பாடசாலைகளுக்கு செல்வதும், கலை, மற்றும் வர்த்தக பிரிவு மாணவர்களுக்கு உளவியல் ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கின்றன. தாம் முக்கியமற்றவர்களாகவும், இரண்டாம் நிலைக்குரியவர்களாகவும் கருதப்படுவதான உணர்வு அவர்கள் மத்தியில் ஏற்படுகின்றது. இதனால் இவர்கள் ஆளுமையும், தன்னம்பிக்கையும் குறைந்தவர்களாக உருவாகின்ற நிலை காணப்படுகின்றது. கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களிடம், அவர்களின் எதிர்கால இலட்சியம் என்ன, என்ற கேள்வியை முன்வைக்கும்போது, பெரும்பாலான மாணவர்கள், தாம் பொறியியலாளர்களாக, அல்லது வைத்தியர்களாக வருவதே தமது இலட்சியம் எனக் கூறுவார்கள். ஆனால் இதே கேள்வியை கலை, மற்றும் வர்த்தக பிரிவு மாணவர்களிடம் கேட்கும்போது, பெரும்பாலானோர் ஆசிரியர்களாக வருவதையும், வங்கியில் தொழில் வாய்ப்பு பெறுவதையுமே தமது இலட்சியங்களாக முன்வைக்கின்றார்கள். இது அவர்களின் விருப்பங்கள் என்று கொள்வதை விட, அவர்கள் தம்மைப் பற்றிக் கொண்டிருக்கின்ற குறைவான மனோபாவத்தின் வெளிப்பாடாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதே பொருத்தமானது. உண்மையில் நடைமுறையிலோ, **நிர்வாக ரீதியாக செயலாளர்களாகவும், பணிப்பாளர்களாகவும், உயர் அதிகாரிகளாகவும், முகாமையாளர்களாகவும், நீதிபதிகளாகவும், சட்டத்தரணிகளாகவும் பணிபுரிகின்ற மிகப் பெரும்பாலானோரும், அரசியல்வாதிகளில் பெரும்பான்மையினரும் கலை, வர்த்தக துறைகளில் கல்வி பயின்றவர்களாகவே இருக்கின்றார்கள்.** இந்தத் துறைகள்தான், சிறந்த ஆளுமையையும் தன்னம்பிக்கையையும் அதிகம் எதிர்பார்க்கின்ற துறைகளாக இருக்கின்றன. இவ்வகையில், பாடசாலை மட்டத்தில், கலை மற்றும் வர்த்தகத் துறைகளில் பயிலுகின்ற மாணவர்களுக்கும் உரிய முக்கியத்துவம் வழங்கப்படுவதோடு, அவர்களின் ஆளுமையையும், தன்னம்பிக்கையையும் கட்டியெழுப்புவதற்கான செயற்பாடுகள் முறையாக முன்னெடுக்கப்படுவதும் அவசியமாகின்றது.

இரண்டாவதாக, கணித, விஞ்ஞான பிரிவுகளில் பயிலுகின்ற மாணவர்கள், க.பொ.த. சாதாரண தரம் வரை ஒப்பீட்டளவில் உயர்ந்த அடைவு மட்டங்களை வெளிப்படுத்தியவர்களாக இருந்தவர்கள். அதேநேரத்தில், க.பொ.த உயர்தர பரீட்சை முடிவுகளில் **அதிகளவில் குறைந்த சித்திகளைப் பெறுகின்றவர்களாகவும்** இவர்கள் இருக்கின்றார் கள். இது ஒரு முரண்நகையாக அமைவதோடு, எமது நாட்டின் மனித வளத்தில் எதிர்நிலையான தாக்கங்களை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருக்கின்றது. கணித, விஞ்ஞான பிரிவுகளுக்குரிய பாடங்கள் கொண்டிருக்கின்ற கடினத்தன்மை, பரீட்சைமுறை, அவற்றைக் கற்பதில் வெளிப்படுத்த வேண்டியுள்ள அர்ப்பணிப்பு நிறைந்த ஈடுபாடு, கல்விக்கான அதிக செலவு போன்ற காரணங்களினால், இப்பரீட்சைகளில் அதிகளவிலான மாணவர்கள் தோல்வியடைகின்றார்கள். **இந்தத் தோல்வியின் விளைவாக, ஏற்கனவே அறிவு ரீதியாக சிறந்த அடைவுமட்டங்களை கொண்டிருந்த பல மாணவர்கள் கல்விப்புலத்தில் இருந்து வெளியேறுகின்ற நிலையும், அரச தொழில்வாய்ப்புகளை பெற முடியாத சூழ்நிலையும் ஏற்படுகின்றது. இதனால், ஈற்றில் நமது நாட்டி லுள்ள அறிவும், செயற்திறனும் கொண்ட ஒரு பிரிவினர், நாட்டின் நிர்வாகத்திலும், அதன் பிற துறைகளிலும் பங்கேற்க முடியாத துரதிஷ்டகரமான நிலை உருவாகின்றது.** இது நாம் அனைவரும் உடனடி அக்கறை கொள்ள வேண்டிய, ஒரு தொடரும் எதார்த்தமாக அமைந்திருக்கின்றது. இது குறித்து ஆழமான பரிசீலனைகளும், ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுவது அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவதாக, நமது கல்வி அலுவலகங்கள், கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கு வழங்குகின்ற முக்கியத்துவத்தின் மூலமாக, **கலை, மற்றும் வர்த்தக பிரிவு மாணவர்கள் விடயத்தில் பாரபட்சமாக நடந்து கொள்கின்றவா** என்ற வினா அவசியமாகின்றது. ஒட்டுமொத்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு என அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற நிதி, மற்றும் பிற வளங்களில் கணிசமான பகுதி, கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்காக செலவிடப்படுவதன் மூலமாக, இத்தகைய பாகுபாடானது இடம்பெறுகின்றதா என்ற விசாரிப்பு தேவைப்படுகின்றது. நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவக் கூடியவர்களாகவும், உதவ வேண்டியவர்களாகவும் மாணவர்கள் இருக்கின்ற நிலையில், அவர்கள் அனைவருக்கும் **சமமான வாய்ப்புகள் வழங்கப்படுவதும்,** அதன் மூலமாக அவர்கள் அனைவருமே ஆளுமையும், தன்னம்பிக்கையும் கொண்டவர்களாக வார்த்தெடுக்கப்படுவதும் அவசியமாகின்றது. கலை, வர்த்தக பிரிவுகளில் பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பாட விதானங்களை முறையாக மாற்றியமைப்பதன் மூலமாகவும், புதிய பாடங்களை அறிமுகப்படுத்துவதன் ஊடாகவும், அனைவருமே நாட்டைக் கட்டியெழுப்புவதில் உணர்வுபூர்வமாகவும், உற்சாகமாகவும் பங்கேற்கின்ற சூழல் உருவாக்கப்படுவது குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

இந்த இடத்தில் இன்னுமொரு விடயம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளது. நமது பாடசாலைகளில் அண்மைய காலங்களில், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT), பொது தொடர்பாடல் தொழில்நுட்பம் (GIT) போன்ற புதிய பாடங்களும், உயர்தர மாணவர்களுக்கென தொழில்நுட்பத்துறை என்ற புதிய கற்கைத் துறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எனினும், இப்புதிய பாடங்களை கற்பிப்பதற்கு போதிய ஆசிரியர்கள் இல்லாதநிலை இங்கு காணப்படு கின்றது. இதனால் இப்பாடநெறிகளைக் கற்கின்ற மாணவர்கள் பெரும் சிரமத்திற்கும், உளஅழுத்தங்களுக்கும் ஆளாகியுள்ளார்கள். ஒரு புதிய பாடநெறியை கற்பிப்பதற்கு தேவையான போதிய ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு முன்னர், அப்பாடநெறியை அறிமுகப்படுத்துவதில் ஏற்படக் கூடிய குழப்பங்களையும், உளஅழுத்தங்களையும் கவனத்தில் கொள்வது அவசியமாகின்றது.

வடக்கு, கிழக்கில் நீண்ட காலமாக இடம்பெற்ற யுத்த சூழல், அங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை சமூகம், மற்றும் பாடசாலைகளின் கல்வி நிலை என்பவற்றில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது. பின்னர் 2004 சுனாமிப் பேரலையின் தாக்கத்தினால் ஏற்பட்ட பேரழிவுகளின் காரணமாக, அங்கு கல்வி நிலை மேலும் மோசமாகப் பாதிப்புற்றது. இத்தகைய பாதிப்புகளின் விளைவுகளில் இருந்து இன்னமும் விடுபட முடியாத நிலைமையே வடக்கு, கிழக்கில் காணப்படுகின்றது என்ற உண்மையை பின்வரும் புள்ளி விபரங்கள் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன.

2012ஆம் ஆண்டு நடத்தப்பட்ட க.பொ.த. சாதாரணதர பரீட்சைப் பெறுகளின்படி, வடக்கு, கிழக்கைச் சேர்ந்த மாணவர்களில் பெரும் எண்ணிக்கையானோர், கணிதம், ஆங்கிலம் மற்றும் தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய மூன்று பிரதான பாடங்களிலும் தேவையான சித்திகளைப் பெறத் தவறியிருக்கின்றார்கள் என்பதை அறிய முடிகின்றது.

| மாவட்டம் | சித்தியடை யாதோர் வீதம் (கணிதம்) | சித்தியடை யாதோர் வீதம் (தமிழ்மொழி) | சித்தியடை யாதோர் வீதம் (ஆங்கிலம்) |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 39.06 | 41.09 | 62.20 |
| கிளிநொச்சி | 58.46 | 51.95 | 85.92 |
| முல்லைத்தீவு | 57.87 | 50.87 | 88.85 |
| மன்னார் | 41.35 | 43.99 | 64.93 |
| வவுனியா | 44.25 | 41.74 | 68.05 |
| திருகோணமலை | 51.39 | 48.26 | 63.34 |
| மட்டக்களப்பு | 40.72 | 41.66 | 61.54 |
| அம்பாறை | 42.47 | 45.62 | 58.85 |

(இது தமிழ்மொழி பாடத்தில் திறமைச் சித்தி (C) பெறாத மாணவர்களைக் குறிக்கின்றது)

இவ்விபரங்களை வலய மட்டங்களில் பரிசீலிக்கும்போது, வடக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த பல வலயங்களில், சித்தியடையாத மாணவர்களின் வீதம் மிக அதிகமாக இருப்பதை அறிய முடிகின்றது.

| வலயம் | சித்தியடை யாதோர் வீதம் (கணிதம்) | சித்தியடை யாதோர் வீதம் (தமிழ்மொழி) | சித்தியடையாதோர் வீதம் (ஆங்கிலம்) |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 33.18 | 35.49 | 50.53 |
| தீவகம் | 54.77 | 57.26 | 86.81 |
| தென்மராட்சி | 43.94 | 45.05 | 65.90 |
| வடமராட்சி | 38.02 | 35.33 | 61.74 |
| வலிகாமம் | 43.84 | 47.44 | 70.69 . |
| கிளிநொச்சி | 58.46 | 51.95 | 85.92 |
| முல்லைத்தீவு | 54.76 | 50.87 | 86.11 |
| துணுக்காய் | 63.56 | 56.39 | 93.90 |
| வவுனியா-வடக்கு | 61.05 | 54.04 | 86.77 |
| வவுனியா-தெற்கு | 39.67 | 38.18 | 62.96 |
| மடு | 59.55 | 49.07 | 78.65 |
| திருகோணமலை | 44.07 | 38.77 | 59.94 |
| திருகோணமலை - வடக்கு | 68.13 | 64.02 | 75.16 |
| மூதூர் | 58.15 | 55.65 . | 73.39 |
| கிண்ணியா | 44.08 | 52.66 | 61.60 |
| கந்தளாய் | 57.71 | 40.57 | 71.83 |
| மட்டக்களப்பு | 37.97 | 34.55 | 52.49 |
| மட்டக்களப்பு - மத்தி | 20.58 | 24.03 | 32.06 |
| மட்டக்களப்பு - மேற்கு | 47.28 | 41.66 | 81.15 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கல்குடா | 56.97 | 50.87 | 82.64 |
| பட்டிருப்பு | 48.02 | 55.91 | 77.46 |
| கல்முனை | 35.60 | 41.79 | 47.60 |
| சம்மாந்துறை | 47.78 | 49.52 | 70.72 |
| அக்கரைப்பற்று | 29.41 | 44.63 | 39.29 |
| திருக்கோவில் | 39.17 | 46.31 | 52.32 |
| அம்பாறை | 43.71 | 45.62 | 63.58 |
| மஹாஓயா | 61.13 | - | 76.40 |
| தெஹியத்த கண்டிய | 53.04 | - | 67.99 |

(இது தமிழ்மொழி பாடத்தில் திறமைச் சித்தி (C) பெறாத மாணவர்களைக் குறிக்கின்றது)

மேலுள்ள அட்டவணையின் மூலமாக நாம் வெவ்வேறு விடயங்களைப் புரிந்து கொள்ள முடியும். முன்னர், இலங்கையின் கல்விப் புலத்திலும், நிர்வாக மட்டத்திலும் முன்னிலை வகித்திருந்த **யாழ்ப்பாண மாவட்டத்தில்** 62 வீதத்திற்கும் கூடுதலான மாணவர்களும், **யாழ்ப்பாண கல்வி வலயத்தில்** 50 வீதத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும், 2012ஆம் ஆண்டு நடத்தப்பட்ட க.பொ.த(சா.த) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தியடையவில்லை. அதேவேளை, முழு இலங்கையிலும் ஆங்கில பாடத்தில், ஆகக் கூடுதல் எண்ணிக்கையிலான மாணவர்கள் சித்தியடையாத வலயமாக **துணுக்காய்** (93.90 வீதம்) கல்வி வலயம் காணப்படுகின்றது. இதைவிட, வடமாகாணத்தைச் சேர்ந்த தீவகம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா - வடக்கு போன்ற கல்வி வலயங்களில் 80 வீதத்திற்கும் கூடுதலான மாணவர்கள் ஆங்கில பாடத்தில் சித்தியடையவில்லை. இதேபோன்ற நிலைமையை கிழக்கிலுள்ள கல்வி வலயங்களிலும் நாம் காணலாம். திருகோணமலை - வடக்கு, மூதூர், கந்தளாய், கல்குடா, மட்டக்களப்பு - மேற்கு, பட்டிருப்பு, சம்மாந்துறை, மஹாஓயா ஆகிய கல்வி வலயங்களில் 70 வீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் ஆங்கில பாடத்தில் சித்தியடையவில்லை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மொத்தம் 29 கல்வி வலயங்களில், **03 கல்வி வலயங்களில் மாத்திரமே** (மட்டக்களப்பு - மத்தி, கல்முனை, அக்கரைப்பற்று) 50 வீதத்திற்குக் கூடுதலான மாணவர்கள் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்திருக்கின்றார்கள். மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கறைக்குட்பட வேண்டிய விடயமாக, **வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அனைத்து மாவட்டங்களிலும், 50 வீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் ஆங்கில பாடத்தில் சித்தியடையவில்லை** என்ற உண்மை அமைந்திருக்கின்றது.

மேலும், கணிதம், மற்றும் தமிழ்மொழி பாடங்களின் அடிப்படையில் பரிசீலிக்கையில், வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களில், **06 கல்வி வலயங்களைச்** சேர்ந்த மாணவர்களில் 50 வீதத்திற்கு அதிகமானோர், **க.பொ.த. உயர்தர வகுப்புகளில் கல்வி கற்க முடியாத நிலையில் இருந்ததை** அவதானிக்க முடிகின்றது. அதேபோன்று, கிழக்கு மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களில், **08 கல்வி வலயங்களில்**, 50 வீதத்திற்கும் கூடுதலான மாணவர்கள், **க.பொ.த(உ.த) வகுப்புகளில் கல்வி கற்க முடியாத நிலையில் இருந்ததை** அவதானிக்க முடிகின்றது. இவ்வகையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள், க.பொ.த சாதாரண தரத்துடன் பாடசாலைகளை விட்டு விலகுகின்ற நிலைக்கு ஆளாகியுள்ளார்கள்.

இப்போது யுத்தம் முடிந்து விட்டதாலும், சுனாமிக்குப் பின்னர், சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பில், பல பின்தங்கிய பாடசாலைகள் உயர்ந்த தரத்தில், தேவையான பௌதிக வளங்களைக் கொண்டு விருத்தி செய்யப்பட்டிருப்பதாலும், சில பிரதேசங்களில் சமூகங்களின் வாழ்வாதார நடவடிக்கைகள் ஒப்பீட்டளவில் மேம்பட்டிருப்பதாலும், கல்வியில் பின்தங்கியிருந்த கணிசமான பாடசாலைகள் படிப்படியான முன்னேற்றத்தைக் காட்டுகின்றன. யுத்த சூழ்நிலையில், நகர்ப்புறப் பாடசாலைகளை நாடிச் சென்ற மாணவர்களில் பலர், இப்போது தமது சொந்த பிரதேசங்களில், வளம்நிறைந்த பாடசாலைகளில் கல்வி கற்கின்ற நிலைமை உருவாகியிருக்கின்றது.

இவ்வாறு, ஒரு பாடசாலையின் கல்வி நிலையானது, பன்முகக் காரணிகளினால், தீர்மானிக்கப்படுவதாக இருக்கின்ற நிலையில், குறித்த ஒரு பாடசாலையின் கல்வி நிலைக்கு, அப்பாடசாலை அதிபர், மற்றும் ஆசிரியர்களை மட்டும் காரணமாகக் காட்டுகின்ற மனப்போக்கை, பல கல்வி அலுவலக அதிகாரிகள் கொண்டிருக்கின்றார்கள். நூற்றுக்கணக்கான அதிபர்கள், மற்றும் பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் முன்னிலையில், ஒரு அதிபரை, அவரது பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறு வீழ்ச்சியடைந்து விட்டது என்பதற்காக, அவர் முன்வைக்கின்ற எந்த ஒரு காரணத்தையும் கவனத்திற்கொள்ளாமல்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எள்ளலுடன் நிராகரிக்கின்றவர்களாகவே இவர்கள் செயற்படுகின்றார்கள். **அதிபர், (மற்றும் ஆசிரியர்களின்) செயற்பாடுகளில் மட்டுமே தங்கியிராத** பாடசாலைகளின் அடைவு மட்டத்தில் ஏற்படுகின்ற வீழ்ச்சிக்காக, அவர்களைக் குற்றம் சாட்டுவதும், அவமானப்படுத்துவதும், அதிபர்களி னதும், ஆசிரியர்களினதும் உளவியலை எவ்வளவு கடுமையாகப் பாதிக்கின்றது என்ற உணர்வு கூட அற்றவர்களாக இந்த அதிகாரிகள் செயற்படுகின்றார்கள்.

இங்கு ஒரு கசப்பான உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. நமது நாட்டில், மாணவர்களின் பரீட்சைப் பெறு பேறுகளில், **தனியார் கல்வி நிலையங்கள் முக்கிய பாத்திரங்கள் வகிக்கின்றன** என்பது மறுக்க முடியாத ஒரு உண்மையாக இருக்கின்றது. அதிகூடிய சித்திகளைப் பெறுகின்ற மாணவர்களில் பெரும்பாலானோர், அத்தகைய சித்திகளைப் பெறுவதற்கு, பாடசாலைக் கல்வியோடு, தனியார் கல்வி நிலையங்களில் கற்றலை மேற்கொண்டதும் முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றது. இன்று ஒரு பிள்ளையின் கல்வி வாழ்வில், முன்பள்ளியில் இருந்து, உயர்தரம் வரையிலான காலப் பகுதியில், தனியார் கல்வி நிலையங்கள் தவிர்க்க முடியாத அங்கமாக மாறிவிட்டன. ஒரு பாடத்தை ஒன்றுக்கு மேற்பட்ட நிலையங்களில் கற்பதோடு, பொருளாதார ரீதியாக உயர்நிலையில் உள்ளவர்கள், தமது பிள்ளைகளுக்கு தங்களது வீடுகளில் தனியாக கற்பிப்பதற்கான ஒழுங்குகளையும் மேற்கொள்கின்றார்கள். பல சந்தர்ப்பங்களில், மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதை விட, தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதற்கு முதன்மை அளிக்கின்றார்கள். க.பொ.த உயர்தர மாணவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தாம் முதல் தடவை எழுதிய பரீட்சையில், எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெறத் தவறும்போது பின்னர், இரண்டாம், மூன்றாம் தடவைகளில், **கிட்டத்தட்ட முழுமையாகவே தனியார் கல்வி நிலையங்களில் கற்று, உயர் பெறுபேறுகளைப் பெறுபவர்களாக இருக்கின்றார்கள்.**

ஒரு சில விதிவிலக்குகளை தவிர, இதுதான் பொதுப்போக்காக இன்று மாறியிருக்கின்றது. பாடசாலைகளின் அடைவு மட்டம் குறைவடைவதற்கு, அப்பாடசாலைகளின் அதிபர்களையும், ஆசிரியர்களையும் குற்றம்சாட்டுகின்ற கல்வி அலுவலக அதிகாரிகள், தமது சொந்தப் பிள்ளைகளை தனியார் கல்வி நிலையங்களில் கற்பதற்காக அனுப்புகின்றார்கள் என்ற உண்மை, தனியார் கல்வி நிலையங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவத்தை உணர்த்தப் போதுமானது. இதே கல்வி அதிகாரிகளில் பலர், தனியார் கல்வி நிலையங்களில் புகழ்பெற்ற ஆசிரியர்களாக விளங்குகின்றார்கள் என்ற உண்மையும் இந்த கருத்துக்கு வலுச் சேர்க்கும். கற்பித்தல் முறைகளில் அடிக்கடி ஏற்படுத்தப்பட்டு வருகின்ற மாற்றங்களும், ஆசிரியர்கள் மீது கற்பித்தலுக்கு அப்பாற்பட்டதான வேலைச் சுமைகளை தொடர்ச்சியாக ஏற்படுத்தி வருவதும், கற்பித்தலை விட, ஆவணப்படுத்தும் வேலை அதிகரித்து வருவதும், முக்கியமாக, **பரீட்சை வினாத்தாள்கள் பாடசாலைக் கற்பித்தல் முறையையும் கடந்ததாக தயாரிக்கப்படுவதும்,** தேசியப் பரீட்சைகளில் உயர் சித்திகளைப் பெறுவதற்கு பாடசாலைக் கல்வி போதாது என்ற நிலையை உருவாக்கியுள்ளன. இந்த இடத்தில் நாம் ஒரு விடயத்தை வலுவாகப் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. நவீன கல்விக் கொள்கையானது, மாணவர்களின் சுயகற்றலுக்கு அதிக முக்கியத்துவத்தை வழங்குகின்றது. ஆனால் எமது மாணவர்களில் பெரும்பான்மையினருக்கு, **சுயகற்றல் என்பது, தனியார் கல்வி நிலையங்களில் கற்பதும், தமது வீடுகளில் ஆசிரியர்களினால் தனிப்பட்ட முறையில் கற்பிக்கப்படுவதும் என்பதாக மாறியிருக்கின்றது.** அதிகாரிகளின் எந்தவித தலையீடுகளும் இன்றி, வருடாந்த பாடத்திட்டம், பாடக்குறிப்பு, விசேட செயற்திட்டம், இணைப்பாடவிதான செயற்பாடுகள், கணிப்பீடுகள், ஆவணப்படுத்தல். போன்ற எந்த செயற்பாடுகளையும் மேற்கொள்ளாமல், **முற்றிலும் கற்பித்தல் ஒன்றையே மேற்கொள்கின்ற** இந்தத் தனியார் கல்வி நிலையங்கள், மாணவர்களை பரீட்சைக்குத் தயார்படுத்துவதில், சுதந்திரமாகவும், நிர்ப்பந்தங்களும், சுமைகளும் அற்ற முறையிலும் செயற்படுகின்றன. இவற்றின் விளைவாக, இன்று மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் தனியார் கல்வி நிலையங்கள் தவிர்க்க முடியாத அம்சங்களாக மாறியிருக்கின்றன.

இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல், அல்லது புரிந்து கொள்ள விரும்பாமல், அடைவுமட்டம் குறைவடைவதற்கு, பாடசாலை அதிபர்களையும், ஆசிரியர்களையும் குற்றம்சாட்டுவதால் எவ்வித சாதகமான விளைவும் ஏற்பட்டு விடாது. **நமது கல்வி முறை, பாடசாலைச் சூழல், மாணவர்களின் உளவியல், பெற்றோரின் பங்களிப்பு, பரீட்சை முறை, ஆசிரியர்கள் மீது தொடர்ச்சியாக திணிக்கப்படுகின்ற தேவையற்ற சுமைகள்... போன்றவற்றில் முறையான மாற்றங்களை ஏற்படுத்தாமல், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் செயற்பாடுகள் மூலமாக மட்டும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடைவுமட்டத்தை அதிகரித்து விட முடியாது.** இந்த உண்மையைக் கவனத்தில் கொள்ளாது, அதிபர்களை அவமானப்படுத்துவதும், தமது பாடங்களில், அடுத்த பரீட்சையில் எத்தனை வீத சித்தியை எதிர்பார்ப்பதாக குறிப்பிடும்படி ஆசிரியர்களை நிர்ப்பந்திப்பதும் அதிபர், மற்றும் ஆசிரியர்களின் உளவியலில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்துமே தவிர, வேறு எதையும் விளைவாக்காது.

பாடசாலை என்பது முற்றிலும் மனிதர்களின் உடலியல் மற்றும் உளவியல் சார்ந்த செயற்பாடுகளின் தொகுப்பாக அமைகின்றது. பிற துறைகளில் பின்பற்றப்படுவது போன்று, இலக்கங்கள் சார்ந்த இலக்குகளை வரையறுப்பதும், அவற்றை அடைவதற்காக திட்டமிட்டு செயற்படுவதும் இங்கு சாத்தியமற்றதாக இருக்கின்றது. உதாரணமாக, ஒரு வங்கியைப் பொறுத்தவரையில், **அடுத்த காலாண்டு காலப் பகுதியில், அந்த வங்கியின் மொத்த நிதிப் புரள்வுகளை எட்டு (08) வீதத்தால் அதிகரித்தல்** என்ற இலக்கை வரையறுத்து, அதை அடைவதை நோக்கி, அனைத்து வளங்களையும் பயன்படுத்தி முயற்சிப்பதும், அந்த இலக்கை அடைவதும் பெரிதும் சாத்தியமாகலாம். அந்த வங்கியின் வாடிக்கையாளர்களின் மீதான உத்தரவாதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இந்த இலக்கை அடைந்து கொள்ள முடியும். இந்த வாடிக்கையாளர்களின் வயது, அவர்களின் தனிப்பட்ட பலம், பலவீனம், குடும்பப் பின்னணி, அவர்களின் கல்வி அறிவு, அவர்களின் அறிதல் மட்டம். போன்ற எவை பற்றியும் அக்கறை கொள்ளாது, அந்த வாடிக்கையாளர்களின் கொடுக்கல், வாங்கல் சார்ந்த உத்தரவாதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, இத்தகைய இலக்கை அந்த வங்கி அடைந்து கொள்ள முடியும்.

ஆனால், பாடசாலை சூழல் இத்தகையது அல்ல. அது மிகப் பரந்ததும், பன்முகப்பட்டதுமான ஆளுமைகளின் தொகுப்பாக அமைந்திருக்கின்றது. இத்தகைய தனிமனித ஆளுமைகள் நிலையானவை அல்ல. அவை நாளாந்தம் மறுவார்ப்புச் செய்யப்படுவனவாகவும், மாற்றமடைவன வாகவும் அமைந்திருக்கின்றன. இவ்வாறு ஆளுமைகளை வடிவமைக்கின்ற எண்ணிலடங்கா காரணிகள், ஒரு பாடசாலையின் செயற்பாடுகளை கடுமையாகப் பாதிக்கின்றன. அப்பாடசாலை, தான் வகுத்திருக்கின்ற இலக்கை அடைவதில், இக்காரணிகள் பாரிய சவால்களாக அமைகின்றன. வெறும் கணித ரீதியான இலக்கங்களை அடைவு மட்டங்களாக வகுத்து, அவற்றை குறிப்பிட்ட காலத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை உருவாக்குவதினூடாக, ஒரு பாடசாலையின் அகச் சூழலில் உள்ளடங்குகின்ற மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் உளவியல் மீது எத்தகைய தாக்கங்கள் நிகழ்த்தப்படுகின்றன என்ற பரிசீலிப்பு இங்கு பெரும்பாலும் மேற்கொள்ளப்படுவதில்லை. இந்நிலையானது, ஒட்டுமொத்த பாட சாலைச் சூழலையும், இயந்திரத்தன்மையானதாக மாற்றியமைக்கின்ற திசையில் இட்டுச் செல்வதாக அமைந்திருக்கின்றது என்ற உண்மையும் புரிந்து கொள்ளப்படுவதில்லை.

தேசிய மட்டப் பரீட்சைகளில் மாணவர்கள் அடைகின்ற பெறு பேறுகளுக்கு அதிபர்களையும், ஆசிரியர்களையும், **முற்றாகப்** பொறுப்பாக்குகின்ற கல்வி அதிகாரிகளின் செயற்பாட்டின் நேரடி விளைவுகளில் ஒன்றாக, ஆசிரியர்களின் விடுமுறைகளும், ஓய்வு நேரங்களும் அவர்களிடமிருந்து பறிக்கப்படுகின்ற நிலைமை உருவாகியிருக்கின்றது. பெறுபேறுகளை அதிகரிக்க வேண்டும் என்ற முனைப்பில், பாடசாலை ஆரம்பிக்கும் முன்னரும், பாடசாலை முடிந்த பின்னரும், சனி, ஞாயிறு தினங்களிலும், ஏனைய விசேட விடுமுறை தினங்களிலும், மாணவர்களுக்கு (முக்கியமாக மூன்று தேசிய மட்டப் பரீட்சைகளிலும் தோற்றவுள்ள மாணவர்களுக்கு) கற்பிக்க வேண்டும் என அதிபர்கள், தமது பாடசாலைகளின் ஆசிரியர்களை நிர்ப்பந்திக்கின்ற நிலை உருவாகியிருக்கின்றது. கிட்டத்தட்ட ஏனைய நாட்களைப் போன்றே, இத்தகைய விடுமுறை நாட்களிலும் பாடசாலைகளுக்குச் சென்று கற்பிக்க வேண்டிய கட்டாய நிலைக்கு ஆசிரியர்கள் உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள். ஒரு ஆசிரியர் இத்தகைய விடுமுறை தினங்களில் எத்தனை மணித்தியாலங்கள் கற்பிக்கின்றார் என்பது முக்கியமல்ல. பதிலாக, இவ்வாறு விடுமுறை தினங்களில் **ஏதோ ஒரு நேரத்தில்** பாடசாலைக்கு செல்ல வேண்டியுள்ள நிர்ப்பந்தத்தின் காரணமாக, அத்தகைய விடுமுறை தினங்களில், தனது குடும்பத்தினருடன் ஓய்வாகவும், மகிழ்ச்சியாகவும் பொழுதைக் கழிக்க முடியாதவர்களாகவும், தாம் விரும்புகின்ற இடங்களுக்கோ அல்லது தமது நண்பர்கள் மற்றும் உறவினர்களைச் சந்திப்பதற்கோ செல்ல முடியாதவர்களாகவும் இருக்கின்றார்கள். இது அவர்களின் உளநிலையில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. ஐந்து நாட்களும் கடுமையாக வேலை செய்ததன் காரணமாக, உடல், உள அழுத்தங்களுக்கு உள்ளாகியிருக்கின்ற நிலையில், வார இறுதியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய இறுக்கமான நிலையில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கும், ஆற்றுப்படுத்துவதற்குமான வழிகளும் மறுக்கப்படு கின்ற நிலைக்கு ஆசிரியர்கள் ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இத்தகைய விடுமுறை தினங்களை விட, ஒவ்வொரு தவணையின் முடிவிலும் வருகின்ற விடுமுறைகளிலும், இதேபோன்று பாடசாலைகளில் கற்பிக்க வேண்டியவர்களாக அசிரியர்கள் இருக்கின்றார்கள். இத்தகைய தவணை விடுமுறை என்பது, ஆசிரியர்களுக்கான விடுமுறை அல்ல என்று கூறப்பட்டு, அவ்விடுமுறை தினங்களிலும் பாடங்கள் எடுக்க வேண்டும் என ஆசிரியர்கள் வற்புறுத்தப்படுகின்றார்கள். உண்மையில், தமக்கான விடுமுறைகள் பற்றிய தெளிவான விளக்கம் அற்றவர்களாகவே பெரும்பாலான ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். (அரச ஊழியர்களுக்கு என உரித்தாக்கப்பட்டுள்ள விடுமுறைகளைப் பெறுவது கூட, ஆசிரியர்களைப் பொறுத்தவரை அவர்ளுக்கான உரிமை அல்ல, மாறாக, அது ஒரு சலுகையே. அதிபர் விரும்பினால், விடுமுறை வழங்காமல் இருக்க முடியும் என்று அடிக்கடி ஆசிரியர்களுக்குச் சொல்லப்படுகின்றது) தவணை விடுமுறைகள் ஆசிரியர்களுக்கும் உரித்தானவையா என்ற விளக்கம் எந்த ஆசிரியருக்கும் தெரிந்திருக் கவில்லை. அதிபர்களுடன் முரண்பட்டு விடக் கூடாது என்ற எண்ணத்தினாலும், இப்போது பெரும்பாலான ஆசிரியர்கள் பெண்களாக இருப்பதால் தாம் இடமாற்றப்பட்டு விடலாம் என்ற அச்சத்தாலும், அநேகமாக அனைத்து ஆசிரியர்களும், எதுவித மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படாத இந்த விடுமுறை தின வகுப்புகளில் கற்பித்தலை மேற்கொண்டு வருகின்றார்கள்.

குறிப்பாக, இவ்வாறான விடயங்களில்தான் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும், தியாக சிந்தையும் எதிர்பார்க்கப்படுகின்றன. இத்தகைய மேலதிக வகுப்புகளின் மூலமாக, மாணவர்களின் அடைவு மட்டமும், பரீட்சைப் பெறுபேறுகளும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவற்றை ஈட்டுவதற்காக, ஆசிரியர்கள் தமது நேரத்தையும், ஓய்வையும், குடும்ப நிகழ்வுகளையும் தியாகம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் இத்தகைய எதிர்பார்ப்பது எவ்வளவு தூரம் சரியானது எனப் பரிசீலிக்க வேண்டியுள்ளது. நவீன கல்விக் கொள்கைகளில், ஆசிரியர்கள் அதிகமாகக் கற்பிப்பதால், மாணவர்கள் சிறந்த அடைவு மட்டத்தையும், பெறுபேறுகளையும் பெற முடியும் என்ற கருத்தாக்கம் கைவிடப்பட்டுள்ளது. இதற்கு மாறாக, **மாணவர்களின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுய கற்றல்தான் அவர்களின் அடைவு மட்டத்தையும், பெறுபேற்றையும் உயர்த்தக் கூடியது** என்ற கொள்கை முன்வைக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளில், ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாட்டை மதிப்பீடு செய்து, புள்ளிகள் இடுகின்ற படிவத்தில், 'கற்பித்தலை விட, கற்றல் மேலோங்கியிருக்கின்றதா? எனக் கேட்கும், அம்சமும் உள்ளடங்கி யுள்ளது. உண்மையில், தாம் சுயமாகக் கற்க வேண்டியதன் அவசியத்தை மாணவர்கள் உணர்ந்து, அதற்கான குடும்பச் சூழலும் அமையும்போது, விடுமுறை தினங்களில் அவர்கள் பாடசாலையில் கற்க வேண்டிய அவசியம் ஏற்படாது. அதற்கு மாறாக, அவர்கள் பொது நூலகம், இணையம், பத்திரிகை, மற்றும் சஞ்சிகைகள், நண்பர்களுடனான கலந்துரையாடல். என வெவ்வேறு வழிகளினூடாக தமது அறிவை பரந்தளவிலும், ஆழமாகவும் வளர்த்துக் கொள்ள முடியும்.

அரசாங்கத்தினாலும், பிற தனியார் நிறுவனங்களினாலும் முன்னெடுக் கப்படுகின்ற போட்டி நிகழ்வுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகள் போன்றவை பொதுவாக வார இறுதி நாட்களிலும், விசேட விடுமுறை தினங்களிலுமே இடம்பெறுகின்றன. இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்ற மாணவர்களுடன், அந்நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களும் இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ள வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனால், இந்த ஆசிரியர்கள் தமது விடுமுறை நாட்களை தமது விருப்பத்திற்கேற்ப அனுபவிக்க முடியாமல் போவதோடு, பல சந்தர்ப்பங்களில் தமது சொந்த பணத்தையும் செலவழித்து இவற்றில் கலந்து கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகின்றார்கள். பல பாடசாலைகளில் ஆசிரியைகளே பெரும் எண்ணிக்கையில் இருப்பதால், அவர்கள் இந்நிகழ்வுகளில் கலந்து கொள்வதில் குறிப்பான பிரச்சினைகளை எதிர் கொள்பவர்களாக இருக்கின்றார்கள். குடும்பப் பொறுப்புகள், தமது உடலியல் சார்ந்த பிரச்சினைகள், போக்குவரத்துச் செய்வதில் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் என பொருளாதார பிரச்சினைகளோடு, உடல், உள ரீதியாக அழுத்தங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள்.

துல்லியமாகப் பகுப்பாய்வு செய்வோமாயின், நமது **ஆசிரியர்கள் கடுமையாக சுரண்டப்படுகின்றார்கள்** என்ற உண்மையை நாம் அறிந்து கொள்ள முடியும். சுரண்டல் என்பதை வேலைநேரத்திற்கும், வழங்கப்படுகின்ற ஊதியத்திற்கும் இடையிலான வேறுபாட்டுடன், ஒருவருக்கு பொறுப்பாக்கப்படுகின்ற பணிகளின் எண்ணிக்கை மற்றும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவு, அந்த வேலைகளை செய்து முடிப்பதற்கான வளங்களின் தன்மை போன்ற காரணிகளையும் உள்ளடக்கியதாக கணிப்பிடும்போது, ஆசிரியர்கள் எவ்வளவு கடுமையாகச் சுரண்டப்படுகின்றார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை முடிப்பதற்காக, பாடசாலை நேரம் தவிர்ந்த பிற நேரங்களிலும், விடுமுறை தினங்களிலும், **எவ்வித ஊதியமும் வழங்கப்படாத நிலையில்** செயற்பட வேண்டிய கட்டாய நிலையில் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். பொருளாதார ரீதியாக மட்டுமின்றி, தமது இருப்பு சார்ந்தும் தமது குடும்பத்தை முறையாகப் பராமரிக்க முடியாத நிலைமைக்குள் அவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இத்தகைய நிலைமை அனைத்தும் ஒன்று திரண்டு, ஆசிரியர்களின் உளநிலையில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன.

மாணவர்களின் அடைவு மட்டமும், பெறுபேறுகளும் வீழ்ச்சியடைவதற்கு, மாணவர்களை எவ்விதத்திலும் காரணமாக்க கூடாது என்ற கருத்து விவாதத்திற்குரியது. இன்றைய சூழலில், மாணவர்களின் உளவியலும், நடத்தைகளும் எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றன என்பதை மேலே பரிசீலித்திருக்கிறோம். மாணவர்களின் கட்டுப்பாடற்ற தன்மையும், ஒழுக்க மீறல்களும் வெளிப்படுகின்ற பல நிகழ்வுகள் தினந்தோறும் நமக்கு முன்னே இடம்பெறுகின்றன. காதல் வயப்படுதல், தாம் விரும்பியவர்களுடன் வீட்டை விட்டு ஓடுதல், தமது காதலை எதிர்க்கின்ற பெற்றோர்களை கொலை செய்வதற்குக் கூட திட்டம் வகுத்தல், வீட்டாருக்குத் தெரியாமல் பிறருடன் தனியார் விடுதிகளிலும், ஓட்டல் அறைகளிலும், வாகனங்களிலும் பாலியல் நடத்தைகளில் ஈடுபடுதல், மதுபானம் போன்ற போதைவஸ்த்துக்களைப் பாவித்தல், தற்கொலை முயற்சிகள் என மாணவர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் பலதரப்பட்டவைகளாக இருக்கின்றன. இவற்றில் ஈடுபடுபவர்கள் ஒரு சில மாணவர்கள்தான் என்றும், ஆங்காங்கே சில இடங்களில் இடம்பெறுகின்ற இத்தகைய நிகழ்வுகளை பொதுமைப் படுத்திப்பார்க்கக்கூடாதுஎன்றும்கூறி,இதன்விளைவுகளைதட்டிக்கழித்து விட முடியாது. இவ்வாறான நிகழ்வுகள் ஆங்காங்கே இடம்பெறலாம். ஆனால் **இத்தகைய மனநிலைகளைக் கொண்ட மாணவர்கள் ஒவ்வொரு பாடசாலையிலும் இருக்கின்றார்கள்** என்பதையும், வெவ்வேறு காரணங்களினால்தான் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடாதவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இத்தகைய மாணவர்களினால், ஒரு பாடசாலையில் உள்ள பிற மாணவர்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றார்கள் என்பதையும், இவர்களைக் கொண்டிருக்கின்ற வகுப்புகளில், கற்பித்தலில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் அனுபவிக்கின்ற சிக்கலான நிலைமைகளையும் கவனத்தில் கொள்வோமாயின், இவர்களினால் ஏற்படக் கூடிய பாரதூரமான விளைவுகளை நாம் புரிந்து கொள்ள முடியும். மாணவர்களை இழிவுபடுத்த வேண்டும் என்பதற்காகவோ அல்லது அவர்களை குற்றம் சொல்ல வேண்டும் என்பதற்காகவோ இந்த விடயங்கள் இங்கு பரிசீலிக்கப்படவில்லை. மாறாக, ஒரு பாடசாலையின் பரீட்சைப் பெறுபேற்றில், அதிபர், ஆசிரியர்கள் என்பவர்களோடு, மாணவர்களுக்கும் (மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கும்) முக்கிய பங்கும், பொறுப்பும் இருக்கின்றன என்ற உண்மையை சுட்டிக் காட்டுவதற்காகத்தான் இவை பரிசீலிக்கப்படுகின்றன. சரியாக மதிப்பிடுவோமாயின், க.பொ.த சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளில், ஏனையோரை விட, அப்பரீட்சைகளில் தோற்றிய **மாணவர்களின் பங்கே கூடுதலாக இருக்கின்றது** என்ற உண்மையைப் புரிந்து கொள்வோம். எந்த மாணவர்கள் பொறுப்புடனும், அர்ப்பணிப்புடனும் கற்கின்றார்களோ, அந்த மாணவர்கள்தான் உயர்ந்த பெறுபேறுகளை அடைகின்றார்கள் என்பது தெளிவான உண்மையாக இருக்கின்றது.

அதிபர்கள், மற்றும் ஆசிரியர்களுடன் கடுமையான முறையில் நடந்து கொள்கின்ற கல்வி அலுவலக அதிகாரிகள், உதவி அதிகாரிகள் மற்றும் பிற பதவிநிலை அதிகாரிகள், தமது சொந்த அலுவலகங்களில் தமக்குக் கீழ் கடமையாற்றுகின்ற ஊழியர்கள் விடயத்தில் முற்றிலும் மாறுபட்ட முறையில் நடந்து கொள்கின்றார்கள். இந்த அலுவலகங்களில், ஜனநாயக ரீதியிலான நிர்வாக முறைமையோடு, பல இடங்களில் தாராளவாத நிர்வாக முறைமையும் பின்பற்றப்படுகின்றன. இந்த ஊழியர்கள் எவ்வளவு பொறுப்புடன் தமது கடமைகளை மேற்கொள்கின்றார்கள் என்பதைக் கூட பல அதிகாரிகள் கவனிப்பதில்லை. தமது உத்தியோகபூர்வ தேவைகளுக்காக ஆசிரியர்கள் அலுவலகங்களுக்கு வருவதை கண்டிப்பான முறையில் கட்டுப்படுத்தி வருகின்ற இந்த அதிகாரிகள், தமது அலுவலகங்களில் பணிபுரிகின்ற ஊழியர்கள், எப்போது மதிய உணவிற்காக செல்கின்றார்கள், எப்போது திரும்புகின்றார்கள் என்ற சிறிய விடயத்தை கூட ஒழுங்கமைக்காதவர்களாக இருக்கின்றார்கள். தமக்கென கண்டிப்பான முறையில் ஒதுக்கப்பட்டுள்ள தினங்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகங்களுக்கு செல்கின்ற ஆசிரியர்களுக்கு, இன்று 'சப்ஜெக்ட் கிளார்க்' லீவு, 'லஞ்சுக்குப்' போனவர் இன்னும் வரவில்லை என்பன போன்ற பதில்கள் அடிக்கடி சொல்லப்படுகின்றன.

நமது கல்விச் சூழலில், ஆசிரியர்களுக்கும், கல்வி அலுவலக ஊழியர்களுக்கும் இடையிலான தொடர்பாடல்முறை பற்றிய ஆழமான பரிசீலனை அவசியமாகின்றது. கல்வி அலுவலகங்களில் பணியாற்று கின்ற பெரும்பாலான ஊழியர்கள், ஆசிரியர்களின் வருகையை விரும்பாதவர்களாகவே இருக்கின்றார்கள். ஆசிரியர்களின் வருகை யானது, தமக்கு இன்னும் ஒருவேலையை ஒப்படைப்பதாகவே இருக்கும் என்ற எண்ணப்பாங்கைக் கொண்டவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள். குறைந்தபட்சம், குறித்த ஒரு அலுவலக ஊழியருக்கு முன்னால் அமர்ந்து, தமது தேவைகளைச் சொல்வதற்கும் வாய்ப்பற்றவர்களாகவே ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அலுவலகங்களின் இடப்பற்றாக்குறை, இறுக்கமான அலுவலக ஒழுங்கு என எந்தக் காரணங்களை முன்வைப்பினும், ஒரு ஆசிரியர் நிற்பதற்குக் கூட முடியாமல் தவிக்கின்ற நிலை, அவரது உளவியலில் எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தும் என்ற உண்மை புரிந்து கொள்ளப்பட வேண்டும். தனியார்துறை அலுவலகங்கள் அனைத்தும், தமது வாடிக்கையாளர்கள் எளிதான முறையில் ஊடாடக் கூடிய விதமாக வசதிகளை உருவாக்கியிருக்கின்ற நிலையில், கல்வி அலுவலகங்களுக்குச் செல்கின்ற ஆசிரியர்கள், தாழ்வாரங்களிலும், வறாந்தாவிலும், மரநிழல்களிலும் நிற்கின்ற பரிதாபக் காட்சியைக் காண முடிகின்றது. தம்மைப் போன்ற ஒரு அரசாங்க ஊழியரின் முன்னால், நின்றவாறும், ஒருவித பயத்தோடும் தமது தேவைகளை முன்வைக்க வேண்டிய நிலை, ஆசிரியர்களின் உளவியலில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. தமது சம்பள உயர்வு, பதவி உயர்வு, தமக்குரிய சம்பள நிலுவை, மற்றும் பிற தேவைகளுக்காக அலுவலகங்களுக்கு செல்கின்ற ஆசிரியர்கள், ஒரேநாளில் அவற்றை நிறைவேற்றுவது என்பது மிக அரிதான நிகழ்வாகவே இருக்கின்றது. இடமாற்றம் பெற்று செல்கின்ற ஆசிரியர்களின் சுயவிபர கோவைகளை (Personal File) உரிய தினத்தில் அனுப்பி வைப்பதும் பெரும்பாலும் இடம்பெறுவதில்லை. இதனால், புதிய இடத்தில் சம்பளம் பெற முடியாத நிலைக்கு பல ஆசிரியர்கள் ஆளாகின்றார்கள். பல சந்தர்ப்பங்களில், ஆசிரியர்கள் சமர்ப்பிக்கின்ற ஆவணங்கள் தவறவிடப்பட்டு, மீண்டும் அவற்றை சமர்ப்பிக்கும்படி அவர்கள் கேட்கப்படுகின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை விட, ஆசிரியர்களின் சுயவிபர கோவைகளை இற்றைப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பத்திரங்களை நிரப்பும்படி ஆசிரியர்கள் அடிக்கடி கேட்கப்படுகின்றார்கள். இவற்றிலுள்ள தகவல்களை சிரமத்தின் மத்தியில் அவர்கள் நிரப்பி அனுப்பிய பின்னர், சில காலத்திற்கிடையில், அதே பத்திரங்களை நிரப்பி அனுப்பும்படி மீண்டும் ஆசிரியர்கள் கேட்கப்படுகின்றார்கள். இதற்கான காரணங்கள் யாருக்கும் புரிவதில்லை. தகவல்களை முறைப்படுத்தி வைப்பதற்கான நவீன முறைகள் உட்பட, பல முறைமைகள் பின்பற்றப்படுகின்றபோதிலும், ஆசிரியர்களிடம் மட்டும், மீண்டும் மீண்டும் அதே தகவல்களை கோருவதானது, அலுவலக ரீதியான உதாசீனப் போக்கை வெளிப்படுத்துவதோடு, ஆசிரியர்களுக்கு தேவையற்ற சிரமங்களையும், உள அழுத்தங்களையும் ஏற்படுத்து வதாக அமைகின்றது. சில சந்தர்ப்பங்களில், தமது பணியில் இருந்து ஓய்வு பெறுவதற்காக ஆசிரியர்களும், அதிபர்களும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்றபோது, அவர்களின் சுயவிபர கோவைகளில் தேவையான ஆவணங்கள் காணப்படாதிருக்கின்ற நிலைமையும் காணப்படுகின்றது. இந்நிலையில், இவர்கள் தாம் சொந்தமாகப் பேணி வருகின்ற சுயவிபரக் கோவைகளில் இருந்து அத்தகைய ஆவணங்களை வழங்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

இவ்வாறு கல்வி அலுவலக ஊழியர்கள் ஆசிரியர்கள் விடயத்தில் அக்கறையற்ற நிலையில் நடந்து கொள்வதற்கு, அந்த ஊழியர்கள் அனுபவிக்கின்ற வேலைப்பளு பிரதானமான காரணமாக இருக்கின்றது என்று கூறப்படுவதை ஒருவர் ஏற்றுக் கொள்ள முடியும். பல பாடசாலைகளினதும், அங்கு கடமையாற்றுகின்ற நூற்றுக்கணக்கான ஆசிரியர்களினதும் பணிகளை ஒரு ஊழியரிடம் பொறுப்பாக்கும்போது, அந்த ஊழியரின் வேலைப்பளு அதிகரிக்கின்றது என்பதை புரிந்து கொள்ள முடியும். எனினும், இதே வேலைப்பளுவுடனும், முடிக்கப்படாத வேலைகளுடனும்தான், நமது கல்வி அலுவலகங்கள் தொடர்ந்தும் செயற்படப் போகின்றனவா? எனவே, இந்த முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவது குறித்து சிந்திக்க வேண்டும்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் **தமக்கென சொந்த நிர்வாக முறைமையைக் கொண்டிராத அரசாங்க ஊழியர்களாக ஆசிரியர்களே இருக்கின்றார்கள்.** தமது சகல தேவைகளுக்கும் கல்வி அலவலகங்களைச் சார்ந்திருக்க வேண்டியவர்களாக ஆசிரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றார்கள். இந்த நிலையானது ஒருபுறம், ஆசிரியர்கள் நிர்வாக அறிவற்றவர்களாக இருப்பதற்குக் காரணமாகியுள்ளது. மறுபுறம், கல்வி அலுவலகங்களில் அவர்கள் ஒரு இரண்டாந்தரப் பிரஜைகளைப் போன்று நடத்தப்படுவதற்கான சூழலை ஏற்படுத்தியுள்ளது. இவ்விரண்டு நிலைகளுமே ஆசிரியர்களின் ஆளுமையையும், உளவியலையும் பாதிப்பதாக அமைந்துள்ளன. இந்நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். இதற்காக பின்வரும் புதிய செயன்முறை குறித்து நாம் விவாதிக்க முடியும்:

- **ஆசிரியர்கள், கல்வி அலுவலகங்களுக்குச் செல்வதை முற்றாகத் தவிர்க்கக் கூடிய சூழல் உருவாக்கப்படுதல்.** அதற்குப் பதிலாக, ஒவ்வொரு பாடசாலையிலும், ஆசிரியர்களின் உத்தியோகபூர்வ தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்படக் கூடிய முறைமை உருவாக்கப்படுதல்.
- சம்பளப் பட்டியல் தயாரிப்பில் தொடங்கி, சம்பள உயர்வு, பதவி உயர்வு, நிலுவை வழங்கல், கடன்வழங்கல், தகவல்கள் வழங்கல். போன்ற சகல விடயங்களையும் அந்தந்தப் பாடசாலைகளிலேயே செயற்படுத்தும் வகையில், நிர்வாக முறைமையை மாற்றியமைத்தல். அதாவது ஒவ்வொரு பாடசாலையும் ஒரு நிர்வாக அலகாகவும் செயற்படுதல்.
- இதற்கான ஆளணி, மற்றும் பௌதிக வளங்கள் ஒவ்வொரு பாடசாலைக்கும் வழங்கப்படுதல்.
- ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ள சில பாடசாலைகளை ஒன்றிணைப்பதன் மூலமாக, அவற்றையும் ஒரு நிர்வாக அலகாக உருவாக்குதல்.
- கால ஒழுங்கில், ஆசிரியர்களை பகுதிநேரமாக விடுவித்து இப்பணிகளில் ஈடுபடச் செய்வதன் மூலமாக, அவர்கள் நிர்வாக ரீதியான அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியத்தை உருவாக்குதல்.

சுயாதீனமான, சகல உரிமைகளும் பெற்றுள்ள அரச ஊழியர்கள் என்றவகையில், பிற அரச ஊழியர்களினால் அதிகாரத்திற்கும், அவமானப்படுத்தலுக்கும் உட்படுவதில் இருந்து ஆசிரியர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்கப்படுவதற்கான ஒரு முறைமை என்றவகையில், ஒவ்வொரு பாடசாலையும் நிர்வாக அலகாகவும் மாற்றப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட வேண்டும். கல்வி அலுவலகங்களில் பணியாற்றுகின்ற ஒரு ஊழியரிடம், பல பாடசாலைகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஆசிரியர்களின் விடயங்களைப் பொறுப்பாக்குவதன் மூலமாக, அவர் கடுமையான வேலைச் சுமைக்குள்ளாகின்றார் என்பது புரிந்தேற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மையாக இருக்கின்றது. இதனாலேயே, தாமதங்களும், தவறுகளும், பிற குறைபாடுகளும் ஏற்படுகின்றன எனவும் கொள்ள முடியும். இதற்கு மாறாக, ஒவ்வொரு பாடசாலையும், தமது பாடசாலை ஆசிரியர்களின் கோவைகளை இற்றைப்படுத்துகின்ற நிலை உருவாகின்றபோது, அது ஒரு எளிதானதும், இலகுவானதுமான பணியாக மாறி விடும். பெரும்பாலான பாடசாலைகள் இருபது தொடக்கம் இருபத்தைந்து ஆசிரியர்களையே கொண்டிருக்கின்ற நிலையில், இத்தகைய பணி, எவ்வித தாமதமுமின்றியும், முறையாகவும் நிறைவேற்றப்படுவதற்கான சாத்தியம் உருவாகும்.

கல்வி அலுவலகங்களைச் சேர்ந்தோர், ஆசிரியர்களின் வருகையை விருப்புடன் வரவேற்காதது போன்று, ஆசிரியர்களும், கல்வி அலுவல கங்களைச் சேர்ந்தோரின் பாடசாலை வருகையை விருப்புடன் வரவேற்பதில்லை. இதற்கு ஆசிரியர்களிடம், தமது தொழில் சார்ந்து காணப்படுகின்ற பலவீனங்கள், குறைபாடுகள் என்பவையும் காரணங்க ளாக அமைகின்றன. அடிக்கடி மாற்றப்படுகின்ற கல்வி முறைமை, கற்பித்தல் முறைமை போன்றவற்றை முறையாக உள்வாங்கி, அவற்றிற்கேற்ப தம்மை தகவமைத்துக் கொள்வதில் பல ஆசிரியர்கள் சிரமப்படுகின்றார்கள். இதனால், தமது பாடசாலைக்கு வருகை தரக்கூடிய கல்வி அலுவலக அதிகாரிகள் மற்றும் பிற ஊழியர்களின் முன்னால் தாம் குற்றவாளிகளாக நிற்க வேண்டிய நிலை உருவாகும் என்பதால், அவர்களின் வருகையை விருப்புடன் வரவேற்காதவர்களாக ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். எனினும், இது நாணயத்தின் ஒருபக்கம்தான். அதன் இன்னொரு பக்கம் பரிசீலனைக்குட்பட வேண்டிய அளவுக்கு முக்கியத்துவமிக்கது.

பாடசாலைகளை மதிப்பீடு செய்ய வருகின்ற கல்வி அலுவலக அதிகாரிகளும், அவர்களுடன் வருகின்ற குழுவினரும் பெரும்பாலும் அதிபர்களினதும், ஆசிரியர்களினதும் செயற்பாடுகளில் குறைகாண் பதையே பிரதான இலக்காகக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு பாட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலையின் எதார்த்த நிலைமைகளை முறையாகப் பரிசீலித்து, அப்பாடசாலைக்கு எத்தகைய உதவிகள், மற்றும் ஆலோசனைகள் தேவைப்படுகின்றன என்பதைப் புரிந்து, அதன் அடிப்படையில் அங்கு கடமையாற்றுகின்ற அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் உரையாட வேண்டும் என்ற அக்கறையை இவர்கள் வெளிப்படுத்துவதில்லை. இந்த அதிகாரிகளுக்கும், அதிபர், ஆசிரியர்களுக்கும் இடையே சுதந்திரமான கருத்துப் பரிமாறல் ஒருபோதும் இடம்பெறுவதில்லை. மாறாக, அதிகாரத்துவ தன்மையான, ஒருபக்க கருத்து முன்வைப்பு மட்டுமே பெரும்பாலும் இடம்பெறுகின்றன. பாடசாலைகளுக்கு வருகை தருகின்ற பிரிவினர்கள், வகுப்பறை மதிப்பீடு மற்றும் நிருவாக ரீதியான மதிப்பீடு என்பவற்றை நிறைவு செய்த பின்னர், அதுகுறித்த தமது கருத்துக்களைத் தெரிவித்து முடிக்கும்போது, பாடசாலை ஏற்கனவே முடிவடைந்து மாணவர்கள் வீடுகளுக்கும் சென்றிருப்பார்கள். எனவே இதன் பின்னர் எந்த ஒரு அதிபரும், ஆசிரியரும் கருத்துக் கூற முயற்சிப்பதில்லை. அதற்கான நேரமும் இருப்பதில்லை.

பாடசாலைகளை மதிப்பீடு செய்ய வருகின்ற கல்வி அலுவலக அதிகாரிகள், வருகை இடாப்பில் ஆசிரியர்கள் கையொப்பம் இடுவதில் இருந்து, அவர்களின் கற்பித்தல் முறை, ஆவணப்படுத்துகை, இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், என ஒவ்வொன்றைப் பற்றியும் அணுவணுவாக பரிசீலிப்பதில் அதீத அக்கறை காட்டுகின்றார்கள். வருகை இடாப்பில் ஆசிரியர்களினால் குறிக்கப்படுகின்ற நேரங்கள், பெரும்பாலும் ஒவ்வொரு நிமிட இடைவெளிகளில் இருப்பதும் இவர்களின் விமர்சனத்திற்குள்ளாகின்றன. ஒரு நாளில், ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் என ஒரு **உச்ச நேரம் (Peak Time)** இருக்கின்றது. இந்த உச்ச நேரத்தில்தான் பெரும்பாலானவர்களின் பங்கேற்பு அதிகமாக இருக்கும். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களின் பாடசாலை வருகைக்குரிய உச்ச நேரமாக, பொதுவாக **காலை 7.15 மணியில் இருந்து, 7.30 மணி வரையிலான** காலப்பகுதி அமைந்திருக்கின்றது. இந்த நேர இடைவெளியில்தான் அவர்கள் தமது கையொப்பங்களை அதிகமாக இடுவார்கள். உண்மையில், இந்த பதினைந்து நிமிட இடைவெளியில், குறைந்தது அறுபது (60) ஆசிரியர்கள் தமது கையொப்பங்களை இட முடியும். இதை செயல்ரீதியாகவே நிரூபிக்க முடியும். ஒருவர் கையொப்பமிட அதிக பட்சம் 15 செக்கன்கள் போதுமானவை. இந்த உண்மையை எந்த அதிகாரியும் புரிந்து கொள்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு ஒரு நிமிட இடைவெளிகளில் அடுத்தடுத்த ஆசிரியர்கள் கையொப்பமிடுவதே கண்டனத்துக்குரிய விடயமாக இருக்கின்றது. இதனால், சில சந்தர்ப்பங்களில், ஆசிரியர்கள் தாம் வந்த சரியான நேரத்திற்கு கையொப்பமிட முடியாமல் தடுமாறுகின்ற நிலையும் காணப்படுகின்றது.

இவ்வாறு **திருடர்களைப் பிடிப்பது போன்ற பாவனையுடன்** இந்த அதிகாரிகள் நடந்து கொள்வதானது, அவர்களின் வருகையை ஆசிரியர்கள் விரும்பாமல் இருப்பதற்கான ஒரு காரணமாக இருக்கின்றது. அதேநேரத்தில், இத்தகைய குழுக்களில் இடம்பெறுகின்ற உதவி அதிகாரிகளில் பலரும், சேவைக்கால ஆலோசகர்களில் அனைவரும் ஏற்கனவேபாடசாலைகளில்அதிபர்களாகவும்,ஆசிரியர்களாகவும்கடமை புரிந்தவர்கள். இவர்களில், ஒரு கணிசமான பகுதியினரின் பாடசாலைக் கால அனுபவங்கள் அத்துணை சிறப்பானதாக அமைந்திருப்பதில்லை. அதிபர்களாக இருந்தவர்களில் ஒரு சாரார், பதவி உயர்வு பெற்று, அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்டவர்களாக இருக்கின்ற அதே நேரத்தில், இன்னும் ஒரு பகுதியினர், தமது சேவைக்காலத்தில் ஆசிரியர்களுடனோ, மாணவர்களுடனோ, அல்லது பெற்றோர்களுடனோ ஏற்பட்ட முரண்பாடுகளினால் அதிபர் பதவியில் இருந்து விலக்கப்பட்டு, கல்வி அலுவலகங்களில் இணைக்கப்பட்டவர்களாக உள்ளனர். சேவைக்கால ஆலோசகர்களாக இருப்பவர்களில் கணிசமானோர், தமது ஆசிரிய பணியின்போது, முறையாகக் கடமையாற்றாதோர்களாக இருந்தவர்கள். பதவி மூப்பு, வெற்றிடம், செல்வாக்கு போன்ற காரணிகளினால், இவர்கள் சேவைக்கால ஆலோசகர்களாக நியமனம் பெற்றவர்கள். இத்தகைய பிரிவினர்கள், ஒரு பாடசாலைக்குச் சென்று, அங்கு கடமையாற்றுகின்ற அதிபர் மற்றும் ஆசிரியர்களின் செயற்பாடுகளில் குறைகாணும் போது, அதன் தார்மீகத் தன்மை வலுவுடையதாக இருப்பதில்லை. ஒரு பாடசாலைக்குச் செல்கின்ற இந்தக் குழுவினர், அங்கு பிற பாடசாலைகளின் நிலைமைகளைப் பற்றி விமர்சனம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இந்த விமர்சனம் சரியானதாக இருக்கின்றபோதிலும், இது அதிபர், ஆசிரியர்கள் மத்தியில் எதிர்மறையான உளவியல் தாக்கத்தை உருவாக்குகின்றது. **தம்மிடம் பிற பாடசாலைகளைப் பற்றி விமர்சிப்பவர்கள், பிற பாடசாலைகளில் தம்மைப் பற்றியும் விமர்சிப்பார்கள்** என்ற கசப்புணர்வு ஆசிரியர்கள் மத்தியில் உருவாகின்றது. இது இக்குழுவினர் மீதான நம்பகத்தன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழக்கப்படுவதற்கான காரணங்களில் ஒன்றாக அமைகின்றது.

ஒவ்வொரு பாடசாலையும் தனித்துவமானது. அனைத்துப் பாடசாலைகளும் ஒரு பொதுவான கொள்கை மற்றும் நடைமுறைகளினால் வழிநடத்தப்படுகின்ற போதிலும், ஒவ்வொரு பாடசாலையும் தன்னளவில் ஒரு தனியான இருப்பாக (Unique Entity) இருக்கின்றது. ஒரு பாடசாலை உள்வாங்குகின்ற பாடசாலை சமூகம், அப்பாடசாலையில் கற்கின்ற மாணவர்கள், அவர்களின் பண்பாடு, மரபு, ஆசிரியர்கள், வளங்கள், என பன்முகக் காரணிகளின் சேர்க்கையினால் ஒவ்வொரு பாடசாலையும் ஒரு தனியான இருப்பாக அமைந்து, தனது கல்வி நடவடிக்கைககளை முன்னெடுத்துச் செல்கின்றது. சில சந்தர்ப்பங்களின் பொதுவான போக்கிற்கு மாற்றமான சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்திலும் அப்பாடசாலை இருக்கின்றது. ஒரு பாடசாலை முன்னெடுக்கின்ற நடவடிக்கைகள் சிறப்பானதாகவும், முன்மாதிரியாகவும் அமைகின்றபோது, அப்பாடசாலையை பெயர் குறிப்பிட்டு பாராட்டுவதே சரியானது. ஆனால், பாடசாலையைத் தரிசிக்கின்ற குழுவினரோ, பொதுவாக பெயரைக் குறிப்பிடாமல், மறைமுகமாகவே பிற பாடசாலைகளைப் பற்றிய விமர்சனங்களை முன்வைக்கின்றார்கள். உண்மையில், இவர்கள் எந்தப் பாடசாலையைப் பற்றி விமர்சிக்கின்றார்கள் என்ற விடயம், அங்கு கலந்து கொள்கின்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் அதிபருக்கும் தெரிந்தே இருக்கின்றது. இந்நிலையில் இத்தகைய மறைமுகமான விமர்சனங்கள், அவர்கள் மத்தியில் நல்லபிப்பிராயத்திற்குரியனவாக அமைவதில்லை.

ஆசிரியர் இடமாற்றம் என்பது எப்போதும் கொதிநிலைக்குரிய விடயமாகவே இருந்து வருகின்றது. அரசியல் செல்வாக்கு, தனிநபர் செல்வாக்கு என்பவற்றோடு, அதிகாரிகளின் உறவுமுறை, அவர்களின் விருப்பு, வெறுப்பு என்பவையும், ஆசிரிய இடமாற்றங்களைத் தீர்மானிக்கின்ற காரணிகளாக இருக்கின்றன. தூர இடங்களிலும், கஷ்டப் பிரதேசங்களிலும் கடமைபுரிகின்ற செல்வாக்கற்ற பல ஆசிரியர்கள் தொடர்ந்தும் பல வருடங்களாக அதே பாடசாலைகளிலேயே கடமையாற்றுகின்ற அவல நிலையை அனுபவித்து வருகின்றார்கள். அதேநேரத்தில், செல்வாக்குமிக்கவர்கள், ஒரே பாடசாலையில் அல்லது நகர்ப்புறப் பாடசாலைகளில் தொடர்ந்தும் கடமைபுரிகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். மேலும், பல வருடங்கள் தூரப் பிரதேசங்களில் கடமையாற்றி விட்டு, தமது சொந்த இடங்களுக்கு அருகாமையில் மாற்றம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற ஆசிரியர்கள், ஒரு சில வருடங்களிலேயே, மீண்டும் இடமாற்றத்திற்குள்ளாகின்றவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆசிரிய இடமாற்றத்தில் நிலவுகின்ற இத்தகைய முறைகேடுகளும், ஒழுங்கீனங்களும் ஆசிரியர்களின் உளவியலில் மிகக் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன.

தூர இடங்களுக்கும், கஷ்டப் பிரதேசங்களுக்கும் இடமாற்றம் பெறுகின்ற ஆசிரியர்கள், போக்குவரத்து சார்ந்த பிரச்சினைகளினால் கடுமையாக பாதிக்கப்படுகின்றார்கள். அரசாங்க போக்குவரத்துத் துறையோ, அல்லது தனியார் போக்குவரத்துத் துறையோ ஆசிரியர்களை மையப்படுத்தியதாக பயணத்திற்கான நேர ஒழுங்குகளை மேற்கொள்வதில்லை. அதிகாலையிலேயே பயணத்தைத் தொடங்க வேண்டிய கட்டாயத்திலுள்ள ஆசிரியர்கள், கிடைக்கின்ற பஸ் வண்டிகளில் ஏறிக் கொள்கின்றார்கள். இவை உள்ளூர் சேவைகளில் ஈடுபடுகின்ற வண்டிகளாயின், அவை மெதுவான வேகத்திலேயே பயணம் செய்கின்றன. இதனால் இவர்களினால் உரிய நேரத்திற்குப் பாடசாலைகளுக்குச் செல்ல முடிவதில்லை. தூர இடங்களுக்குச் செல்கின்ற விரைவு வண்டிகள், பல சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களை ஏற்றாமல் சென்று விடுகின்றன. இதனால், இன்னும் தாமதித்தே இவர்கள் பாடசாலைகளுக்கு செல்கின்ற நிலை உருவாகின்றது. இவ்வாறு போக்குவரத்து ரீதியாக ஆசிரியர்கள் எதிர்கொள்கின்ற நெருக்கடி நிலைமைகள் குறித்து அரசாங்கமோ அல்லது கல்வி அலுவலக அதிகாரிகளோ எந்தவித அக்கறையையும் வெளிப்படுத்துவதில்லை. இத்தகைய அவலநிலையை, யுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் ஆசிரியர்கள் கடுமையாக அனுபவித்திருக்கின்றார்கள்.

யுத்தம் கடுமையாக நிகழ்ந்து கொண்டிருந்த காலப் பகுதியில், பொது நிகழ்வொன்றில் உரையாற்றிய ஒரு உயர்நிலைக் கல்வி அதிகாரி, 'தான் காலை 6.30 மணியளவில் நடைப்பயிற்சியில் (walking) ஈடுபட்டிருந்தவேளையில், தூர இடங்களுக்குச் செல்கின்ற ஆசிரியர்கள் அப்போதுதான் பஸ்வண்டிக்காகக் காத்திருந்தார்கள் என்றும், இவ்வாறு சென்றால் அவர்களால் எப்படி உரிய நேரத்திற்கு பாடசாலைக்குச் செல்ல முடியும்' என்றும் கேள்வி எழுப்பினார். இத்தகைய ஆசிரியர்களுக்கு எதிராக 'தான் கடுமையான நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும்' அவர்எச்சரிக்கை விடுத்தார். இந்த அனுபவபூர்வமான கூற்று சில உண்மைகளை வெளிப்படுத்துகின்றது. பிற அரசாங்க ஊழியர்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைவேளைகளில் வெவ்வேறு விதமான உடற்பயிற்சிகளில் ஈடுபடுகையில், ஆசிரியர்களோ அதற்கான வாய்ப்பற்றவர்களாக இருக்கின்றார்கள். காலை 7.30 மணிக்கு முன்னர் பாடசாலைக்குச் சமூகமளிக்க வேண்டும் என்ற நிலையில் உள்ள ஆசிரியர்கள், காலை நேர குறுகிய இடைவெளியில் தன்னுடையதும் தனது குடும்பத்தினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யவே நேரம் போதாதவர்களாக இருக்கின்றார்கள். இந்நிலையில், அவர்கள் உடற்பயிற்சி குறித்து சிந்திக்கவே முடியாதவர்களாக இருக்கின்றார்கள். பெண் ஆசிரியர்களோ இன்னும் கூடுதலான உடல், உள உபாதைகளை அனுபவிப்பவர்களாக உள்ளார்கள். தமது குடும்பத்திலுள்ள பிற உறுப்பினர்களின் தேவைகளைப் புர்த்தி செய்வது மட்டுமின்றி, காலை உணவோடு, மதிய உணவையும் சேர்த்துச் சமைத்து விட்டு, பாடசாலைக்குச் செல்ல வேண்டிய நிலையில் அவர்கள் இருக்கின்றார்கள்.

யுத்தம் தீவிரமாக இடம்பெற்ற காலப்பகுதிகளான 1990களில் இருந்து 2009 வரையில் கஷ்டப் பகுதிகள், மற்றும் தூர இடங்களில் கடமையாற்றிய ஆசிரியர்களும், அதிபர்களும் போற்றப்பட வேண்டி யவர்கள், கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். அந்தக் காலப் பகுதிகள் எத்துணை அச்சம் நிறைந்தவையாகவும், ஆபத்துக்கள் சூழ்ந்தவையாகவும் இருந்தன என்பதை எல்லோருமே அறிவர். அன்று நகரங்களில் இருந்து புறப்படுகின்ற வாகனங்கள், சோதனைச் சாவடிகளை கடந்து செல்வதற்கு குறைந்தது காலை 7.30 மணிவரை காத்திருக்க வேண்டியிருந்தன. அவ்வாறான சூழலிலும், காலை 6.30 மணிக்கு முன்னரே, தமக்குரிய வாகனங்களைப் பிடித்து விடவேண்டும் என்ற அவசரத்தில், ஒவ்வொரு ஆசிரியரும் வீட்டிலிருந்து புறப்பட்ட அனுபவங்களைக் கொண்டிருக்கின்றார்கள். பாடசாலை முடிந்ததும், தூர இடங்களில் இருந்து திரும்புகின்ற வாகனங்கள் தம்மை ஏற்றாத நிலையில், குறுந்தூரம் பயணிக்கும் வாகனங்களில் ஏறி, அவர்கள் வீடு திரும்பும்போது கிட்டத்தட்ட பிற்பகல் 4.00 மணியாகி விடும். கண்ணிவெடிகளும், துப்பாக்கிச் சூடுகளும் எந்நேரமும் நிகழலாம் என்ற அச்சத்தில், தமது உயிர்களைக் கைகளில் பிடித்தவாறே அவர்கள் தமது பயணங்களை மேற்கொண்டிருந்தார்கள். இதுதான் அவர்களின் நாளாந்த நிகழ்வாக அன்று இருந்தது.

ஆசிரியர்களின் உளவியல் நிலை இன்று எவ்வாறு இருக்கின்றது என்பதற்கு, இன்னுமொரு உயர்கல்வி அதிகாரியின் பின்வரும் கூற்று, தக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கமாக அமைந்திருக்கின்றது. 'கிழக்கு மாகாணத்தில், மனநோயால் பாதிக்கப்பட்டுள்ள 232 ஆசிரியர்கள் இருக்கின்றார்கள்' என்ற அவரின் கூற்று, ஆசிரியர்கள் எதிர் கொண்டுள்ள சிக்கலான நிலை குறித்து ஆழமாகச் சிந்திக்கும்படி தூண்டுகின்றது. இது ஒரு கணிசமான தொகை. கிழக்கிலுள்ள மொத்த ஆசிரியர் எண்ணிக்கையில் இது ஒரு வீதமாக (1%) இருக்கின்றது. இவ்வளவு எண்ணிக்கையில் ஆசிரியர்கள் உளநோயினால் பாதிக்கப்பட்டிருப்பதற்கான காரணங்கள் கண்டுகொள்ளப்பட வேண்டும். இது, மரபியல் அல்லது நரம்பியல் ரீதியாக அமைந்த முற்றிலும் அகக்காரணிகளின் விளைவா அல்லது, மேலும், மேலும் கடினமாகிச் செல்கின்ற பாடசாலைச் சூழலின் இறுக்கமான நிலையின் விளைவா என்பது கண்டறியப்பட வேண்டும். ஒருவர் தொழில்புரிகின்ற சூழல், அவரது உளவியலைப் பாதிப்பதாக அமையுமாயின், அந்தச் சூழல் ஆரோக்கியமானதாக மாற்றப்பட வேண்டும். அதுதான் பொருத்தமான தர்வாக அமையும்.

இந்த இடத்தில் கல்வி அலுவலக அதிகாரிகளுக்கும், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்குமான உறவின் தன்மை குறித்து பரிசீலிப்பது பொருத்தமாக இருக்கும். பின்வரும் கேள்வியுடன் இப்பரிசீலிப்பைத் தொடங்கலாம். **பாடசாலைகளை தனியான நிர்வாக அலகாகக் கொள்ளாமல், அவற்றை, கல்வி அலுவலகங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது பொருத்தமானதா?** நமது கல்விச் சூழலின் இன்றுவரையிலான அனுபவங்கள், இந்தக் கேள்விக்கு எதிர்மறையான விடையைத் தருவதாகவே அமைந்திருக்கின்றன. பொதுவாக, கல்வி அலுவலகங்களுக்கும், பாடசாலைகளுக்கும் இடையே சுமுகமான உறவுகள் நிலவவில்லை. பாடசாலைகளுக்கு அவசியமான வளங்கள், ஆளணிகள், மற்றும் ஆலோசனைகள் போன்றவற்றை வழங்குவதற்கான ஒரு நிர்வாக ஒழுங்கமைப்பாகவே இந்தக் கல்வி அலுவலகங்கள் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றன. எனினும், நடைமுறையில் இவை, நிர்வாக எல்லையைக் கடந்து, பாடசாலைகளின் மீது **அதிகாரத்தைப் பிரயோகிக்கின்ற அமைப்புக்களாகச்** செயற்படுகின்றன. இத்தகைய அதிகார உறவானது, பாடசாலைச் சூழலை ஆரோக்கியமாகப் பேணுவதற்கோ அல்லது அதிபர் மற்றும் ஆசிரியர்களின் உளவியலில் சாதகமான பண்புகளை ஏற்படுத்துவதற்கோ உதவவில்லை என்ற எதிர்மறையான அனுபவத்தையே நாம் காண்கிறோம். இந்நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உறவு நிலையை மாற்றியமைப்பது குறித்து நாம் சிந்திப்பது அவசியமாகின்றது.

தொழில் ரீதியாகப் பார்க்கும்போது, அரசாங்க ஊழியர்கள் என்றவகையில், கல்வி அதிகாரிகளும், அதிபர் மற்றும் ஆசிரியர்களும் ஒரே வகையினத்திற்குள் அடங்குபவர்கள்தான். பதவிநிலை சார்ந்த வேறுபாடுகள் இருப்பினும், தமக்கென சுயாதீனமும், சுயகௌரவமும், சுயபொறுப்புகளும், உரிமைகளும் கொண்டவர்களாக இவ்விரு பிரிவினர்களும் இருக்கின்றார்கள். அதிபரைப் பொறுத்தவரையில், தற்றுணிபு அதிகாரம் கொண்ட (Executive) ஒரு நிர்வாகியாக (அல்லது முகாமையாளராக/தலைவராக) அவர் இருக்கின்றார். ஒரு கல்வி அலுவலகத்தில் தலைமை நிர்வாகியாக கடமையாற்றுகின்ற ஒரு அதிகாரிக்கு சமமான பதவி நிலை அந்தஸ்த்தை, ஒரு பாடசாலை அதிபரும் கொண்டிருக்கிறார். இந்நிலையில் அவர், பிற அதிகாரிகளினால் அவமானப்படுத்தப்படுவது அல்லது கண்டிக்கப்படுவது என்பது சாராம்சத்தில், அவரது **பதவி இழிவுபடுத்தப்படுவதற்கு ஒப்பானது.** இதேபோன்று, ஆசிரியர்களும் எந்தவித அச்சமும், புறநிலை நிர்ப்பந்தங்களுமின்றி சுயாதீனமாக கடமையாற்றுவதற்கான உரிமையைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். தவறு செய்துவிட்ட ஒரு மாணவன், ஆசிரியரின் முன்னால் தலைகவிழ்ந்து நிற்பதுபோன்று, அதிகாரிகளின் முன்னால், அதிபர்களும், ஆசிரியர்களும் தலைகவிழ்ந்து நிற்கின்ற இழிவுநிலை மாற்றப்பட வேண்டும். தமது அதிகாரி என்றவகையில், அதிபருக்கு மட்டுமே பொறுப்புச் சொல்ல வேண்டிய கடப்பாட்டைக் கொண்டவர்களாக ஆசிரியர்கள் இருக்கக் கூடிய நிலை உருவாக்கப்பட வேண்டும்.

பாடசாலைகள் முறையாக இயங்குவதற்குத் தேவையான மனிதவளம், பௌதிக வளம் மற்றும் ஆலோசனைகள் போன்றவற்றை வழங்குவதற்கான நிர்வாக ஒழுங்குகளாகத்தான் கல்வி அலுவலகங்கள் செயற்பட வேண்டும் என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும். பாடசாலைச் சமூகம், பாடசாலை உளவியல், கற்பித்தல் அனுபவம், வகுப்பறை முகாமைத்துவம். போன்ற எவை குறித்தும் முறையான புரிதலும், அறிவும் அற்றவர்களாக இருக்கின்ற சில கல்வி அதிகாரிகளின் செயற்பாடுகளினால், அதிபர்கள், மற்றும் ஆசிரியர்களின் உளவியல் கடுமையான பாதிப்பிற்குள்ளாக்கப்படுகின்றது என்ற உண்மையை சரியாகப் புரிந்து கொள்ளும்போது, இந்த அதிகாரிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்வரம்பானது, நிர்வாக எல்லைக்குள் மட்டுப்படுத்தப்படுவது அவசியம் என்ற உண்மை தெளிவாகும்.

எனினும், பாடசாலைகள் மீதான கல்வி அதிகாரிகளின் அதிகாரம் இல்லாமலாக்கப்படும்போது, அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் முறைகேடான செயற்பாடுகள் அதிகரிக்கும் என்ற வாதம் முன்வைக் கப்படலாம். எனினும், நிகழக்கூடிய முறைகேடுகளை தவிர்ப்பதற்கான பொருத்தமான வழிமுறைகளை உருவாக்க முடியும். **உதாரணமாக,**

1. பாடசாலை அதிபர்களினதும், ஆசிரியர்களினதும் பொறுப்புக் கூறும் கடப்பாட்டை வலுவாக்குவதன் மூலமாகவும், அதற்கான நிறுவனரீதியான ஒழுங்குகளை மேற்கொள்வதன் மூலமாகவும், அவர்களினால் மேற்கொள்ளப்படக் கூடிய முறைகேடுகளைக் கட்டுப்படுத்தவும், தவிர்க்கவும் முடியும்.

2. ஏற்கனவே, சில கல்வி அதிகாரிகளின், அதிகாரத்துவ செயற்பாடுகளின் குவிமையமாக பாடசாலைகள் மாற்றப்பட்டிருக்கின்றன. இந்த அதிகாரத்துவமானது, நடைமுறையில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சுயமான செயற்பாடுகளின் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதாக அமைந்துள்ளது. இத்தகைய கட்டுப்பாடுகள் தளரும் போது, அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் உளவியலில் நேர்மறை யாக பாரிய மாற்றங்கள் நிகழும். இத்தகைய மாற்றங்கள் ஒட்டுமொத்த பாடசாலைச் சூழலையும் மாற்றியமைக்கக் கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கும்.

3. பாடசாலைகளில் அதிபர்கள், மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் அமுல்படுத்தப்படக் கூடிய சுயமதிப்பீடு, பரஸ்பர மதிப்பீடு மற்றும் சினேகத்தன்மையான கண்காணிப்பு, பரஸ்பர கலந்துரையாடல், குறையகற்றல் செயன்முறைகள் போன்றவற்றின் மூலமாக, எந்தவித புறநிர்ப்பந்தங்களுமின்றி, அதிகாரப் பிரயோகங்களுமின்றி, அவர்கள் முறையாகச் செயற்படக் கூடிய சாத்தியம் உருவாகும்.

இவ்வாறு கல்வி அலுவலகங்கள் சார்ந்தவர்களுக்கும் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் இடையிலான உறவுகள் மாற்றப்படும்போது, தமக்கு ஆலோசனைகள் வழங்குவதற்காகவும், தமக்குத் தெரியாதிருக்கின்ற, புரியாதிருக்கின்ற மற்றும் தாம் கையாள முடியாதிருக்கின்ற விடயங்கள் தொடர்பாக, கல்வி அலுவலகங்களைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவர்களை தாமே அழைப்பதற்கும், அவர்கள் மூலமாக தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் அதிபர்களும், ஆசிரியர்களும் முன்வரக் கூடிய நிலை உருவாகும்.

ஆசிரியர்களின் உளவியலில் தாக்கத்தை நிகழ்த்துகின்ற இன்னுமொரு காரணியாக, கல்விக் கல்லூரிகளுக்கான தெரிவு முறையும், அக்கல்லூரிகளிலான அவர்களின் அனுபவங்களும் அமைந்திருக்கின்றன. **கல்விக் கல்லூரிகளுக்கான தெரிவு என்பது, ஒரு மாணவருக்கு முன்னுள்ள கடைசித் தெரிவாக அமைந்திருக்கின்றது.** பல்கலைக்கழக நுழைவிற்கான வாய்ப்புகள் அனைத்தையும் இழந்த நிலையில், அவருக்கு கிடைக்கின்ற இறுதி வாய்ப்பாக இத்தெரிவு இருக்கின்றது. இது அடிப்படையில் நாம் கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் வழங்குகின்றோம் என்பதற்கான சுட்டியாக விளங்குகின்றது. அறிவுத்துறையில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற அபரிமிதமான வளர்ச்சிகளைக் கவனத்தில் கொள்கையில், ஆசிரியர்கள் பன்முக அறிவும், ஆளுமையும், திறமைகளும், ஆற்றல்களும் நிரம்பிய வர்களாக இருக்க வேண்டியது அவசியமானதாக இருக்கின்றது. தாம் கற்பிக்கின்ற, வழிகாட்டுகின்ற, நெறிப்படுத்துகின்ற மாணவர்களை முறையாகக் கையாள வேண்டுமாயின், ஆசிரியர்கள் அறிவு ரீதியாக மிகச் சிறந்த தரத்தில் இருப்பது அவசியம். எனினும் நடைமுறையில், கல்விக் கல்லூரிகள், அங்கு கற்கின்ற பயிலுனர் ஆசிரியர்களுக்கு இத்தகைய அறிவினை வழங்கக் கூடிய வகையில் இருக்கின்றனவா என்பது பரிசீலனைக்குரிய விடயமாக இருக்கின்றது. கல்விக் கல்லூரிகளின் பாடவிதானங்கள், அவற்றில் கற்பிக்கின்ற விரிவுரையாளர்களின் பன்முக ஆளுமை, மற்றும் அறிவுத்திறன், அவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள வளங்கள், அவை இயங்குகின்ற முறைமை போன்றவற்றைக் கவனத்தில் கொள்கையில், இவ்விடயத்தில் சாதகமான முடிவைப் பெற முடியாதிருக்கின்றது.

கல்விக் கல்லூரிகளின் பாடவிதானங்கள், எதிர்பார்க்கப்படுகின்ற அறிவுத் தேவையை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் அமைந்திருக்கவில்லை. இவை க.பொ.த (உ.த) வகுப்பிற்குரிய பாடத்திட்டங்களின் சிறிய அளவிலான நீட்சியாக மட்டுமே இருக்கின்றன. இங்கு வகுப்பறைக் கற்பித்தல் தொடர்பாக அதிகூடிய அக்கறை வழங்கப்படுவதால், பயிலுனர் ஆசிரியர்களின் பன்முக அறிவு, ஆற்றல் மற்றும் ஆளுமை விருத்தி என்பவற்றிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினி, இணையம், இறுவட்டுக்கள், மல்டி மீடியா புரஜக்டர் போன்ற நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி கற்பிக்கின்ற முறைமையில், இன்னமும் இவர்களுக்கு உரிய முறையில் பயிற்சிகள் வழங்கப்படாத நிலைமை காணப்படுகின்றது. பெருமளவில் கரும்பலகை, வெண்பலகை, தாள்கள். போன்ற எளிமையான உபகரணங்களைப் பயன்படுத்தி கற்பிக்கின்ற விதத்திலேயே இக்கல்லூரிகளில் பயிற்சிகள் வழங்கப் படுகின்றன. க.பொ.த சாதாரண தரத்திற்கு உட்பட்ட மாணவர்களுக்கு கற்பித்தல் என்ற எண்ணக் கருவினால் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் கல்விக் கல்லூரிகள், அங்கு பயிலுகின்ற ஆசிரியர்களுக்கு ஒரு வரையறைக்குட்பட்ட அறிவை வழங்குதல் என்ற எல்லைக்குள் தம்மை கட்டுப்படுத்தியுள்ளன.

எனினும், நடைமுறையில், வகுப்பறை அனுபவங்கள் வேறுவிதமாக உள்ளன. பாடசாலைக்கு வெளியே கற்கின்ற வாய்ப்புகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்ற நிலையில், மாணவர்களின் அறிவும், ஆற்றலும். திறமையும் ஆசிரியர்கள் கொண்டிருக்கின்ற மட்டங்களை விட உயர்ந்ததாக அமைகின்ற நிலையை பல சந்தர்ப்பங்களில் அவதானிக்க முடிகின்றது. நவீன தொழில்நுட்ப சாதனங்களுடன் சிறிய அளவிலான பரிச்சயத்தையே கொண்டிருக்கின்ற ஆசிரியர்களுடன் ஒப்பிடுகையில், பல மாணவர்கள் இச்சாதனங்களுடன் மிக உயர்ந்த அளவிலான பரிச்சயத்தை கொண்டிருப்பதை அவதானிக்க முடியும். பாடசாலை களில் ஆசிரியர்களுக்கு தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்ற வேலைச்சுமையும், அழுத்தங்களும், அவர்கள் இவற்றைக் கையாள் வதற்கான பயிற்சிகளைப் பெறுவதையும், பன்முக அறிவையும், ஆற்றல்கயையும் பெற்றுக் கொள்வதையும் சாத்தியமற்றதாக்கி விடு கின்றன. எனவே பெரும்பாலான ஆசிரியர்கள், தாம் கல்வி கற்ற காலத்தில் தமக்கு கிடைத்த அறிவின் எல்லைக்குள், தமது கற்பித்தலையும், மாணவர்களுக்கான வழிகாட்டல் மற்றும் நெறிப்படுத்தல்களையும் முன்னெடுப்பவர்களாக இருக்கின்றார்கள். இது அவர்களின் தொழில் வாண்மையிலும், ஆளுமையிலும் இறுதியில் அவர்களின் உளவியல் நிலையிலும் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

மறுபுறம், பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றுச் செல்கின்றவர் களுக்கு, அவரவர் துறைகளில், இயன்றளவுக்கு அண்மைக்காலம்வரை ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சிநிலைவரை அறிவைப் பெறுகின்ற வாய்ப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கின்றது. இவர்கள் பன்முக துறைகள் சார்ந்த அறிவை பெற முடியாதிருக்கின்ற போதிலும், தமது துறைகளில் ஆழமான அறிவைப் பெறுகின்ற சூழல் நிலவுகின்றது. இங்கு நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி, கற்பித்தல் இடம்பெறுகின்ற போதிலும், அவை கற்பித்தலுக்கான பயிற்சியாக வழங்கப்படுவதில்லை. பல்கலைக்கழகங்களில், பீ.ஏ (B.A.), பீ.எஸ்ஸி (B.Sc.), பீ.கொம்(B.Com.) போன்ற துறைகளில் பயிலுகின்றவர்களில் பலர், பின்னர் ஆசிரியர்களாக நியமனம் பெறுகின்ற போதிலும், பல்கலைக் கழகக் கற்பித்தலானது, ஆசிரிய பயிற்சிக்குரிய கற்பித்தலாக அமைவதில்லை. எனவே, தமது பல்கலைக்கழக படிப்பை முடித்து, ஆசிரியர்களாக நியமனம் பெறுகின்ற பலர், கற்பித்தல் சார்ந்து பலவீனமான நிலையில் இருக்கிறார்கள். இவர்களும், மரபுவழிப்பட்ட கரும்பலகை, தாள்கள் போன்றவற்றை உபயோகித்துக் கற்பிக்கின்றவர்களாகவும், நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி கற்பிக்க முடியாதவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இவ்வாறு, கல்விக்கல்லூரிகள், மற்றும் பல்கலைக்கழகங்கள் என்பவற்றில் கற்ற பின்னர் ஆசிரியர்களாக நியமனம் பெறுகின்றவர்களில் பெரும்பாலானோர், நவீன கல்வி முறையில் எதிர்பார்க்கப்படுகின்ற பன்முக அறிவு, ஆற்றல், திறமைகள், ஆளுமை என்பவற்றை முழுமையாகக் கொண்டிராதவர்களாக இருக்கின்றார்கள். இதைவிட, கல்விக்கல்லூரி களிலும், பல்கலைக்கழகங்களிலும், நிர்வாக ரீதியாகவும், தனிநபர் நடத்தை சார்ந்தும் இடம்பெறுகின்ற நிகழ்வுகள், அங்கு கற்கின்றவர்கள் மத்தியில், பல சந்தர்ப்பங்களில் எதிர்மறையான எண்ணப்பாங்குகளை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கின்றன. இக்கல்வி நிறுவனங்களில் கடமையாற்றுவோர் மத்தியில், பதவிகளைப் பெறுவதற்காக இடம்பெறுகின்ற போட்டிகள், மற்றும் முரண்பாடுகள், அவர்களில் ஒரு பகுதியினர் கற்பித்தலில் காட்டுகின்ற அசிரத்தைப் போக்குகள், சிலரின் நெறிபிறழ்ந்த நடத்தைகள். போன்றவை, அங்கு பயிலுகின்றவர்களை, நேர்மையான, ஒழுக்க விழுமியங்களை உயர்நிலையில் பேணக் கூடிய ஆசிரியர்களாக வடிவமைக்க முடியாத நிலையை ஏற்படுத்துகின்றன. பாடசாலைக் காலங்களில் சிறந்த ஒழுக்கமும் பண்புகளும் உள்ளவர்களாக இருந்த பலர், இவற்றில் கற்கச் சென்ற பின்னர், அந்தப் பண்புகளை இழந்து, முற்றிலும் மாறான பண்புகளைக் கொண்டவர்களாக அங்கிருந்து வெளியேறுவதையும் அவதானிக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்தில் தென்கொரிய உதாரணத்தை மீண்டும் ஒருமுறை பார்ப்போம். பல்கலைக்கழகத் தேர்வில், தென்கொரியா பின்பற்றுகின்ற முறைமை, ஆசிரியர்க ளுக்கு அவர்கள் எத்தகைய உயர்ந்த இடத்தைக் கொடுத்திருக்கின்றார்கள் என்பதை தெளிவாக விளக்குகின்றது. அந்நாட்டில் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக கல்வியியல் பல்கலைக்கழகம் (University of Education) என்ற தனியான பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. **பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சையில், தேசிய ரீதியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற முதல் ஐந்து வீதமானோர் மட்டுமே ஆசிரியர்களாக பயிற்சி பெறுவ தற்காக இந்த கல்வியியல் பல்கலைக்கழகத்தில்** (University of Education) **பயில்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள்.** அந்நாட்டில், ஊதிய ரீதியாகவும், சமூக அளவிலும் அதியுயர்ந்த தொழிலாக ஆசிரியத் தொழில் விளங்குகின்றது. ஆசிரியராக உருவாவதே, தென்கொரிய மாணவர்களின் முதன்மை இலக்காகவும், இலட்சியமாகவும் இருக்கின்றது. கல்வியியல் பல்கலைக்கழகத்தில் (University of Education) பயில்கின்ற ஒருவர், அந்நாட்டின் எந்தத் தொழில்துறையிலும் மிக எளிதாகவும், உயர்ந்த ஊதியத்திலும் தொழில் பெறுவதற்கான வாய்ப்பைக் கொண்டிருக்கின்றார். அந்தளவுக்கு, அவர்களுக்கு அங்கு பன்முக அறிவும், தேர்ச்சிகளும் வழங்கப்படு கின்றன. இதனால் அங்குள்ள ஆசிரியர்கள் எதையும் கையாளக் கூடிய ஆற்றல் வாய்ந்தவர்களாகவும், ஆளுமையும் தன்னம்பிக்கையும் நிறைந்தவர்களாகவும், சுயாதீனமான முறையிலும் தமது கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். இதன் சாதகமான விளைவை இன்று அந்நாடு அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. சர்வதேச அளவில் இன்று தென்கொரியா, பொருளாதார ரீதியில் மட்டுமின்றி, கல்வி ரீதியிலும் உச்ச நிலையை அடைந்திருப்பதற்கு, ஆசிரிய தொழிலுக்கு அவர்கள் வழங்கியிருக்கின்ற அதி உயர்ந்த முக்கியத்துவம் முதன்மைக் காரணியாக அமைந்திருக்கின்றது. இந்த எதார்த்தத்தை நாம் சரியாகப் புரிந்து கொள்வோமாயின், மேற்கத்தைய கல்வி முறையைப் பிரதி பண்ணி, நமக்கான கல்வி முறையை உருவாக்குவதற்குப் பதிலாக, தென்கொரியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, எமக்குப் பொருத்தமான சிறந்த கல்வி முறையை நாம் உருவாக்க முடியும். உலகிலுள்ள சிறந்த பல்கலைக்கழகங்கள் **ஐநூறை (500)** தெரிவு செய்வதற்காக, 'உலகப் பல்கலைக்கழகங்களின் கல்விசார் தரப்படுத்தல்' நிறுவனத்தினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Academic Ranking of World Universities - ARWU) மேற்கொள்ளப்பட்ட 2015ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டில், **நமது நாட்டைச் சேர்ந்த எந்தப் பல்கலைக்கழகமும் உள்ளடக்கப்படவில்லை** என்ற உண்மையும், அதேபோன்று'தடைம்ஸ்உயர்கல்வி'நிறுவனத்தினால்(The Times Higher Education World University Ranking 2015-2016) மேற்கொள்ளப்பட்ட 2015 -2016 ஆண்டுக்கான தரப்படுத்தலில் உள்ளடக்கப்பட்டுள்ள **எண்ணூறு (800)** பல்கலைக்கழகங்களில் **நமது நாட்டைச் சேர்ந்த எந்தப் பல்கலைக்கழகமும் உள்ளடக்கப்படவில்லை** என்ற எதார்த்தமும் நமது ஒட்டுமொத்த கல்விமுறைமை குறித்த வினாவை எழுப்புவதாக உள்ளது. ஆரம்பக் கல்வியில் இருந்து பல்கலைக்கழக கல்வி வரை முறையான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற உண்மையை இந்த மதிப்பீடுகள் நமக்கு வலுவாக உணர்த்தியிருக்கின்றன.

ஆசிரியர்களின் உளவியல் குறித்து உரையாடுகின்ற இப்பகுதியில், இறுதியாக ஆசிரியர்களிடம் பொதுவாக காணப்படுகின்ற பலவீனங்களைப் பற்றி பரிசீலிப்பதும் அவசியமாகின்றது:

முதலாவதாக, பெரும்பாலான ஆசிரியர்களிடம், **தாம் அரச ஊழியர்கள் என்ற பிரக்ஞை குறைவாகக் காணப்படுகின்றது.** இவ்வாறு அரச ஊழியர்கள் என்ற உணர்வு குறைவாக இருப்பதால், அரச ஊழியர்களிடம் அவசியமாகக் காணப்பட வேண்டிய நேரந்தவறாமை (Punctuality), கடமையுணர்வு (Duty-consious), பொறுப்புக்களை முறையாகவும், உரிய நேரத்திலும் நிறைவேற்றுதல், மேலதிகாரியின் (அதிபரின்) முடிவுகளுக்குக் கட்டுப்படுதல் போன்ற பண்புகள் ஆசிரியர்களிடம் பலவீனமான நிலையில் காணப்படுகின்றன.

இரண்டாவதாக, ஆசிரியர்களில் பலர், தமது அறிவையும், ஆற்றல் களையும் தொடர்ச்சியாக வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் குறைந்தவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கான பதவியுயர்வானது, குறிப்பிட்ட வருடகால சேவையின் பின்னர், பரீட்சைகள் ஏதுமின்றி தானாகவே வழங்கப்படுவதால், தமது அறிவையும், ஆற்றல்களையும் மேம்படுத்த வேண்டும் என்ற அவசிய நிலை அற்றவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள். இதனால், தாம் ஒரு காலகட்டத்தில் பெற்றுக் கொண்ட அதே அறிவுடன் தமது சேவைக்காலத்தை நிறைவு செய்பவர்களாக இத்தகையோர் இருக்கின்றார்கள். ஆனால் எதார்த்தத்தில், அறிவு காலாவதியாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியதாக இருக்கின்றது. இன்றைய சூழலில், நாளாந்தம் பெருகிக் குவிகின்ற அறிவுத்திரட்சியின் மத்தியில் முன்னர் பெற்ற அறிவு, காலம் கடந்ததாக மாறிவிடுகின்றது. எனவே ஒரு ஆசிரியர், தனது தொழிலில் வாண்மையுடனும், ஆளுமையுடனும் திகழ்வதற்கு, புதிய அறிவை சுவீகரிப்பதோடு, தன்னிடமுள்ள அறிவை இற்றைப்படுத்துவதும் அவசியமாகின்றது.

மூன்றாவதாக, நிர்வாக ரீதியான அறிவு குறைந்தவர்களாக ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அதிபர் சேவையில், அல்லது நிர்வாக சேவையில் இணைந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, நிர்வாக நீதியான விடயங்களைக் கற்பவர்களைத் தவிர, பெரும்பாலான ஆசிரியர்களிடம் நிர்வாக அறிவு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. ஏற்கனவே பரிசீலித்தது போன்று, பாடசாலைகள் நிர்வாக அலகுகளாக செயற்படாததன் காரணமாக, அத்தகைய அறிவின் தேவையற்றவர்களாக ஆசிரியர்கள் இருப்பது, அவர்களிடம் நிலவுகின்ற நிர்வாக அறிவின் பற்றாக்குறைக்குக் காரணமாகின்றது. இவற்றைக் கற்றுக் கொள்வது தமக்கு அவசியம் என்ற தேவையற்றவர்களாக பல ஆசிரியர்கள் இருக்கின்றார்கள்.

நான்காவதாக, கணிசமான ஆசிரியர்கள், தனிமனித ஒழுக்க விழுமியங்கள் சார்ந்து போதுமான நடத்தைப் பாங்குகளை வெளிப் படுத்தாதவர்களாக இருக்கின்றார்கள். மாணவர்களின் பலம், பலவீனம், தேவைகள்... போன்றவற்றை சரியாகப் புரிந்து கொள்ளாதவர்களாகவும், அவர்களுடன் சிறந்த உறவுகளைப் பேண முடியாதவர்களாகவும் இவர்கள் இருக்கின்றார்கள். முதலாம் தரத்திற்குரிய அறியாப் பருவத்தில் இருந்து, பதின்மூன்றாம் தரத்திற்குரிய பின்கட்டிளமைப் பருவம் வரை பல்வேறு படிநிலைகளில் உள்ள மாணவர்களுடன் உரிய முறையில் பழகி, அவர்களின் ஆளுமைகளை முறையாகக் கட்டமைத்து, அவர்களை வழிகாட்ட வேண்டிய பாரிய பொறுப்பை தாம் சுமந்திருக்கிறோம் என்ற உணர்வு பல ஆசிரியர்களிடம் போதிய அளவில் காணப்படுவதில்லை. பாடசாலையிலும், வகுப்பறைகளிலும் தமது நடத்தைகள், மாணவர்களிடம் எத்தகைய மனப்பதிவுகளை ஏற்படுத்தக் கூடும் என்ற உணர்வு அற்றவர்களாகவும் இவர்கள் இருக்கின்றார்கள்.

ஐந்தாவதாக, பாடசாலை வளாகத்திற்குள் இடம்பெறுகின்ற நிகழ்வுகளுக்கு தாமும் பொறுப்பாளிகள் என்ற கடப்பாட்டை சரியாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொள்ளாதவர்களாக பெரும்பாலான ஆசிரியர்கள் இருக்கின் றார்கள். குறிப்பாக, கடமை நேரத்தில், மாணவர்களுக்கு ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளுக்கு தாம் வகை சொல்லவேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றோம் என்றும், இத்தகைய விளைவுகளுக்காக தாம் சட்டரீதியான நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடலாம் என்றும் புரிதலற்றவர்களாக பல ஆசிரியர்கள் இருக்கின்றார்கள்.

ஆறாவதாக, பல ஆசிரியர்கள் பொருத்தமான கற்பித்தல் முறைமைகளை (Methodology) தேர்ந்தெடுத்து, கற்பிக்க முடியாதவர் களாக இருக்கின்றார்கள். கற்பித்தல் என்பது அடிப்படையில் ஒரு கலையைப் (Art) போன்றது. ஒரு கலையானது, பல்வேறு விதிகளையும், முறைமைகளையும் கொண்டதாக அமைந்திருக்கின்றது. உதாரணமாக, ஓவியக் கலையில் ஈடுபவருக்கு வண்ணங்கள் பற்றியும், காட்சி அமைப்பு பற்றியும், ஒளி குறித்தும், பரிமாணங்கள் குறித்தும் தெளிவான அறிவு இருக்க வேண்டும். தான் வரையப் போகும் ஒரு காட்சி, எத்தகைய பின்புலத்தில் அமையவிருக்கின்றதோ, அத்தகைய பின்புலத்திற்கேற்ப இவற்றை முறையாகப் பயன்படுத்துவதற்கான அறிவை அவர் பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் அந்த ஓவியம் முழுமை பெற்றதாக அமையும். இதேபோன்று, ஆசிரியர்கள் தாம் கற்பிக்கின்ற பாடம், அதிலுள்ள குறித்த அலகுகள், அவற்றை கற்பிக்கவுள்ள மாணவர்களின் கிரகித்தல் மட்டம் போன்ற பல அம்சங்களைப் பற்றி தெளிவான புரிதல்களைக் கொண்டவராக இருக்க வேண்டும். அப்போதுதான் அவரது கற்பித்தலானது, வினைத்திறன் கொண்டதாகவும், விளைதிறன் கொண்டதாகவும் அமையும். அவ்வாறில்லாதபோது, கவர்ச்சியும், தெளிவுமற்ற ஒரு ஓவியம் போன்று, அவரது கற்பித்தலானது பயன்பாடு குறைந்ததாக மாறிவிடும். அதிகரித்த வேலைப்பளு என்பது ஆசிரியர் களின் கற்பித்தல் செயற்பாடுகளை பாதிப்பதாக அமைந்திருக்கின்ற போதிலும், பொருத்தமான முறைமையை பயன்படுத்தும்போது, கற்பித்தலானது எளிதானதாகவும், கவர்ச்சிகரமானதாகவும், சுவாரஷ்ய மானதாகவும் மாறிவிடும்.

ஏழாவதாக, ஒவ்வொரு வருடமும் கணிசமான எண்ணிக்கையிலான ஆசிரியர்கள், தமது கல்வித் தகைமைகளை உயர்த்துவதற்காக, **சம்பளத்துடன் கூடிய** பகுதிநேர அல்லது முழுநேர விடுகை பெற்று, பட்டப்பின் படிப்புகளை மேற்கொள்கின்றார்கள். அவர்களின் கற்கைக் காலம் முடியும்வரையில் அவர்களின் கற்பித்தல் நடவடிக்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ தடைப்படுகின்றன. இவ்வாசிரியர்களில் ஒரு பகுதியினர், தமது படிப்பு முடிந்த பின்னர், ஆசிரியத் தொழிலை கைவிட்டு, **வேறு துறைகளுக்குச்** சென்று விடுகின்றார்கள். ஆசிரியர்களாக தொடர்ந்தும் கடமையாற்றுபவர்களில் பெரும்பாலானோர், தாம் **புதிதாக கற்றவற்றை தமது கற்பித்தல் முறைகளில் பிரதிபலிக்கச் செய்வதில் தவறி விடுகின்றார்கள்.** முன்னர் அவர்கள் எவ்வாறு செய்றபட்டார்களோ, அதேபோன்றே இப்போதும் செயற்படுபவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள். இந்நிலைமைகள் ஒரு புறம் மாணவர்களுக்கு பயனற்றதாகவும், (ஆசிரியர்களின் விடுகைக்காலத்தில் கற்றலை இழத்தல், வேறு துறைகளுக்கு மாறுவதால் ஆசிரியர்களை இழத்தல் என) மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவனவாகவும் அமைகின்றன.

இவற்றோடு எட்டாவதாக, சில ஆசிரியர்கள் மாணவர்களைத் துஷ்பிரயோகம் செய்யும்வகையிலும் செயற்படுகின்றார்கள். இத்தகைய துஷ்பிரயோகமானது பாலியல் ரீதியானதாக மட்டுமின்றி, மாணவர்களை தமது சொந்த வேலைகளுக்குப் பயன்படுத்துதல், வார்த்தைகள் மூலமாக (verbally) மற்றும் பௌதிகரீதியாக தண்டித்தல், சரியாகக் கற்பிக்காததன் மூலமாக மாணவர்களின் கற்கும் உரிமையை மீறுதல் என பலதரப்பட்டவைகளாக அமைந்திருக்கின்றது.

இவை அனைத்துமே, ஆசிரியர்கள் என்றவகையில், தம்மைப் பற்றி தவறான கருத்துக்கள் எழுவதற்கும், தமது கௌரவம், சமூக மதிப்பு என்பவை இழிவுக்குள்ளாவதற்கும் காரணமாகின்றன என்ற புரிதல் ஆசிரியர்களுக்கு அவசியமாகின்றது. தம்மீது சுமத்தப்பட்டுள்ள வேலைச்சுமை அளவுகடந்ததாக உள்ளது என்பது உண்மையானது என்றபோதிலும், தொழில் சார்ந்தும், தனிமனித பண்புகள் சார்ந்தும் தம்மை உயர்நிலையில் பேணிக் கொள்ள வேண்டிய கடப்பாடு தமக்குண்டு என்ற உணர்வின் அடிப்படையில் தம்மை வளர்த்துக் கொள்ளவும், மாற்றிக் கொள்ளவும் வேண்டியுள்ள முக்கியத்துவத்தை ஆசிரியர்கள் உணர்ந்து கொள்வது அவசியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06. அதிபர்ளின் உளவியலில் ஏற்படுகின்ற பாதிப்புகள்

ஒரு பாடசாலையில், ஆசிரியர்கள் அனுபவிக்கின்ற பெரும்பாலான அழுத்தங்கள், அப்பாடசாலையின் அதிபருக்கும் பொருந்துவனவாகவே இருக்கின்றன. இருப்பினும், பாடசாலைகளின் நிர்வாகிகள், (அல்லது முகாமையாளர்கள் / தலைவர்கள்) என்றவகையில், மேற்படி அழுத் தங்களோடு, வேறு சில குறிப்பான அழுத்தங்களுக்கும் உட்படுபவர்களாக அதிபர்கள் இருக்கின்றார்கள். இத்தகைய மேலதிக அழுத்தங்களை உருவாக்குகின்ற சூழ்நிலைகளை நாம் பின்வருமாறு வரையறுக்கலாம்:

- மாணவர்களினால் ஏற்படக் கூடிய பிரச்சினைகளை முறையாகக் கையாள வேண்டியவர்களாகவும், அவை பாடசாலைகளின் எல்லைகளைத் தாண்டியவையாக மாறுகின்றபோது, அவற்றிற்கு விளக்கம் சொல்ல வேண்டிய கடப்பாட்டைக் கொண்டவர்களாகவும் அதிபர்கள் இருத்தல்.

- தமக்குக் கீழ் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுடன் சுமுகமான உறவைப் பேணுதல். அவர்களின் திறமைகளையும், ஆற்றல்களையும் அடையாளம் கண்டு, அவற்றை பாடசாலையின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்துதல்.

- பாடசாலை சமூகத்தின் பிரதான கூறாக விளங்குகின்ற பெற்றோர் களுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணுதல். அவர்களை பாடசாலையின் முன்னேற்றத்திற்குப் பங்களிப்பவர்களாக மாற்றுதல்.

- பாடசாலையின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் உதவி வழங்கக் கூடிய பிற நிறுவனங்கள் போன்றவற்றுடன் முறையான தொடர்புகளை ஏற்படுத்தி, பாடசாலையின் முன்னேற்றத்திற்கு அவர்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்ளுதல்.

- அரசாங்கம், மற்றும் கல்வி அலுவலகங்களினால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற சுற்று நிருபங்கள், மற்றும் அறிவுறுத்தல்களை முறையாகப் பின்பற்றி செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

இவ்வாறு பன்முக பணிகளை நாளாந்தம் மேற்கொள்ள வேண்டியுள்ள அதிபர்கள், இவற்றை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சிரமங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கொள்கின்றார்கள். ஒரு பாடசாலையில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் வெவ்வேறு பண்புகளையும், ஆளுமைகளையும், தகுதிநிலைகளையும் கொண்டவர்களாக இருப்பதால், அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே அடிக்கடி முரண்பாடுகள் ஏற்படக் கூடிய நிலை உருவாகின்றது. குறிப்பாக, கணிசமான அதிபர்கள், கல்வி ரீதியாகவும், மொழி ரீதியாவும் (அதாவது தாய்மொழி தவிர்ந்த இரண்டாம் மொழிகளில்), நவீன தொழில்நுட்பங்களைக் கையாள்வதிலும் பலவீனமான நிலையில் இருக்கின்றபோது, தமக்குக் கீழே பணிபுரிகின்ற ஆசிரியர்களுடன் முறையான உறவுகளைப் பேணுவதில் நெருக்கடிகளை எதிர்கொள்பவராகின்றார்கள். ஊதிய அடிப்படையில் மதிப்பிடும்போது, கணிசமாக அதிபர்கள், தமது பாடசாலையில் கற்பிக்கின்ற சில ஆசிரியர்களை விட **குறைந்த ஊதியம் பெறுபவர்களாக** இருக்கின் றார்கள். இந்நிலையானது, அத்தகைய ஆசிரியர்களுடனான உறவில் அதிபர்கள் 'மிதமான' போக்கை கையாள வேண்டிய தன்மையை உருவாக்குகின்றது. கல்வி அதிகாரிகளின் முன்னிலையில், தமது பாடசாலைகளின் அடைவு மட்டத்திற்கும், பெறுபேறுகளுக்குமான காரணங்களை முன்வைக்க வேண்டிய நிர்ப்பந்தமும், அவை குறை வடையும்போது, அவமானகரமான சூழலுக்குட்பட வேண்டியுள்ள நிலைமையும், அதிபர்களை கடுமையான உள அழுத்தங்களுக்குள் ளாக்குகின்றன.

நமது நாட்டின் தற்போதைய கல்வி முறைமையின்படி, ஒரு பாடசாலையின் செயற்பாட்டிற்கு அப்பாடசாலைக்குரிய பாடசாலை சமூகத்தின் முழுமையான பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், தனியார் நிறுவனங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக பாடசாலை சமூகம் வரையறுக்கப்பட்டுள்ளது. எந்தளவுக்கு பாடசாலை சமூகம் வலுவானதாகவும், ஆற்றலுள்ளதாகவும் இருக்கின்றதோ, அந்தளவுக்கு ஒரு பாடசாலை பல துறைகளிலும் முன்னேற்றம் காண்பது சாத்தியமாகும். பாடசாலை சமூகத்தில் அடங்கியுள்ள இத்தகைய பிரிவினர்களுடன் முறையான தொடர்புகளை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு, பிரதானமாக அதிபரைச் சார்ந்ததாக உள்ளது. மேலும், ஒரு பாடசாலையானது, தனக்குத் தேவைப்படுகின்ற நிதிவளங்களைக் கண்டுகொள்வதற்கான ஒரு "ஊட்டற் பிரதேசத்தை" (Catchment Area) வரைபுபடுத்தி, அதில் உள்ளடங்குகின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பங்கள், நிறுவனங்கள், மற்றும் வளங்களை அடையாளம் கண்டு, அவற்றை அப்பாடசாலையின் வளர்ச்சியில் பங்கேற்பதற்கச் செய்கின்ற பொறிமுறைகளைக் கண்டுகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய செயற்பாடுகளிலும் அதிபர்களின் பாத்திரம் முதன்மையானதாக அமைந்திருக்கின்றது. இவ்வகையில் ஒரு பாடசாலை சமூகமும், ஊட்டற் பிரதேசமும், கல்வியில் ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளவர்களை அதிகம் உள்ளடக்கியதாக இருக்குமாயின், அவர்களுடன் அதிபர்கள் இலகுவான முறையில் முறையாகவும், தொடர்ச்சியாகவும் தொடர்புகளைப் பேணுவது சாத்தியமாகின்றது. அவ்வாறில்லாதபோது, அதிபர்கள் தொடர்புகளைப் பேணுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள். குறிப்பாக பெற்றோர்களின் பொருளாதார நிலை, கல்வி மட்டம், வயது, பால் போன்ற பல காரணிகள், செயற்திறன்கொண்ட பாடசாலை சமூகத்தை உருவாக்குவதிலும், ஊட்டற் பிரதேசம் சார்ந்த செயற்பாடுகளிலும் தாக்கங் களைச் செலுத்துகின்றன. கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில், பெண்தலைமைக குடும்பங்கள் கணிசமான எண்ணிக்கையில் இருப்பதோடு, பொதுவாக பாடசாலைகளில் ஒழுங்கு செய்யப்படுகின்ற கூட்டங்களிலும், பிற சந்திப்புகளிலும், நிகழ்வுகளிலும் பெண்களே அதிகமாகக் கலந்து கொள்பவர்களாக இருப்பதால், பாடசாலை சமூகத்தை செயற்திறன் கொண்டதாக வடிவமைப்பதில் அதிபர்கள் சவால்களை எதிர்கொள்கின்றார்கள். அதேநேரத்தில், கிழக்கு மாகாணத் திலுள்ள பல பாடசாலைகள், அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களை அதிகம் கொண்டிராத கிராமப்புறங்களைச் சேர்ந்த பாடசாலைகளாக இருப்பதால் வளமிக்க ஊட்டற் பிரதேசத்தை வரையறுப்பது என்பது மிகுந்த சிரமத்திற்குரியதாக இருக்கின்றது. உணமையில், பாடசாலை சமூகம், ஊட்டற் பிரதேசம் என்ற இந்த எண்ணக் கருக்கள் இன்னமும் பல அதிபர்களினாலும், ஆசிரியர்களினாலும் பாடசாலை சமூகத்திற்குள் அடங்குகின்ற பிற பிரிவினர்களினாலும் முறையாகப் புரிந்து கொள்ளப்படாதவைகளாக இருக்கின்றன. இது தொடர்பான விழிப்புணர்வு, உரியவர்கள் மத்தியில் முறையாக ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாக இருக்கின்றது.

நடைமுறையிலுள்ள கண்ணோட்டத்தில், அதிபர்கள் **பதவிநிலை சார்ந்த அதிகாரிகளாக வகைப்படுத்தப்படாததால்,** தமது தொழில்சார் தேவைகளுக்காகவோ அல்லது பாடசாலைகள் சார்ந்த தேவைகளுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகவோ கல்வி அலுவலகங்களுக்குச் செல்கையில், பல சந்தர்ப்பங்களில் தாம் சாதாரண ஊழியர்கள் போன்று நடத்தப்படுகின்ற அனுபவத்தைப் பெறுகின்றார்கள். மேலும், தமது பாடசாலைகளின் அடைவு மட்டம் தொடர்பான கலந்துரையாடல்களின்போதும், ஏனைய உத்தியோகபூர்வ சந்திப்புகளின்போதும், கல்வி அலுவலகங்களைச் சேர்ந்த பிற அதிகாரிகளின் முன்னே குற்றவாளிகளைப் போன்று நிற்க வேண்டியுள்ள அவமான நிலை அவர்களுக்கு ஏற்படுகின்றது. இத்தகைய அனுபவங்கள் அவர்களை மோசமாகப் பாதிக்கின்றன. இதனால், இத்தகைய அவமான நிலையில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் முகமாக, தமது நேரத்தில் பெரும்பகுதியை தமது பாடசாலைகளிலேயே கழிப்பவர்களாக மாறுகின்றார்கள். இவ்வாறு இவர்கள் நாளின் பெரும் பகுதியை பாடசாலைச் செயற்பாடுகளுக்காகவே செலவழிக்கும் நிலையில் உள்ளதால், அவர்களின் தனிப்பட்ட வாழ்வும், குடும்ப வாழ்வும் மகிழ்ச்சியற்றதாகவும், இயந்திரத்தன்மையானதாகவும் மாறுகின்றன. அதேநேரத்தில், மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான ஒரு உபாயமாக, பாடசாலை முடிந்த பின்பும், வார இறுதி நாட்களிலும், விடுமுறை தினங்களிலும் வகுப்புகளை ஒழுங்கு செய்து, அவ்வகுப்பு களுக்கு சமூகமளித்து கற்பிக்கும்படி ஆசிரியர்களை நிர்ப்பந்திப்பவர் களாக மாறுகின்றார்கள். இது, அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே இன்னும் ஆழமான முரண்பாடுகள் ஏற்படவும் காரணமாகின்றது.

இவ்வாறு, வெவ்வேறு தளங்களில், நெருக்கடிகளையும், அழுத்தங் களையும் அனுபவிக்கின்ற நிலைமையின் விளைவாக, பெரும்பாலான அதிபர்கள் உளரீதியாக பாதிக்கப்படுகின்றவர்களாக உள்ளார்கள். உத்தியோகபூர்வ அந்தஸ்த்தோ, அதிக ஊதியமோ வழங்கப்படாதவர் களாக இருக்கின்ற அதிபர்கள், சமூக அளவில் தாங்கள் அதிபர்களாக மதிக்கப்படுகின்றோம் என்ற உணர்வினாலும், தமது மாணவர்களையும், பாடசாலைகளையும் முன்னேற்ற வேண்டும் என்ற அக்கறையினாலும், இத்தகைய உளரீதியான நெருக்குதல்களை சமாளித்து, தமது கடமைகளை செய்பவர்களாக இருக்கின்றார்கள்.

இதேவேளை, அதிபர்களிடம் அவதானிக்கப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் பலவீனங்கள் குறித்த மதிப்பீடுகளை மேற்கொள்வதும் அவசியமானதாக இருக்கின்றது.

முதலாவதாக, கணிசமான அதிபர்கள் நிர்வாகத் திறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்தவர்களாக இருக்கின்றார்கள். தமது பாடசாலைகளை முறையாகத் திட்டமிட்டு, முன்னோக்கிக் கொண்டு செல்லக் கூடிய ஆற்றலும், ஆளுமையும் அற்றவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள். அதேவேளை, இன்னொரு பிரிவினர், ஆசிரியர்கள் மீது அதீத அழுத்தங்களையும், அதிகாரத்தையும் பிரயோகிப்பவர்களாக இருக்கின் றனர். இத்தகைய அதிகாரப் பிரயோகம் என்பது பல சந்தர்ப்பங்களில் அதிபர்களின் உள அழுத்தங்களின் வெளிப்பாடுகளாகவும் அமைகின்றன. கல்வி அதிகாரிகளினாலும், அரசாங்க கொள்கைகளினாலும் தம்மீது திணிக்கப்படுகின்ற சுமைகளின் அழுத்தங்களில் இருந்து, தம்மை விடுவித்துக் கொள்வதற்கான ஒரு வழிமுறையாக, ஆசிரியர்களின் மீது அதிகாரத்தைப் பிரயோகித்து, பணிகளை முடிக்க வேண்டும் என்ற உளநிலையின் வெளிப்பாடாக இது அமைகின்றது. இத்தகைய அதிகாரப் பிரயோகத்தின் காரணமாக, அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் வலுவடைந்து, பாடசாலை செயற்பாடுகள் இயந்திரத்தன்மை கொண்டவையாக மாறுகின்றன.

இரண்டாவதாக, நவீன சாதனங்களான கணினி, இணையம், மல்டி மீடியா புரஜெக்டர்.. போன்றவற்றை பயன்படுத்த முடியாதவர்களாக பல அதிபர்கள் இருக்கின்றார்கள். இதனால் தொடர்பாடல்களையும், கருத்துக்களையும் வலுவுடன் முன்வைக்க முடியாதவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள்.

மூன்றாவதாக, பெரும்பாலான அதிபர்கள் மொழிரீதியாக மிகப் பலவீனமான நிலையில் இருக்கின்றார்கள். பொதுவாக கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற தமிழ், முஸ்லிம் அதிபர்கள், தமிழில் மட்டுமே உரையாடல்களையும், தொடர்பாடல்களையும் மேற்கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றனர். இதனால், பாடசாலைகளுக்கு ஆங்கிலம், மற்றும் சிங்கள மொழிகளில் அனுப்பப்படுகின்ற சுற்று நிருபங்கள், மற்றும் பிற ஆவணங்கள் போன்றவற்றை புரிந்து கொள்ள முடியாதவர்களாகவும், தமது பாடசாலைகளுக்குத் தேவையான வற்றை உரிய நிர்வாகிகளுக்கு முறையாக அறிவிக்கக் கூடிய திறனற்றவர்களாகவும் இவர்கள் இருக்கின்றார்கள். மொழி ஆற்றல் என்பது ஒருவரின் ஆளுமையை வடிவமைப்பதாக உள்ளது. பிற மொழிகளில் பலவீனமாக இருக்கின்ற அதிபர்கள், கருத்தரங்குகள், சந்திப்புகள், பயிற்சிப் பட்டறைகள் போன்ற நிகழ்வுகளின்போது, தமது கருத்துக்களை முன்வைக்க முடியாமல், ஒதுங்கிக் கொள்பவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றார்கள். மொழி ரீதியாகவும், நவீன சாதனங்கள் சார்ந்தும் தம்மிடம் காணப்படுகின்ற பலவீனங்களைக் களைந்து, தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் குறைந்தவர்களாகவே பெரும்பாலான அதிபர்கள் காணப்படுகின்றார்கள்.

நான்காவதாக, பாடசாலைச் சமூகத்திற்குள் உள்ளடங்குகின்ற வெவ்வேறு பிரிவினர்களுடன் உயிரோட்டமான இடைத்தொடர்புகளை மேற்கொள்ளக் கூடிய திறன் குறைந்தவர்களாக பல அதிபர்கள் காணப்படுகின்றார்கள். வருடாந்த பொதுக் கூட்டங்களின்போதும், பெற்றோர் சந்திப்புகளிலும், பாடசாலை தொடர்பான விடயங்களை கலந்து கொள்பவர்களின் மனதில் பதியும்வகையில் முன்வைக்க முடியாதவர்களாக பல அதிபர்கள் இருக்கின்றார்கள். இதனால் இத்தகைய நிகழ்வுகள், எத்தகைய ஆரோக்கியமான விளைவுகளுக்கும் இட்டுச் செல்லாதவைகளாக முடிவடைகின்றன.

ஐந்தாவதாக, அதிபர்களில் ஒரு பிரிவினர், தமது பாடசாலைகளின் வளங்களை முறையற்ற விதத்தில் கையாள்பவர்களாகவும், பயன் படுத்துபவர்களாகவும் இருக்கின்றார்கள். இத்தகைய செயற்பாடானது, மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் பாடசாலை சமூகத்தின் மத்தியில் குறித்த அதிபர்கள் தொடர்பாக எதிர்மறையான கருத்துக்கள் உருவாவதற்கு காரணமாகின்றது. இதன் விளைவாக, இத்தகைய அதிபர்களுடன் இணைந்து, பாடசாலையை வளர்த்தெடுக்கும் செயற் பாட்டில், இப்பிரிவினர்கள் ஆர்வத்துடன் பங்கேற்காமல், ஒதுங்கி விடுகின்ற நிலை உருவாகின்றது. **பாடசாலை சமூகத்தின் உயிரோட்டமான பங்கேற்புடன், பாடசாலைகளைக் கட்டியெழுப்புதல்** என்பதை இலக்காகக் கொண்டு அரசாங்கமானது தற்போது செயற்படுகின்ற நிலையில், அதிபர்களின் இத்தகைய எதிர்மறையான செயற்பாடுகளின் காரணமாக, இத்தகைய பாடசாலைகள் இந்த இலக்கை அடைய முடியாமல் பின்தங்கி விடுவதை அவதானிக்க முடிகின்றது.

ஆறாவதாக, கணிசமான அதிபர்கள், அதிபர்களுக்கான பரீட்சைகளில் சித்தியடைந்து, தகைமைசார் அதிபர்களாக நியமனம் பெறாதவர்களாக இருக்கின்றார்கள். குறிப்பாக, கிராமங்களிலும், பின்தங்கிய பாடசாலை களிலும் உள்ள அதிபர்கள், இவ்வாறு தொழில் தகைமை இல்லாதவர் களாக இருக்கின்றார்கள். நகர்பகுதிளைச் சேர்ந்த, தகைமையுள்ள அதிபர்கள், இப்பாடசாலைகளில் கடமைபுரிய தயாரில்லாததன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக, இப்பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற அசிரியர்கள், சேவை மூப்பின் அடிப்படையிலோ அல்லது பிற செல்வாக்கு சார்ந்த காரணங்களினாலோ தற்காலிக அதிபர்களாக நியமிக்கப்படுகின்ற நிலை உருவாகின்றது. பின்னர், ஒரு குறிப்பிட்ட கால சேவையினூடாக, இவர்கள் நிரந்தர அதிபர்களாக நியமிக்கப்படுகின்றார்கள். இவர்கள், இப்பாடசாலைகளில் தற்காலிக அதிபர்களாக கடமையாற்றுவதற்கு முன்வந்ததன் மூலமாக, அப்பாடசாலைகள் இயங்குவதற்கு உதவி செய்தவர்களாக இருக்கின்றார்கள். அதேநேரத்தில் இவர்களில் கணிசமானோர், தமது மொழில்தகைமைகளையும், வாண்மையையும் தொடர்ச்சியாக விருத்தி செய்யத் தவறி விடுகின்றார்கள். இதனால், இவர்கள் தமது பாடசாலைகளை செயற்திறன்மிக்கவையாகவும், விளைபயன்களைக் கொண்டவையாகவும் மாற்றியமைக்க முடியாதவர் களாக இருக்கின்றார்கள்.

இத்தகைய பின்னணியில், அதிபர்கள் தம்மிடம் காணப்படுகின்ற பலவீனங்களையும், குறைபாடுகளையும், சுயமதிப்பீட்டிற்குட்படுத்தி, அவற்றை களைவதினூடாகவே, தமது பாடசாலைகளிலும், சமூகங் களிலும் கௌரவமும், மதிப்பும் கொண்டவர்களாக மாறுவதோடு, தங்கள் பாடசாலைகளை முறையாக வளர்த்தெடுப்பதும் சாத்தியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. முடிவுரை

மேற்படி பரிசீலனைகளினூடாக, பாடசாலை உளவியலின் அடிப்படைப் பிரிவினர்களாக அமைகின்ற மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் ஆகியோரின் உளநிலையிலானது, வெவ்வேறு காரணிகளினால் பெரும் அழுத்தங்களுக்குட்பட்டிருக்கின்றது என்ற உண்மை வெளிப்படுத் தப்பட்டிருக்கின்றது. இந்நிலையானது, ஒரு ஆரோக்கியமான தலை முறை உருவாக்கத்திற்குப் பாதகமானது என்பதை ஒருவர் இலகு வாகப் புரிந்து கொள்ள முடியும். இவ்வகையில், இந்நிலையை சீர்செய்து, பொருத்தமானதும், சிறப்பானதுமான பாடசாலைச் சூழலை உருவாக்குவதற்கான உரையாடலுக்கு அடிப்படையாக அமையும்வகையில் பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

- ஆசிரியர் பட்டயம் (Teachers' Charter) ஒன்று உருவாக்கப்படுதல். இப்பட்டயத்தில் ஆசிரியர்களின் கடமைகள், உரிமைகள் பற்றிய விடயங்கள் தெளிவாக முன்வைக்கப்படுதல். இத்தகைய பட்டயம் உருவாக்கப்படுவதில், ஆசிரியர்களின் கருத்துக்கள் உள்வாங்கப் படுவதற்கான பொறிமுறைகளை உருவாக்குதல்.

- ஆசிரியர் பயிற்சிநெறியை பல்கலைக்கழகத் தெரிவினூடாக மேற் கொள்ளுதல். பல்கலைக்கழகங்களில் நடைமுறையிலுள்ள பிற துறைகளுக்கு நிகரானதாக ஆசிரியர் பயிற்சிநெறியை வகைப்படுத்தல்.

- ஆசிரியர்களின் சம்பள முறைமையை சீரானதாகவும், உயர்ந்த நிலையிலும் பேணுதல்.

- அதிபர்களை பதவிநிலை அதிகாரிகள் என வகைப்படுத்தி, அவர்களின் ஊதியத்தையும், சலுகைகளையும் பிற துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளின் மட்டத்திற்கு சமமானதாக கொண்டு வருதல்.

- ஒவ்வொரு பாடசாலையும், தனியான நிர்வாக அலகாக செயற்படக் கூடிய முறைமையைப் பேணுதல். இதற்கென உரிய ஊழியர்களை பாடசாலைகளில் நியமித்தல். ஆவணப்படுத்தல், கோவைப்படுத்தல், பதிவிடல் போன்ற செயற்பாடுகளில் இருந்து ஆசிரியர்களை விடுவித்தல்.

- கல்வி அலுவலகங்களின் அதிகாரக் கட்டுப்பாட்டில் இருந்து பாடசாலைகளை விடுவித்தல். பாடசாலைகளை சுயாதீனமான நிர்வாக அலகாக வகைப்படுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசிரியர்களின் சம்பளம், மற்றும் பிறகொடுப்பனவுகள், பதவியுயர்வுகள் என்பவை சார்ந்த பட்டியல்கள் பாடசாலை மட்டத்திலேயே தயாரிக்கப்படுதல்.
- ஆசிரியர்களின் சம்பள உயர்ச்சி, பதவி உயர்வு, சம்பள நிலுவை என்பவை உரிய காலத்திலும், உடனுக்குடனும் இடம்பெறுதல்.
- ஒவ்வொரு வருடமும் பதவி உயர்வு தொடர்பான சுற்றறிக்கைகள் வெளியிடப்படுதல்.
- எந்த ஒரு தேவைக்காகவும் ஆசிரியர்கள், கல்வி அலுவலகங்களுக்கு செல்லாத நிலை உருவாக்கப்படுதல்.
- கல்வி அதிகாரிகள், சேவைக்கால ஆலோசகர்கள் என்பவர்களின் செயற்பாடுகள், ஆலோசனை, வழிகாட்டல் என்ற அடிப்படையில் இடம்பெறுதல். அவை அதிகாரவகைப்பட்டதாகவோ அல்லது அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவதாகவோ அமையாதிருப்பதை உறுதிப்படுத்தல்.
- மாணவர்களின் அடைவுமட்டத்திற்கு ஆசிரியர்களை நேரடியாகப் பொறுப்பாக்குகின்ற நிலையை தவிர்த்தல். அடைவு மட்டம் வீழ்ச்சியடையும்போது, மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர், ஆசிரியர்கள் என்பவர்களை உள்ளடக்கிய கலந்துரையாடல்களினூடாக, வீழ்ச்சிக்கான காரணங்களை கண்டுகொள்வதற்கும், பொருத்தமான மாற்றுவழிகளைத் தேர்வதற்குமான ஒழுங்குகளை கல்வி அலுவலக அதிகாரிகள் முன்னெடுத்தல்.
- ஆசிரிய இடமாற்றம் என்பது, முறையான வகைப்படுத்தல்களுடனும், எவ்வித தலையீடுகளுமின்றியும் இடம்பெறுதல். மிக அவசியமான காரணங்களின்றி, அனைத்து ஆசிரியர்களும் இடமாற்றத்தை ஏற்றுக் கொள்ளும்வகையில் இடமாற்றங்கள் உரிய கால இடைவெளியில் நடைமுறைப்படுத்தப்படல்.
- இடமாற்றம் பெற்றுச் செல்லுகின்ற ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகள், உரிய காலத்தில், உரிய அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுதல். இதில் ஏற்படுகின்ற தாமதங்களினால், ஆசிரியர்களின் சம்பளத்திலோ அல்லது வேறு கொடுப்பனவுகளிலோ எவ்வித தடையும் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலைகளை உள்ளடக்கியதாகவும், சீரான நேர அட்டவணைகளைப் பின்பற்றுவதாகவும் அமைந்த போக்குவரத்து முறைமை ஏற்படுத்தப்படல்.
- பாடசாலை நேரமுறைமை மாற்றியமைக்கப்படுதல். காலை 8.30 மணியில் இருந்து பிற்பகல் 3.30 மணிவரையிலான காலப் பகுதியில் கற்பித்தல் செயற்பாடுகளையும், பிற்பகல் 3.30 மணியில் இருந்து பிற்பகல் 4.30 மணிவரை இணைப்பாடவிதானச் செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாக பாடசாலை நேரம் அமைக்கப்படுதல்.
- சனி, ஞாயிறு தினங்கள் உட்பட அனைத்து விடுமுறை தினங்களையும் ஆசிரியர்கள் தமது விருப்பப்படி அனுபவிக்கின்ற நிலை உருவாக்கப்படுதல். இந்தத் தினங்களில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அதிபராலோ அல்லது கல்வி அதிகாரிகளினாலோ ஆசிரியர்கள் நிர்ப்பந்திக்கப்படாத நிலை ஏற்படுத்தப்படுதல்.
- விடுமுறை தினங்களில் ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கற்பித்தல் நடவடிக்கைகளுக்கும், அவர்கள் பங்கேற்கின்ற பிற கல்விசார் செயற்பாடுகளுக்கும், இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும், அவர்களின் சம்பளத்திட்டத்திற்கு அமைவான மேலதிக நேர கொடுப்பனவுகள் வழங்கப்படுதல்.
- கல்வி அலுவலகங்களினாலோ அல்லது பிற நிறுவனங்களினாலோ பாடசாலைகளில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளில் இருந்து ஆசிரியர்கள் விடுவிக்கப்படுதல். அவை, சம்பந்தப்பட்ட நிறுவன ஊழியர்களினால் மேற்கொள்ளப்படக் கூடிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுதல். இத்தகைய நடவடிக்கைகளில் ஆசிரியர்கள் பங்கேற்கின்றநிலை ஏற்படுகின்றபோது, அதற்கான கொடுப்பனவுகள் அவர்களுக்கு வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- கல்வி அலுவலகங்கள், தாம் குறித்த வருடத்தில் பாடசாலைகளில் மேற்கொள்ளவுள்ள கல்வி சார் நடவடிக்கைகள் பற்றிய நேர அட்டவணையை, முந்திய வருட இறுதியிலேயே உரிய பாடசாலைகளுக்கு வழங்குதல்.
- ஒவ்வொரு பாடசாலையிலும், தொழில்சார் உளவள ஆலோசகர்களை நியமித்தல். மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு ஏற்படக் கூடிய உளவியல் ரீதியான நெருக்கடிகள், மற்றும் அழுத்தங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து அவர்கள் விடுபடுவதற்கான வழிகாட்டல்களும், ஆலோசனை களும் வழங்கப்படுவதற்கான சூழலை உருவாக்குதல்.

- ஆசிரியர்கள் தமது பாடசாலை மட்டத்திலும், பிற பாடசாலைகளுடன் இணைந்தும், கற்பித்தல் தொடர்பான ஆலோசனைகளையும், மதிப்பீடுகளையும் பரிமாறிக் கொள்வதற்கான முறைமைகளை உருவாக்குதல்.
- வகுப்பறை மதிப்பீட்டில், ஆர்வமும் ஆற்றலுமிக்க பெற்றோர்களையும் உள்வாங்குதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் பாடசாலை சூழுல் பற்றி விரிவாக ஆராய்கிறது...! இது மாணவர்களின் உரிமைகளையும், ஆசிரியர்களின் மற்றும் அதிபர்களின் கௌரவத்தையும் வலியுறுத்துகிறது.

## இது

- மாணவர்கள்
- ஆசிரியர்கள்
- பெற்றோர்கள்
- கல்வி அதிகாரிகள்
- கல்வி அலுவலக ஊழியர்கள்
- கல்விக் கொள்கை வகுப்பாளர்கள்
- அரசியல்வாதிகள்

## மற்றும்

இந்நாட்டு மக்கள் அனைவராலும் வாசிக்கப்பட வேண்டிய நூல்

ISBN: 978-955-0932-16-0

9 789550 932160

Published

Pena Publication

விலை: 250/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org